பிஸ்மில்லா ஹிர்றஹ்மா னிர்றஹீம்.

# தரீக்குல் ஜன்னா.

நாகூர் கனம்பொருந்திய ஹலறத்து

முஹியித்தீன் பகீர் ஆலிம் ஸாஹிபு என்கிற

**ஸெய்யிது அப்துல் வஹ்ஹாபு ஆலிம்ஸாஹிபு**

அவர்கள் இயற்றியது.

இஃது மேற்படியூர்

வா. குலாம் காதிறு நாவலர் அவர்கள்

முன்னிலையில் எழுதுவித்து அச்சிட்ட,

காரைக்கால் பிரதிக்கிணங்க

சென்னை, திருவல்லிக்கேணி,

ஹாஜி M. A. ஷாஹுல் ஹமீது & ஸன்ஸ்,

அவர்களால்

தங்களது

ஷாஹுல் ஹமீதிய்யா அச்சியந்திர சாலையிற்

பதிப்பிக்கப்பட்டது.

இதன் விலை] 1946 ரூ. 3 0 0

பிஸ்மில்லாஹ்.

# முகவுரை.

MADRAS

*புகழ் எல்லாம் அல்லாஹுத் தஆலாவுக்கே உரியனவாம், அவன் ரூபாரூபமாயுள்ள அஜ்ஸாம், அர்வாஹு என்கிற ஸ்தூல சூக்ஷுமமாகிய அறுஷு முதல் தஹுத்தஸ்ஸறுவரையும் அடங்கிய ஆலத்தைப் படைத்து ஆக்குதல், காக்குதல், ரக்ஷிக்குதல், அழிக்குதல் ஆகிய நான்கு வகையாலும் ஆள்கிறவனும், வணக்கத்திற்குப் பாத்திரமான தன்னையன்றி வேறொருவன் இல்லாதவனுமாகிய றப்பில் ஆலமீன்.

ஸலவாத்தும், ஸலாமும் ஆலத்தாருக்கு நேர்வழி காட்டி அவர்களை அதில் நடத்துவதற்காக அல்லாஹுத் தஆலாவினால் அனுப்பப்பட்ட தூதர்கள் என்னும் றஸூல்மார்களில் மேலானவர்களும், நபிமார்களுக்கு நாயகமுமாகிய காத்திமுல் அன்பியா, ஸெய்யிதுல் முறுஸலீன், அஹ்மது முஜ்த்தபா, மஹ்மூது முறுத்தலர், முஹம்மது முஸ்தபா ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்கள் மீதும், அவர்கள் ஆல் என்னும் குடும்பத்தார் மீதும், அஸ்ஹாபு என்னும் தோழர்கள் மீதும், உம்மத்து என்னும் கூட்டத்தார்கள் மீதும் என்றென்றும் உண்டாவதாக.

ஆலத்திற்கும், ஆலத்திலுள்ள மற்ற எல்லாப்பொருள்களுக்கும், நாயகமான நபி முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்களை, நாம் அனைவரும் அல்லாஹுத் தஆலாவை அறிந்து அவனுக்கு வழிப்பட்டு அவனுடைய கிருபையையும், தரிசனையும் பெற்றுக்கொள்ளும் பொருட்டு அதற்கான வழியைக்காட்டி அதில் நடத்திக்கொண்டு போய்ச் சேர்ப்பதற்காகவேண்டி றஹுமத்துன் லில்ஆலமீனாக அல்லாஹுத் தஆலாவே அனுப்பினான். அப்படியே அவர்கள் தங்கள் உம்மத்துக்கு நேர்வழிகாட்டி தங்களுக்குரிய குறுஆன் என்னும் சத்தியவேதத்து அறிவுகளைக் கற்பித்து

* புகழ்-அல்லாஹுத் தஆலா தன்னைத்தானே புகழ்தலும், அடியானைப் புகழ்தலும், அடியான் அல்லாஹுத் தஆலாவை புகழ்தலும், ஒரு அடியான் மற்றொரு அடியானைப் புகழ்தலும் என நான்கு வகைப்படுவதால் புகழ் எல்லாம் என்று பலவாகச் சொல்லப்பட்டது.

ஸாலிஹான அமல்களைச் செய்யும்படிச்செய்து ஆகிறுவின் பேரின்ப வாழ்வைப் பெற்றுக்கொள்ளும் பொருட்டு அந்த வழியில் நடத்தினார்கள்.

அவ்வண்ணமே நாம் எல்லோரும் அந்த வழியில் நடந்து மோக்ஷகதியடையும்படியாக அல்லாஹு—த் தஆலா அருளிச்செய்த குறுஆன், நபிநாயகமவர்கள் அருளிச்செய்த ஹதீது என்னும் தலீல்களைக்கொண்டு முன்னிருந்த இமாம்கள் முதலான மஹான்கள் விரிவாகவும், சுருக்கமாகவும், பெரிதாகவும், சிறிதாகவும், பலவித கிதாபுகளைப் பின்னும் பின்னும் கோர்வை செய்து வைத்தார்கள். அந்த கிதாபுகளனைத்தும் இந்தத்தமிழ் தேசத்தார் அறியாத அறபுபாஷை முதலான பல பாஷைகளாலேயே செய்யப்பட்டிருக்கின்றன. ஆகையால் அந்தப் பாஷைகளை அறியாதவர்களுக்கு அந்த கிதாபுகளில் அடங்கிருக்கும் விஷயங்கள் இலகுவில் அறியக் கூடாதவைகளும் உபயோகப் படாதவைகளுமாயிருக்கின்றன. அதனால் அவரவர்கள் அந்தந்த விஷயங்களைத் தெளிவாயறிந்து, அவற்றின்படி அமல் செய்வது அதிக கஷ்டமாயிருக்கின்றது. கஷ்டப்பட்டு அறிந்து அமல் செய்கிறவர்கள் இருந்தாலும் அதிகம் பேர் அந்தக்கஷ்டத்தி நிமித்தம் அந்த விஷயங்களை அறிவதில் பராக்கற்றுப் பொடு போக்காயிருக்கின்றார்கள். அப்படிப் பட்டவர்களுக்குத் தெரிந்திருக்கும் பாஷையில் சொன்ன கிதாபுகளிலுள்ள விஷயங்கள் அமைந்ததாக ஒரு கிதாபு இல்லாமற் போனதுதான் அதற்கு மூக்கிய காரணமாம். அவர்கள் அவ்விதமே இருப்பார்களானால், ஷைத்தான் அவர்கள் மனதைக் கலைத்து வழிகேட்டில் இழுத்து விட்டு விடவுங்கூடும். ஆகையால் இவ்விஷயத்திற்குக் காரணமாயிருக்கும் தடையை நிவர்த்தி செய்து வைப்பது முக்கிய கடனானதுபற்றி, மேற்காட்டிய கிதாபுகளிலுள்ள விஷயங்களை அவர்களுக்கு எளிதில் அறிவித்து எச்சரிக்க வேண்டியதற்காக, இங்கு வழங்கும் தமிழ்ப்பாஷையில் ஒரு கிரந்தம் செய்யவேண்டும் என்னும் நாட்டம் என் உள்ளத்தில் உண்டாய், மேற்சொன்ன கிதாபுகளில் அடங்கிய முக்கியமான விஷயங்களைப் பொறுக்கி யெடுத்து பாபுத்துன்யா, பாபுல் ஆகிறு என இருபாகமாக்கி, துன்யாவின் விஷயங்களையெல்லாம் பாபுத்துன்யாவிலும், ஆகிறுவின் விஷயங்களையெல்லாம் பாபுல் ஆகிறுவிலும் அமைத்து ஓரே கிரந்தமாக்கி, இதற்கு (சுவர்க்கவழி) என்று அர்த்தந்தரும்

("தர்க்குல் ஜன்னு") எனப் பெயரிட்டு, ஹிஜுறத்து ஆயிரத்து முந்நூற்றி எட்டாம் வருஷம் நாகூர் முஹியித்தீன் பகீர் என்ற ஸெய்யிது அப்துல் வஹ்ஹாபி என்னும் யான் வசன ரூபமாக இந்தக் கிரந்தத்தைக் கோர்வை செய்தேன்.

முஸ்லிமான சகோதரர்களே! இந்தக் கிரந்தமாகிய கிதாபில் ஆதி தொட்டு அந்தம் வரையும் அடங்கியிருக்கும் அறிவுகளைத் தெளிவாக அறிந்து அவற்றின்படி அமல்களைச்செய்து அல்லாஹுத் தஆலாவின் கிருபையையும், நபி நாயகமவர்களின் ஷபாஅத்தையும் பெற்று மோக்ஷகதி சேரும்படி அனைவருக்கும் அல்லாஹுத் தஆலா உதவி செய்வானாக ஆமீன்.

முகவுரை முற்றிற்று.

பிஸ்மில்லாஹி.

# தரீக்குல் ஜன்னா.

## முதற்பாகம்.

## பாபுத் துன்யா.

பாபுத்துன்யா வென்பது துன்யாவுடைய பாபு. ஆலமானது இரண்டு பாகங்களையுடையது. அவற்றுள் முதற்பாகத்தைத் துன்யா !வென்றும், இரண்டாம் பாகத்தை ஆகிறு வென்றும் சொல்லுவார்கள். ஆகிறுவென்பதை பாபுல் ஆகிறுவில் விவரிப்போம். துன்யாவென்பது இம்மையாம். ஆலமும், ஆலத்தி லுள்ளவைகளும் படைக்கப்பட்டுக் கோர்வையாக்கும் ஆரம்ப முதல் பின்பு கியாமத்தாய் சூறாதி, அந்தக்கோர்வை குலையும் வரையுமுள்ள காலந்தான் துன்யாவென்று சொல்லப்படும். "தரீக்குல் ஜன்னா" என்னும் இந்தக்கிரந்தமும் ஆலத்தைப்போல் துன்யா, ஆகிறு என்னும் இரண்டு பாகங்களையுடையதாம். முதற்பாகமாகிய இந்த பாபுத் துன்யாவில் துனியாவின் விஷயங்களை அனைத்தும் பதினாறு பஸல்களாய் அடங்கியிருக்கின்றன. அவற்றுள்.

### 1-ம் பஸல்.

### மஃரிபத்துல்லா.

மஃரிபத்துல்லா என்பது அல்லாஹூத் தஆலாவை அறிதல், அந்த அறிவைத்தான் *மஃரிபா என்பார்கள்.

அல்லாஹூத் தஆலாவுக்கு தாத்து உண்டு, †ஸிபத்து உண்டு. ‡பிஅல் உண்டு, ‖இஸ்மு உண்டு. அல்லாஹூத் தஆலாவுக்கு தாத்து *உண்டென்று மாத்திரம் அறிந்திருக்க வேண்டியதல்லாமல் அந்த தாத்து எது எப்படிப்பட்டது என்று ஆராய்ந்தறியக் கூடாது. அந்த தாத்து *ஜௌஹறாயிராது.

---

* மஃரிபா-ஞானம். † ஸிபத்து-பண்பு. ‡ பிஅல்-செயல். ‖ இஸ்மு நாமம். * ஜௌஹறு-ஆதாரம். அது அறலுக்கு நிலைக்களமானது, மணத்திற்கு மலர் போல்வது.

அல்லாஹுத் தஆலா உஜூதாகிய உள்ளமையும், கிதமாகிய பூர்வமும், பகாவாகிய அழியாமையும், முகலா பத்துன் லில்ஹவாதிதாகிய ஒப்பில்லாமையும், கியாமு பிநப்ஸிஹியாகிய தன்னில் தானிருத்தலும், வஹதானிய்யத்தாகிய ஒருமையுமுள்ளவன். இந்த ஆறுவகை ஸிபத்துகள் அல்லாமல் ஹயாத்து, இல்மு, இறாதத்து, குதறத்து, சம்வு, பஸறு, கலாம் என்னும் ஏழு ஸிபத்துகளும் அவனுக்கு உண்டு. ஆகையால் அவன் *றூஹின்றி †ஹயாத்துள்ளவன், ‡புத்தியின்றி அறிவுள்ளவன். இருதயமின்றி நாட்டமுள்ளவன், அவயவமின்றித் தத்துவமுள்ளவன், செவியின்றிக் கேள்வியுள்ளவன், கண்ணின்றி பார்வையுள்ளவன், நாவின்றிப் பேச்சுள்ளவன். ஆனால் இந்த ஸிபத்துகள் ||அறலாயிராது. இந்த ஸிபத்துகளெல்லாம் *வாஜிபு என்று சொல்லப்படும். இவற்றிற்கு மறுதலையான ஸிபத்துகளும் உண்டு. அவற்றிற்கு †முஸ்தஹீல் என்று பெயர். அவை இல்லாமை, அபூர்வம், அழிவுடைமை, வேறொன்றிலிருத்தல், பன்மை ஆகிய ஆறும் மரணம், மூடம், நாட்டமின்மை, எலாமை, செவிடு, குருடு, ஊமை, ஆகிய ஏழும் ஆகப்பதிமூன்றுமாம். அன்றியும் ‡ஜாயிஸான ஸிபத்துகள் அநேகம் அவனுக்கு உண்டு. அவை ஆக்கல், அழித்தல், இரக்ஷித்தல், கார்த்தல் முதலியனவையாம்.

அல்லாஹுத் தலாவின் செயலுக்கு கருவியும், காலமும் இல்லை. அதில் தாமதம், தடை, தேவை, மிடை, பிரயாசை சடைவு இவைகளில் ஒன்றும் இராது. எந்தப் பொருளை எவ்விதம் உண்டாக்க நாடுவானோ, அந்தப் பொருளை அவ்விதமே உண்டாக்குவான். ஆனால் அவன் உண்டாக்கப்பட்டதில் ஆலமுல் அம்று என்றும், ஆலமுல்கல்கு என்றும் இருவகையுண்டு. ஆலமுல் அம்று எதுவின்றி உண்டானது. அவை ||அறுவாஹு போன்றவை. ஆலமுல்கல்கு எதுவால் உண்டானது. அவை *அஜ்ஸாம் போன்றவை.

---

* றூஹு-ஆன்மா. அது பரமான்மா, ஜீவான்மாவென-இருவகை. பரமான்மா றூஹு-இன்சானி. ஜீவான்மா றூஹு-ஹைவானி. † ஹயாத்து-ஜீவன். றூஹின்றி ஹயாத்துள்ளவனென்றதால் இருவகை ஆன்மாக்களில் ஒன்றிலும் சம்பந்தப்படாத ஜீவனுள்ளவன் என்பது அர்த்தம்.

‡ புத்தி-அக்கல். அது மனவுணர்வு புத்தியின்றி அறிவுள்ளவனென்றதால் அவ்வுணர்வு சம்பந்தப்படாத அறிவுள்ளவன் என்பது அர்த்தம். || அறலு-ஆதேயம். அது ஜௌஹறில் தரிபடுவது. மலரில் மணம்போல்வது. * வாஜிபு-அவசியம். † முஸ்தஹீல்-ஒண்ணாமை. ‡ ஜாயிஸு-இடம்பாடு. || அறுவாஹு-பரமான்மாக்கள். * அஜ்ஸாம்-ஜடங்கள்.

அவன் ஆதியில் தன்னில் தானாய்த் தானன்றி ஒரு பொருளும் இல்லாதிருக்கையிலேயே தன்னை யறியத்தக்க ஒன்றை உண்டாக்க நாடியிருந்தான். அந்த நாட்டத்தின்படி உலகத்தைப் படைத்தான். உலகத்தை படைக்கு முன்னமே எல்லாவற்றையும் பற்றிப் பொதுவும் விவரமுமாகக் கற்பனை செய்திருக்கிறான். அந்தப்பொது கற்பனையை கலா என்றும், விவரக்கற்பனையை கதறு என்றும் சொல்லுவார்கள். அவன் படைக்கும் கருமமும், பொருளும் படைக்குமுன் *அஃயான் தாபித்தா யென்றும், படைத்த பின் அஃயான்காறிஜா யென்றும் சொல்லப்படும். ஒரு அணுவாவது அவன் ஆக்காமல் ஆவதும், அழிக்காமல் அழிவதும் இல்லை. அவன் தன் நாட்டத்திற்கு மாறுசெய்கிறவனும் அல்ல.

அல்லாஹுத் தஆலாவின் திருநாமங்கள் தொண்ணூற்றொன்பது. அவை அல்லா, றஹ்மான், றஹீம், றப்பு, முதலியனவாம்.

இவ்வித மகத்துவமும், மேன்மையும், தகுதியும், சிறப்பும் உள்ளவனும், எவ்விதக் குறைவும் அற்றவனுமாகிய அல்லாஹுத் தஆலாவுக்கே வணங்கப்படும் பாத்தியம் உரித்தன்றி வேறே யாருக்கும் அல்ல.

இவ்விதமாகிய அல்லாஹுத் தஆலாவை அறியவேண்டியது கடன். ஒருவன் இவ்விதம் அறிந்தால் அவனை †ஆரிபு என்று சொல்லலாம். இவ்வித அறிவுடன் அவன் மவுத்தானால் தடையின்றி மோக்ஷம் அடைவான். இந்த அறியுதலில் முதன்மையானதும், ஈமானில் முக்கியமானதுமாம்.

முஸ்லிமான சகோதரர்களே! இந்தப்பரிசுத்த மெய்யறிவை நாம் ஒவ்வொருவரும் கற்றறிந்து அதன் அந்தரங்கங்களையும் தெளிந்துதேறவேண்டியது முக்கியகடன். இவ்விதமே கற்றறிந்து தெளிந்துதேறி மோக்ஷம் அடையும்படி நம்மனைவருக்கும் அல்லாஹுத் தஆலா அருள் புரிவானாக ஆமீன்.

மஃரிபத்துல்லா முடிந்தது.

---

* அஃயான்-வஸ்துக்கள். அது தாபித்தா என்றால் தரிபாடு, காறிஜா என்றால் வெளிப்பாடு.

† ஆரிபு-ஞானி.

## 2-ம் டஸல்.

## ஆலம்.

ஆலம் என்பது உலகம், அது அல்லாஹுத் தஆலா அல்லாத தற்குப் பெயர், அதற்கு இனங்களும், பெயர்களும் உண்டு. ஆலமானது ஆலம் அறுவாஹ், ஆலம் மிதால், ஆலம் அஜ்ஸாம் என்று மூன்று இனமாம். ஆலம் அறுவாஹ் ஆகிருவும், ஆலம் மிதால் *பறுஜகும், ஆலம் அஜ்ஸாம் துன்யாவுமாம். இந்த மூன்று இனமாகிய ஒரே ஆலம் ஆலமுல் கைபு அல்லது ஆலமுல் மலக்கூத்து, ஆலமுஷ் ஷஹாதத்து அல்லது ஆலமுல் முல்கு என்று இருவகைப்படும். கைபும், மலக்கூத்தும் மறைவு, ஷஹாதத்தும், முல்கும் வெளிப்படை. இன்னும் ஆலத்தின் பிரிவுகளுக்கு ஜப ரூத்து, லாக்கூத்து, மலக்கூத்து, நாஸூத்து என்னும் பதவிகளும் உண்டு. ஆலத்தைக் கௌன் என்றும் சொல்லுவார்கள். கௌன் என்றால் ஆக்கப்பட்டது, அதுதான் கங்கு என்றும் சொல்லப் படும். ஆக்கப்பட்ட அல்லது படைக்கப்பட்ட ஒவ்வொரு வஸ்து வும்சரி, ஒவ்வொரு மனிதரும்சரி, ஆலந்தான். ஆனது பற்றியே உலகத்தை ஆலமும் †அக்பறு என்றும், மனிதனை ஆலமும் ‡அஸ்கறு என்றும் சொல்கிறார்கள்.

அல்லாஹுத் தஆலா தன்னில் தானாய்த் தனித்திருக்கையில் தன்னை யறியத்தக்க வஸ்துவை உண்டாக்க நாடியிருந்தபடி நூறு முஹம்மதைப் படைத்தான். நூறு முஹம்மதானது நபி முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்களின் ஒளி, அந்த ஒளிவுக் குப் பல நாமங்கள் உண்டு. அதிலிருந்துதான் மற்ற படைப்புகள் எல்லாவற்றையும் வகுத்தான். அதனால் அந்த ஒளியே எல்லாப் படைப்புக்கும் வித்து.

முந்தி படைக்கப்பட்ட மேற்படி ஒளியானது முதலில் றூஹாய், பிறகு ||நபுஸாய், பிறகு *தபீ அத்தாய், பிறகு †ஜிஸ்மாய் ஆயிற்று. அந்த ஜிஸ்மிலிருந்து தான் நெருப்பு, காற்று, நீர், மண் ஆகிய ‡அனுசர்கள் உண்டாயின. இந்த அனுசர்கள் ||பசீத்து என்றும், *முறக்கபு என்றும் இருவகைப்படும்.

---

* பறுஜகு-சந்தி. அது துன்யாவுக்கும், ஆகிருவுக்கும் இடையிலுள்ளது.

† அக்பறு-பெரிது. ‡ அஸ்கறு-சிறிது. || நபுஸ்-இச்சை. * தபீ அத்து-சுபாவம், † ஜிஸ்ம்-ஜடம், ‡ அனுசர்-பூதங்கள். || பசீத்து-சூக்குமம். * முறக்கபு-ஸ்தூலம்.

அறுஸு முதல் *தகுத்தஸ்ஸறுவரையும் ஒரே ஆலமாம். அதில் மேல், கீழ், நடு என்று மூன்றுதானவகுப்புகள் உண்டு. அந்த மூன்றுவகைத் தானங்களிலும் தூலம், சூக்குமம், காரணம் என்னும் மூன்றுவகைச் சரீரங்களும் அடங்கப் படைத்து, ஒரே கோர்வையாக ஆலம் அமைக்கப்பட்டிருக்கின்றது. அந்த ஒரே கோர்வையில் தான் ஆலம் அறுவாஹ், ஆலம் மிதால், ஆலம் அஜ்ஸாம் என்னும் மூன்று இனமும் அடங்கியிருக்கின்றன. மேல் வகுப்புதானம் அறுஷுமுதல் ஏழாம்வானம் வரையும், கீழ் வகுப்புத் தானம் முதலாவானமுதல் தகுத்தஸ்ஸறு வரையும் நடுவகுப்புத் தானம் ஏழு வானங்களுமாம். மேல்தானத்தில் அறுஷு, குறுஸி, லௌஹு, கலம், சுவர்க்கம் முதலியவைகளும், கீழ் தானத்தில் பூமி, மலை, கடல், நரகம் முதலியவைகளும், நடுத்தானத்தில் வானம், †பலக்கு முதலியவைகளும் அடங்கியிருக்கின்றன.

அக்கினி, காற்று, நீர், மண் ஆகிய இந்தப் பூதங்களின் தானம் முதல் வானந்தொடு முதற் பூமி வரையும் நான்கு தட்டுகளாய்ப் பொருந்தி யிருக்கின்றது. ஆனால் அக்கினித் தானம் முதல் வானத்திலும், மண் தானம் முதற்பூமியிலும் இருக்கின்றன. இவைபோக காற்றும், நீரும். ஆகாயத்தில் பொருந்தியிருக்கின்றன. அந்தத் தானங்களுக்கு மண்டலம் என்று பெயர்.

மலக்குகள் அறுஷுமுதல் ஏழுவானம் வரையும் இருக்கின்றார்கள். அவர்கள் அங்கிருந்தாலும் உலகமெங்கும் சஞ்சரிப்பார்கள். ஜின்களும், ஷைத்தான்களும் முதற்பூமிக்குக் கீழ் இருக்கின்றார்கள். இவர்கள் ஏழுபூமியிலும் முதல்வானம் வரையிலும் சஞ்சரிப்பார்கள், நரகம் பாதாளத்தில் இருக்கின்றது. ஆகிறுவில் அதற்கு இடப்பெயர்ச்சி உண்டு. மனிதர்களும், மற்ற ஜீவராசிகளும், மற்றப்பொருள்களும் முதற் பூமியில் இருப்பது தெளிவாய்த் தெரிந்த விஷயமாகையால் அதைப்பற்றி இங்கு விபரிக்கவில்லை.

அறுஷு, குறுஸு, லௌஹு, கலம், சுவர்க்கம் ஆகிய இவைகள் ஒளியினாற் படைக்கப் பட்டவை. ஏழுவானங்களும் தட்டு தட்டு தட்டாகப் புகையினாற் படைக்கப்பட்டவை. சூரியன், சந்திரன், நக்ஷத்திரங்கள் ஆகிய இவைகள் வானத்தினாற் படைக்கப்பட்டவை. ஏழு பூமிகளும் தட்டு தட்டாக மண்ணாற்படைக்கப் பட்டவை.

* தகுத்தஸ்ஸறு-பாதாளம். † பலக்கு-சூரிய சந்திர கிரக யந்திரம்.

*மலக்குகள் ஒளியினாற் படைக்கப்பட்டவர்கள். அவர்களுக்கு பிறப்பு, ஊன், உறக்கம், ஆகிய இவைகள் இல்லை. இறப்பு உண்டு. இனத்தில் உயர்ந்தவர்கள் மேலான பதவியுடையவர்கள். குணத்தில் சிறந்தவர்கள். அவர்கள் உருவம் ஆன்மரூபம் வேறு எவ்வித உருவமும் எடுப்பார்கள். ஜடம் சூக்குமம். அல்லாஹுத் தஆலாவைத் துதிப்பதும், அவன் ஏவலைச் செய்வதுந் தான் அவர்கள் தொழில். அவர்களுக்குச் சுகதுக்கம் இல்லை. அவர்கள் என்றைக்கும் அழியாதவர்கள் அவர்களை அல்லாஹுத் தஆலா கூட்டங்கூட்டமாக வகுத்து அநேக கூட்டங்களை அறுஷைச் சுமந்தும், சூழ்ந்தும் நிற்கவமைத்து மற்றக் கூட்டங்களைச் சுவர்க்கத்திற்கும்; வானங்களுக்கும், †பலக்குகளுக்கும், பூமிகளுக்கும், கடல்களுக்கும், மலைகளுக்கும், நரகத்திற்கும் அதிகாரிகளாக்கி ஒவ்வொரு கூட்டத்திற்கு ஒவ்வொரு தலைவரையும் நியமித்து வைத்திருக்கிறான். அவர்களில் ஜிபுறயீல் அலைஹிஸ்ஸலாம், மீக்காயீல் அலைஹிஸ்ஸலாம், இஸ்றாபீல் அலைஹிஸ்ஸலாம், இஸ்றாயீல் அலைஹிஸ்ஸலாம் ஆகிய இந்த நால்வரும் மேலானவர்கள். இந்த நால்வருள் ஜிபுறயீல் அலைஹிஸ்ஸலாமவர்கள் சிருஷ்டித்தல், உயிர் கொடுத்தல், ‡ஒஹிகொண்டுவருதல் ஆகிய இவைகளுக்கு அதிகாரி, மீக்காயீல் அலைஹிஸ்ஸலாமவர்கள் மழைபெய்விக்கவும், முளைகள் முளைப்பிக்கவும், இரணம் வகுக்கவும் அதிகாரி. இஸ்றாபீல் அலைஹிஸ்ஸலாமவர்கள் அழியப்படுகிறவைகளை அழிக்கவும், பிறகு அவைகளை ஆக்கவும் அதிகாரி. இஸ்றாயீல் அலைஹிஸ்ஸலாமவர்கள் ஜீவகோடிகளை மவுத்தாக்கும் அதிகாரி. இந்த நால்வருக்கும் அவரவர்கள் பணிவிடைகளுக்காக அநேக மலக்குகள் நியமிக்கப்பட்டிருக்கின்றார்கள்.

ஜின்கள் நெருப்பும், காற்றுமாகிய இரண்டு பூதங்களார் படைக்கப்பட்டவர்கள், அவர்களுக்குப் பிறப்பு, இறப்பு, ஊண், உறக்கம், சுகம், துக்கம் முதலானவைகள் உண்டு. அவர்கள் மூலபிதாமாரிஜு, ஜடம், சூக்குமம், ஸ்தூல ஜடமும் பெறுவார்கள். எவ்வித உருவத்திலும் தோன்றுவார்கள். எவ்வித நுட்பமான வஸ்துவிலும் நுழைத்துக்கொள்ளும் தத்துவம் அவர்களுக்கு உண்டு. எல்லோரும் அல்லாஹுத் தஆலாவின் கட்டளையான விதிவிலக்குகளுக்கு உட்பட்டவர்களே.

---

* மலக்கு-வானவர்   † பலக்கு-சூரிய சந்திர கிரகயந்திரம்.

‡ ஒஹி-தெரிவிப்பு அது அல்லாஹுத் தஆலா நபிமாருக்குத் தெரிவிப்பது.

ஷைத்தான்கள் ஜின்களில் ஒருவகை. அவர்கள் நெருப்பால் மாத்திரம் படைக்கப்பட்டவர்கள். அவர்களுக்கு மூலபிதா இபுலீசு. ஜின்களுக்கு உள்ளதுபோலப் பிறப்பு, இறப்பு முதலானதும் அவர்களுக்கு முண்டு. சூக்குமசரீரந்தான். ஸ்தூல சரீரமும் பெறுவார்கள். ஜின்களுக்கு உள்ள தத்துவம் அவர்களுக்கும் உண்டு, ஆனால் அவர்கள் எப்போதும் அல்லாஹுத் தஆலாவுக்கு மாறு செய்கிறவர்களும், மனிதர்களுக்குத் தீங்குசெய்கிறவர்களுமேயாம்.

ஷஜரெனும் மரம் முதலியவைகளும், சூரிய சந்திர நக்ஷத்திர சம்பந்தங்களைக் கொண்டு நான்கு பூதங்களாற் படைக்கப் பட்டனவாம். ஆனாலும் மண்தான் முதற்காரணம்.

*ஹைவான்கள், நெருப்பு, காற்று, நீர், அக்கினி, ஆகிய நான்கு பூதங்களாலும் படைக்கப்பட்டவை. அவைகளுக்குப் பிறப்பு, இறப்பு, ஊண், உறக்கம், சுகம், துக்கம், இன்பம், துன்பம் எல்லாம் உண்டு. ஜடம், ஸ்தூலம், பொறியும், புலனும் உண்டு. ஐம்பொறி புலன்களில் குறைந்தபொறி புலனுள்ளவைகளும் இருக்கின்றன. அவைகள் இறந்தபின் அழிந்தபின் ஆகிறுவின் உயிர்த்தெழுந்து பின்பு முற்றமுடிய அழிந்தேபோம்.

இன்ஸானாகிய மனிதர்கள் மண், நீர், காற்று, நெருப்பு ஆகிய இந்த நான்கு பூதங்களாற் படைக்கப்பட்டவர். அவர்களுக்குப் பிறப்பு, இறப்பு, ஊண், உறக்கம், இன்பம், துன்பம், முதலிய எல்லாம் உண்டு. மனிதர்கள் ஐவகைப் பொறி புலன்களுடன் ஆறாவதாகிய மன அறிவையும் உடையவர்கள். இந்த மன அறிவைதான் அக்கல் என்று சொல்வார்கள். ஜடம், ஸ்தூலம் உண்கிற ஆகாரத்திலிருந்து பிரிக்கிறசத்து அன்னரசமாய் அதிலிருந்து பிரிகிற சத்து ரத்தமாய் அவர்கள் உடலை வளர்க்கும். அந்த ரத்தத்திலிருந்து பிரிக்கிற சத்தே சுக்கிலமாம், இன்னும் மனிதர்கள் மலக்குகளுக்குச் சமானமான உயர்பத முள்ளவர்கள். அவர்கள் உத்தமர், மத்திமர், அதமர் என்று மூன்றுவகைப்படுவார்கள். உத்தமர் மலக்குகளுக்கு மேலான பதமுள்ள நபிமார்கள். மத்திமர் முஃமீன்கள். அதமர்காபிர்கள். மனிதர் என்றைக்கும் அழியாதவர்கள். இவர்களுக்கு மூலபிதா நபி ஆதம் அலைஹிஸ்ஸலாம்.

---

* ஹைவான் - ஜீவராசிகள். அவை மிருகம், பறவை, ஊர்வன, தாழ்வன, நீர்வாழ்வன முதலியவையாம்.

அல்லாஹுத் தஆலா மேற்சொன்ன பிரகாரம் ஆலத்தை மனிதர்கள் தவிர மற்ற எல்லாப்படைப்புகளும் அமைப்பதாய் ஒரே கோர்வையாகப் படைத்த பிறகு நபி ஆதம் அலைஹிஸ்ஸலாமவர்களை உண்டாக்க நாடியபடி, பூமி முழுவதின் சத்தையும் ஒன்றாகத் திரட்டி யெடுத்து அதைக்கொண்டு அவர்களுடைய ஜடத்தைப் படைத்தான். அப்படிப்படைத்து அந்த ஜடத்திற்குள் ரூஹைப் புகுத்தி ஹயாத்தாக்கினான். ஹயாத்தானவுடன் எலும்பு, நரம்பு, சதை, ஜவ்வு, ரத்தம், தோல், ரோமம் ஆகிய எல்லாம் உண்டாயின. அப்போதே பொறி புலன்களும் உண்டாயின, அவர்களுடைய தோல் மனிதர்களுடைய நகத்தைப்போலிருந்தது. அது பின்னால் மாற்றப்பட்டது. அதில் மீந்ததுதான் மனிதர்களுக்கு நகமாய் முளைத்தது.

முஸ்லிமான சகோதரர்களே! அல்லாஹுத் தஆலா ஆலத்தைப்படைத்த விதத்தை ஒரு வகையாக நாம் சொல்லி முடித்தோம். இதன் வகைகளைப் பிரிக்கவேண்டுமானால் அநேகமாய் விரியும். ஆகையால் நீங்கள் ஒவ்வொருவரும் அதன் நுட்பங்களைக் கருத்தாய் அறிந்து இந்த ஆலம் இன்ன காரியத்திற்காகப் படைக்கப்பட்டது என்பதையுந் தெரிந்து அதற்குத் தக்கபடி அமல்களைச்செய்து ஈடேற்றம் பெறுவீர்களாக. அப்படியே நம்மனைவர்களுக்கு அல்லாஹுத் தஆலா நல்லுதவி செய்வானாக ஆமீன்.

ஆலம் முடிந்தது.

---

## 3-ம் பஸல்.

## மீதாக்கு.

மீதாக்கு என்பது வார்த்தைப்பாடு. அது அல்லாஹுத் தஆலா தன் அடியார்களிடம் வாங்கினது. அதாவது:—

அல்லாஹுத் தஆலா வானம், பூமி முதலானவைகளையும், மலக்கு, ஜின், ஷைத்தான், மிருகங்கள், பறவைகள் முதலானவைகளைப் படைத்த பிறகு நமது ஆதி பிதாவாகிய நபி ஆதம் அலைஹிஸ்ஸலாமவர்களைப் படைக்க நாடியிருந்தபடி அவர்கள் ஜடத்தைச் சத்தமாகப் பக்குவப்படுத்தின களிமண்ணால் சூளையிட்ட கலம்போல ஓசை தரத்தக்கதாக மனுரூபத்திற் படைத்து மக்காவுக்கும், தாயிபுக்கும் இடையில் நாற்பது வருஷம் வரையும் கிடத்

தாட்டினான். பிறகு அந்த ஜடத்தில் றூஹைப் புகுத்தி ஹயாத்தாக்கி அவர்களுக்கும் *சுஜூது செய்யும்படி மலக்குகளை ஏவினான். இபுலீசு தவிர எல்லோரும் சுஜூது செய்தார்கள்.

பிற்பாடு அல்லாஹுத் தஆலா நபி ஆதம் அலைஹிஸ்ஸலாமவர்கள் மூலமாக அவர்கள் முதல் †கியாமத்துவரையும் பூமியிற் பிறக்கும் மனிதர் அனைவரையும் அவர்கள் முதுகிலிருந்து ஒருவர் பின் ஒருவராக வெளிப்படுத்தினான். எல்லாரும் றூஹையும், ஹயாத்தையும், ஜடத்தையும், அக்கலையும் உடையவர்களாய், பருவம் ஏத்தினவர்களாய், சிற்றெறும்புப் பிரமாணமாய் ஒரே நேரத்தில் வெளிப்பட்டு நின்றார்கள்.

அப்போது அல்லாஹுத் தஆலா அவர்களைப் பார்த்து நான் உங்கள் ஆண்டவன் அல்லவா? என்று கேட்டான். அதற்கு எல்லாரும் ஒருமித்து ஆம் என்று மறுமொழி சொன்னார்கள். பிறகு அல்லாஹுத் தஆலா அவர்களைப்பார்த்து நான் உங்களுடைய ஆண்டவன். என்னைத் தவிர வேறு ஆண்டவன் உங்களுக்கு இல்லை. ஆகையால் எனக்கு நீங்கள் இணைவைத்தீர்கள். இணைவைக்காதவர்களையும் எனக்கு ஈமான் கொள்ளாதவர்களையும் நான் வேதனை செய்வேன். இனிமேல் உங்களிடம் என் தூதராகிய றஸூல்மார்களை அனுப்புவேன். அவர்கள் இப்போது நீங்கள் தரும்வார்த்தைப்பாட்டை உங்களுக்கு நினைப்பூட்டுவார்கள். உங்களுக்காக வேதங்களை இறக்குவேன் என்று திருவுளமானான். அப்போது எல்லாரும் ஒருமிப்பாய் நீதான் எங்கள் ஆண்டவன். உன்னைத் தவிர வேறே ஆண்டவன் இல்லை என்றும், நாங்கள் அறிந்து விண்ணப்பஞ்செய்கிறோம் என்றும் சொல்லி ஒப்புக்கொண்டார்கள். இதைப்பற்றி அல்லாஹுத் தஆலா எல்லாரிடத்திலும் வார்த்திலும் வார்த்தைப்பாடு வாங்கிக்கொண்டான்.

அந்த வார்த்தைப்பாட்டிற்கு அவர்களில் ஒருவருக்கு ஒருவரைச் சாக்ஷியாக்கி அவர்களுடைய மரணத் தவணைகளையும், இரணங்களையும், இன்ப துன்பங்களையும் தீர்மானம் பண்ணிவிட்டு மறுபடியும் எல்லாரையும் நபி ஆதம் அலைஹிஸ்ஸலாமவர்கள், முதுகில் வந்தவழியே புகுத்தினான்.

---

*சுஜூது-இரண்டு கால், இரண்டு முழந்தாள், இரண்டு கை, நாசி நெற்றி ஆகிய எட்டுறுப்புகளும் தரையிற்படக்குப்புறுதல் இது சுஜூது தஹிய்யத்து. † கியாமத்து-எழுந்து நின்றல் அது உலகமும் உலகத்துள்ளவைகளும் மடிந்து பின் உயிர்த்து எழுந்து நின்றல்.

இதுதான் வார்த்தைப்பாடாகிய மீதாக்கு என்று சொல்லப்படும். இது நடந்த நாளைத்தான் எவுமுல் மீதாக்கு என்பார்கள். இந்தவார்த்தைப்பாடே எல்லாருக்கும் ஈமானுயிருந்தது. ஆகையால் இந்த வார்த்தைப்பாட்டை முறித்தவர்கள் வேதனையை அனுபவிப்பது நியாயமாம். நாம் எல்லாரும் இப்படி வார்த்தைப்பாடு கொடுத்தவர்கள்தாம். இந்த வார்த்தைப்பாடு கொடுத்தவர்களில் ஒருவரும் மீந்திராமல் எல்லாரும் பூமியிற்பிறந்து தீர்ந்தால் தான் கியாமத்து உண்டாகும்.

முஸ்லிமான சகோதரர்களே! நாம் நம்முடைய ஆண்டவனுக்குக் கொடுத்த வார்த்தைப்பாட்டை முறிக்காமல் நிறைவேற்றுவது நம் எல்லார் மீதும் கடமையல்லவா. ஆகையால் நாம், அந்த வார்த்தைப் பாட்டின்படி எள்ளளவும் பிசகாமல் நடந்து, அந்த ஆண்டவனுடைய கிருபையைப் பெற்றுக்கொள்வதற்காக எச்சரிப்பாயிருப்பது நமது பாரமாகும். அல்லாஹுத் தஆலா எல்லா நன்மையும் மேற்சொன்ன வார்த்தைப் பாட்டை முறிக்காமல் நிறைவேற்றும் வழியில் செலுத்தி அதற்கான நல்லுதவிசெய்து காப்பாற்றுவானாக. ஆமீன்.

மீதாக்கு முடிந்தது.

---

## 4-ம் பஸல்.

## அமானத்து.

அமானத்து என்பது அடைக்கலப் பொருள். அது அல்லாலாஹுத் தஆலா நபி ஆதம் அலைஹிஸ்ஸலாமவர்கள் வசம் ஒப்படைத்தது. அதை *தாஅத்து என்று சொல்லுவார்கள். அல்லாஹுத் தஆலா எவுமுல் மீதாக்கில் எல்லாரிடத்திலும் வார்த்தைப்பாடு வாங்கிக்கொண்ட பிறகு, நபி ஆதம் அலைஹிஸ்ஸலாமவர்களை வானத்திலுயர்த்தி, அவர்கள் மனைவி ஹவ்வாவுடன் சுவர்க்கத்தில் குடியிருத்தினுன். அவர்கள் சுவர்க்கத்தில் இருக்கையில் அல்லாஹுத் தஆலா மேற்சொன்ன அமானத்தைச் சுமக்கீர்களாயென்று வானங்களையும் பூமிகளையும் மலைகளையும் கேட்டான். அவைகள் அதற்குப் பயந்து சுமக்க உடன்படாமல் விலக்கிக்கொண்டன. பின்பு நபி ஆதம் அலைஹிஸ்ஸலாமவர்களை "நீர் இந்த அமானத்தைச் சுமக்கிறீரா?" என்று கேட்டான். அதற்கு

---

* தாஅத்து-இபாதத்து.

அவர்கள் உடன்பட்டுச் சுமந்துகொண்டார்கள். என்றைக்கு அந்த அமானத்தை அவர் சுமந்துகொண்டார்களோ அன்றைக்கே அவர்கள் மக்களாகிய மனிதர் அனைவரும் அதைச் சுமந்து கொண்டவர்களானூர்கள்.

அல்லாஹுதஆலா அந்த அமானத்தை நபி ஆதம் அலைஹிஸ்ஸலாமவர்கள் வசம் ஒப்புவித்து, அதைப் பழுதாக்காமலும், அதற்கு மோசம் பண்ணுமலும், பேணிக்கொள்ளும்படிக் கட்டளைப் பண்ணினுன். அப்படியே அவர்கள் பேணிக்கொண்டார்கள். அதுபோலே நாமும் பேணிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறோம். அதன்படி பேணுதலாவது அல்லாஹுத்தஆலா ஏவின கருமங்களைச்செய்வதும், விலக்கின கருமங்களைத் தவிர்வதுமாம். இதற்கு மாருக நடந்தால் அந்த அமானத்திற்கு மோசமும் பழுதும் வந்து நேரிடும். ஆகையால் எவன் அந்த அமானத்தைப் பேணுனே அவன் சுவர்க்கத்திற்கும் பேணுதவன், நரகத்திற்கும் பாத்திரனுவது நிச்சயம்.

ஆகையால் முஸ்லிமான சகோதரர்களே! அந்த அமானத்தைப்பழுதாக்காமலும், மோசப்படுத்தாமலும், எப்போதும் பேணி நடப்பது நம்மெல்லாருக்கும் விதியாம். அப்படியே பேணி நடந்துகொள்ள அல்லாஹுத் தஆலா நல்லுதவி செய்வாளுக. ஆமீன்.

அமானத்து முடிந்தது.

---

## 5-ம் பஸல்.

## தீன்.

தீன் என்பது மதம். அது விதிவிலக்குகள் அடங்கிய மார்க்கக் கொள்கையாம். அதைத்தான் மார்க்கம் என்றும், சொல்லுவார்கள். அதுமெய் மார்க்கம் என்றும் பொய்மார்க்கம் என்றும் இருவகைப்படும். இஸ்லாம் மார்க்கமே மெய்மார்க்கம். மற்றமார்க்கம் *குபுர் என்னும் பொய்மார்க்கங்களாம்.

இஸ்லாம் மார்க்கமானது, விதிப்படிக்கொள்ளும் ஈமானையும், †இபாதத்தையும் உடையதாம். ஈமானுவது அல்லாஹுத் தஆலா ஒருவன் உண்டென்றும், அவனுடைய மலக்குகளும் உண்டென்றும், வேதங்கள் உண்டென்றும், றஸூல்மார்கள் உண்டென்றும்,

---

* குபுர்-மூடுதல். அது ஈமானுக்கு முரணுனதாம்.

† இபாதத்து-அடிமைத்தனம்.

ஆகிறு உண்டென்றும், நன்மை தீமைகளைப்பற்றிய கற்பனை உண்டென்றும், மனவுறுதியுடன் வாயாற் சொல்வதாம். இஸ்லாம் என்பது இதுதான். இதைச்சார்ந்து கலிமா, தொழுகை, ஸக்காத்து, நோன்பு, ஹஜ்ஜு ஆகிய ஐந்து கருமங்கள் உண்டு. இவைகளே இபாதத்தாம். இவ்விதமான இந்த மார்க்கந்தான் நபி ஆதம் அலைஹிஸ்ஸலாமவர்கள் முதல் நமது நாயகம் நபி முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்கள் வரையுமுள்ள நபிமார் அனைவருக்கும் உரியது. இதற்கு மாற்றமான எந்த மார்க்கமும் குபுர் என்று சொல்லப்படும்.

இந்த மார்க்கத்து எடுப்பாகிய ஐந்து கருமங்களில் முதலாவதான கலிமாவரவது, "லாஇலாஹ இல்லல்லாஹு முஹம்மதுர் றஸூலுல்லாஹி" என்று (வணக்கத்திற்குப் பாத்திரனான ஆண்டவன் அல்லா ஒருவனே யன்றி வேறில்லை. முஹம்மது நபி அவனுடைய தூதர்) என்றும் அதன் அர்த்தத்தை அறிந்து, மனவுறுதியுடன் வாயாற் சொல்வதாம். இவ்விதம் சொன்னவன் மூமினும், முஸ்லிமும் ஆவான்; சொல்லாதவன் காபிர். இஸ்லாம் ஆகும் ஒவ்வொருவனும் தன் ஆயுசு பரியந்தத்திற்கும். முந்தி ஒருதரம் மேற்சொன்னபடி ஈமான்கொண்டு இப்படி கலிமாச் சொல்வது பறுலு; இப்படிச் சொல்வதும், பருவம் எத்தினவனும், புத்தியுள்ளவனுமாயிருந்தே சொல்லவேண்டும். இனி காபிராயிருப்பவன் இஸ்லாமாக வேண்டுமானால் அவன் முன்னிருந்த குபுர் மார்க்கத்தைவிட்டு நீங்கி மேற்சொன்னபடி ஈமான்கொண்டு கலிமா சொல்லவேண்டும். இஸ்லாமாயிருந்து காபிராய்ப்போன ஒருவன் மீண்டும் இஸ்லாமாக வேண்டுமானால் அவன் எதைக்கொண்டு காபிரானானோ அதை நிவர்த்திச்செய்து கொண்டு மேற்சொன்னபடி ஈமானுடன் கலிமா சொல்லவேண்டும்.

இரண்டாவதான தொழுகையாவது. *பருவம் எத்தினவனும், புத்தியுள்ளவனுமாகிய ஒவ்வொரு இஸ்லாமானவனும், இஸ்லாமானவளும், (பெண்கள் ஹைலு நிபாஸ் நாள் தவிர) நாள் ஒன்றிற்கு பஜ்று, லுஹறு, அஸறு, மஃறிபு, இஷா ஆகிய ஐந்து நேரங்களிலும் எவ்வித ஸ்திதியிலும் அல்லாஹுத் தஆலாவை வணங்குவதாம். இது பிரதிதினமும் பறுலு.

மூன்றாவதான ஸக்காத்தாவது:—பருவம் எத்தினவனும், புத்தியுள்ளவனும், அடிமையல்லாதவனும், கடன் இல்லாதவனு

* பருவம் எத்துதல்-பாலிகாதல்.

மாகிய ஒவ்வொரு இஸ்லாமானவனும், இஸ்லாமானவளும் தன்னுடைய எந்தச் செலவையும் நீக்கி இருபது *தீனார் நிறையுள்ள பொன்னாவது வேறு ரொக்க நாணயமாவது மீதியாயிருந்தால், நாற்பதுக்கு ஒன்று விழுக்காடாக வருஷத்திற்கு ஒருதரம், சீமானும், பனீஹாஷிமும் பனீஹாஷிமுடைய அடிமையில்லாத இஸ்லாமான பகீர், மிஸ்கீன், ஸக்காத்தை வசூல் செய்கிறவன், உரிமையுடன் படிக்கை பிறந்துள்ள அடிமை, கடன்பட்டவன், பீசபீல் செய்கிற ஏழை, †முஸாபிறு ஆகிய இவர்களுக்குப் பிரதி பிரயோஜனம் ஒன்றும் இல்லாதபடி அல்லாஹுத் தஆலாவுக்காகக் கொடுக்கிறேன் என்கிற நிய்யத்துடன் தானங் கொடுப்பதாம், இது பறுலு. (பருவம் எத்துண்டாயிருப்பதும், புத்தியுள்ளதும் ஷாபியீமதுஹபில் அவசியமல்ல). ஸக்காத்தை வாங்கிக்கொள்கிற ஏழு வகையாரில் புதிதாக இஸ்லாமானவனையும் சேர்த்து எட்டு வகையார் என்பது அந்த மதுஹபின் நியமகம்.

நான்காவதான நோன்பாவது, பருவம் எத்தின புத்தியுள்ள இஸ்லாமான ஒவ்வொரு ஆணும் பெண்ணும் ஒவ்வொரு வருஷத்து றமலான் மாதம் முழுவதும் (பெண்ணானால் ‡ஹைலு ‖நிபாஸ் நாட்கள் தவிர) ஒவ்வொரு நாளும் கிழக்கு வெளுக்கா முன் முதல் சூரியன் அஸ்தமிக்கும் வரையும் ஒன்றும் தின்னாமலும், குடிக்காமலும், புணராமலும், நோன்பை முறிக்கும் வேறு எதையும் செய்யாமலும் அல்லாஹுத் தஆலாவுக்காக நோன்பிருக்கிறேன் என்கிற நிய்யத்துடன் உபவாசம் இருப்பதாம், இது பறுலு. பெண்கள் *ஹைலு, †நிபாஸா யிருந்தநாட்கள் தீர்ந்தபின் அத்தனை நாள் நோன்பையும் ‡கலா செய்யவேண்டும்.

ஐந்தாவதான ஹஜ்ஜாவது பருவம் எத்தினவனும் புத்தியுள்ளவனும், சரீர சுகமுள்ளவனும், அடிமையல்லாதவனும், அவசியமான எந்தச்செலவையும் நீக்கிப் போகவரச் செல்லுஞ் செலவிற்குப் போதுமான ரொக்கமுள்ளவனுமாகிய ஒவ்வொரு இஸ்லாமானவனும் வழியில் அச்சமில்லாதிருந்தால் மக்காவுக்குப்போய் குறித்த காலத்தில் குறித்த செய்கைகொண்டு குறித்த தானத்தைத் தரிசிப்பதாம். இது ஆயுசு முழுவதற்கும் ஒருதரம் பறுலு.

---

* தீனார்-மேற்படி பொன்னாணயம், அது ஒரு வராகன் எடை.
† முஸாபிறு-பிரயாணி.
‡ ஹைலு-ருதுகம்.
‖ நிபாஸ்-பிள்ளைப்பேற்றுடக்கு.
* கலா-தவறிப்போனதைச் செய்தல்,

மேற்சொன்ன ஆறுகாரியங்களாகிய ஈமானும், இந்த ஐந்து காரியங்களாகிய இபாதத்தும் அடங்கிய இஸ்லா மார்க்கத்திற்கு அதாபுகளாகிய ஒழுங்குகள் அநந்தம் இருக்கின்றன. அவைகளைக் கற்றறிந்து ஒன்றையும் வழுவவிடாமல் நடந்து கொள்வதுதான் ஈமானுக்குப் பேணுதலாம். அப்படிப்பேணப்பட்ட ஈமான் தான் அகீதாயென்று சொல்லப்படும்.

முஸ்லிமான சகோதரர்களே! நாம் இதின் அடுத்த பஸலிற் சொல்லப்போகிற அகீதாவுக்கு மூலாதாரமான மேற்சொன்ன ஈமானையும், அதற்கு ஏற்ற துணையாகிய இபாதத்தையும் சறுகவி டாமல் காப்பாற்றி நடந்து ஈடேற்றம் பெற்றுக் கொள்வது எல்லா பேரிலும் கடமை. அப்படியே அல்லாஹுத் தஆலா நமது ஈமானைத் தரிபாடாக்கி இபாதத்திற்கும் நல்லுதவி செய்வானாக ஆமீன்.

தீன் முடிந்தது.

---

## 6-ம் பஸல்.

## அகீதா.

அகீதா என்பது நிர்ணயம். அது மார்க்கக் கொள்கையி லுள்ள உறுதிப்பாடு. அந்த உறுதிப்பாடு முன் ஈமானிற் சொல்லிய படி அல்லாஹுத் தஆலாவைப் பற்றியதும், மலக்குகளைப் பற்றிய தும், வேதங்களைப் பற்றியதும், *றஸூல்மார்களைப் பற்றியதும், ஆகிருவைப் பற்றியதும், கலா கதறைப் பற்றியது மாக ஆறு வகைப்படும்.

அவற்றில் அல்லாஹுத் தஆலாவைப் பற்றியதாவது:—முத லாம் பஸலிற் சொல்லியபடி அல்லாஹுத் தஆலாவைச் சந்தேகம் அற அறிந்து அப்படியே நிர்ணயிப்பதாம்.

மலக்குகளைப் பற்றியதாவது:—அவர்கள் ஒளியினாற்படைக் கப்பட்டு குபுர், பெரும்பாவம், சிறுபாவம் முதலான எவ்விதக் குற்றத்தையும் விட்டு நீங்கிப் பரிசுத்தர்களாய் அல்லாஹுத் தஆலாவின் பணிவிடைக்காரர்களும், தூதர்களுமாய் ஜனனம், ஆண், பெண், ஊண், உறக்கம் ஆகியவை இல்லாதவர்களாய், பொய் அவிசுவாசம், துரோகம் முதலியவை அற்றவர்களான மாறாதபூரண அறிவையுடையவர்கள் என்றும் இன்னும் அவர்களுக்கு உரிய இயல்புகளையும் அறிந்து நிர்ணயிப்பதாம்.

---

* றஸூல்-தூதர்.

வேதங்களைப் பற்றியதாவது:—வேதங்கள் அல்லாஹுத் தஆலாவின் திருவசனங்கள், அக்ஷரமும், தொனியும் இல்லாமல் வசனிக்கப்பட்டவை; அவை படைக்கப்பட்டவையல்ல; அல்லாஹுத் தஆலா தன் றஸூல்களுக்கு இறக்கினவை என்றும், அவை:-தௌறாத்து, ஸபூறு, இன்ஜீல், புறுகான் ஆகிய நான்கும் இவை அல்லாத சுஹ்புகளுமாம் என்று அறிந்து நிர்ணயிப்பதாம்.

றஸூல்மார்களைப்பற்றியதாவது:—அவர்கள் நபி ஆதம் அலைஹிஸ்ஸலாமவர்கள் முதல் நமது நாயகமான நபி முஹம்மது ஸல்லல்லாஹு. அலைஹி வஸல்லமவர்கள் வரையும் உள்ள நபிமார்களும் றஸூல்மார்களும் அவர்கள் அனைவரும் மனிதர்கள் *நுபுவத்துக்குமுன்னும் பெரும்பாவம், சிறுபாவங்கள் முதலான எவ்விதக் குற்றமும் இல்லாத †பரிசுத்தவான்கள்; உண்மை, விசுவாசம் நம்பிக்கை ஆகிய இவைகள் பூரணமாயுள்ளவர்கள்; அவர்கள் எல்லாருக்கும் ஒஹியும், ‡முஹுஜிஸாத்தும் உண்டு; அவர்களில் நபி மூஸா அலைஹிஸ்ஸலா மவர்களுக்கு தௌறாத்து வேதமும், நபி தாவூது அலைஹிஸ்ஸலாமவர்களுக்கு ஸபூறு வேதமும், நபி ஈஸா அலைஹிஸ்ஸலாம் அவர்களுக்கு இன்ஜீல் வேதமும், நபி முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹி வஸல்ல மவர்களுக்கு புறுகான் வேதமும், அல்லாமல் நபி ஆதம் அலைஹிஸ்ஸலா மவர்களுக்கும், நபி ஷீது அலைஹிஸ்ஸலாமவர்களுக்கும், நபி இதுரீஸ் அலைஹிஸ்ஸலாம் அவர்களுக்கும், நபி இபுறுஹீம் அலைஹிஸ்ஸலா மவர்களுங்கும், நபி மூஸா அலைஹிஸ்ஸலாம அவர்களுக்கும் சுஹ்புகளும் உண்டு. நபிமார் எல்லாரும் புத்திலும், வணக்கத்திலும் குறைவற்றவர்கள். எல்லா நபிகளும் இஸ்லாம் என்கிற ஒரே மார்க்கத்தை யுடையவர்கள். அவர்கள் நுபுவத்துக்கு முந்தியும், ‖உபாதத்துக்குப் பிந்தியும் நபிதான்; அவர்களுடைய நுபுவத்து எப்போதும் மாறுததும் மாற்றப்படாததுமாம் என்று அறிந்து நிர்ணயிப்பதாம். நபிமார் லக்ஷத்திருபத்து நாலாயிரம் என்றும், றஸூல்மார் முன்னூத்தி

---

* நுபுத்து-நபிப்பட்டம்-இதற்கும் பருவம் எத்த வேண்டு மென்பது கடமையல்ல; சிறுபிள்ளைகளிலும் நுபுவத்துப் பெற்றவர்களுண்டு.

† பரிசுத்தவான்-மகுசூம்.

‡ முகுஜிஸாத்து-ஏலாமைப்படுதல், அது நபிமார் தம்மை நபியென்று வழக்கிட்டு அதைத் திருஷ்டாந்தப்படுத்த வேண்டி யாராலுஞ் செய்ய ஏலாததைச் செய்து எதிரியை ஏலாமைப்படுத்தலாம். மாயக்காரர்கள் அவ்விதம் செய்தாலும் அது சோதனைக்குத் தரிப்பட்டிராமல் மாறிப் போகிறதில் விசுமாத்தும், சிஹ்றுமாம்.

‖ உபாத்து-நிரியாணம்.

பதிமூன்று என்றும் சொல்லப்படும். ஆனாலும் அவர்கள் தொகை யையும், பெயர்களையும் விபரமாகமுழுமையும் அறியவேண்டும் என்பது கடமையல்ல. அவர்களைக்கொண்டு ஈமான்மாத்திரம் கொள்ளவேண்டும். பெண்களில் நபி உண்டென்றும், இல்லையென் றும் சந்தேகமான சொற்கள் உண்டு. ஹவ்வா, சாறா, நபி மூஸா அலைஹிஸ் ஸலாமவர்களின் தாயார், மறியம் இந்த நால்வரையும் நபி என்றார்கள். நபிமாரை அறிவது அல்லாஹுத் தஆலாவைக் கொண்டும் முஹுஜிஸாத்தைக்கொண்டுமாம். முஹுஜிஸாத்து அல்லாத கருமாத்து உண்டு. அது நபி என்று வழங்கிடாத மூமினும் ஸாலிஹுமான ஒருவர் எவராலும் செய்யக் கூடாத காரியத்தை வெளிப்படுத்தல். அப்படிச் செய்கிற வரை ஒலி என்பார்கள். நபி மார்கள் ஒலிமார்களைப் பார்க்கிலும் மேலான வர்கள். நபிகளிலும் உயர்வு தாழ்வு உண்டு. நபி என்றால் தெரிவு செய்யப்பட்டவர் என்பது அர்த்தமாம். நபிப்பட்டத் துடனே றஸூல் பட்டம் பெற்றவர்களும் உண்டு. இவர்கள் தான் நபிகளில் உயர்ந்தவர்கள். றஸூல்களிலும் உயர்வு தாழ்வு உண்டு. நபி ஆதம் அலைஹிஸ்ஸலாமவர்களும், நபி நூஹு அலைஹிஸ்ஸலா மவர்களும், நபி இபுறாஹீம் அலைஹிஸ் ஸலா மவர்களும் நபி மூஸா அலைஹிஸ்ஸலாமவர்களும், நபி முஹம் மது ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்களுமாகிய ஆறுபேர் களும் உயர்ந்தவர்கள். இவர்களை உலுல் அஸம் என்பார்கள். இவர்களில் மிக உயர்ந்தவர்கள் நமது நாயகம் முஹம்மது ஸல்லல் லாஹு அலைஹி வஸல்லமவர்கள்தான். நபிமார்களிலும், மலக்கு களிலும், ஜின்களிலும் வேறு எந்தப் படைப்புகளிலும் இவர் களுக்கு மேலான படைப்பு ஒன்றும் இல்லை. நமது நபி நாயகமவர் கள், ஆதம் அலைஹிஸ்ஸலாமவர்கள் மண்ணுக்கும், தண்ணீருக் கும் மத்திலிருக்கும்போது நபியாயிருந்தேன் என்று திருவாய் மலர்ந்து சொல்லி யிருக்கின்றார்கள். ஆகையால் அவர்கள் நபி மாருக்கு முந்தின நபியும், பிந்தின நபியுமாயிருக்கிறார்கள். அவர் களுக்குப்பிறகு நபியே இல்லை. ஆனால் இப்போதும் வானத்தில் ஹயாத்துடன் இருக்கும் நபி ஈஸா அலைஹிஸ்ஸலாமவர்கள் ஆகிறு முடிகின காலத்தில் பூமியில் இறங்கி வருவது மாத்திரம் உண்டு. நபிநாயகமவர்கள் *மிஹுறாஜுக்குப்போனது உண்மையான விஷ யமாம். அவர்கள் ஸ்தூல சரீரத்துடனும், விழிப்புடனுமே போனார்

* மிஹுறாஜு-ஏற்றம்.

கள். அது மக்காவிலிருந்து பைத்துல் முகத்திஸுக்குப்போய், அங்கிருந்து ஏழுவானங்களுக்குப் போய், அங்கிருந்து அறுசுக்குப் போய், அங்கிருந்து அல்லாஹுத் தஆலா நாடின தானம்வரையும் போய் அவனுடன் வசனித்து மீண்டதாம்,

ஆகிறுவைப் பற்றியதாவது:—ஆகிறு என்பது கியாமத்து நாளென்றும், அந்த நாள் இனி உண்டாகுமென்றும், அது ஐம்பதி ஞயிரம் வருஷப்பிரமாணமுள்ள ஒரே நாளென்றும், அந்த நாளில் இறந்துபோன எல்லாரையும் எழுப்பப்படுவது உண்மை யென் றும்; செய்த நன்மை தீமைகளைப்பற்றிக் கேள்வி கணக்கு கேட்கப் படுவது உண்மையென்றும், நன்மை தீமைகள் நிறுக்கப்படுமென் றும், அதற்குத் தக்க கூலி கொடுக்கப்படுமென்றும், பழிக்குப்பழி வாங்கிக்கொடுப்பதுண்டென்றும் விருத்து உண்டு. அதில் நடப்ப தும் உண்டென்றும், சுவர்க்கமும், நரகமும் உண்டென்றும், அவை யென்றைக்கும் அழியாதவையென்றும் நல்லோர் சுவர்க்கத்திலும், கெட்டோர் நரகத்திலும் புகுதுவது உண்டென்றும், *ஷபாஅத்து உண்டென்றும், நரகம் புகுந்த மூமீன்கள் மீக்ஷிபெற்று சுவர்க்க மும் புகுவார்களென்றும், மூமீன்கள் எல்லோரும் ஊழியூழி கால மும் சுவர்க்கத்திலும், காபிர்கள் எல்லாரும் அப்படியே நரகத்தி லும் தரிபடுவது உண்டென்றும், சுவர்க்கவாதிகளுக்கு அல்லாஹு தஆலாவைத் தரிசிக்கும் †லிகா உண்டென்றும், அறிந்து நிர்ண யிப்பதாம். [இன்னும் கபுறில் முன்கர் நகிருடைய கேள்வியும், வேதனையும், சுகமும் உண்டு. நபிமாரல்லாத மற்றவர் ஜடம் அழிய வும் கூடும் என்பதையும் இந்த கிதாபில் மற்ற இடங்களிலும் சொல்லப்படுகிற கபுறு ஆகிறுவைப்பற்றிய எல்லா விஷயங்களும் உண்டென்பதையும் நிர்ணயிக்க வேண்டும்.]

கலா கதரைப் பற்றியதாது:—உலகத்தில் நடக்கிற நன்மை தீமையாகிய ஒவ்வொரு கருமமும் அல்லாஹு தஆலா கற்பனை யாகிய கலா கதறுகளை யல்லாமல் உண்டாக மாட்டாதென்றும், நற்கருமத்திற்கே யன்றித் துற்கருமத்திற்கு, அல்லாஹு தஆலா பொருந்த மாட்டானென்றும் நிர்ணயிப்பதாம்.

இவையல்லாமல் இன்னும் நாம் அறிந்து நிர்ணயிக்கவேண் டியது அகீதாவான விஷயங்கள் அனந்தம் உண்டு. அவைகளில் சிலவற்றைப் பின்னும் எழுதுகிறோம். அவை:—

---

* ஷபாஅத்து-மன்றாட்டம்.
† லிகா-தரிசனை.

அம்று நஹ்யி என்னும் ஏவல், விலக்கல், உடலைப்பற்றியதும், இருதயத்தைப் பற்றியதுமாகிய இபாதத்துகள் எல்லாம் நபிமார் முதலான எல்லார் மீதும் என்றைக்கும் நீங்காமல் பொறுத்தவை யாம். இந்தப் பொறுப்பைத்தான் *தக்லீபு என்பார்கள். இந்த தக்லீபை ஆக்கும் அதிகாரம் அல்லாஹு தஆலாவுக்காக உரியது. ஆனால், ஏலாவிஷயத்தில் தக்லீபு செய்ய மாட்டான். அந்த தக்லீபை பொறுத்துக் கொள்ளும் பருவமும் புத்தியும் வேண்டியது அவசியம். கல்குகளுக்கு வேண்டுமான தக்லீபு முதலிய எவ்விதக் கருமத்தையும் நடத்தத்தான் வேண்டுமென்பது அல்லாஹு தஆலாவுக்குக் கடமையல்ல. ஆனாலும் இரணங்கொடுத்தல், பிழை பொறுத்தல், கூலி கொடுத்தல் முதலியவைகளை மாற்றித்தான் செய்வதாக முன்னமே அறுதியிட்டிருக்கிறான். ஆகையால் அந்த அறுதியை மாற்றமாட்டான். மாற்றுமலிருக்கத்தான் வேண்டும் என்பதும் அவன் கடமையல்ல. இவ்விதமான கடமைப்படாததைச் செய்வதுதான் †பறுலு என்று சொல்லப்படும். இன்னும் கல்குகளுக்கு தீங்கான எவ்விதக் கருமத்தையும் நடத்த வேண்டுமென்பதும் அவன் கடமையல்ல, நடத்தாமலிருக்க வேண்டுமென்பதும் அவன் கடமையல்ல. அப்படி நடத்தினால் அது பலனைத் தருவதாகவே இருக்கும். [இது துன்யாவில் மாத்திரந்தான்] திருஷ்டாந்தம் :—ஒருவனுக்கு நோய்கண்டால் அவன் பிழை பொறுக்கப்படு மென்பதாம்.

ஒருவன் அனுப்பிரமாணமான நன்மையாவது, தீமையையாவது செய்தால் அதற்குத் தக்கபடி கூலி கிடைக்காமற் போகாது. தீமை செய்தவன் ‡தௌபா செய்தால் அந்தத் தீமை பொறுக்கப்படும். தௌபா செய்யாமல் ‖ஹத்து செய்யப்பட்டாலும் பரிசுத்தவானுவான். தௌபா செய்யாமலும், ஹத்து செய்யப்படாமலும் மௌத்தானுல் அல்லாஹு தஆலா பொறுத்துக் கொள்ள நாடினுல் பொறுப்பான், தண்டிக்க நாடினுல் தண்டிப்பான்.

ஒருவன் ஜீவனத்திற்காகத் தொழில்செய்ய வேண்டுமென்பது அவனுக்கு மிடையாயிருந்தால் வாஜிபு. மிடையில்லாதிருந்தால் ஜாயிசு.

---

* தக்லீபு-கட்டாயப்படுத்தல்.

† பறுலு-தயாகரம்.

‡ தௌபா-மீட்பு, அது பாவத்திலிருந்து மீளுதல்.

‖ ஹத்து-மார்க்கதண்டனை.

தோஷி நிர்தோஷியாவதும், நிர்தோஷி தோஷியாவதும் உண்டு. அது கலாவைக் கொண்டேயாம். அதற்கு நிமித்தம் *அமலாம்.

ஒருவன் தன்னையாவது, பிறரையாவது சுவர்க்கவாதி யென்றாவது, நரகவாதியென்றாவது, தீர்மானிக்கக் கூடாது. ஆனால் நபிமார்களையும், அஸ்ஹாபுகளில் அமீருல் முஃமினீன் அபூபக்கர், உமறு, உதுமான், அலிறலியல்லாஹு அன்ஹும் ஆகிய நால்வரையும் தல்ஹா றலியல்லாஹு அன்ஹு, ஜுபைறு றலியல்லாஹு அன்ஹு, அமீர் றலியல்லாஹு அன்ஹு, அப்துர் ரஹ்மான் றலியல்லாஹு அன்ஹு, ஸஃது றலியல்லாஹு அன்ஹு, ஸஈது றலியல்லாஹு அன்ஹு ஆகிய ஆறுவரையும், ஹஸன் றலியல்லாஹு அன்ஹு, ஹுஸைன் றலியல்லாஹு அன்ஹு, பாத்திமா றலியல்லாஹு அன்ஹா இவர்களையும் இன்னும் இவர்களைப் போன்றவர்களையும் சுவர்க்கவாதிகள் என்று தீர்மானிக்கலாம். அஸ்ஹாபுமார்களைப்பற்றிக் குறுப்பாடான எவ்விதச் சொல்லும் சொல்லக்கூடாது. மூஃமினாகவே மௌத்தானவனைச் சுவர்க்கவாதி யென்றும், காபிறாக மௌத்தானவனை நரகவாதி யென்றும் தீர்மானிக்கலாம். மூஃமினான சிறு பிள்ளைகள் சுவர்க்கவாதிகளாம். காபிரானவர்களில் சிறு பிள்ளைகள் சுவர்க்கத்து ஏவலாட்களாம்.

ஒருவன் எவ்விதமாக மௌத்தானாலும் அவன் †அஜலின் படியே மவ்த்தானான் என்றும், அஜல் அல்லாமல் மவ்த்தாக மாட்டான் என்றும் அறிந்து கொள்ளவேண்டும். அஜல் கலாவிலுள்ளது. சுக துக்கங்களை அநுபவிப்பதும் அப்படியே.

தொழுகை, ஸக்காத்து, நோன்பு முதலான பறுலான விஷயங்களில் ஏதாவது ஒன்று தப்பிப்போக அதை கலாசெய்தால், தப்பிப்போய் கலாசெய்யப்பட்ட அது ‡அதாவாய் விட்டதாகவே கொள்ளவேண்டும். மேற்சொன்ன விஷயங்களில் ஒன்றை விட்டு விட்டால் விட்டவன் காபிராகான், பெரும்பாவியாவான். அப்படி விட்டு விடுவது ஆகும் என்று எண்ணி விட்டு விட்டானானால் காபிராவான்.

மனிதர் செய்கிற நன்மை தீமைகளாகிய இரண்டு கருமங்களில் ஒருவன் எதைச்செய்ய நாடினானோ அதைச்செய்து முடிக்கும்

* அமல்-கருமம்.
† அஜல்-தவணை.
‡ அதா-தவறாது செய்தல்.

திராணியை அல்லாஹு தஆலா அப்போது உண்டாக்குவான். அந்தத் திராணிக்கு இஸ்திதாஅத்து என்று பெயர். ஒரு கருமம் செய்வதில் *இக்தியாறும் உண்டு. †இலுத்திருதும் உண்டு. ஒருவன் எந்தக் கருமத்தையும் இக்தியாறு கொண்டே செய்கிறானன்றி, அல்லாஹு தஆலாவின் பலவந்தங்கொண்டே யல்ல. இக்தியாருச் செய்கிற எந்தக் கருமத்திற்கும் கூலி கிடைக்கும். இலுத்திருதாய்ச்செய்கிற எந்தக் கருமத்திற்கும் கூலி கிடைக்காது, இன்னும் மறதியிலாவது, நித்திரையிலாவது பரவசமாக ஒருவன் செய்கிற நன்மைக்கும் தீமைக்கும் கூலியில்லை.

ஒருவனுக்குக் கிடைக்கும் இரணம் ‡ஹலாலாயு மிருக்கும், ‖ஹறுமாயுமிருக்கும். இந்த இருவகை இரணத்தையும் கொடுக்கிறவன் அல்லாஹு தஆலாதான். ஆனால் ஹலாலைப் புசிக்கவும், ஹறுமைத் தவிற்கவும் அவன் நமக்குக் கட்டளை செய்திருக்கிறான். ஒருவன் இரணத்தைப்புசிக்காமல் விட்டு விடவும், மற்றவனுடைய இரணத்தை புசிக்கவும் எவ்விதத்திலும் ஏலாது.

அல்லாஹு தஆலா தான் நாடினவனை நேர்வழிப்படுத்தவும், வழிகொடுக்கவும் பாத்திய முள்ளவன். ஒருவன் *ஸக்கறுத்தில் ஈமான் கொண்டால் அது ஏற்றுக்கொள்ளப் படமாட்டாது. அப்போது செய்யும் தௌபா ஏற்றுக்கொள்ளப்படும்.

ஆலமும் ஆலத்திலுள்ள பொருள்கள் அடங்கலும் அல்லாஹு தஆலாவினால் படைக்கப்பட்டவையே. துவற்கம் முதல் கியாமத்து வரையும் துனியாவில் நடக்கும் சகல கருமங்களும் லவ்ஹுல் மஹ்பூலு என்னும் பலகையில் எழுதப் பட்டிருக்கின்றன.

அல்லாஹு தஆலா ஒருவன் செய்த நன்மையைப் பொருந்திக் கொள்வானென்றும், தீமையை மன்னிப்பான் என்றும் ஆதரவு வைக்கலாமே யல்லாமல் தீர்மானிக்கக்கூடாது.

ஒருவன் செய்கிற துஆவும், ஸதக்காவும் துன்யாவிலும், ஆகிறத்திலும் பிரயோஜனம் தரும். மவ்த்தானவர்களுக்குச் செய்தால் அவர்களுக்குப் பிரயோஜனங் கொடுக்கும் நன்மை தீமைகளா

* இஃதியாறு-தன்வசம், அது மரமேறினன் குதிப்பது போல்வது.
† இலுத்திருது-பரவசம், அது மரமேறினன் கெப்பு முறிந்து விழுவது போல்வது.
‡ ஹலால்-ஆகுமானது.
‖ ஹறும்-ஆகாதது.
* ஸக்கறுத்து-மரணயாதனை.

கிய இரண்டு விஷயங்களும் மார்க்கத்தைக்கொண்டே யல்லாமல் புத்தியைக் கொண்டல்ல.

றூஹு படைக்கப்பட்டதே அதற்கு அழிவில்லை. ஒருவன் மௌத்தானவுடன் அது உடலை விட்டுப் பிரிந்து அவன் நல்லவனாயிருந்தால் *இல்லீனிலும், கெட்டவனாயிருந்தால் †சிஜ்ஜீனிலும் கியாமத்துவரையும் தரிபட்டிருந்து கியாமத்தில் முன்பிறந்த உடலிற்சேர்த்தும் நல்லவன் சுவர்க்கத்திலும், கெட்டவன் நரகத்திலும் போய்த் தரிபாடாவதுஉண்மை. ஆனால் மௌத்தானவுடன் பிரிந்த றூஹு கபுறில் அடக்கினவுடன் உடலிற் புகுவதுண்டு.

ஒருவன் செய்யும் பலாத்காரத்தினால் மனம் உடன் படாமல் வாயால் மாத்திரம் ஒரு குபுரான சொல்லை ஒருவன் சொன்னால் அவன்மீது எவ்விதக் குற்றமும் இல்லை. அந்தப் பலாத்காரத்தினாலேயே மனமும் உடன்பட்டுச் சொன்னால் காபிராவான். குபுரான சொல்லைச் சொல்லிப் பலாத்காரப் படுத்தும்போது அந்த இம்சையைப் பொறுத்துக்கொண்டு அந்தச் சொல்லைச் சொல்லாதிருந்தால் தவாபு உண்டாம். பலாத்காரம் இல்லாமலே மனம் உடன் படாமற்சொன்னாலும் காபிராவான். ஆனால் காபிராகான் என்றும் சொல்லுகிறார்கள். ஒருவன் மஸ்துகொண்டு குபுரான சொல்லைச் சொன்னவன் காபிராகமாட்டான்.

குபிரைத்தவிர மற்றப் பாவங்களை யெல்லாம் அல்லாஹு தஆலா நாடினால் பொறுத்துக் கொள்ளுவான். ஒருவன் பெரும் பாவத்தைக்கொண்டு காபிராகமாட்டான். அந்தப் பெரும்பாவத்தை ஹலால் என்று எண்ணினால் காபிராவான்.

ஒரு பாவியை ‡இமாமாக்கித் தொழுவதுகூடும். அந்தப் பாவி மௌத்தானால் அவன் ||ஜனாஸாவைத் தொழுவிப்பதும் ஆகும். *உலுசெய்யும்போது †மோஸாவின்மேல் ‡மஸ்குசெய்யலாம். ஈத்தம்பழம் ஊறினநீர் ஹறாம் அல்ல.

ஷைத்தானுக்கு ஜின் மேலானது. ஜின்னுக்கு மனிதன் மேலானவன். ஆனாலும் அல்லாஹு தஆலாவுக்குமாறு செய்த மனிதனி

* இல்லீன்-சுவர்க்கத்திற்குப் பிரதியான பறுஸக்குடைய தானம்.
† சிஜ்ஜீன்-நரகத்திற்குப் பிரதியான பறுஸக்குடையதானம்.
‡ இமாம்-முன்னிலை.
|| ஜனாஸா-பிரேதம்.
* உலு-சுத்திகரிப்பு.
† மோஸா-கால்கைகளின் உறை.
‡ மஸ்கு-ஈராமல் துடைத்தல்.

னும் மாறு செய்யாத ஜின் மேலானது. *அவாமான மனிதருக்கு ஔலியாக்கள் மேலானவர்கள். நபி மார்களும், றஸூல் மார்களும், மலக்குகளுக்கு மேலானவர்கள். நபி மாரல்லாது மற்றவர்களுக்கு மலக்குகள் மேலானவர்கள். நபி மாரல்லாத மனிதர்களுக்கு அபூ பக்கர் றலியல்லாஹு அன்ஹு மேலானவர்கள். அவர்கள் மூத லான நால்வரில் ஒருவருக்குப் பின் ஒருவர் அடுத்தடுத்துத் தாழ்ந் தவர்கள். அவர்கள் நால்வரும் நபிநாயக மவர்களுக்குப் பின் தரப் படி ஒருவருக்குப் பின் ஒருவர் †கலீபாவாயிருந்தார்கள். நாலாவ தான அலிறலியல்லாஹு அன்ஹு அவர்களுக்குப் பின் குமாரர் ஹஸன் றலியல்லாஹு அன்ஹு அவர்கள் ஆறுமாதம் வரை யும் கலீபாவாயிருந்தபின் மஆவியா றலியல்லாஹு அன்ஹு அவர்கள் வசம் ஒப்படைத்து விட்டார்கள். நபி நாயகமவர்கள் திருவாய் மலர்ந்து சொன்னதுபோல அவர்களுக்குபின் முப்பது வருஷம் வரையும் ‡கிலாபத்தா யிருந்து, மஆவியா றலியல்லாஹு அன்ஹு அவர்கள் ஒப்புக்கொண்டபின் ராஜாங்கமாயிற்று.

முஸ்லிமானவர்கள் தங்களுக்கு மார்க்கப்படி ஒரு அமீரை நிய மித்துக் கொள்வதும், அந்த அமீருக்குக் கீழ்படிந்து நடப்பதும் கடமை.

அல்லாஹு தஆலாவைத் தக்கபடி வணங்குவது யாராலும் ஏலாவிஷயம். அதனால் தான் ஈன்றமட்டும் வணங்கும்படிக் கட் டளை யிடப்பட்டது.

நாலுபேர் பார்க்கட்டும் மென்றும், கேழ்க்கட்டு மென்றும் ||மெய்ப்புக்குச்செய்கிற இபாதத்தும், நாம் இபாதத்துச் செய்கிறோ மென்று கொள்கிற இறுமாப்பும், அந்த இபாதத்தினாலுண்டா கும் பிரயோஜனத்தைக் கெடுத்துவிடும். இவ்விதப் பாவந் தவிர மற்றப்பாவங்கள் இபாதத்தையும், அதனாலுண்டாக்கும் பலனையும் கொடுக்கமாட்டாது.

முஃமீன் காபிராகிய மனிதர் எல்லாரிலும் ஒவ்வொருவர் மீதும் ஹபலத்து என்கிற மலக்குகள் உண்டு. அவரவர்கள் அவன வன் செய்கிற நன்மை தீமைகளை எழுதுகிறவர்களும், அவனவனைக் காத்துக் கொள்ளுகிறவர்களுமே.

* அவாம்-பாமரன்.
† கலீபா-பிரதிநிதி.
‡ கிலாபத்து-பிரதிநிதித்துவம்.
|| மெய்ப்பு-றியா.

தஜ்ஜால் வருதல், தாபத்துல் அறுது வருதல், யாஜூஜு மாஜூஜு வருதல், நபி ஈஸா அலைஹிஸ்ஸலா மவர்கள் வருதல், சூரியன் மேற்கே யிருந்து கிழக்கேபோதல் முதலான கியாமத்து அடையாளங்க ளெல்லாம் உண்டு.

முஸ்லிமான ஒவ்வொருவருக்கும் நாம் அல்லாஹு தஆலா வைச் சந்தேகம் அற அறிந்திருக்கிறோமென்று நம்பியிருப் பதும், நாம் மூமினே அல்லவோ வென்று சமுசயப்படாமலிருப் பதும், ஒருவன் நீ மும்மினு? என்று கேட்டால் ஆம் என்று உறு தியாகச் சொல்வதும் கடமை. ஆனாலும் ஒருவனுடைய ஈமான் அஜாக்கிரதையால் மாறிப்போவது உண்டென்று நம்ப வேண்டி யது.

நாம் நிர்ணயங் கொள்ள வேண்டிய அகீதா விஷயங்கள் இவை களல்லாமல் இன்னும் அநந்தம் உண்டு. ஆனதால் அல்லாஹு தஆலா இடத்திருந்து நபி நாயகமவர்கள் கொண்டு வந்த எல்லா விஷயங்களும் உண்மையே என்று நிர்ணயிக்கவேண்டும். அப்படி நிர்ணயிக்க வேண்டிய ஒரு விஷயத்திலாவது சொல், செயல், உறுதி இவைகளால் மாற்றம் வராமலும் காக்கவேண்டும். இதுவே ஈமானுக்கு அடிப்படை.

ஒருவனுக்கு அகீதா விஷயத்தில் எதுவிலாவது உண்மையை அறிவிக்கும் அறிவாளியை அடுத்தும் அறிந்து கொள்கிறவரையும், அவன் அல்லாஹுத் தஆலா இடத்தில் இதில் எது உண்மையோ அதை நான் உண்மை கொண்டேன் என்று நிர்ணயித்துக் கொண்டு உடனே அறிவிக்கும் அறிவாளியை அடுத்து அறிந்து கொள்ள வேண்டியது. இவ்விதஞ் செய்யாமல் சந்தேகத்துடனே இருந் தால் காபிருயிருப்பான் "நவூது பில்லாஹி மின்ஹா."

மேற் சொன்னவைகளும், அவ்விதமானவைகளுமான கொள் கையை யுடையவர்கள் தாம் *அஹ்லுஸ் சுன்னத்துவல் ஜமாஅத்து யென்று சொல்லப்படுவார்கள்.

முஸ்லிமான சகோதரர்களே! நாம் இந்த பஸலிலும் மற்ற பஸல்களிலும் சொல்லி யிருக்கிற அகீதாக்களைக் கசடற அறிந்து அவற்றிற்கு எவ்வளவும் பிசகு வராமல் எச்சரிப்பாயிருந்து அவ் விதமே நடந்து கொள்வது நம் எல்லார்மீதும் கடன். ஆகையால்

---

* அஹ்லுஸ் சுன்னத்து வல்ஜமாஅத்து-இஸ்லாம் மார்க்கத்தின் பரி சுத்தமான பூர்வக் கூட்டத்தைச் சேர்ந்தோர்.

உங்களுக்கு உண்டாகும் சந்தோஷம், சலிப்பு, கிருபை, கோபம் முதலான எந்த ஸ்திதியிலும் மேற்சொன்ன அகீதாவுக்கு விரோத மான எவ்விதச் சொல்லாவது, செயலாவது, உறுதிப் பாடாவ்து நேரிடாமல் காத்துக்கொள்ள வேண்டியது கடனும். அப்படி அருமையாகக் காத்துகொள்ளா விட்டால் குபுர் வந்து சம்பவிக் கும். அகீதாக்களை அறிந்து காத்துக் கொள்ளாதவர்கள் மௌத் தாகும் ஸகருத்து வேளையில் இபுலீசு வந்து மருட்டி அகீதாக் களுக்கு விரோதமான சொற்களைச் சொல்லும்படித் தூண்டுவான். அதன் வகை விவரம் அறியாதவர்கள், சொன்னப்படிச் சொல்லத் தான் நேரிடும். அதனுல் கைசேதம் உண்டாம். ஆனபடியால் மௌத்து வரும் முன்னமே அகீதாக்களை அறிந்திருப்பதும், காத் துக் கொள்வதும், கடன்தான் என்பதை நன்ருக அறிந்து தக்க எச்சரிப்புடன் இருப்பீர்களாக. அப்படி யிருக்கும்படி அல் லாஹு தஆலா நாம் அனைவருக்கும் நல்லுதவி செய்து ஈமானுடன் மௌத்தாக்குவாணுக. ஆமீன்.

அகீதா முடிந்தது.

---

## 7-ம் பஸல்.

## பிதுஅத்து.

பிதுஅத்து என்பது நூதனம். அது சுன்னத்துக்கு விரோத படை, நூதனமாகக் கொள்ளும் கொள்கை. இந்தக் கொள்கையை யுடையவன் முப்ததிகு என்று சொல்லப்படுவான். இதை உண்மை யென்று சாதிக்கும் கூட்டத்தாருக்கு அஹலுல்பிதுஅத்து என்று பெயர். அவர்கள்:—ருபிலிய்யா, காரிஜிய்யா, கதறிய்யா, ஜப றிய்யா, முஃத்தஸிலா, முஷப்பிஹா என்று ஆறு வகைப் படுவார்கள். இந்த ஆறு வகையாரே வகை யொன்றிற்குப் பன்னிரண்டு கூட்டமாக எழுபத் திரண்டு கூட்டமாய்ப் பிரிந் தார்கள். இந்த எழுபத்திரண்டு கூட்டத்தாரின் கொள்கையில் குபுறும் உண்டு, *பிஸ்கும் உண்டு.

ருபிலிய்யா என்பவர்கள் இஸ்லாமை விட்டு விட்டவர்கள். அவர்கள் †இமாம் ஜமாஅத்து தொழுகையை சுன்னத்தல்ல

---

* பிஸ்கு-பாவம்.

† இமாம் ஜமாஅத்துத் தொழுகை-பலர் கூடி ஒருவரை முன்னிலை யாக்கி நின்று தொழுதல்.

என்றும், மோஸாவின்மேல் மஸ்கு செய்வதை ஜாயிதல்ல என்றும், தராவீஹ்த் தொழுகையை சுன்னத்தல்ல என்றும், மூன்று *தலாக்கையும் ஓரே வார்த்தையிற் சொல்வதை ஜாயிதல்ல என்றும், தொழுகையில் இடது கைமேல் வலது கையை வைத்துக் கட்டுவதை ஜாயிதல்ல என்றும், பொதுப்பட மறுப்பதுடன் அபூ பக்கர் றலியல்லாஹு அன்ஹு, உமறு றலியல்லாஹு அன்ஹு, உதுமான் றலியல்லாஹு அன்ஹு ஆக இந்த மூவரையும் †லஃனத்துச் செய்துவிட்டு அலி றலியல்லாஹு அன்ஹு அவர்களை மாத்திரம், ஒப்புக்கொள்ளுகிறார். இன்னும் அவர்களில் அலி றலியல்லாஹு அன்ஹு அவர்கள் இலாஹாயிருந்து வானத்தினின் றிறங்கி ‡லாஹூத்துடைய ||ஸூறத்தை விட்டு புறப்பட்டு, *நாஸூத்துடைய ஸூறத்தில் நுழைந்து, ஆண்டவனுக்குரிய சில செய்கைகளைச் செய்து விட்டு வானத்தில் ஏறி தங்கள் இருப்பிடஞ் சேர்ந்தார்கள் என்று சொல்லுகிறவர்களும், அலி றலியல்லாஹு அன்ஹு அவர்கள் முஹம்மது நபியுடைய நுபுவதில் கூட்டாயிருந்தார்கள் என்று சொல்லுகிறவர்களும் நுபுவத்து அலி றலியல்லாஹு அன்ஹு அவர்களுக்குத் தான் வந்தது. அதை ஜிபுறயீல் முஹம்மது நபியுடனிருந்த இஷ்ட நிமித்தம் மாறுபாடாக முஹம்மது நபிக்குக் கொடுத்து விட்டார் என்று சொல்லுகிறவர்களும் †அஹ்லுல் பைத்துடைய இல்மை அறிந்தவர்கள் யாராயிருந்தாலும் அவர்கள் தம்மை நபி என்று சொன்னாலும் சொல்லாவிட்டாலும் நபி தான் என்று சொல்லுகிறவர்களும், முஹம்மது நபியுடைய காலத்திற்கு முந்தி நபி ஆதம் அலைஹிஸ்ஸலாம் வரையும், பிந்தி கியாமத் வரையும் ஒவ்வொரு காலமும் நபி யில்லாமல் இராது என்று சொல்லுகிறவர்களும், ஹலறத்து இமாம் ஹஸன், இமாம் ஹுஸைன் றலியல்லாஹு அன்ஹுமா அவர்கள் முதற்கொண்டு அவர்கள் வம்மிஷத்தில் கியாமத்து வரையும் ஒவ்வொரு இமாம் இல்லாமல் ஒவ்வொரு காலமும்

---

* தாலாக்கு-விவாக சம்பந்த விடுதலை.
† லஃனத்து-அல்லாஹு தஆலாவின் முனிவு.
‡ லாஹூத்து-தெய்வத்துவம்.
|| ஸூறத்து-உருவம்.
* நாஸூத்து-மனித தத்துவம்.
† அஹ்லுல் பைத்து-வீட்டுக்காரர், அவர்கள் :—முஹம்மது நபி, அலி, பாத்திமா, ஹஸன், ஹுஸைன்.

இராது, அந்த இமாம்கள் *இல்முகளை அல்லாஹூ தஆலா இடத்திலிருந்து, நேரிலாவது, ஜிபுரயீல் அலைஹிஸ்ஸலாமவர் மூலமாகவாவது அறிந்து கொள்வார்கள். அந்த இமாம்களை எவன் அறியாமல் மௌத் தாவானே அவன் மௌத்து †ஜாஹிலிய்யத்தான மௌத்தாயிருக்கும் என்று சொல்லுகிறவர்களும், அலி றலியல்லாஹூ அன்ஹூ அவர்களும், அவர்கள் பிள்ளைகளும், அவர்கள் கூட்டத்தார்களும், துன்யாவில் மீண்டும் வந்து, தங்கள் பகைவரை வேதனை செய்வார்கள் என்று சொல்லுகிறவர்களும், அலி றலியல்லாஹூ அன்ஹூ அவர்களுடையதும், அவர்கள் பிள்ளைகளுடையதுமான றாஹூகள் துன்யாவில் மீண்டுவந்து வேறு ஜடங்களில் பிரவேசித்து தங்கள் பகைவரை வேதனை செய்யும் என்று சொல்லுகிறவர்களும், குறுஆனுக்கு உள்ளபடி அர்த்தம் பண்ணுமல் மாற்றமாக அர்த்தம் பண்ணுகிறவர்களும், அலி றலியல்லாஹூ அன்ஹூ அவர்கள் மௌத்தாக வில்லை, ஜடத்துடனும், ஜீவனுடனும், வானத்தில் இருக்கிறார்கள், ஓடித்திரிகிற ஒவ்வொரு மேகத்திலும் இருக்கிறார்கள், இடி அவர்கள் சப்தந்தான் என்று சொல்லுகிறவர்களும், சாக்ஷியில்லாமல் ‡நிகாஹூ செய்வது ஜாயிசு தான். ஏனெனில் ஒவ்வொரு நிகாஹிலும் அலிரலியல்லாஹூ அன்ஹூ அவர்களும், அவர்கள் பிள்ளைகளும் வந்திருப்பார்கள் என்று சொல்லுகிறவர்களும், மதுபானங்களும், சிலகாலம் வைத்திருந்து பின்பு விலக்கி விடலாம் என்றெண்ணி ஒருத்தியை நிக்காஹூ செய்வதும், ‖லீவாததும் ஹறாமல்ல. ஒருவன் தன்மனைவி ஹைலாயிருக்கையில் சொல்லும் தலாக்கும், மூன்று தலாக்கையும் ஒரே வார்த்தையில் சொல்வதும் கூடாது என்று சொல்லுகிறவர்களும், முஹம்மது நபியைப் பார்க்கிலும் அலிரலியல்லாஹூ அன்ஹூ அவர்கள் அதிக வரிசையும், நாகரீகமும், பராக்கிராமும் உள்ளவர்கள் என்று சொல்லுகிறவர்களும், முஹம்மது நபிக்குப்பின் அவர்கள் கிலாபத்தை அலி, ரலி அல்லாஹூ அன்ஹூ அவர்களுக்கு விடாமல் அபூபக்கரும், அதன்பின் உமறும், அதன்பின் உதுமானுமாகப் பெற்றுக் கொண்டது குபுறு என்று சொல்கிறவர்களும், முஹம்மது நபிக்குப்பின் அவர்கள் கிலாபத்தை அலி றலியல்லாஹூ அன்ஹூ

---

* இல்மு-கல்வி.

† ஜாஹிலிய்யத்து-மூடத்துவம்.

‡ நிகாஹ்-விவாகம்.

‖ லீவாதது-குரப்புணர்ச்சி.

அவர்கள் தாமே பெற்றுக்கொள்ளாமல் முந்தின மூன்று பேர்களுக்கும் விட்டது குபுரு என்று சொல்லுகிறவர்களும், அலிறலியல்லாஹு அன்ஹு, ஹஸன் றலியல்லாஹு அன்ஹு, ஹுஸைன் றலியல்லாஹு அன்ஹு, ஸெயினுல் ஆபிதீன் றலியல்லாஹு அன்ஹு, முஹம்மது பாகிறு றலியல்லாஹு அன்ஹு, ஜஃப றுஸ்ஸாதிஹு றலியல்லாஹு அன்ஹு, மூஸாகாலிம் றலியல்லாஹு அன்ஹு, அலிமுஸர்றிளா றலியல்லாஹு அன்ஹு, முஹம்மது தகீ றலியல்லாஹு அன்ஹு, அலிநகீ றலியல்லாஹு அன்ஹு, ஹஸனுல் அஸ்கறீ றலியல்லாஹு அன்ஹு, முஹம்மது பிகுதி றலியல்லாஹு (இவர்கள் தாம் பாராஇமாம் என்று சொல்லப்படுவார்கள்.) ஆக இந்த பன்னிரண்டு இமாம்களையும் அறியாதவர்களையும், இவர்களுக்கு *பைஅத்துக் கொடுக்காதவர்களையும், காபிர் என்று சொல்லுகிறவர்களும், அலி றலியல்லாஹு அன்ஹு அவர்கள் முஹம்மது நபிக்கு †ஒலியுல் அஹ்து என்றும், ‡ஒவஸியென்றும், அவர்கள் அல்லாத மற்றவர்களுக்கு பைஅத்துக்கொடுத்தவன் காபிர் என்றும் சொல்லுகிறவர்களும், அபூபக்கர், உமறு, உதுமான் இவர்களைப்பார்க்கிலும், அலிறலியல்லாஹு அன்ஹு அவர்கள் மேலானவர்கள். ஆனாலும் அந்த மூவருடைய கிலாபத்துகளும் சரியானவை தாம் என்று சொல்லுகிறவர்களும், அலிறலியல்லாஹு அன்ஹு அவர்களுடன் எதிர்த்த மஆவியா, தல்ஹா, ஸுபைறு, ஆயிஷா இவர்கள் முதலானவர்களை லஃனத்துச் செய்ய நேரிடுகிறது என்று சொல்லுகிறவர்களும், ஒரு ||பாஜிறுக்குப் பின்னின்று தொழக்கூடாது என்று சொல்லுகிறவர்களும், ×ஒஸீயத்துச் செய்வது வாஜிபுதான் என்று சொல்லுகிறவர்களும், அபூபக்கர் உமறு உதுமான் இவாகள் மூவரைப்பார்க்கிலும் அலிறலியல்லாஹு அன்ஹு அவர்கள் அதிகம் அறிந்தவர்கள் என்று சொல்லுகிறவர்களும், மனிதர்களில் ஆதம் அலைஹிஸ்ஸலாமவர்களின் பெண் மக்கள் வழியாய்ப் பிறந்தவர்கள் அல்லாமல் நபீஷீது அலைஹிஸ்ஸலாமவர்கள் +ஹூறுல்ஈனை விவாகஞ்செய்து பெறப்பட்டவர்

---

* பைஅத்து - கைபோட்டுக் கொடுத்தல்.

† ஒலியுல் அஹ்து - உடன் பாட்டுக் காரியஸ்தன்.

‡ ஒவஸி - ஒருவனுடைய மரணத்திற்குப் பின்புள்ள காரியத்தை நடத்த அதிகாரம் பெற்றவன்.

|| பாஜிறு - மாறு செய்கிறவன்.

× ஒஸீயத்து - மரண சாதனம்.

\+ ஹூறுல்ஈன் - சம்ஸை.

களுமுண்டு என்று சொல்லுகிறவர்களும், ஆதம் அலைஹிஸ்ஸலாமவர்கள் காலத்தில் ஆகுமாயிருந்த சகோதர விவாகத்தை அந்தக் காலத்தில் ஆகுமா யிருக்கவில்லை, அவர்கள் ஹூறுல்ஈன்களை விவாகஞ்செய்து வந்தார்கள் என்று சொல்லுகிறவர்களும், *ஜிமாவுடைய காலத்தில் †நுத்பாவானது நல்லெண்ணத்துடன் வெளிப்பட்டால் அந்தப்பிள்ளை மனிதப் பிறவியாம். ஷைத்தானுடைய வஸ்வாசுடன் வெளிப்பட்டால் அந்தப்பிள்ளை ஷைத்தான் பிறவியாம் என்று சொல்லுகிறவர்களும், அலிறலி யல்லாஹூ அன்ஹூ அவர்களையும், அஹலுல் பைத்தையும் மாத்திரம் உகந்திருப்பது முக்கியம் என்று சொல்லுகிறவர்களும், மார்க்கத்திற்கு ஆதாரமான ‡கிதாபு, ||சுன்னத், ÷இஜ்மாஉ, ×கியாஸ் ஆகிய நான்கிலும் இஜ்மாஉ ஆதாரமல்ல வென்று சொல்லுகிறவர்களும், +மதுஹபுடைய நான்கு இமாம்களும் ஒருவருக் கொருவர் அபிப்பிராயம் வேறு படுவதும், அவர்கள் மதுஹபனைத்தும் ஜாயிஸல்ல என்று சொல்லுகிறவர்களும், குறுஆன் படைக்கப்பட்டது என்று சொல்லுகிறவர்களும், மீதாக்குடைய நாளில் ஜலத்துடன் வார்த்தைப் பாடுகளை வாங்கவில்லை என்று சொல்லுகிறவர்களும், ராகதாளம், கூத்து பாட்டு இவைகள் ஹலால், ஹறாம் என்றால் =மக்றூஹூதான் என்று சொல்லுகிறவர்களும், இமாம்கள், குறைஷிகளாய் ஹஸன், ஹுஸைன் றலியல்லாஹூ அன்ஹூமா அவர்களின் வம்மிஷத்தாராகவே யிருக்கவேண்டும் என்று சொல்லுகிறவர்களும், அலி றலியல்லாஹூ அன்ஹூ பாத்திமா றலியல்லாஹூ அன்ஹா, ஹஸன் றலியல்லாஹூ அன்ஹூ ஆகிய இந்த நால்வரையும் பொதுவாக அசுஹாபிகள் அனைவருக்கும் மேலானவர்கள் என்று சொல்லுகிறவர்களும், இன்னும் இவை போலப் பலவிதம் சொல்லுகிறவர்களும் உண்டு.

காறிஜிய்யா என்பவர்கள் இஸ்லாமில் புறம்பானவர்கள் அவர்கள் இமாம் ஜமாஅத்துத் தொழுகை தரிபாடல்ல என்றும், பாவத்தைக் கொண்டு கிபுலாவை யுடையவர்களைக் காபிரென்றும், அநி

* ஜிமாஉ - புணர்ச்சி.
† நுத்பா - சுக்கிலம்.
‡ கிதாபு இங்கே குறுஆன்.
× சுன்னத் - நபி நாயகமவர்கள் சொல்லும் செயலும், பொருத்தம்.
+ இஜ்மாஉ - அசுஹாபுகளின் ஐக்கியத் தீர்ப்பு.
÷ கியாஸ் - அபிப்பிராயம்.
÷ மதுஹபு - சித்தாந்தம்.
= மக்றூஹூ - அருவருப்பு.

யாயக்கார முஸ்லிமான ராஜனை எதிர்க்கலாம் என்றும், அலிறலியல்லாஹு அன்ஹு அவர்களை மஆவியா றலியல்லாஹு அன்ஹு எதிர்த்தது நியாயந்தான் என்றும் பொதுவாகச் சொல்வதுடன், அலி றலியல்லாஹு அன்ஹு அவர்களும், உமறு றலியல்லாஹு அன்ஹு அவர்களும், தவிர மற்றவர்களில் யாரையாவது முஸ்லிம் என்றும், காபிர் என்றும் நாங்கள் அறியவில்லை, ஆகையால் தீர்மானமாகச் சொல்லவுமாட்டோம். ஆனால் எல்லாரும் *முனாபிகுகள் தாம் என்று சொல்லுகிறவர்களும், ஈமானானது அறியக்கூடியதல்ல ஆகையால் மனிதரில் ஒருவரும் அதை யறியமாட்டார்கள். முடிவில் ஒருவரும் முஃமீன் அல்ல என்று சொல்லுகிறவர்களும், முஸ்லிமானவர்களில் ஆணானாலும் பெண்ணானாலும், ஈமானானாலும் ஏழையானாலும், ஒருவராவது †பீசபீல் செய்வதை விட்டுவிட்டு இருக்கக்கூடாது. விட்டிருந்தவர்கள் காபிர் என்று சொல்லுகிறவர்களும், பாவச்செய்கை பயிரங்கமாய் எல்லாரிடத்திலும் இருக்கிறபடியால் இன்னான் முஸ்லீம், இன்னான் காபிர் என்று அறியக்கூடவில்லை, ஆகையால் ஒருவருக்கும், ஸக்காத்துக் கொடுக்கக்கூடாது என்று சொல்லுகிறவர்களும், பெண்கள் பரிமள புஷ்பத்திற்கு ஒப்பானவர்கள் ஆகையால் நிக்காஹ் இல்லாமலும், அடிமைப் பாத்தியம் இல்லாமலும், மோந்து கொள்ளலாம், புணர்ச்சியும் செய்யலாம் என்று சொல்லுகிறவர்களும், முஸ்லிம் என்றும் காபீர் என்றும், ராஜாங்கத்திற்கு அருகன் இன்னான் என்றும் அறியக் கூடாமையால் கலீபாக்களை நியமிப்பது நியாயமல்ல ‡அமீர்களையும், ‖காஸிகளையும் நியமிப்பது ஆகாது. ÷ஹுக்கும் செய்வதும், ஜும்ஆத் தொழுகை தொழுவதும், ஜமாஅத்துடன் தொழுவதும் ஆகாது என்று சொல்லுகிறவர்களும், நபிநாயக மவர்களுக்குப் பின் அஸ்ஹாபிகள் ஒருவருக்கொருவர் மார்க்க விஷயத்தில் விகற்பப்பட்டுப் போராடிக் கொண்டார்கள். அதனால் யதார்த்தம் இன்னது என்று அறியக் கூடவில்லை, ஆகையால் அவர்களில் ஒருவரையாவது நாம் விரும்பவுமாட்டோம், வெறுக்கவுமாட்டோம் என்று சொல்லுகிறவர்களும், ×ராஜாங்

---

* முனாபிகு-மனம்வேறு, வாக்கு வேறுபட்டவன். அவன் கலிமாவை மனதில் தரிபடுத்தாமல் வாயால் மாத்திரஞ் சொன்னவன்.

† பீசபீல் - மார்க்கயுத்தம்.

‡ அமீர் - அதிகாரி.

‖ காஸி - நியாயாதிபதி.

× ஹுக்கும் - தீர்மானம்.

+ ராஜாங்கம் என்பது - இஸ்லாமுடைய ராஜாங்கம்.

கத்துக்குப் பாத்திய வழக்கிடுகிறவன் மீது சண்டைசெய்யலாம் என்று சொல்லுகிறவர்களும், ஒரு முஃமின் சிறு பாவத்தையா வது, பெரும்பாவத்தையாவது செய்தால் காபிராவான் என்று சொல்லுகிறவர்களும், பாவத்தைச் செய்யக் கருதினாலும் காபிரா வான் என்று சொல்லுகிறவர்களும், ஜீவனுடன் இருப்பவர்கள் செய்யும் *துஆவும், †ஸதக்காவும் மவுத்தானவர்களுக்குப் பிர யோசனம் கொடுக்கமாட்டாது என்று சொல்லுகிறவர்களும், தரை முழுவதும் தொழுகிறதற்கு இடமாயிருப்பதால் எந்த இடத் திலும் சிறுநீருக்கு இருக்கக்கூடாது. ஒரு கரத்தில் பெய்து தண் ணீரில் போட்டுவிட வேண்டுமென்று சொல்லுகிறவர்களும், இன் னார் சுத்தர், இன்னார் அசுத்தர் என்று அறியமாட்டோம் ஆகை யால் ஒருவரையாவது தொடவுங் கூடாது, ஒருவருடன் கலந் திருந்து தின்னவுங் கூடாது யென்று சொல்லுகிறவர்களும், படை யாயுதங்களில் யேது இருந்தாலும் அதைப்பற்றி ஒவியத்துச் செய்வது வாஜிபு, அப்படிச் செய்யாவிட்டால் அநியாயக் காரனா வான் என்று சொல்லுகிறவர்களும், காற் சட்டையுடன் தொழுகக் கூடாது என்று சொல்லுகிறவர்களும், அல்லாஹு தஆலா அறு ஷின்மீது இருக்கிறான்.

அவனுக்கும் அறுஷுக்கும் இடையில் ஆகாசம் இருக்கிறது என்று சொல்லுகிறவர்களும், அல்லாஹு தஆலாவுக்கு விபத்து கள் இல்லை என்று சொல்லுகிறவர்களும், அல்லாஹு தஆலா ஒரு வஸ்துவைப் படைக்குமுன் அதை அறியமாட்டான் என்று சொல்லுகிறவர்களும், அல்லாஹு தஆலா கேட்கிறவன் அல்ல, பார்க்கிறவன் அல்ல, பார்க்கப்பட்டவனும் அல்ல, ஆனாலும் அறி கிறவன் தான் என்று சொல்லுகிறவர்களும், அல்லாஹு தஆலா தீமையைப்பற்றிக் கற்பனை செய்யவில்லை யென்று சொல்கிறவர் களும், அல்லாஹு தஆலா குபுரையும், தீமையையும், தங்கடத் தையும் படைக்காமலும், கற்பிக்காமலும் இருப்பதே நியாயம் அடியாருக்கு அனுகூலமான விஷயங்களைச் செய்வது அவன் கடமை. அப்படிச் செய்யாவிட்டாலும் அவன் படைத்த குபுரைக் கொண்டும், தீமையைக்கொண்டும் வேதனை செய்வதும், அநி

* துஆ - இரத்தல்.
† ஸதக்கா - தருமம்.

யாயம் என்று சொல்லுகிறவர்களும், குர்ஆனில் உள்ள *முத்த ஷாபிஹான ஆயத்துகளுக்கு அர்த்தம் பண்ண வேண்டும் என்று சொல்லுகிறவர்களுக்கும், நபிமார்கள் நுபுவ்வத்துக்கு முன் நபியும் அல்ல மஹ்ஸூமும் அல்ல என்று சொல்லுகிறவர்களும், ஒலிமாருக்கு கருமாத்து இருக்க ஒண்ணாது என்று சொல்லுகிறவர்களும், இமாம்கள் மதுஹபு வைக்கவும் கூடாது, அதை நாம் தொடரவுங் கூடாதென்று சொல்லுகிறவர்களும், முந்தின நபிமார்களின் மார்க்க நிபந்தனைகளையும், வேதங்களையும் மாற்றினது கூடாது என்று சொல்லுகிறவர்களும், குறுஆன் படைக்கப் பட்டது. அல்லாஹுதஆலா எவ்விதத்திலும் பேசுகிறவனே யல்ல என்று சொல்லுகிறவர்களும், அல்லாஹுதஆதா தன் அடியார்களுக்குச் செய்த பருலானது அவனை யறியத்தக்க அடையாளங்களும், அக்லும் அல்லாமலும் வேறொன்றும் இல்லை என்று சொல்லுகிறவர்களும், குறுஆன் படைக்கப்பட்டது. அல்லாஹு தஆலாவுக்கு ஸிபத்துகள் இல்லை என்பது தௌஹீது என்றும், அல்லாஹுதஆலா குபுறு முதலான தீமைகளைப்படைக்காமலும், கற்பிக்காமலும் இருப்பது என்பது நீதம் என்றும், ஒரு முஸ்லிம் பெரும்பாவத்தைச் செய்தால் ஈமானை விட்டுப் புறப்படுவானே யல்லாமல் குபுறில் நுழையமாட்டான் என்பது நடுநிலை என்றும், நன்மைக்கூலியும் தீமைக்கூலியும் கொடுப்பது அல்லாஹுதஆலா மீது கடன், நன்மை தீமைகளுக்குக் கூலி கொடுப்பதாக வார்த்தைப்பாடு செய்தால் அதை நிறைவேறுமல் இருப்பது அல்லாஹுதஆலாவுக்கு ஒண்ணாது என்பது வார்த்தைப்பாடு விஷயமென்றும் அறியாதவன் முஃமீன் அல்லவென்று சொல்லுகிறவர்களும் ஒருவன் சிறுபாவம், பெரும்பாவங்களை விட்டு நீங்கினுலொழிய ஈமான் உண்டாகாது. †ஷரீஅத்தும் ஈமானில் உள்ளது என்று சொல்லுகிறவர்களும், ஈமானுனது

* முத்தஷாபிஹான ஆயத்து என்பது :—கருத்து விளங்காத அர்த்தமுள்ள ஆயத்து. அவை "யதுல்லாஹி" "வஜ்ஹுல்லாஹி" முதலியனவாம், இவற்றிற்கு அல்லாவுடைய கை என்றும், அல்லாவுடைய முகம் என்றும் அர்த்தம் பண்ணுவார்கள். அவற்றின் கருத்து வேறுகையால் அப்படி அர்த்தம் பண்ணுவது பிசகு, குறஆன் ஆயத்துகளில் நாம் அறிய வேண்டியவைகளும் அறியவேண்டாதவைகளும் உண்டு மேற்குறித்த ஆயத்துகள் அறியவேண்டாதவைகளாகையால் அவற்றிற்கு அர்த்தம் பண்ணவே கூடாது.

† ஷரீஅத்து - மார்க்க விதிவிலக்கு

*பாத்தினைக் கொண்டாம் இஸ்லாமானது †லாஹிரிலாம், ஆகை யால் ஒருவன் பெரும்பாவத்தைச் செய்தால் ஈமானை விட்டுப் புறப் படுவானே யல்லாமல் இஸ்லாத்தை விட்டுப் புறப்படமாட்டான். அதனால் அவன் முஃமீன் அல்ல முஸ்லிம் என்று சொல்லுகிறவர் களும், நபி நாயகமவர்களின் மிஃராஜ் விழிப்புடன் பைத்துல் முகத்திஸ்வரையுந்தான். அதுவும் ஜடங்கொண்டல்ல என்று சொல்லுகிறவர்களும், மீஸான், ஸிருத்து, நன்மை தீமைகளின் பட்டோலை அதைப்பற்றிய்கேள்வி கணக்கு இவைகள் இல்லை என்று சொல்லுகிறவர்களும், முஃமீனானவன் நரகம் புகுதவே மாட்டான். பாவியாயிருந்து புகுந்தால் அங்கிருந்து மீளமாட்டான் என்று சொல்லுகிறவர்களும், ஒவ்வொருவர் மேலும் சாட்டப்பட்ட நன்மை, தீமை எழுதுகிறவர்கள் முதலான மலக்குகள் இல்லை யென்று சொல்லுகிறவர்களும், நபிமார்களுக்கும் மலக்குகளுக்குந் தான் ஷபாஅத்துச் செய்யும் பாத்தியம் உண்டு என்று சொல்லு கிறவர்களும், இறந்துப்போன ஜடங்கள் உக்கி மடிந்துபோம். அல் லாஹு தஆலா வேறு ஜடங்களைப்படைத்து றூஹைப் புகுது வித்து ‡அதாபு, ‖தவாபுகளைக் கொடுப்பான் என்று சொல்லு கிறவர்களும், கபுறில் கேள்வி உண்டாவதும், அதாபு உண்டாவ தும் இல்லை என்று சொல்லுகிறவர்களும், சொர்க்கமும் நரகமும் படைக்கப்படவில்லை என்று சொல்லுகிறவர்களும் ஒரு முஃமீ னுக்குச் சுவர்க்கத்தில் துன்யாவைப் பார்க்கிலும் பலமடங்கு நிஃ மத்து அதிகமாகக் கிடைக்கும் பாதையில்லை என்று சொல்லப் படுகிறவர்களும் ஷைத்தான்களுக்கு மனிதர்கள் மீது தீங்குசெய்ய அதிகாரமில்லை. ஆகையால் ஒஸ்வாசுக்கு இடமில்லை. இப்படியே ஜின்களுக்கும் என்று சொல்லுகிறவர்களும், கைறு அடங்கலும் அல்லாஹு தஆலாவில் நின்றும், ஷர்று அடங்கலும் அடியார் களில் நின்றும் உள்ளவை. அல்லாஹு தஆலா இபுலீஸை படைத் தான். இபுலீஸ்தான் காற்றைப்படைத்தான். அல்லாஹு தஆலா அடியானைப் படைத்தான். அடியான் தான் ஷர்றைப் படைத்தான் என்று சொல்லுகிறவர்களும், அல்லாஹு தஆலா இபுலீஸைப் படைக்கவில்லை என்று சொல்லுகிறவர்களும், கட்டளையிடும் அதிகாரம் நியாயத்திற்கு உடையதேயன்றி அல்லாஹு தஆலா

* பாத்தின் - அகம்.
† லாஹிறு - புறம்.
‡ அதாபு - தீமைக்கூலி.
‖ தவாபு - நன்மைக்கூலி.

வுக்கு உடையது அல்ல என்று சொல்லுகிறவர்களும், மனிதன் அனுபவிக்கும் எவ்விதத் துன்பமும் கலாகத்தைக் கொண்டு அல்ல, சரீர சுபாவத்தினுலும், ஆகார விகற்பத்தினுலும், கலாக் கிரமத்தினுலுமே உண்டாகிறது என்று சொல்லுகிறவர்களும், அடியார்மீது பிரயாசையை விதிப்பதும், அதைப்பற்றிச் சோதிப்பதும் அல்லாஹு தஆலாவுக்கு ஒண்ணுது என்று சொல்லுகிறவர்களும், அடியானுடைய செயல் அல்லாஹு தஆலாவினுல் படைக்கப்பட்டது அல்ல என்று சொல்லுகிறவர்களும், அல் மார்க்க சிக்ஷையும், *குற்ற நிவர்த்தியும் அனுபவிக்கும் துன்பமும் ஒருவன் செய்த பாவத்திற்கு பிரயோஜனப்படாது என்று சொல்லுகிறவர்களும், ஒருவன் தன் பாவத்திற்காகச் செய்கிற தௌபா †கபூலாகாது. துஆவும், ஸதக்காவும் துன்யாவில் பிரயோஜனம் தராது என்று சொல்லுகிறவர்களும், சடுதி மரண மெல்லாம் அஜல் அல்ல என்று சொல்லுகிறவர்களும், தவறிப் போன இபாதத்துகளை கலாசெய்வது தவறிப் போனவைகளுக்குப் பதிலாகமாட்டாது. தனி இபாதத்தாகும் என்று சொல்லுகிறவர்களும், முஃமீனுனவன் அல்லாஹு தஆலாவை ஆகிறத்தில் காணுகிறதில்லை என்று சொல்லுகிறவர்களும், நடக்கிற காரியமெல்லாம் அல்லாஹு தஆலாவின் நாட்டமே தவிர கற்பனை அல்ல என்று சொல்லுகிறவர்களும், எவன் நீதவான் அல்லவோ அவன் காபிர் என்று சொல்லுகிறவர்களும், பணக்காரன் ஸக்காத்துக் கொடுப்பது பறுலு அல்ல என்று சொல்லுகிறவர்களும் பாவியானவன் ஆகிறத்தில் நரகம் புகுதவுமாட்டான். சுவர்க்கம் புகுதமாட்டான் இரண்டிற்கும் இடையில் தரிபடுவான். ஒளலியாக்களுக்கு கருமாத்து இல்லை கியாமத்து அடையாளங்கள் இல்லை ‡கைபைக் கொண்டு ஈமான் கொள்வது ||பாதத்தில் கல்குகள் மீது அல்லாஹு தஆலாவுக்கு எவ்வித அதிகாரமும் இல்லை. ஒரு மௌத்தானவனுக்கு அவன் செய்த நன்மைகள் கியாமம் வரையும் பிரயோஜனம் தராது என்று சொல்லுகிறவர்களும் இன்னும் பல விதமாகச் சொல்லுகிறவர்களும் உண்டு.

கதறிய்யா என்பவர்கள் கற்பனவாதிகள், கற்பனவாதிகள் என்ருல் அல்லாஹு தஆலாவின் கற்பனையை ஆக்ஷேபிக்கிற

---

* குற்ற நிவர்த்தி - கப்பாறு.

† கபூல் - பொருத்தம்.

‡ கைபு - மறைவு.

|| பாதத்தில் - தரிபடாதது.

வர்கள், அவர்கள் அல்லாஹு தஆலா அடியார்களுடைய காரி யங்கள் எல்லாவற்றையும் அவர்கள் வசமே ஒப்புவித்து அவற்றை உண்டாக்கிக்கொள்ளும் பாத்தியத்தையும் கொடுத்து விதிவிலக்கு களையும் அறிவித்து விட்டான். ஆகையால் படைக்க நாடுகிறதும், படைக்கிறதும், கற்பனை செய்கிறதும் அவனுக்கு கூடாது என் றும் மனிதர்கள் குபிர் என்று அறியாமல் ஈமான் என்று ஒரு கருமத்தை தீர்மானித்ததால் அது அல்லாஹு லஆலா இடத்தில் குபிராயிருக்காது என்றும், ஜனாஸாத்தொழுகை கூடாது என் றும், மீதாக்கை யில்லை என்றும் கைறைப்பற்றியும், ஷர்றைப் பற்றியும் அல்லாஹு தஆலா கற்பிக்கவே யில்லை என்றும், அக்லுக்குச் சரியானவையெல்லாம் தலீலைப் பார்க்கிலும் மிகைத் தவை என்றும், இமாம்களுடைய கியாஸ் ஹதீதை பார்க்கிலும் மிகைத்தது யென்றும், பொதுவாய்ச் சொல்வதுடன் கைறு மாத் திரந்தான் அல்லாஹு தஆலா கற்பித்தது, ஷர்று அவன் கற் பனையல்ல என்று சொல்லுகிறவர்களும், சுவர்க்கமும் நரகமும் அழியாதவை யல்ல என்று சொல்லுகிறவர்களும் கைறு அடங் கலும் லாஹூத்துடைய ரூஹில் நின்றும் உள்ளவை யென்றும் சொல்லுகிறவர்களும், செயல் அடங்கலும் அல்லாஹு தஆலா வின் புறத்தில் உள்ளதென்றும், அடியார் புறத்தில் உள்ளதென் றும் அறிந்து தீர்மானிக்கக் கூடாது ஆகையால் அந்தச் செயல் களுக்குத் தக்க கூலி கிடைக்கும் என்று அறியக் கூடவில்லை யென்று சொல்லுகிறவர்களும் ஒருவன் செய்கிற பெரும் பாவத் தைப்பற்றி தௌபா செய்தால் கபூலாக மாட்டாது என்று சொல்லுகிறவர்களும், ஈமானும் குபிருந் தவிர மற்றச் செய்கை யெல்லாம் படைக்கப்பட்டவை என்று சொல்லுகிறவர்களும், நபி ஆதம் அலைஹிஸ்ஸலாம் அவர்களை றஸூல் அல்ல ஷரீஅத்தும் அவர்களுக்கு இல்லை என்று சொல்லுகிறவர்களும், பறுலை உண் டென்றும், சுன்னத்தை இல்லையென்றும் சொல்லுகிறவர்களும், கைறை படைத்த ஒருவனும், ஷர்றைப் படைக்க ஒருவனுமாக ஆலத்தைப் படைக்கிறவன் இரண்டுபேர் உண்டு என்று சொல்லு கிறவர்களும், எல்லாச்செயலும் அல்லாஹு தஆலாவுக்கே யன்றி அடியார்களுக்குச்செயல் இல்லையென்று சொல்லுகிறவர்களும், காலம் என்றும், உள்ளது என்றும் சொல்லுகிறவர்களும், ஒவ் வொருவனும் தொழில் செய்வது பறுலு ஆகையால் அந்தத் தொழிலைவிட்டு *சுஹூதைக் கொண்டவன் பறுலைவிட்டவன்

* சுஹூது - நிராசை.

ஆவான் என்று சொல்லுகிறவர்களும், ஷர்றை அல்லாஹுத்தஆலாவின் கற்பனேயோ அல்லவோ நாங்கள் அறியமாட்டோம் என்று சொல்லுகிறவர்களும் இன்னும் பலவிதமாகச் சொல்லுகிறவர்களும் உண்டு.

ஜபறிய்யா என்பவர்கள் நிற்பந்தவாதிகள், அவர்கள் அடியார்கள் நன்மையைக் கொண்டு கூலி கொடுக்கப்படுகிறவர்களே யல்லாமல் தீமையைக் கொண்டு கூலி கொடுக்கப் படுகிறவர்கள் அல்ல என்றும், காபிர்களும், பாவிகளும் தங்கள் குற்றத்திற்கு கேள்வி கணக்குக் கேட்கப்படுகிறவர்கள் அல்ல. ஆனுல் அவர்கள் *மஅதூறுகள் என்றும், பாவம் தீங்கு செய்யாது. ஆகையால் பாவி வேதனை செய்யப்படமாட்டான் என்றும், அடியானுக்குச் செயல் உண்டென்று வெறும் பெயரே தவிர, அவனுக்குச் செய்கையேயில்லை. ஒரு மரத்தின் இலை காற்றினுல் அசையுமேயன்றி, தன்னுல் அசையாதே. அதுபோல் என்றும், பொதுவாகச் சொல்வதுடன் அல்லாஹுத்தஆலா படைப்புகளை யெல்லாம் படைத்துவிட்டுப் பராக்கொழிந்திருக்கிறுன். ஆகையால் எந்த வஸ்துவும் அவனுடைய உத்திரவில்லாமல் தானுகவே வெளியாகிறது என்று சொல்லுகிறவர்களும், அல்லாஹுத்தஆலா காபிர்களை நரகத்திற்போட்டு வேதனை செய்து மவுத்தாக்கி விடுவான். அவர்களெல்லாரும் நரகத்தில் மைய்யதாகவே இருப்பார்கள் என்று சொல்லுகிறவர்களும், அல்லாஹுத்தஆலா தான்செய்த செயலைக்கொண்டு அடியானை வேதனை செய்வானன்றி, அடியான் செய்த செயலைக் கொண்டு அல்ல என்று சொல்லுகிறவர்களும், மன உதிப்புகளெல்லாம் நன்ருயிருந்தாலும், தீதாயிருந்தாலும், அவற்றைத் தொடர்ந்து நடக்கலாம் என்று சொல்லுகிறவர்களும், ஒருவன் அல்லாஹுத்தஆலாவை முற்ற முடிய உவந்து விட்டால் அவன் மேல் விதிவிலக்குகளின் தக்லீபு எடுபட்டுப்போம் என்று சொல்லுகிறவர்களும், பறுலான கருமங்களைச் செய்து முடிக்கிறதைப் பார்க்கிலும அல்லாஹுத்தஆலாவை †பிக்று செய்துகொண்டிருப்பது மேனமையானது என்று சொலலுகிறவர்களும், உலகத்திலுள்ள திரவியமெல்லாம் ஆதம் ஹவ்வாயுடையதாய் பாத்தியதைக்கொண்டு அவர்கள் மக்களாகிய மனிதரெல்லாருக்கும் பொது. ஆகையால், எவன் எதையெடுத்துக் கொண்டாலும் எடுத்

* மஅதூறு-தான் செய்த குற்றத்திற்கு முகாந்திரஞ் சொல்லித் தப்பித்துக் கொள்ளுகிறவன்.

† பிக்று-தியானம்.

துக் கொண்டவனுக்குச் சொந்தமாம். அதனை ஒருவரும் தடுக்கக் கூடாது என்று சொல்லுகிறவர்களும், ஒருவன் இல்மாளியாய் விட்டால் மற்றவருடைய சொத்திற்குப் பங்காளியாய் விட்டான். ஆகையால் அவனை விலக்குகிறவன் காபிராவான் என்று சொல்லுகிறவர்களும், அல்லாஹு தஆலா புறத்தில் நின்றும் அடியார் மீது பறுலான காரியம் ஒன்றுமில்லை, ஆனால் நாடினால் செய்யலாம் என்று சொல்லுகிறவர்களும், ஈமானும் குபுறுந்தான் மனிதனுக்கு கட்டாயப்படுத்தப்பட்ட தல்லாமல், மற்றவை கட்டாயப் படுத்தப்படுவது அல்ல என்று சொல்லுகிறவர்களும், இபாதத்தான கருமங்களை ஒருதரம் மாத்திரம் செய்தால்போதும், அடுத்தடுத்துச் செய்யவேண்டுவதில்லை என்று சொல்லுகிறவர்களும், ஒரு முஃமீன் அந்தரங்கத்தில் முஃமீனும் அல்ல, காபிர் காபிரும் அல்ல என்று சொல்லுகிறவர்களும், ஒருவனுக்கு நன்மைக் கூலியும், தீமைக் கூலியும் எற்கெனவே பங்கிடப்பட்டுத் தீர்ந்தன. ஆகையால் அவன் நன்மை தீமைகளை செய்தாலும் செய்யாவிட்டாலும் அந்தக் கூலிகள் கூடவுமாட்டாது, குறையவுமாட்டாது என்று சொல்லுகிறவர்களும், ஈமான் அமலாயிருக்கும். ஆகையால் மனவுறுதியையும், வாய்மொழியையும், பார்க்கவேண்டியதில்லை என்று சொல்லுகிறவர்களும், கைறு ஷர்று இரண்டும் அல்லாஹு தஆலாவின் புறத்தில் உள்ளது தான். இருந்தாலும், அவற்றின் இகுத்தியாறு அடியானுக்கே உடையது என்று சொல்லுகிறவர்களும், மனிதர் பலர்கூடி எற்றுக்கொண்டது எதுவானாலும் கைறு பொருத்தப்படாதது ஷர்று என்று சொல்லுகிறவர்களும், நன்மை செய்கிறதினால் பிரயோஜனமில்லை, தீமை செய்கிறதினால் சங்டமும் இல்லை என்று சொல்லுகிறவர்களும், அல்லாஹு தஆலா *ஹபீபு ஆகையால் †மஹ்பூபை பயமுறுத்துவது கூடாது என்று சொல்லுகிறவர்களும், இபாதத்தைப் பார்க்கிலும் அல்லாஹு தஆலாவை ‡திக்றுசெய்து கொண்டிருப்பது மேன்மையானது என்று சொல்லுகிறவர்களும் அல்லாஹு தஆலா முஃமீனை முஃமீனாகவும், காபிரை காபிராகவுமே படைத்துவிட்டான். ஆனாலும் முஃமீன் ‖மஜ்பூறும், காபிர் மஅதூறுமா யிருக்கிறான் என்று சொல்லுகிறவர்களும், இன்னும் பலவிதமாகச் சொல்லுகிறவர்களும் உண்டு.

---

* ஹபீபு-உவக்கிறவன்.

† மஹ்பூபு-உவக்கப்பட்டவன்.

‡ திக்று-ஞாபகம்.

‖ மஜ்பூறு-நிர்ப்பந்தப்படுத்தப்பட்டவன்.

முஅத்திலா என்பவர்கள் கைவிட்டவர்கள். கைவிட்டவர்கள் என்றால், அல்லாஹு தஆலாவின் ஸிபத்துகளை மறுதலித்து விட்டுவிடுகிறவர்கள். அவர்கள் ஈமான் கல்பைக்கொண்டே ஆகுமல்லாமல் நாவையுங்கொண்டு அல்ல என்றும், நபிமூசா அலைஹிஸ்ஸலாம் அல்லாஹு தஆலாவுடன் வசனிக்கவில்லை என்றும், ஹௌலுல், கௌதர், முன்கர் நக்கீருடைய கேள்வி, மலக்கல்மவுத்து இவைகளை இல்லை என்றும் பொதுவாகச் சொல்வதுடன் வஸ்துகளுக்கு *ஹக்கீகத்து இல்லை என்று சொல்லுகிறவர்களும், படைத்தவனாகிய அல்லாஹுத் தஆலாவை அறியக்கூடாது என்று சொல்லுகிறவர்களும் அல்லாஹுத் தஆலாவை ஒருவஸ்து என்றும் அல்லவென்றும் சொல்லமாட்டோம் என்று சொல்லுகிறவர்களும், அல்லாஹு தஆலா ஒவ்வொரு தானத்திலும் சேர்ந்திருக்கிறான், அவனை விட்டு ஒரு வஸ்துவும் பிரிந்திருக்காது என்று சொல்லுகிறவர்களும், தனக்கு †றப்பு உண்டென்று ஸ்தாபிக்க ஒருவனுக்கும் ஒண்ணாது என்று சொல்லுகிறவர்களும், அல்லாஹு தஆலாவின் இல்மு, குதுறத்து, ‡தக்லீக்கு, ‖மஷியத்து ஆகிய இந்த நான்கு ஸிபத்துகள் தவிர மற்ற ஸிபத்துகளெல்லாம் படைக்கப்பட்டவை என்று சொல்லுகிறவர்களும்; ஹௌலு, ஸிறுத்து, மீசான் ஆகிய இவைகள் நாம் அறிந்திருக்கிறபடி அல்ல, ஹௌலு என்பது நீர், ஸிறுத்து என்பது மார்க்கம், மீஸான் என்பது நீதம் என்று சொல்லுகிறவர்களும், சுவர்க்கவாதிகள் சுவர்க்கத்தில் புகுந்து சுகத்தை அனுபவிக்கும் வரையும் சுவர்க்கமும், நரகவாதிகள் நரகத்தில் புகுந்து துன்பத்தை அநுபவிக்கும் வரையும் நரகமும் தரிபட்டிருந்து, பிறகு இரண்டும் அழிந்துபோம் என்று சொல்லுகிறவர்களும், முஹம்மது நபி ✕ஹக்கீமேயல்லாமல் றஸூல் அல்ல என்று சொல்லுகிறவர்களும், அல்லாஹு தஆலாவை துன்யாவிலேயே கண்ணுற்காணக்கூடும் என்று சொல்லுகிறவர்களும், கியாமத்து இல்லை என்று சொல்லுகிறவர்களும், குறுஆன் எவன் ஓதுகிறானோ அவனுடைய பேச்சேயல்லாமல் அல்லாஹு தஆலாவின் பேச்சேயல்ல என்று சொல்லுகிறவர்களும், இன்னும் பலவிதமாக சொல்லுகிறவர்களும் உண்டு.

---

* ஹக்கீகத்து-அந்தரங்கம்.
† றப்பு-கர்த்தன்.
‡ தக்லீக்கு-சிருஷ்டிப்பு.
‖ மஷியத்து-நாட்டம்.
✕ ஹக்கீம்-பண்டிதன்

முஷப்பிஹா என்பவர்கள் உவமான வாதிகள். உவமான வாதிகள் என்றால் அல்லாஹுத் தஆலாவுக்கு ஒப்புச்சொல்லுகிறவர்கள். அவர்களில் அல்லாஹுத் தஆலாவை ஜௌஹறு என்று சொல்லுகிறவர்களும், அல்லாஹுத் தஆலா ஜிஸ்மும். ஆனால் மற்ற ஜிஸ்முகளைப்போல் அல்ல என்று சொல்லுகிறவர்களும், அல்லாஹுத் தஆலா மனித ரூபத்தில் இருக்கிறான் என்று சொல்லுகிறவர்களும், அல்லாஹு தஆலாவுக்குக் கைகால் முதலிய உருப்புகளும், இரத்தம், சதை முதலியவைகளும் உண்டு என்று சொல்லுகிறவர்களும், அல்லாஹுத் தஆலா ரூபம் உள்ளவன்தான், நாம் அறியமாட்டோம் என்று சொல்லுகிறவர்களும், அல்லாஹுத் தஆலா ஒளிவாய்ப் பிரகாசிக்கிறவன் என்று சொல்லுகிறவர்களும், அல்லாஹுத் தஆலாவுக்கு வரத்துபோக்கு உண்டு சொல்லுகிறவர்களும், இஸ்ராயீல் அலைஹிஸ்ஸலாமவர்கள் முன் ஒரு காலத்தில் ரூஹு வாங்கினதில் தப்புச் செய்தார்களென்று சொல்லுகிறவர்களும், ஈமான் மாத்திரந்தான் பறுலு அல்ல என்று சொல்லுகிறவர்களும், ஈமானனது இல்மைப்பொறுத்தது. அதனால் ஒருவன் விதிவிலக்குகளை அறியாவிட்டால் அவன் காபிர் என்று சொல்லுகிறவர்களும், அல்லாஹுத் தஆலா நபி ஆதம் அலைஹிஸ்ஸலாமவர்களைத் தன்னுடைய *சூரத்தில் படைத்தான் என்று சொல்லுகிறவர்களும், வாஜிபு, ஸுன்னத்து. நபி இவைகளுக்கு இடையில் வித்தியாசம் இல்லை என்று சொல்லுகிறவர்களுமாகப் பலவகையார் உண்டு.

மேற்சொன்ன ஆறுவகுப்பில் பிரிந்த எழுபத்திரண்டு கூட்டத்தாரும் ஒரு கூட்டத்தார் சொன்னதை மற்றொரு கூட்டத்தார் சொல்வது உண்டு.

ஆகையால் முஸ்லிமான சகோதரர்களே! இவ்வித பிது அத்தான் விரோதக் கொள்கைகளைக் கொண்டு மார்க்கத்திற்கு மாறுபட்டுப் போன கூட்டத்தார்கள் சொல்லும் சொற்களை நன்றாய் அறிந்து அவ்விதச் சொற்களில் ஒன்றாவது உங்களுக்கு வந்து சம்பவிக்காமல் எச்சரிப்புடன் இருந்து தீனுல் இஸ்லாமுடைய கொள்கையாகிய அகீதாக்களை இந்த கிதாபில் சொல்லியிருக்கிற அகீதாவுடைய பஸலிலும் மற்ற பஸல்களிலும் வருகிறபடி அறிந்து அதில் அணுவளவும் பிசகாமல் தரிபட்டிருந்து நல்ல அமல்களைச்

* இதற்கு ஹதீது உண்டு-அது முத்தஷாபிஹான ஹதீது. ஆகையால் இவர்கள் சொல்வதுபோல் அர்த்தம் பண்ணவே கூடாது.

செய்து கொள்வீர்களாக. அப்படியே அல்லாஹுத் தஆலா நம் மனைவர்பேரிலும் கிருபை புரிந்து நல்லுதவிச் செய்வானுக ஆமீன்.

பிதுஅத்து முடிந்தது.

---

8-ம் பஸல்.

றித்தத்து.

றித்தத்து என்பது மாறுதல். அது முஸ்லிமான ஒருவன் இஸ்லாம் மார்க்கத்தைவிட்டு மாறுவதாம். இதுவும் குபுறுதான். அது சொல்லாலும், செயலாலும், கொள்கையாலும் வந்து சம்பவிக்கும். அவை:—

அல்லாஹுத் தஆலா உற்பத்தியானவன் என்கிறதும், அவனுடைய ஸிபாத்துகளை இல்லை என்கிறதும், அவனுக்கு இல்லாததை உண்டு என்கிறதும், அவனுக்குத் தகாதவிதமாய் அவனை வர்ணிப்பதும், அவனுடைய திருநாமங்களில் எதையாவது பழிப்பதும், அவனுடைய விதிவிலக்குகளிலும், அதாபு தவாபுகளைப்பற்றிய *வஅதாக்களிலும், எதையாவது பரிகாசம் பண்ணுவதும், அல்லாஹுத் தஆலா எங்கும் இருக்கிறுன் என்கிறதும், எங்கும் இல்லை என்கிறதும் அல்லாஹுத் தஆலா நிற்கிறுன், உட்கார்ந்திருக்கிறுன், ஏறுகிறுன், இறங்குகிறுன் என்கிறதும், ஒருவனைப் பார்த்து நீ அல்லாஹுத் தஆலாவுக்கு †இன்ஸாபுசெய். அவனுக்கு இன்ஸாபு செய்வான் என்கிறதும், ஒரு காரியத்தைச் செய்துவிட்டு, நான் அதைச் செய்யவில்லையென்று அல்லாஹு தஆலா அறிந்திருக்கிறுன் என்கிறதும், ஒருவன் பரிகாசத்திற்காவது நான் அல்லா, அல்லது நான்தான் அவன், அவன்தான் நான் என்று சொல்லுகிறதும், நான் நாஸுத்துடைய ஸிபத்துகள் அற்று லாஹுத்தின் ஸிபத்துகளில் சேர்ந்தேன் என்கிறதும், என் ஸிபத்துகளெல்லாம் அல்லாஹுத் தஆலாவுடைய ஸிபத்துகளாய்விட்டன என்கிறதும், நான் துன்யாவில் முகமுகமாய் அல்லாஹுத் தஆலாவைக் கண்டு பேசினேன் என்கிறதும், அல்லாஹுத் தஆலா அழகான ரூபங்களில் தங்குகிறுன் என்கிறதும்; ஹலால் ஹறும் என்கிறதை அறிந்து நடக்கவேண்டிய கடமையை அல்லாஹு தஆலா எனக்கு நீக்கிவிட்டான் என்கிறதும், ஒருவன்

---

* வஅதா-வாக்குக்கொடுத்தல்.
† இன்ஸாபு-நியாயம்.

என் பொருளை அல்லாஹுத் தஆலாவிடம் ஒப்படைத்திருக்கிறேன் என்று சொல்ல அவனைப்பார்த்து, நீ உன்பொருளை திருடனைத் தொடர்ந்துபோய் பிடிக்காதவனிடம் ஒப்புவித்தாயே என்கிறதும், ஒருவனைப்பார்த்து நீ எனக்கு அல்லாஹுத் தஆலாவைப் பார்க்கிலும் அதிக உவப்புள்ளவன் என்கிறதும், நான் அல்லாஹுத் தஆலாவா யிருந்தால் நீ யெனக்குச்செய்த அநியாயத்திற்குப் பிரதிசெய்வேன் என்கிறதும், அல்லாஹுத் தஆலா எனக்கு அநியாயஞ் செய்தான் என்கிறதும், அல்லாஹுத் தஆலா எல்லாருக்கும் உபகாரஞ் செய்து, எனக்கு மாத்திரம் அபகாரஞ் செய்தான் என்கிறதும், நான் அல்லாஹுத் தஆலாவைப்போல என்கிறதும், நான் அல்லாஹுத் தஆலாவுடைய மார்க்கவரம் புகழை விட்டு நீங்கினவன் என்கிறதும், ஒருவனுடைய வழக்காளி அவனைப் பார்த்து, அல்லாஹுத் தஆலாவுடைய ஹுக்குமைக்கொண்டு உனக்கு நான் ஹுக்கும் செய்கிறேனென்று சொல்ல, அதற்கு நான் ஹுக்குமை அறியமாட்டேன், அல்லது ஹுக்கும் இங்கே நடக்காது அல்லது ஹுக்கும் இங்கில்லை, அல்லது ஹுக்கும் என்ன செய்யும் என்கிறதும், அல்லாஹுத் தஆலா பார்க்கமாட்டான் என்கிறதும், ஒருவரும் அவனைக்காணமாட்டார்கள், சுவர்க்கத்தில் அவனைக் கண்ணால் காணக்கூடாது என்கிறதும், நன்மை தீமைகளைப்பற்றி அல்லாஹுத் தஆலா கொடுத்தவாக்கை நிறைவேற்றுவதில் சந்தேகிப்பதும், அல்லாஹுத் தஆலாவுடைய ஸிப்பத்துகளைக் கொண்டாவது, பேர்களைக் கொண்டாவது, ஒருவனை வர்ணிப்பதும், பறுலான கருமத்தை ஒப்புக்கொள்ளாமல் சமுசயப்படுவதும், அல்லாஹுத் தஆலா உவப்பதைக் கோபிப்பதும், அவன் கோபமானதை உவப்பதும், ஒருவன் இன்னகாரியத்தை அல்லாஹுத் தஆலா உவந்திருக்கிறான், அதை நீ செய் என்று சொல்ல, நான் செய்யமாட்டேன் என்கிறதும், அல்லாஹுத் தஆலா சுவர்க்கத்தைக் கொடுத்தால் நான் அதில் புகுதமாட்டேன் என்கிறதும், ஒருவன் நீ தொழுகையை விடாதே அல்லாஹுத் தஆலா குற்றம் பிடிப்பான் என்று சொல்ல அதற்கு எனக்கு இன்ன வியாதி இருக்க நான் தொழவில்லையென்று குற்றம் பிடித்தால், அல்லாஹுத் தஆலா அநியாயஞ் செய்தான் என்கிறதும், ஒருவனுக்கு ஒருவன் அநியாயஞ் செய்தபோது செய்யப்பட்டவன் செய்தவனைப்பார்த்து, நீ செய்தது அல்லாஹுத் தஆலாவுடைய கற்பனை என்று சொல்ல அதற்கு அவன் நான் செய்தது அல்லாஹுத் தஆலாவுடைய கற்பனை கொண்டல்ல

என்கிறதும், வானமும், பூமியும் அல்லாஹுத் தஆலா உண்டு என்பதற்குத் திருஷ்டாந்தம் அல்ல என்கிறதும், ஒருவன் ஒருவனைப்பார்த்து உனக்கு அல்லாஹுத் தஆலா உபகாரஞ் செய்தது போல எனக்கு நீ உபகாரஞ் செய் என்று சொல்ல அல்லாஹுத் தஆலா எனக்கு என்ன உபகாரஞ் செய்தான் என்கிறதும், இவை போன்ற அல்லாஹுத் தஆலாவைப் பற்றிய சொற்களும்.

குறுஆனையும், அல்லாஹுத் தஆலாவுடைய றஸூல்மார்களுடைய மலக்குகளுடைய திருநாமங்கள் எழுதின கடிதங்களையும் அருவருப்பானதில் போடுகிறதும், மேளதாளங்களுடன் குறுஆனை ஓதுவதும், அப்படியே திக்றுசெய்வதும், குறுஆனை பரிகாசத்திற்காக ஓதுவதும், நோயாளிக்கு யாஸீன் ஸூறத்தை ஓதினால் பிணி தீராதென்றுவது ஓதவேண்டாம் என்றுவது சொல்வதும், குறுஆனைப்பார்த்து இது கெடுதலுக்கு ஆயுதம் என்று சொல்வதும், குறுஆன் அல்லாஹுத் தஆலாவுடைய சொல்லல்ல ஜிபுரியில் சொன்ன கதை யென்கிறதும், அல்லாஹுத் தஆலாவுக்கு வேதமுண்டென்று ஒப்புக்கொள்ளாமலிருப்பதும், கள்ளுஹறும் என்று ஏன் குறுஆனில் வந்ததென்கின்றதும், குறுஆனிலும் ஹதீதிலும் வந்திருக்கும் தெளிவான *தலீல்களை ஆக்ஷேபிக்கிறதும், குறுஆனில் உள்ளதை மாற்றுவதும், குறுஆன் முஃஜிஸாத்து அல்லவென்கிறதும், குறுஆனில் அறபு அல்லாத பாஷையில் உள்ளதென்கிறதும், குறுஆனில் வந்திருக்கும் எதையாவது பொய்யென்கிறதும், குறுஆனில் உண்டென்றும் சொல்வதை இல்லையென்று சொல்வதும், குறுஆன் அல்லாத தௌறூத்து, ஸபூறு, இன்ஜீல் ஆகிய மூன்று வேதங்களையும் ஸுஹ்புகளையும் இல்லை யென்கிறதும், இவைகளைப்பழிப்பதும் குறுஆன் முதலான வேதங்களைப் படைப்பு என்கிறதும், குறுஆனை மிதிப்பதும், தாண்டுவதும், குறுஆனை ஓதப்படாதா அல்லது ஓதுவதை அதிகப்படுத்தப்படாதாவென்று ஒருவன் சொல்ல, நான் ஓதிவோதித் தெவிட்டி விட்டதென்கிறதும, இப்படியே கலிமா, ஸலவாத்து, திக்று முதலானதுகளை இலகுப்படுத்துவதும் பழிப்பதும் பரிகாசம் பண்ணுவதும் இவைபோல் குறுஆன் முதலியவற்றைப் பற்றிய சொற்களாம்.

ஒருவன் ஒரு அடிமையைப் பார்த்துத் தொழச் சொன்ன போது அந்த அடிமை நான் தொழுதால் அந்த கூலி என் எஜ

---

* தலீல்-திருஷ்டாந்தம்.

மானனுக்கல்லவோ கிடைக்கும். ஆகையால் நான் தொழமாட்டே னென்று சொல்வதும், நான் அல்லாஹுத் தஆலா பேரில் ஆணை யாகத் தொழமாட்டே னென்கிறதும், அல்லாஹுத் தஆலா என்னு டைய பொருளைக் குறைத்து விட்டான். ஆகையால் நான் அவனு டைய ஹக்கைக் குறைப்பதற்காகத் தொழமாட்டேனென் கிற தும், பறுலான தொழுகை இன்றைக்கு அல்லது என்றைக்கும் தொழமாட்டேனென்கிறதும், அல்லாஹுத் தஆலா பத்து *வக் த்து கட்டளையிட்டால் தொழமாட்டேனென்கிறதும், †கிபுலா அல்லாத திசையை சுட்டிக்காட்டி அல்லாஹு தஆலா இந்தத் திசையாக்கினால் தொழமாட்டேனென்கிறதும், எல்லாருந்தான் நமக்காகத் தொழுகிறார்களே நாம் ஏன் தொழவேண்டும் மென்கிற தும் எனக்கும் பெண்சாதி பிள்ளை களிருந்தால்தான் தொழுவே னென்கிறதும், ஒருவனைத் தொழச்சொல்ல நான் அந்த ‡பலாயில் பிரவேசிக்க மாட்டேனென்கிறதும், இந்த வீண்வேலையான தொழு கையை எவ்வளவு காலத்திற்குத்தான் செய்வேனென்கிறதும், என் தாய் தகப்பன் மவுத்தாய் விட்டார்களே வேறு யாருக்குத் தொழுவதென்கிறதும், என் தாய் தகப்பன் உயிரோடிருக்க நான் ஏன் தொழவேண்டு மென்கிறதும், ஒருவன் ஒருவனைத் தொழச் சொல்ல, நீ தொழுது தொழுது ஒரு பலனையும் காணவில்லையே யென்கிறதும், தொழுவதும் தொழாமல் விடுவதும் ஒன்றுதானென் கிறதும், ஒருவனைப் பார்த்து நீ தொழுகையை விட்டுப்பார். அதன் இன்பம் உனக்குத் தெரியுமென்கிறதும், தொழாமலிருக்கிறவனை நல்லவனென்கிறதும், தொழுகையை இலேசாகப் பாவித்துவிட்டு விடுகிறதும், அப்படியே கிபுலாவை விட்டு விட்டுத் தொழுவதும், விட்டு விட்ட தொழுகையை யெல்லாஞ் சேர்த்து கலாவாகத் தொழுகிறவனைப் பார்த்து நீ ஏன் இப்படித் தப்ப விட்டாயென்று கேட்க தொழுக வேண்டியதுதானே என்கிறதும், ஒருவனைப் பார்த்துத் தொழச்சொல்ல நான் ஒலு இல்லாமல் தொழுவேனென் கிறதும், நான் தொழாமலிருப்பது ஹலால்தா னென்கிறதும், நான் தெண்டத்திற்குத் தொழுகிறேனென்கிறதும், எவ்வளவு தொழுகை யைத்தான் தொழுகிற தென்கிறதும், தொழுகையைத் தொழுது முடிக்க யாரால் ஏலும். ஆகையால் புத்திசாலி ஏலாததில் பிர

* வக்த்து-நேரம்.

† கிபுலா-எதிர்முகம். அது தொழுவதற்காக எதிர் முகமாயிருக்கும் கஃபா.

‡ பலாய்-சோதனை, அது துன்பம் முதலானவை.

வேசிக்க மாட்டானென்கிறதும், தொழுவதைவிட்டும் என் தலையைக் கழுவி விட்டேனென்கிறதும், தொழுகையை வேளாண்மை செய்யக் கொடுத்திருக்கிறே னென்கிறதும், ஒருவனைப் பார்த்துத் தொழச் சொல்ல, அதற்கு கொஞ்சம் பொறு றமலான் மாதம் வரட்டும் சேர்த்துத் தொழுது விடுகிறேனென்கிறதும், நான், தொழுது, தொழுது ஒரு பலனையுங் காணவில்லை யென்கிறதும், நான் தொழுத மூகூர்த்தந்தான் என் தாய் மவுத்தானாள் என்கிறதும், நான் தொழுதால் என் பணத்திற்கு நஷ்டம் வரும், ஆகையால் தொழுகைக்கும் எனக்கும் சரிப்படாதென்கிறதும், ஈமானுடைய இன்பத்தைக் காணுமளவும் நான் தொழமாட்டே னென்கிறதும், தொழுகை, ஸக்காத்து, நோன்பு, ஹஜ்ஜு குறுஆன் ஓதுதல் முதலான இபாதத்துகளைப் பற்றி இவைகளில் காரியமில்லை, காரியமெல்லாம் அந்தரங்க அமலில் தானென்கிறதும், நியமகமான சுன்னத்தை மறுதலிக்கிறதும், இரண்டு பெருநாள் தொழுகைகளை மறுதலிக்கிறதும், இவை போன்ற தொழுகையைப்பற்றிய சொற்களாம்.

ஒருவன் ஒருவனைப் பார்த்து, நீ கொடுக்க வேண்டிய ஸக்காத்தைக் கொடுத்துத் தீர்த்துவிடென்று சொல்ல கொடுக்க மாட்டேனென்று சொல்வதும், ஒருவன் நீ ஏன் ஸக்காத்துக் கொடுக்க வில்லையென்று கேட்க இந்தக் கடனை நான் கொடுக்க மாட்டேனென்கிறதும், இவைபோன்ற ஸக்காத்தைப் பற்றிய சொற்களாம்.

நோன்பானது பறுலாகாமல் இருக்கப்படாதா என்கிறதும், நோன்பு தங்கடஞ் செய்யுமென்கிறதும், றமலான் மாதம் வந்து விட்டவுடன் அதைக் குறித்து நீளமான மாதம் வந்து விட்டதே யென்று சடைவாகவாவது, அசட்டையாகவாவது சொல்லுவதும், றமலான் மாதத்து நோன்பு கொஞ்சமல்லவே மெத்தவா யிருக்கிறதே யென்று சடைவாகச் சொல்லுகிறதும், இந்த நோன்பை அல்லாஹுத் தஆலா நம்மீது அதாபாக்கி விட்டானென்கிறதும், நோன்பை பறுலாக்காமல் இருந்தால் நல்லதென்கிறதும், இவை போன்ற நோன்பைப்பற்றிய சொற்களாம்.

ஹஜ்ஜையாவது, ஹஜ்ஜுடைய செய்கையையாவது மறுதலிக்கிறதும், அந்தச் செய்கை வழக்கமானதல்ல என்றுச் சொல்வதும், அது மக்காவில் செய்வதென்று எனக்குத் தெரியாதென்கிறதும், மக்காவை மறுதலிக்கிறதும், கஃபாவை மறுதலிக்கிறதும்,

அதை இலகுப் படுத்துகிறதும், இவை போன்ற ஹஜ்ஜைப்பற்றிய சொற்களாம.

ஒருவன் *பாங்கைக்கேட்டு இது கோவில்களில் மணியடிப்பது போலென்று சொல்லுகிறதும், கஃபா முதலான †பள்ளிகளில் நரகல்களைத் தடவுவதும், துடைப்பதும், அப்படிப்பட்ட அருவருப்பான வஸ்துகளைப் பள்ளிகளை இலேசாய் நினைத்து அவைகளில் படும்படிச் செய்வதும்.

மிருக ஜாதிகளில் நபியுண்டென்று தீர்மானிக்கிறதும், நபி நாயகமவர்களின் முஃஜிஸாத்துகளில் அவர்கள் நபி என்பதற்கு ஆதாரமில்லை யென்கிறதும், நபிமார்கள் சொன்னது நிஜமாயிருந்தால் ஈடேற்றம் பெறலாமென்பதும், நபி நாயகமவர்கள் சோறுண்டால் விரலைச் சூப்புவார்களென்பது ‡அதபு அல்ல வென்கிறதும், நபி நாயகமவர்களைப் புறமபேசுவதும, அவர்கள் நாமங்களைக் குறைவாய் சொல்லுகிறதும், அவர்கள் ஸுன்னத்தைச் சம்மதிக்காமலிருப்பதும், அவர்கள் ஹதீதை ‖ரத்து செய்வதும், நபியாயிருக்க ஆசைபடுவதும், எந்த நபியையாவது பொய் சொன்னார்களென்பதும் ஏசுவதும், பழிப்பதும், குறைவு சொல்வதும், அவர்கள் வமமிஷத்திலும், மார்க்கத்திலும், குணத்திலும் குறைவு சொல்வதும், நபிமார்களுக்கு குறைவாவது பழிப்பாவது உண்டாகும்படியான ஒப்புகளைச் சொல்வதும், அவர்களைக் குறித்துக் கடுமையாகவும், பொருத்தக்கேடாகவும், வெறுப்பாகவுமுள்ள பேச்சுகளைப் பேசுவதும், அவாகளுக்கு நேரிட்ட பலாய் முஸீபத்து முதலானதைக் கொண்டு அவர்களுக்கு இழிவு சொல்லுவதும், நபி நாயகமவர்கள் செய்த செயல்களை நியாவுக்குச் செய்தார்களென்பதும், இப்படியே மலக்குகள் விஷயத்திலும் நடத்துவதும், ஒலியாவது, ஒரு உம்மத்தாவது அவர்களுடைய நபியைப்பார்க்கினும் மேலானவர்களென்கிறதும், ஒரு நபியை லஃனத்துச் செய்தாலும், பதுஆச் செய்தாலும, ஒரு தங்கடமுண்டாக நாடினலும், சில நபிமார்களை இல்லை என்றாலும், தன்னை நபி என்றாலும், நபிமார்கள் மீதும் அவர்கள் கொண்டு வந்தவைகள் மீதும், கோபமாவதும், மார்க்கத்தில் பொறுத்தக் கேடானதை மனதினுள் பொருத்தக் கேடாகக் கொள்ளாமலிருப்பதும் நபியை

* பாங்கு-தொழுகைக்கு அழைத்தல்.
† பள்ளி-மஸ்ஜிது.
‡ அதபு-ஒழுஙகு.
‖ ரத்து-மறுப்பு.

இன்ஸானோ, ஜின்னோ எனக்குத் தெரியா தென்கிறதும், எந்த நபியையும் நகம் நீண்டவர்கள், பழம் புடவை யுடுத்தினவர்கள், பட்டினிக் கிடக்கிறவர்கள், மறதி அதிகமுடையவர்களென்று அலக்ஷியமாகச் சொல்வதும், மீசையை வெட்டு; அது ஸுன்னத்து யென்று ஒருவன் சொல்ல அதை மறுத்து நான் வெட்ட மாட்டே னென்கிறதும், நபி நாயகமவர்கள் சுரைக்காயையும், காடியையும் உவந்திருந்தார்களென்று ஒருவன் சொல்ல, அவற்றில் காரியமிருப்பதாக எனக்குத் தோற்றவில்லை யென்கிறதும், ஒருவன் மார்க்கப்படி மீசையை வெட்டி யிருக்க, அதைப் பார்த்து இது கெட்ட காரியம் ஸுன்னத்து வெளியாக்கினது கெட்ட காரியந்தானென்கிறதும், நபி ஆதம் அலைஹிஸ்ஸலாமவர்கள் கோதம்புக் கனியைத் தின்னுவிட்டால் நாம் இந்த பலாயில் அகப்படமாட்டோமே யென்கிறதும், நான் நபியை விட்டு நீங்கினவனென்கிறதும், மலக்கல் மவுத்தை ஏசுகிறதும், நபிமார்கள் சொல்லாததைச் சொன்னார்களென்று சொல்லுகிறதும், இன்னார் நபியாயிருந்தால் நான் ஈமான் கொள்ள மாட்டேனென்கிறதும், நபிமார்கள் வந்ததில் சமுசயப்படுவதாம்.

மஹ்ஷரில் எனக்கு என்ன வேலை யிருக்கிறது என்னை அந்தக் கூட்டத்தில் யார் காணக் கூடுமென்கிறதும், ஒருவனைப் பார்த்து நீ என் கடனைக் கொடுத்துவிடு. இல்லாவிட்டால் கியாமத்தில் ஒன்றுக்கு இரண்டாக வாங்கிப் போடுவே னென்கிறதும், இவனுக்கு மவுத்து வருமுன் அல்லாஹுத் தஆலா மவுத்தாக்கி விட்டானென்கிறதும், ஒருவனைப்பார்த்து இவன் தன் உயிரை இன்னுனுக்குக் கொடுத்து விடுவானென்கிறதும், ஒரு மைய்யத்தை குறித்துக் காட்டி இவனளவில் மனிதர்கள் *ஹாஜத்துள்ளவர்களாயிருப்பதை பார்க்கிலும் அல்லாஹுத் தஆலா அதிக ஹாஜத்துள்ளவனு யிருக்கிறுனென்பதும், கியாமத்தையாவது, எல்லாரும் உயிர் பெற்று எழும்புவதையாவது, நன்மைத் தீமைப் பட்டோலையையாவது, கேள்வி கணக்கையாவது, மீஸானையாவது, ஸிறுத்தையாவது, நரகம் சுவர்க்கங்களையாவது, லிகாவையாவது, இல்லையென்றும் இப்படியல்ல வேறு விதமானவையென்றும் சொல்லுகிறதும், ஒருவன் ஒருவனைப்பார்த்து நான் தந்த ரூபாய் பத்தையுந் துன்யாவிலேயே தந்துவிடு, கியாமத்தில் தருவதானுல் அங்கே பணம் இராது, உன்னுடைய நன்மையைத்தான் தர

* ஹாஜத்து-தேவை.

வேண்டி வருமென்று சொல்ல கியாமத்தில் ஏன் பணமில்லை, இன்னும் பத்து ரூபாய்தான் சேர்த்துத் தருகிறேனென்று சொல்லுகிறதும், ஒருவனைப் பார்த்து நீ துன்யாவில் எனக்கு மணிக்கோதம்புதா, நான் கியாமத்தில் உனக்குத் தொலிக்கோதம்பு தருகிறேனென்கிறதும், கியாமத்தை நான் பயப்படமாட்டேனென்கிறதும், கியாமத்தில் மனிதர்கள்தான் எழுப்பப்படுவார்கள். மிருக ஜாதிகள் எழுப்பப்படுகிறதில்லை யென்கிறதும், ஒருவனைப் பார்த்து நீ துன்யாவை விட்டு விடு ஆகிரு கிடைக்குமென்று சொல்ல நான் ரொக்கமாய் வைத்திருப்பதை நிலுவைக்கு விடமாட்டேனென்கிறதும், காபிரிலுள்ள கொடையாளி சுவர்க்கம் புகுதுவானென்கிறதும், பிதுஅத்துக்காரர்கள் சுவர்க்கம் புகுதுவார்களென்கிறதும், லௌஹுல் மஹ்பூலையும், கலத்தையும் இல்லையென்கிறதும், ஸக்கருத்தில் அமளிகளில்லை யென்கிறதும், பரிகாசத்திற்காக நான் கியாமத்தைப் பயப்படமாட்டேனென்கிறதும், இன்னும் இவைபோன்ற ஆகிருவைப்பற்றிய சொற்களாம்.

மார்க்க சம்பந்தமான *இல்மை முன்னுள்ள ஜனங்கள் சொன்ன கட்டுக் கதையென்றும், பொய் வார்த்தைகளென்று சொல்லுகிறதும், ஒரு ஆலிம் சொல்லுகிற †வஅலுவை பரிகாசத்திற்காக நகைக்கிறதும், அதுபோலப் பரிகாசத்திற்காக வஅலு சொல்லுகிறதும், இல்முடைய ‡மஜ்லீஸைப் பார்த்து இதென்ன மஜ்லீஸென்று பரிகாசம் பண்ணுகிறதும், இல்மைப் படித்துக் கொடுக்கிறதுபோல வேடிக்கை காட்டுகிறதும், இல்மைப் பார்க்கிலும் ஒரு பாத்திரத்துத் தின்பண்டம் மேலானதென்கிறதும், ஒரு ஆலிம் ஒரு மார்க்க விஷயத்தைச் சொல்ல அதைக் கேட்டு இது மதியீனர்களுடைய வேலையென்கிறதும், ஒரு ஹதீதைப்பற்றியாவது இல்மைப் பற்றியாவது சொல்வதைக்கேட்டு இது ஒன்றுமல்லவென்று றத்து செய்கிறதும், யாதொரு முகாந்தரமுமில்லாமல் ஒரு ஆலிமைக் கோபப்படுத்துகிறதும், ஒரு ஆலிம் செய்கிற நலமான எந்தக் கருமத்தையும் பற்றிப் பரிகாசம் பண்ணுகிறதும், இல்முடைய மஜ்லீஸிற்குப்போய வருகிறவனைப் பார்த்து இவன் கோயிலுக்குப்போய் விட்டு வருகிறானென்று சொல்லுகிறதும், ஒருவனைப்பார்த்து நீ இல்முடைய மஜ்லீஸிற்குப் போய்வா

* இல்மு-கல்வி.
† வஅலு-உபதேசம்.
‡ மஜ்லீஸ்-சபை.

வென்று சொல்ல அங்குள்ள ஆலிம்கள் சொல்வதுபோல் யாரால் நடத்தக் கூடுமென்கிறதும், அந்த மஜ்லீஸில் எனக்கு என்னவேலை யென்கிறதும், ஒருவன் ஒருவனைப் பார்த்து நீ இல்முடைய மஜ்லீஸிற்குப்போனால் உன் பெண்ஜாதி உனக்கு ஹறுமாகி விடுவாள். ஆகையால் நீ போகாதேயென்று பரிகாசத்திற்குச் சொல்லுகிற தும், உலமாக்கள் கொடுக்கும் *பத்வாவை அலக்ஷியமாக எறி கிறதும்; இதென்ன ஷறஹூயென்கிறதும், உலமாக்களை லஃனத் துச் செய்கிறதும், இன்னு மிவைபோன்ற இல்முகளையும் ஆலிம்களை யும் பற்றிய சொற்களாம்.

ஷறஹூடைய ஹூக்கும் எனக்கு என்னத்திற்கு பணங்காசுகள் தேவையென்கிறதும், ஒருவனைப் பார்த்து நீ ஏன் நன்மை யைப்பற்றி ஏவாமலும், தீமையைப்பற்றி விலக்காமலும் இருக்கிறு யென்று சொல்ல, நான் என்ன வீணனு? எனக்கு யார் என்ன செய்தார்கள்? எனக்கு என்ன கட்டாயம் நேரிட்டதென்கிறதும், ஷரீ அத்தும், அதைப் போலொத்தவைகளும் எனக்குப் பிரயோஜனந்தராது, என்னிடத்திலும் நடக்கவு மாட்டா தென்கிறதும், சொல்லைக் கொண்டாவது, செயலைக் கொண்டாவது ஷறஹூடைய ஹூக்துமைப் பழித்துக் காட்டுகிறதும், நான் இஸ்லாம் மார்க்கத்தை விட்டு, நீங்கினவனென்று விளையாட்டிற்குச் சொல்லுகிறதும், இன்னமிவைபொன்ற ஷற்ஹைறப் பற்றிய விளையாட்டு. பரிகாசம், இலகு காணுதல் முதலான சொற்களும், நாளையதினம் இன்ன காரியம் முடிந்தால் போகட்டும், இல்லாவிட்டால் நான் காபிராய்ப்போவேன் என்கிறதும், ஒரு கருமத்தைச் செய்துவிட்டு நான் செய்யவில்லை, செய்திருந்தால் காபிராவேனென்கிறதும், நாளையதினம், நான் இன்னகாரியத்தை இன்னபடி செய்வேன் அப்படிச் செய்யாவிட்டால் காபிராவேனென்கிறதும், ஒருவனைப் பார்த்து நீ முஸ்லிமா யிருக்க வேண்டுமானுல் முஸ்லிமாயிரு காபிரு யிருக்கவேண்டுமானுல் காபிரு யிரு; இரண்டும் எனக்குச் சரிதானென்கிறதும், ஒருவன் காபிராய்ப் போவதற்குச் சம்மதித்திருக்கிறதும், ஒருவனைப் பார்த்து நீ கலிமா சொல் என்று சொன்னுல் நான் அந்தக் கலிமாவைக்கொண்டு என்ன லாபத்தைப் பெற்றேன் அதைச் சொல்லென்கிறதும், எவ்வித மனச்சடைவினுலும் நான் இந்தத் துன்பத்தை அனுபவிக்கிறதைப் பார்க்கிலும் காபிராய் விடு

* பத்வா-மார்க்க சட்ட தீர்ப்பு.

வது நல்லதென்கிறதும், ஒருவன் ஒருவனைப்பார்த்து நீ இன்னானுடன் *ஸுல்ஹாய்விடு என்று சொல்ல, அதற்கு அவன் நான் †புத்துக்கு ஸுஜூது செய்தாலும் செய்வேன் அவனுடன் ஸுல்ஹாக மாட்டேனென்கிறதும், ‡உஸ்தாது, அமீர், ஆலிம் இவர்களில் யாராவது காபிராய்ப்போகிற கருமத்தைச் செய்யச் சொன்னாலும் செய்வேனென்கிறதும்; ஒருவன் வியாதியின் வருத்தம் தாங்கமாட்டாமல் ஆண்டவனே! என்னை நீ காபிராக வாவது மௌத்தாக்கிவிடுயென்கிறது, ஒருவன் குபிரானச் சொல்லைச் சொல்லக்கேட்டு சந்தோஷப்பட்டுச் சிரிக்கிறதும், ஒரு முஸ்லிமைப்பார்த்து, காபிரென்கிற எண்ணத்துடன் நீ காபிரென்று சொல்கிறதும், கூப்பிடுகிறதும், விக்கிரகம், சூரியன், சந்திரன் முதலானவைகளுக்கு ஸுஜூது செய்கிறதும், நஸாறு மஜூஸி முதலானவர்களுடைய தொப்பியைத் தலையில் போட்டுக்கொள்வதும், சுல்தான் முதலானவர்களுக்கு ஸுஜூது செய்வது நல்ல ஹலாலென்கிறதும், வேடிக்கைக்காவது காபிர்களுடன் கூட்டிக்கொண்டு அவர்களுடைய கோலத்துடன் கோயிலுக்குப் போகிறதும், ஒரு சுல்தானைப் பார்த்து இவர் *இலாஹு என்கிறதும், இஸ்லாம் மார்க்கமல்லாத அந்நிய மார்க்கக்காரனைக் காபிரென்று அறியாமலிருக்கின்றதும் அவர்கள் காபிரோ அல்லவோவென்று சந்தேகப்படுகின்றதும், அந்நிய மார்க்கத்தைச் சரியான தாவென்கிறதும் பிது அத்துக்காரர்களுடைய பேச்சை உண்மைகொள்ளுகிறதும், காபிர்களுடைய ஆகாரங்களை அழகாக்கி வைக்கிறதும், ஒருவன் பொய் சொல்வதைக்கேட்டு உன்பொய்க்கு அல்லாஹுத் தஆலா †பறகத்து செய்வானென்கிறதும், குறிக்காரன் சொல்வதை நம்புவதும், ஒரு காபிரென்னை இஸ்லாமாக்கி வையுங்களென்று சொல்ல எனக்குத் தெரியாதென்று மறுக்கிறதும், ஒரு காபிர் இஸ்லாமானபின் காபிராயிருந்த அவனுடைய தகப்பன் இறந்தபோது மேற்படி இஸ்லாமானவன் நான் இஸ்லாமாகாம லிருந்தால் தகப்பனுடைய சொத்தை அடையலாமேயென்று நினைக்கிறதும், ஒரு முஸ்லிமைப் பார்த்து ஏ காபிரே! என்று ஒருவன் அழைத்தபோது *லப்

---

* ஸுல்ஹு-இணக்கம்.
† புத்து-விக்கிரகம்.
‡ உஸ்தாது-குரு.
* இலாஹு-கடவுள்.
† பறகத்து-நயவிர்த்தி.
* லப்பைக்கு-எஜமானுடைய கூப்பிடுதலுக்கு அடிமை கொடுக்கும் எதிர்மொழி.

பைக்கு என்று சொல்லுகிறதும், ஒருவன் காபிராய்ப் போவதற்காக வேண்டி அதன் †ஷறுத்துகளைப் படித்துக் கொடுக்கிறதும், புதிதாக இஸ்லாத்தில் வந்தவனைப்பார்த்து நீ ஏன் இந்த மார்க்கத்தில் வந்தாய்? என்கிறதும், தன் மகனைப் பார்த்து காபிருடைய மகனே! என்கிறதும், வேண்டும் என்று இடுப்பில் *ஜுன்னுரைக் கட்டுகிறதும், காபிர்களுடைய திருநாட்களில் சண்டைக்காக அவர்களுக்கு †ஹதியா முதலானது கொடுக்கிறதும், காபிர்களுடைய திருநாட்களில் அவர்களைப் போலப் புதுச்சாமான்கள் வாங்குவதும், இனியொருக்கால் காபிராய்ப் போகலாம் என்று எண்ணுவதும், இன்னகாரியம் நேரிட்டாலும் காபிராய்ப் போகலாம் என்று எண்ணுவதும், யாதொரு நற்கருமத்தைக் காபிர்களிடத்தில் கண்டு இந்தக் கருமத்தில் முஸ்லிமானவர்களைப் பார்க்கிலும் காபிர்கள் நல்லவர்கள் என்று சொல்லுகிறதும், காபிர்கள் திருநாட்கொண்டாடும் இடத்திற்கு அதற்காகப் போகிறதும், ஒரு பகையாளியைப் பார்த்து அகங்காரமாய் ஒவ்வொரு நிமிஷத்திலும் என்னைப்போல உண்டாக்கி விடுவேனென்கிறதும், விக்கிரகங்களைச் செய்கிறதும் என்னுடைய கொள்கையும் பிருஒளனுடைய கொள்கையும் சரி, அல்லது நான் பிருஒளனுடைய கொள்கையிலிருக்கிறேனென்கிறதும், ஒருவன் அல்லாஹுத்தஆலா இபுலீஸை லஃனத்துச் செய்தானென்று சொல்ல அதைக்கேட்டு நானிபுலீஸை லஃனத்துச் செய்யமாட்டேனென்கிறதும், இனியொருக்கால் ஒருவனைக் காபிராகும்படி ஏலாம் என்று எண்ணுகிறதும், நான் *முல்ஹிது என்று சொல்லுகிறதும், ஒரு முஸ்லிமைப் பார்த்து உன்மீதும் உன் இஸ்லாத்தின் மீதும் அல்லாஹுத் தஆலா லஃனத்துச் செய்வானாக என்கிறதும், புதிதாக இஸ்லாமான ஒருவனுக்கு அதிகமாய்ப் பணஞ் சேர்வதைப் பார்த்து ஆசைப்பட்டு நாமும் காபிராயிருந்து இஸ்லாமானால் இப்படிப் பணஞ்சேர்க்கலாமே என்று எண்ணுகிறதும், காபிரிலுள்ள ஒரு நல்ல பெண்ணைப்பார்த்து நாம் காபிராயிருந்தால் இவளை விவாகம் பண்ணிக் கொள்ளலாமே என்று எண்ணுகிறதும், ஒரு முஸ்லிமை மற்றொரு முஸ்லிம்பார்த்து நீ காபிர் என்று சொல்ல அதற்கு அவன் நான்

---

† ஷறுத்து-ஒழுங்கு.

* ஜுன்னுர்-கிறிஸ்த போதகர்கள் இடையிற் கட்டும் ஒருவிதப் பட்டுக்கயிறு.

† ஹதியா-வெகுமதி.

* முல்ஹிது-இஸ்லாம் வேஷக்காரன்.

காபிரானுல் நீ என்னுடன் இருக்காதே என்கிறதும், ஒருவரைப் பார்த்து நீ ஹலாலான விஷயத்தில் ஏன் பிரவேசிக்கமாட்டேன் என்கிருய் என்று கேட்க நான் ஹறுமான விஷயத்தைக் காணுந் தோறும் ஹலாலானவிஷயத்தில் பிரவேசிக்கமாட்டே னென்கிற தும், ஒருவனைப்பார்த்து நீ ஹலாலைத் தின்னென்று சொல்ல எனக்கு ஹறும் தான் உவப்பு என்கிறதும், ஒருவனைப் பார்த்து நீ உன்னுடைய இஸ்லாமை வெளிப்படுத்து என்று சொல்ல நான் கள்ளுக் குடிக்கும் போது வெளிப் படுத்துகிறேன் என்கிறதும், கள்ளு, ஜினு, அநியாயம் கொலை முதலானவைகளெல்லாம் ஹலாலாயிருந் தால் நல்லது என்கிறதும், கள்ளையாவது ஜினுவையாவது லிவாத் தையாவது, வட்டியையாவது, வேறு சிறுபாவங்களையாவது ஒன்றை ஹலால் என்கிறதும், ஒருவன் சிறு பாவத்தை செய்யக் கண்டு தௌபாச்செய் என்று சொல்ல இதற்காகவா தௌபா செய்ய வேண்டும் என்கிறதும், சில பாவங்களைப் பார்த்து அதைச் சுட்டிக் காட்டி இது ஒரு †தரீக்கு என்கிறதும் ஹறுமான வஸ்து வை ஸதக்கா வாகக் கொடுத்து அதனுல் தவாபு கிடைக்கும் என்று நம்புகிறதும், ஒருவன்செய்கிற மார்க்கக்கெடுதலைப்பார்த்து நீர் நல்லவேலைசெய்தீர் என்கிறதும், மஸ்தை உபயோகிக்காத வன் முஸ்லிமல்ல என்கிறதும், சூதகத்துடனிருக்கிற மனைவியைப் புணர்ச்சி செய்வது ஆகுமென்கிறதும், ஹறுமான விஷயத்தைச் செய்யத் தொடங்கும் போது பிஸ்மில்லா சொல்வதும், செய்து முடிந்தபின் அல்ஹம்துலில்லா சொல்லுவதும், அரசர்கள் தாம் நாடினதை ஹலாலென்றும், ஹறுமென்றும், ஆக்கும் அதிகார முடையவர்களென்று எண்ணுகிறதும், பெண்ஜாதியைப் பார்த்து நீ எனக்கு அல்லாஹுதஆலாவைப் பார்க்கிலும் நபிநாயகமவர் களைப் பார்க்கிலும் மெத்தப் பிரியமுள்ளவள் என்கிறதும், நபி முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்கள் அறபு ராஜ் ஜியத்திற்கு மாத்திரந்தான் நபியாய் வந்தார்கள் என்கிறதும், நபி ஸுலைமான் அலைஹிஸ்ஸலாமவர்கள் துன்யாவின் மீது மெத்த ஆசை யுள்ளவர்களென்கிறதும், எல்லா நபிமார்களும் *பனுவாய் மண்ணுய்ப் போவார்கள், ஒருவரும் கபுறில் இல்லை யென்கிறதும், நாம் இஸ்லாமார்க்கத்தைவிட்டு வேறு மார்க்கத்தில் போகலாமா என்று எண்ணுகிறதும், ஆயிஷா றலியல்லாஹு அன்ஹா அவர்களை அவதூறு சொல்லுகிறதும், நபி நாயகமவர்கள்

---

† தறீக்கு-வழி.
* பனு-அழிவு.

மிஹுறாஜுக்குப் போகவில்லை யென்கிறதும், இன்னான் என்னை மலக்கல் மௌத்துப்போல வந்து பிடித்துக்கொண்டா னென்று சொல்லுகிறதும், நபிமார் ஒலிமார் முதலான யாருடைய கபுறுக் காவது ஸுஜூது செய்வதும் இன்னும் யிவைபோ லொத்த பல விதமான சொற்களும் செயல்களும் கொள்கைகளும் எண்ணங் களும் றித்தத்தாம். இவ்வித றித்தத்தான சொல்லைச் சொன்ன வனும், செயலைச் செய்தவனும், கொள்கையைக் கொண்டவனும், எண்ணத்தை எண்ணினவனும், முறுத்தத்து என்று சொல்லப் படுவான். முறுத்தத்து என்றால் ஈமான் மாறினவன் என்பது அர்த்தம்.

ஒருவன் முஸ்லிமாகவே யிருக்கவேண்டுமானால் மேற்சொன்ன றித்தத்தான விஷயம் ஒன்றாவது எதைப்பற்றியும் சம்பவிக்காமல் மகா எச்சரிப்புடன் பேணி நடக்கவேண்டும். அப்படி எச்சரிப் புடன் பேணி நடந்துவந்தபோதிலும் அல்லாஹு தஆலாவின் கர்ப்பனைபடி றித்தத்தான விஷயம் ஒன்றுவந்து சம்பவித்துவிட் டால் உடனே அதை யறிந்து அதற்குத் தக்க பரிகரிப்புடன் தௌபா செய்து மீளவேண்டும். அப்படி மீளாவிட்டால் அவனு டைய ஈமான்போய், செய்த நல்ல அமல்களும் அற்று, மனைவி யும் ஹறுமாய் விடுவாள். ஆகையால் ஒருவன் முறுத்தத்தான வுடன் அவன், எந்த விஷயத்தைக்கொண்டு முறுத்தத்தானானே அந்த விஷயத்தை விட்டு நீங்கினேனென்று மனவுறுதியுடன் வாயால் சொல்லி ஷறுத்தின்படி கலிமா சொல்லவேண்டியது. அப் படிச் சொன்னால் அவனுடைய மாறிப்போன ஈமான் உண்டாய் விடும். அவனுடைய அற்றுப்போன அமல்களையோ கலா செய்ய வேண்டும். மனைவியையோ மறுபடியும் நிகாஹ் செய்யவேண்டும். (அவனுடைய அமல்கள் தௌபா செய்த பிறகு கலா செய்யாம லேயே மீண்டும் பலிக்கும். மனைவியும் மறு நிகாஹ்யில்லாமலேயே ஹலாலாவாள், என்பது ஷாபியி மதுஹபு).

ஆகையால் முஸ்லிமான சகோதரர்களே! மேற்சொன்னவை களும், அவைபோலொத்தவைகளுமான றித்தத்துகளில் ஒன்று வது எந்தவிதத்திலும் வந்து நேரிடாமல் ஒவ்வொரு வரும் மகா எச்சரிப்புடன் இருக்கவேண்டியது கடமையாயிருப்பது மல்லா மல், ஈமானுக்குக் காவலாகிய றத்துல் குபுறு என்கிற இதன் கீழ் வரும் கலிமாவை எப்போதும் சொல்லிக் கொண்டிருப்பதும் கட மையாம். அந்தக் கலிமா :—

"அல்லாஹும்ம இன்னீ ஆஊதுபிக மின்அன் உஷ்ரிகபி கஷைஅன் வஅனு அஃலமு பிஹி வஅஸ்தகுபிறுக லிமாலா அஃலமு பிஹி இன்னக அன்த அல்லாமுல் குயூப்துப்து அன்ஹு வத்தபர்றஃது அன்குல்லி தீனின் ஸிவா தீனுல் இஸ்லாம் வஅஸ்லம்து வஅகூலு லாயிலாஹ இல்லல்லாஹு முஹம்மதுர் றஸூலுல்லாஹி" என்பதாம். இதன் அர்த்தம்:—

ஆண்டவனே! நான் அறிந்து யாதொரு வஸ்துவை உனக்கு இணையாக்குவதை விட்டும் உன்னிடம் காவல் தேடுகிறேன். நான் அறியாமல் செய்தவைகளை உன்னிடம் மன்னிக்கக் கேட்கிறேன். திடனாக நீ மறைவானவைகளை யெல்லாம் அறிந்தவன். நான் அதை விட்டும் மீண்டேன். இஸ்லாம் மார்க்கம் அறியாத மற்ற மார்க்கங்களையும் விட்டு நீங்கி விட்டேன். நான் இஸ்லாமாய் அல்லாஹு தஆலாவைத் தவிர வேறே ஆண்டவன் இல்லையென்றும், முஹம்மது நபி அவனுடைய தூதரென்றும் சொல்லுகிறேன் என்பதாம்.

இந்தக் கலிமாவை ஒருவன் பிரதி தினமும் ஓதி வருவது மல்லாமல் இதன் கீழ்வரும் துஆவையும் ஓதிவரவேண்டும்.

"அல்லாஹும்ம நவ்விர் குலூபனு பினூரி மஃரிபதிக யாஅல்லாஹு அல்அமான் அல்அமான் மின்ஸவாலில் ஈமான் பிறஹ்மதிக யாஅர்ஹமர் ருஹிமீன்".

இதன் அர்த்தம்:—ஆண்டவனே! என்னுடைய மஃரிபா என்னும் ஒளிவைக்கொண்டு எங்கள் மனங்களைப் பிரகாசிக்கச் செய்வாயாக. ஆண்டவனே! எங்களுடைய ஈமான் சாயாமல் கிருபை செய்கிறவர்கள் எல்லாரைப்பார்க்கிலும் மகாகிருபை செய்கிறவனாகிய உன்னுடைய கிருபையைக்கொண்டு நீ காப்பாயாக என்பதாம்.

இந்த இருவித துஆவின் பறக்கத்தைக்கொண்டு அல்லாஹு தஆலா மேற்சொன்ன றித்தத்துகளில் ஏதாவது எந்த விதத்திலாவது, எப்போதாவது வந்து அணுகாமல் காப்பாற்றுவானாக. ஆமீன்.

றித்தத்து முடிந்தது.

## 9-ம் பஸல்.

## குபுறு.

குபுறு என்பது மறைத்தல் என்ருல் ஹக்கை மறைத்தலாம். அது ஈமானுக்கு மறுதலே. குபுருனது ஜஹாலத்து, லலாலத்து, இனுது என்று மூன்றுவகைப்படும். குபுறு ஜஹாலத்து என்பது மூடத்துவமான குபுறு. அது அந்துமான் ஜாதியாரைப் போன்ற வர்களுடையது குபுறு லலாலத்து என்பது வழிகேடான குபுறு. இனுது என்பது பிடிவாதமான குபுறு. அது யஹூதி, நஸாருக் களைப் போன்றவர்களுடையது.

மனிதர்கள், நபி ஆதம் அலைஹிஸ்ஸலாமவர்களின் காலமாகிய பூர்வகாலத்தில் முஸ்லிமாகவே யிருந்தார்கள். இருந்தாலும் அந்தக் காலத்திலேயே குபுறு உண்டாய் விட்டது. அந்தக் காபிர்கள் ஹாபிலும், அவன் மக்களும், அந்த குபுருனது வரவரப் பல் ஷிருக்கு, மஜூஸிய்யத்து, யஹூதியத்து, நஸ்ருனிய்யத்து, தனுஸகிய்யத்து, பலாஸ்பிய்பத்து, தபாயிய்பத்து, தஹரிய்யத்து, முனஜ்ஜிமிய்யத்து முதலான பல பிரிவுகளாய் பிரிந்தது. ஷிருக்கையுடையவனை முஷ்ரிக்கு யென்றும், மஜூஸிய்யத்தையுடையவனை மஜூஸியென்றும், யஹூதிய்யத்தை யுடையவனை யஹூதியென்றும், நஸ்ருனிப்பத்தை யுடையவனை நஸ்ருனியென்றும், தனுஸகியத்தை யுடையவனைத் தனுஸகியென்றும், பலாஸபியத்தை யுடையவனை பலாஸபியென்றும், தபாயிய்யத்தை யுடையவனை தபாயியென்றும், தஹரிய்யத்தை யுடையவனை தஹரிய்யியென்றும், முனஜ்ஜிமிய்யத்தை யுடையவனை முனஜ்ஜிமியென்றும் சொல்லுவார்கள். இவற்றுள் ஷிருக்குயென்பது இணை. இது விக்கிரகாராதனை முதலான ஷிருக்கை யுடையவர்களுக்கு ஓதனிய்யாயென்றும் பெயர். மஜூஸிய்யத்து என்பது நெருப்பை வணங்குதல், யஹூதிய்யத்து என்பது யஹூதிகளின் மார்க்கம். அது பின்னுல் விவரிக்கப்படும். நஸ்ருனிய்யத்தென்பதும் நஸாருக்களின் மார்க்கம். அதுவும் பின்னுல் விவரிக்கப்படும். தனுஸகியத்தென்பது முதலியவைகளின் விவரங்களை இதன் கீழ்வரும் அவரவர் கொள்கைகளாலறிந்து கொள்ளவேண்டியது.

ஷிருக்கானது ஆரம்பமாய் நபி இத்ரீஸ் அலைஹிஸ்ஸலாமவர்கள் காலத்தில் உண்டாயிற்று. அதன் விபரம்:—நபி இத்ரீஸ் அலைஹிஸ்ஸலாமவர்கள் வானசாஸ்திரத்தில் மகா நிபுணராய், மனிதர்களுக்கு கல்விகளைக் கற்பிப்பதில் சிறந்தவர்களா யிருந்தார்

கள். அவர்களுக்குப் பிரதானமான ஐந்து *சீஷர்களிருந்தார்கள். அவர்கள் பெயர், உத்து, சுவாஹு, யஹூது, யஊக்கு, நஸ்து என்பனவாம். நபி இத்ரீஸ் அலைஹிஸ்ஸலாமவர்கள் வானத்தில் உயர்த்தப்பட்டபின் மேற்சொன்ன ஐந்து சீஷர்களும் அவர்களுக்கு பதிலாகக் கல்வி கற்பித்துக்கொண்டிருந்தார்கள். இந்த ஐந்து பேர்களும் மௌத்தான பிறகு கல்விகளைக் கற்பிப்போர் இல்லாமல் மனிதர்களதிக சஞ்சலமுடையவர்களா யிருக்கையில், அவர்களில் சிலர் நாம் நமக்குக் கல்வி கற்பித்துக்கொண்டிருந்த உத்து முதலான ஐந்து பெயர்களையும் போலச் சிலைகள் செய்து வைத்துக்கொள்வோமானால் அவர்கள் மீது நமக்கு நினைப்பு வருந்தோறும் அந்தச் சிலைகளைப்பார்த்து நம் ஆவலைத் தீர்த்துக் கொள்வோம். அப்படி நாம் செய்துகொண்டு அல்லாஹுத் தஆலாவை வணங்கிக்கொண்டிருக்கலாம். இல்லாவிட்டால் அவர்கள் மீதுள்ள நம்முடைய ஆவல் அல்லாஹுத் தஆலாவை வணங்குவதை விட்டுப் பாராக்காக்குகிறதென்று ஆலோசனைபண்ணி, அப்படியே ஐந்து சிலைகளைச்செய்து அவற்றிற்கு உத்து, சுவாஹு, யஹூது, யஊக்கு நஸ்து என்னும் மேற்சொன்ன ஐந்து நாமங்களையும் வைத்து அவர்களுக்கு தங்கள் †ஆசிரியர்களின் மீது தேட்டம் வரும்போதெல்லாம் மேற்படிச் சிலைகளைக் கண்ணால் மாத்திரம் பார்த்துக்கொண்டு தங்கள் ஆவலைத்தீர்த்துக்கொள்வார்கள்.

மேற்சொன்ன ஜனங்கள் இவ்விதமாயிருந்து அல்லாஹுத் தஆலாவுக்கு வழிப்பட்டு வணங்கின முஸ்லிம்களாகவே மௌத்தானார்கள். அவர்களெல்லாரும் மௌத்தாய் அவர்கள் சந்ததிகளின் காலமானபோது இபுலீஸானவன் மேற்சொன்ன விக்கிரகங்களின் வயற்றில் புகுந்துகொண்டு ஜனங்களே! நான் உங்களுக்கும், உங்கள் தகப்பன்மார்களுக்கும் ஆண்டவனாகையால் நீங்களென்னை வணங்குங்கள். உங்கள் தகப்பன்மார் என்னைத்தான் வணங்கினாரென்று சொன்னான். அவர்களுக்குத் தங்கள் தகப்பன்மார் மேற்சொன்ன சிலைகளை ஞாபகத்திற்குப் பார்த்துக்கொள்ள மாத்திரம் வைத்திருந்தார்களேயன்றி அதுகளை அவர்கள் வணங்கவில்லையென்பது தெரியாதாகையால், இபுலீசுடைய சொல்லை நம்பி அந்த விக்கிரகங்களை வணங்கத் தொடங்கினார்கள். அன்று முதல் ஷிருக்காகிய விக்கிராராதனை யுண்டாயிற்று. அப்படியே நபி நூஹு

---

* சீஷன்-தில்மீது.

† ஆசிரியன்-உஸ்தாது.

அலைஹிஸ்ஸலாமவர்கள் காலம் வரும் வரையும் விக்கிரகங்களையே வணங்கிக் கொண்டிருந்தார்கள். பிறகு அந்தக் காலத்திலுண்டான ஜலப்பிரளயத்தில் மேற்சொன்ன ஐந்து விக்கிரகங்களும் அவைகளைப்போல உருவமும் பெயருமுள்ளதாகச் செய்யப்பட்டிருந்த மற்ற விக்கிரகங்களும் தரைக்குட் புகுந்து போயின. அதன்பின் அந்தக் காலந் தொடங்கி நபி இபுறாஹீம் அலைஹிஸ்ஸலாமவர்கள் காலம்வரையும் விக்கிரகாராதனை ஒழிந்திருந்தது. இருந்தாலும் காபிர்கள் கண்ட பின்பு இபுலீஸ் நமுறூதுயிடம் வந்து விக்கிரகஞ் செய்து வைத்து வணங்கும்படி ஏவினான்.

அப்போது மறுபடியும் விக்கிரகாராதனை வழங்கத் தொடங்கிற்று. அன்று முதல் அது நடந்து வருகின்றது. மண் ஜலப்பிரளயத்தில் புதைந்துபோன பிரதானமான உத்து முதலான ஐந்து விக்கிரகங்களையும், நபி இஸ்மாயீல் அலைஹிஸ்ஸலாமவர்கள் காலத்தில் இபுலீஸ் எடுத்துக் கொணர்ந்து மக்காவிலிருந்த பனீகத்யான் கூட்டத்தார் வசம் ஒப்பிவித்தான். அவர்கள் அவைகளை வாங்கி வைத்து வணங்கினதல்லாமல் அவற்றை முந்நூற்றறுபது விக்கிரகங்களாகச்செய்து கஃபவில் வைத்தார்கள். இதுவே ஷிருக்கு உண்டான பூர்வவரலாறு.

மஜூஸிய்யத்தானது நபி இபுறாஹீம் அலைஹிஸ்ஸலாமவர்கள் காலத்திலுண்டாயிற்று. அதன் விபரம்:—நபி இபுறாஹீம் அலைஹிஸ்ஸலாமவர்களை அக்கினிக்குண்டத்தில் தள்ளினபோது இபுலீஸ் காபிர்களிடத்தில் வந்து இப்றாஹீம் நெருப்பை வணங்குகிறபடியால் தான் அவரை அது சுடவில்லை ஆகையால் நீங்களும் நெருப்பை வணங்குங்கள், அது ஆகிறுவில் உங்களைச் சுடாதென்று போதித்தான். அந்தப் போதனைக்கு உட்பட்டு அநேகர் நெருப்பை வணங்கத் தொடங்கினார்கள். அன்று தொட்டு நெருப்பை வணங்குவது ஆரம்பமாயிற்று. இதுவே மஜூஸிய்யத் துண்டான பூர்வ வரலாறு.

யஹூதிய்யத்தானது நபி மூஸா அலைஹிஸ்ஸலாமவர்கள் காலத்தில் உண்டாயிற்று. நபி மூஸா அலைஹிஸ்ஸலாமவர்களின் *கௌம்களில் சிலர் ஸாமிரியுடைய துர்ப்போதனையினால் ரிஷபத்தை வணங்கி பின் அதை விட்டு தௌபா செய்து மீண்டதால் அவர்களுக்கு †யஹூதியென்று பெயராயிருந்தது. இன்னும் யஹூதி

* கௌம்-கூட்டம்.
† யஹூதி-மீண்டவன், அவனை யூதன் என்பார்கள்.

கள் நபி யஃகூபு அலைஹிஸ்ஸலாமவர்களின் புத்திரர்களி லொருவ ராகிய யஹூதாவுடைய வம்சத்தாராகையால் யஹூதிகளென்று பெயர் பெற்றார்களென்றும் சொல்லப்படுகின்றது. பிறகு அவர் களில் காபிராய்ப்போன எல்லாருக்கும் யஹூதிகளென்ற பெயர் வழங்கத் தொடங்கிற்று. அதனாலேயே அவர்கள் கொள்கைக்கு யஹூதிய்யத்தென்று பெயர். அது உண்டான விவரமாவது:--

யஹூதிகள் ஸாமிரிய்யாயென்றும், உஜைரிய்யா யென்றும், இரண்டு வகைப்படுவார்கள். ஸாமிரிய்யாயென்பவர்கள், நபி மூஸா அலைஹிஸ்ஸலாமவர்கள் அல்லாஹுத் தஆலாவுடன் வசனிப்பதற் காக தூறுஸீனா மலைக்குப் போயிருந்தபோது ஸாமிரியுடைய துற் போதனைக்கு உட்பட்டு ரிஷபத்தை வணங்கினவர்கள். உஜை ரிய்யா யென்பவர்கள் நபி உஜைறு அலைஹிஸ்ஸலாமவர்களை இபுலீ ஸினுடைய துற்போதனைக்கு உட்பட்டு அல்லாஹுத் தஆலா வுடைய மகனென்று சொன்னவர்கள். இன்னும் யஹூதிகள் நபி மூஸா அலைஹிஸ்ஸலாமவர்களையும், அவர்கள் மார்க்கத்தையுந் தவிர மற்ற நபிமார்களையும், மார்க்கங்களையும் ஒப்புக்கொள்ளமாட்டார் கள். இன்னும் அவர்கள் அல்லாஹுத் தஆலாவை யாராவது, எப்போதாவது, எங்கேயாவது காணக்கூடாது. அப்படிக் காணக் கூடுமாயிருந்தால் நபி மூஸா அலைஹிஸ்ஸலாமவர்கள் காணத்தடை யிராதென்றும் சொல்லுவார்கள். இதுவே அவர்கள் பூர்வ வரலா றும் கொள்கையுமாம்.

நஸ்றானிய்யத்தானது நபி ஈஸா அலைஹிஸ்ஸலாமவர்களின் காலத்திலுண்டாயிற்று. அது நஸாறாக்களுடைய கொள்கை. அவர்கள் நபி ஈஸா அலைஹிஸ்ஸலாமவர்களுக்கு உதவி செய்தபடி யால் *நஸாறாயென்று பெயர் பெற்றார்கள். இன்னுமவர்கள் ஷாம் ராஜ்ஜியத்திலுள்ள நாஸிராயென்னும் ஊரையுடைய ராகை யால் நஸாறாவென்று பெயர் பெற்றார்களென்றும் சொல்லப்படு கின்றது. நபி ஈஸா அலைஹிஸ்ஸலாமவர்கள் கௌம்களில் காபி ரான எல்லோருக்கும் நஸாறா வென்றே பெயர். அதனாலே அவர் கள் கொள்கைக்கு நஸ்றானிய்யத்தென்று பெயராயிற்று. அந்தக் கொள்கையின் விவரமாவது:—

யஹூதிகளுக்கும், நஸ்றானிகளுக்கு மிடையில் உண்டா யிருந்த பகையினாலே நேரிட்ட யுத்தங்களில் யஹூதிகள் அநேகர்

---

* நஸாறா-உதவி செய்கிறவர். அவர்களுக்கு கிறிஸ்தவரென்று பெயர்.

கொல்லப்பட்டுப் போனபடியால், அந்தப் பகைக்குக் காரணமா யிருந்தவனும், யஹூதிகளுக்கு ஆசாரியனுமாகிய பேர்போன ஒருவன் தங்களில் கொல்லப்பட்டவர்களுக்கு பதிலாக நஸாருவி லும் அநேகரைக் கொல்ல நாடி ஒரு உபாயம் செய்துகொண்டு தன் கண்களில் ஒன்றைப்பிடுங்கிக்கொண்டு, நஸ்ருனிகளிடத்தில் வந்து என்னை நீங்களறிவீர்கள்? நான் யஹூதிகளின் ஆசாரி யானுகிய பின்னுன். ஒரு இரவில் ஈஸா அலேஹிஸ்ஸலாமவர்கள் வானத்திலிருந்து இறங்கிவந்து என்னைப்பார்த்து யென்னுடைய உம்மத்துக்கு நீ இவ்விதம் பொல்லாங்குகளை உண்டு பண்ணலாமா? ஏன் அப்படிச் செய்தாயென்று கண்டித்து தங்கள் கையை ஓங்கிக் கன்னத்திலறைந்தார்கள். அதனுல் என் கண் கழன்றுவிட்டது இதோ பாருங்கள்! உடனே நான் யஹூதிய்யத்து பிசகுயென் பதைக் கண்டுகொண்டேன். ஆகையாலிப்போது நான் அந்த மார்க்கத்தை விட்டும் மீண்டு உங்கள் மார்க்கத்தில் சேர்ந்துவிட் டேனென்று தந்திரமாகச் சொன்னுன். இந்தச் சொல்லை நஸா ருக்கள் நம்பி அவனை யுபசரித்து ஏற்றுக்கொண்டு தங்கள் பிள்ளை களை அவனிடம் ஒப்புவித்து கல்விகற்றுக் கொடுக்கும்படித் திட் டஞ் செய்துவைத்தார்கள். அப்படியேயவன் அந்தப் பிள்ளை களுக்கு ஆசிரியனுயிருந்து கல்வி கற்பித்து வந்தான். வரும்போது தன்னிடம் கல்விகற்கும் மாணுக்கர்களில் மல்கா, நஸ்தூறு, யஃகூபுயென்னும் மூன்று பெயர்களையும் தெரிந்துகொண்டு, அவர்களுக்கு அதிகமாக கல்விகளைக் கற்றுக்கொடுத்து தன்னை அதிகமாக விசுவாசிக்கும்படிச் செய்துகொண்டு ஒருநாள் மல் காவை யழைத்து நீ ஈஸா அலேஹிஸ்ஸலாமை அறிவாயா? அவர் கள் யாரென்றுகேட்டான். அதற்கவன் நானறிவேன். அவர்கள் அல்லாவுடைய றஸூல், நபி, றூஹு என்று சொன்னுன். இதைக்கேட்ட அவன் மல்காவைப்பார்த்து இனி நீ இப்படிச் சொல்லாதே, மௌத்தானவனை ஹயாத்தாக்கவும், பக்ஷிகளைப் படைத்து உயிர் கொடுக்கவும் கிராணியுள்ள ஒரு நபியை நீ யறி வாயா? எந்த நபியாலும் இப்படிச் செய்ய ஏலாது. ஆகையால் ஈஸா அலேஹிஸ்ஸலாமவர்கள்தான் அல்லா. வானத்திலிருந்து இறங்கிவந்து செய்யவேண்டியவைக ளெல்லாவற்றையுஞ் செய்து விட்டு மறுபடியும் வானத்திற்குப்போய் விட்டார்கள். இந்த ரக சியத்தை நீ யாரிடத்திலும் சொல்லாதே என்று போதித்தான். இச்சொல்லை அந்த மல்கா என்பவன் நம்பி அப்படியே நிர்ணயம்

செய்துகொண்டான். பிறகு நஸதூரென்பவனை யழைத்து ஈஸா அலைஹிஸ்ஸலாமை யறிவாயா? அவர்கள் யார்? என்று கேட்டான். அதற்கவன் நானறிவேன். அவர்கள் அல்லாவுடைய நபி *அப்து, றாஹூ என்று சொன்னான். அதற்கவன் நஸதூரைப் பார்த்து இனி நீ இப்படிச் சொல்லாதே. மௌத்தானவனை ஹயாத் தாக்கவும். பக்ஷிகளைப் படைத்து உயிர் கொடுக்கவும் திராணி யுள்ள ஒரு அப்தை நீ யறிவாயா? எந்த அப்தாலும் இப்படிச் செய்ய ஏலாது. ஆகையால் ஈஸா அலைஹிஸ்ஸலாமவர்கள் தான் அல்லா. வானத்திலிருந்து இறங்கிவந்து செய்ய வேண்டியவைக ளெல்லாவற்றையுஞ் செய்துவிட்டு மறுபடியும் வானத்திற்குப் போய் விட்டார்கள். இந்த ரகசியத்தை நீ யாரிடத்திலும் சொல்லாதேயென்று போதித்தான். இந்தச்சொல்லை அந்த நஸதூரென்பவன் நம்பியப்படியே நிர்ணயம்செய்து கொண்டான். பிறகு யஃகூபை யழைத்து நீ ஈஸா அலைஹிஸ்ஸலாமை யறிவாயா? அவர்கள் யாரென்று கேட்டான். அதற் கவன் நானறிவேன் அவர்கள் அல்லாவுடைய நபி றஸூல் மனிதர் களில் தெரிந்தெடுக்கப்பட்டார்களென்று சொன்னான். அவன் யஃகூப்பைப்பார்த்து இனி நீ இப்படிச்சொல்லாதே. மௌத்தான வனை ஹயாத்தாக்கவும்; பக்ஷிகளைப் பார்த்து உயிர் கொடுக்கவும் திராணியுள்ள ஒரு மனிதனை நீ யறிவாயா? எந்த மனிதனாலும் இப்படிச் செய்வது ஏலாது. ஆகையால் ஈஸா அலைஹிஸ்ஸலா மவர்கள் அல்லாவுடைய மகன். அல்லாவுமவர்கள்தான். லாஹூத் தானது வானத்திலிருந்து வந்து நாஸூறத்தில் பிரவேசித்து ஈஸா வாய்ப் பிறந்து மூன்று இலாஹி ஒரு இலாஹாயிருந்தது இந்த ரகசியத்தை நீ யாரிடத்திலும் சொல்லாதேயென்று போதித் தான். இந்தச் சொல்லை யஃகூபு என்பவன் நம்பி அப்படியே நிர்ணயம் செய்துகொண்டான்.

பிறகு மல்கா, நஸ்தூறு யஃகூபென்னும் இந்த மூவரும் ஒரு நாளொன்று கூடி பேசும்போது மல்காயென்பவன் தான் நிர்ண யித்துக்கொண்டதுதான் மார்க்கமென்றும், நஸ்தூரென்பவன் தான் நிர்ணயித்துக் கொண்டதுதான் மார்க்கமென்றும், யஃகூபு யென்பவன்தான் நிர்ணயித்துக்கொண்டதுதான் மார்க்கமென்றும் வாதாடிக்கொண்டார்கள். ஜனங்களிந்த மூன்று பேர்களுடனும் சேர்ந்தார்கள், பின்பு அவர்களுக்குட் பிரமாதமான கலகம்

* அப்து-அடிமை.

நேரிட்டு சண்டை யுண்டாய் ஒருவருக்கொருவர் வெட்டிக் கொண்டார்கள். அப்போது அவர்களில் நார்பதினுயிரம் பேர்களுக்கதிகமாகக் கொல்லப்பட்டார்கள். இதனுல் மேற்சொன்ன யஹூதிகளின் ஆசாரியனுடைய யெண்ணம் நிறைவேறிற்று.

அன்று முதல் மல்காவைச் சேர்ந்தவர்களெல்லாரும் மல்காயிய்யாவென்றும், நஸ்தூரைச் சேர்ந்தவர்களெல்லாரும் நஸ்தூரிய்யா வென்றும், யஃகூபைச் சேர்ந்தவர்களெல்லாரும் யஃகூபிய்யாவென்றும் மூன்று பிரிவாய்ப் பிரிந்தார்கள்.

ஈஸா அலைஹிஸ்ஸலா மவர்கள் நபியல்ல, அல்லாதா னென்பது மல்காயிய்யாவுடைய கொள்கை. ஈஸா அலைஹிஸ்ஸலா மவர்கள் அப்தல்ல அல்லாதான் என்பது நஸ்தூரிய்யாவுடைய கொள்கை. ஈஸா அலைஹிஸ்ஸலா மவர்கள் மனிதனல்ல அல்லாவும் அல்லாவுடைய மகனுமா யிருக்கிறார்க ளென்பது யஃகூபிய்யாவுடைய கொள்கை. ஆனுலும் இந்த மூன்று பிரிவாருக்கு உடையதான நஸ்ருனிய்யத்தென்னும் கிறிஸ்துவ மார்க்கத்துப் பொதுக்கொள்கையானது :—ஆண்டவன் மூன்று. அந்த மூன்று ஆண்டவனும் ஒன்றே. அந்த மூன்றுவன :—பிதா, குமாரன், பரிசுத்த ஆவி யென்பதாம். இதையவர்கள் திரியேகதத்துவமென்பார்கள். இன்னும் இவர்கள் கொள்கையில் பல விதமுண்டு. இனிதனுஸகிய்யத் தென்பது, பாவம்செய்த ஒவ்வொரு மனிதனும் இறந்தபின் தான் செய்த பாவம் தீரும்வரையும் மறுபடியும் பிறப்பான். அப்படியே யெத்தனை தரமானுலும் மனிதப் பிறப்பல்லாத மிருக முதலான இழிபிறப்பாய் பிறந்து கொண்டேயிருந்து பாவம் தீர்ந்து பரிசுத்தமானபின் மோக்ஷமடைவா னென்பதாம். இவர்களுக்கின்னும் பல கொள்கையுண்டு.

பலாஸயிய்யத் தென்பது, உண்டான வஸ்துக்களெல்லாம் நான்கு பூதங்களாலேயே உண்டாயின. நான்கு பூதங்களும் குல்லென்றும், ஜுஜென்றும் இருவகைப்படும். குல்லென்பது சூட்சரூபமான பரமாணுக்கள். ஜுஜென்பது அதிலிருந்து பிறந்த ஸ்தூலரூபமான மண், நீர், நெருப்பு, காற்று ஆகிய இந்த நான்கும் மற்ற வஸ்துக்களிலுள்ள இவைபோன்ற பூதங்களுமாம். ஆகையால் ஒரு வஸ்துக் கெட்டால் அதிலுள்ள பூதங்கள் நான்கு. அதற்கு அசலாயுள்ள சூட்சம ரூபமான குல்லில் போய்ச்சேர்ந்து போம். ஆனபடியால் மனிதனும் மேற்சொன்ன நான்கு பூதங்களாலுண்டானவன். ஒருவனிறந்தால் அவனுடைய நான்கு பூதங்

களுமப்படியே அதின் குல்லில் போய்ச்சேர்ந்து போமென்ப தாம். இவர்களுக்கு இன்னும் பல கொள்கைகளுண்டு.

தபாய்யத்தென்பது தபீ அத்தென்கிற சுபாத்துவமானது பூர்வமாயுள்ளது, எல்லா வஸ்துக்களையு முண்டாக்கிறதும், வளர்க் கிறதும் கல்விகளைக் கற்பிக்கிறதுமாகிய யெல்லாம் தபீஅத்துக்கே உடைய தென்பதாம். இவர்களுக்கின்னம் பலவித கொள்கை யுண்டு.

தஹரிய்யத்தென்பது, எல்லா வஸ்துக்களையு முண்டாக்கிற தும், வளர்க்கிறதும் காலமேயல்லாமல் வேறல்ல. சகல கருமங்களை யும் காலந்தா னுண்டாக்குகிற தென்பதாம்.

முனஜ்ஜிமிய்யத் தென்பது சோதிடம். இவர்கள் கொள் கையானது வானத்திலுள்ள மலக்குகள் தான் எல்லாவற்றையு முண்டாக்குகின்றனவன்றி வேறில்லை. எல்லாக்கருமங்களையும் மலக்குத்தா னுண்டுபண்ணுகின்ற தென்பதாம், இவர்கள் கொள் கையில் இன்னும் பலவித முண்டு.

இவ்விதக் கொள்கைகளை யுடைய குபுறு மார்க்கமல்லாத இஸ்லாம் மார்க்கமானது நபி ஆதம் அலைஹிஸ்ஸலாமவர்கள் முதல் நமது நபி நாயகம் முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர் கள் வரையுமுள்ள எல்லா நபிமார்களும் பொதுவானதும், எல்லா ருக்கும் ஒரே விதமான கொள்கையையுடையதும், பரிசுத்தமான தும், மோக்ஷத்தில் பதவியானதும், நிகரில்லாததது மானதாம். ஆனல் நபி ஆதம் அலைஹிஸ்ஸலாமவர்கள் முதல் நமது நபி நயாக மவர்கள் வரையும், நபிமாரெல்லாருக்கு முடையதாயிருந்த இஸ் லாம் மார்க்கத்தில் ஆறு நபிமார்களுக்கு மாத்திரம் ஷரீய்யத்து களுண்டாயிருந்தன. அந்த ஆறு நபிமார்களையும் உலுல் அஸம் என்று சொல்லுவார்கள். அவர்களின்னரென்பதை தீனுடைய பஸலில் பார்த்துக்கொள்ளலாம.

ஆகையால் முஸ்லிமான சகோதரர்களே! இந்த பஸலில் சொன்ன காபிர்களுடைய கொள்கையும், செய்கையுமான குபுறு விஷயங்களை நன்றாயறிந்து அதுகளை விட்டு மனதைப் பரிசுத்த மாக்கி மேற்சொன்ன இஸ்லாமார்க்கத்தில் மனதை நிறுத்தி தரிபாடாய், கொள்கையும் செயலும் பிசகாமல் ஒன்றுபட்டு நடந்து மோக்ஷத்திற்சேர எச்சரிப்புடனிருப்பீர்களாக. அப் படியே நம்மனைவருக்கும் அல்லாஹுத் தஆலா பெருங்கிருபை

செய்து மேலானதும், பரிசுத்த மானதுமான தீனுல் இஸ்லாமில் நம்மைத்தரிப்படுத்தி வைத்து குபுறில் எவ்வளவும் நம்மைச் சார வொட்டாமல் பாதுகார்த்து ஈமானுடன் மௌத்தாக்கி ஈடேற்றம் தந்தருள்வானாக ஆமீன்.

குபுறு முடிந்தது.

---

## 10-ம் பஸல்.

## ஹஸனாத்து.

ஹஸனாத்தென்பது நன்மைகள். இந்நன்மைதான் தாஅத்தென்றும், இபாதத்தென்றும் சொல்லப்படும். அதாவது அல்லாஹுத் தஆலா ஏவின கருமங்களைச் செய்வதும், விலக்கின கருமங்களைத் தவிர்வதும் அதில் பறுலு, வாஜிபு, ஸுன்னத்து, முஸ்தஹப் பென்று நான்கு வகையுண்டு. இந்த நான்கு வகையான நன்மைகளடங்கலும் சொல்லாலும், செயலாலும், குணத்தாலும், கொள்கையாலு முண்டாகும். இவ்விதமுண்டாகும் நன்மைகள் மனம், நாவு, கண், காது, கை, கால், வயிறு, *உபஸ்தம் உடலாகிய இவைகளில் பிறக்கும், அவற்றின் விவரமாவன :—

ஈமான், அகீதாக்கள், மார்க்க இல்முகள், நன்மையான காரியங்களைப்பற்றிய †நிய்யத்து, மார்க்கமுறை தவறுமல் நிற்கும். ‡சமகிலே, நாம் பாவம் செய்கிறோமோ, நன்மை செய்கிறோமோ வென்றும் உலகம் எப்படிப்பட்டது, இதைப்படைத்தவன் மகிமையே மகிமையென்றும், பிரதி தினமும் தியானித்தலால் சொல்லும், செயலும் எண்ணமும் உண்மையாயிருத்தல், வாக்கு நிறைவேற்றல், அல்லாஹுத் தஆலாவுக்கு அஞ்சுதல், அல்லாஹுத் தஆலாவிடம் ஆதரவுவைத்தல், ‖தவக்கல், பொறுமை, +ஷுக்று, அல்லாஹுத் தஆலாவின் கட்டளைக்குப் பொருந்தி நிற்குதல், முஸ்லிம் எந்த இபாதத்தையும் மெய்யாக அல்லாஹுத் தஆலாவுக்காகவே செய்தல், அல்லாஹுத் தஆலா செய்திருக்கும் உபகாரங்களைப் பிரதிதினமும் ஞாபகம் பண்ணுதல், பிறருக்கு நன்மையுண்டாகவென்று நல்லெண்ணம் வைத்தல்,

---

* உபஸ்தம்-ஆண் பெண் குறி.
† நிய்யத்து-யெண்ணம்.
‡ சமகிலே-இஸ்திகாமத்து.
‖ தவக்கல்-பாஞ்சாட்டுதல்.
+ ஷுக்று-நன்றியறிதல்.

(இதுவே *ஹஸதில்லாமை) பிறர் செய்யும் நன்மையைப்பார்த்து நாமும் செய்யவேண்டுமென்று இச்சித்தல், மார்க்கப்படி கொடுக்கக் கடமையானதைக் கொடுத்தல் இதுவே ஸகாத்து ஒரு வஸ்து தனக்கு வேண்டியதாயிருந்தாலும், பிறருக்கு கொடுத்தல் தான் செய்த தீமைக்காக பட்சாதாபம்படுதல், மார்க்க விரோதமான கருமங்களுக்காகக் கோபப்படுதல், மார்க்கத்திற்கொத்த கருமங்களுக்காக உவப்புவைத்தல், தாழ்ந்து நடத்தல், தன்னைப் பிறர் புகழ்வதையும், இகழ்வதையும் ஒன்றாக பாவித்தல், நீண்டகாலம் வரையும் ஜீவனோடிருக்கவேண்டுமென்று யெண்ணு திருத்தல், இபாதத்து செய்வதற்காக நீண்டகாலம் ஆயுள் நீடித்திருக்க வேண்டுமென்று நாடுதல், பிரதி தினமும் மௌத்தை ஞாபகம் பண்ணிக்கொண்டிருத்தல், இல்முகளைக் கற்பிக்கும் உஸ்தாதுக்கு கீழ்ப்படிதல், பிறர் மீது மனவைராக்கியம் வைக்காதிருத்தல், மார்க்க விஷயத்தில் மனோதைரியப்படுதல், எந்த விஷயத்திலும் அமரிக்கையாயிருத்தல், பிறர் மீது பக்ஷம் வைத்தல், தீனுடைய விஷயத்திலும் துன்யாவுடைய விஷயத்திலும் விசுவாசம் வைத்தல், அல்லாஹு தஆலா மீதும், மனிதர் மீதும் நன்னம்பிக்கைக் கொள்ளுதல், துன்யாவிஷயங்களில் நிராசையாயிருத்தல், உள்ளதைக்கொண்டு போதுமாக்கிக்கொள்ளுதல், தீனுடைய விஷயத்தில் வழிதப்பாமல் நடத்தல், துற்குணம்போக நற்குணம்வருதல், முஷாஹத்தா யென்கிற †நிபந்தனையும் முறாகபா யென்கிற ‡எச்சரிக்கையும், முஹாஸபாயென்கிற ‖பரிசோதனையும், முஆத்தபாயென்கிற +கண்டிப்பும், முஆக்கபாயென்கிற ×வேதனையும் ஆகிய ஐந்து ஏற்பாடுகளடங்கிய முறாபத்தாயென்கிற கட்டுப்பாட்டை நப்ஸுடன் செய்து கொள்ளுதல், எந்த விஷயத்திலும் தீவிரப்படாமல் தாமதப்படச்செய்தல், ஆகிறுவுடைய விஷயத்தில் மாத்திரம் தீவிரப்படுதல், பிறர் விஷயத்தில் சாந்தமாயிருத்தல், எவர்

---

* ஹஸது-பொறாமை.

† நிபந்தனை என்பது-தீமைசெய்யாமல் நன்மைசெய்ய வேண்டுமென்னும் ஏற்பாடு.

‡ எச்சரிக்கை யென்பது-அல்லாஹுத் தஆலா எப்போதும் நம்மைப் பார்த்துக்கொண்டிருக்கிறானென்று கவனிப்புடனிருந்தல்.

‖ பரிசோதனை யென்பது-மேற்கண்ட நிபந்தனைப்படி நடந்ததாயில்லையா யென்று சோதித்தல்.

\+ கண்டிப்பென்பது-மேற்கண்ட நிபந்தனை தவறியிருந்தால் அதற்காகக் கடிந்து கொள்ளுதல்.

× வேதனையென்பது-மேற்கண்ட நிபந்தனைத் தவறின தற்காக வருத்தப்படுதல்.

மீதும் இரக்கம்வைத்தல், சந்தோஷப் படவேண்டிய விஷயத்தில் சந்தோஷப்படுதல், தீனுடைய விஷயத்தில் ஸ்திரமாயிருத்தல், அல்லாஹு தஆலாவுடன் மருவுதலாயிருத்தல், அல்லாஹு தஆலா புரத்தில் பிரியம்வைத்தல், அல்லாஹுத் தஆலாவை உவந்திருத்தல், நபி நாயகமவர்கள், அவர்களின் கிளையார்கள், அஸ்ஹாபுகள், மற்ற நபிமார்கள், ஒலிமார்கள், உலமாக்கள் முதலான ஸாலிஹானவர்கள் மீது உவப்பாயிருத்தல், எந்த விஷயத்திலும் பதறாதிருத்தல், எந்த விஷயத்தையும் தெளிந்துதெரிதல், தீமைகளை விட்டுப் பரிசுத்தப்படுதல், எந்த விஷயத்திலும் ஒழுக்கமாயிருத்தல், ஸக்கறாத்துவேளையில் கலிமா முதலானதுகளைச் சொல்லிக் கொடுத்தல், கோபத்தை யடக்கல், பிறர் செய்த குற்றத்தை மன்னித்தல், நன்மையான எந்த விஷயத்திலும் சரியான நிய்யத்து வைத்தல், இபாதத்துகளில் மனவுருக்கம் வைத்தல், மார்க்கவிஷயத்தில் உறுதிப்பாடு கொள்ளுதல், அடிமைத் தனத்தை அல்லாஹுத் தஆலாவைத் தவிர மற்றவர்களுக்குச் செய்யாதிருத்தல், அல்லாஹு தஆலாவை நாடிக்கொண்டிருத்தல், அல்லாஹு தஆலாவை மறவாதிருத்தல், எந்த விஷயத்திலும் நீதமாயிருத்தல், மனுஷீகத்துவம் தவறாதிருத்தல், தயாள குணம் மாறாதிருத்தல், வஸ்துக்களி னந்தரங்களையும் அவை இப்படிப்பட்டவை, இன்னதற்கு ஆனவை யென்பதையுமறிந்து அதற்குத்தக்கபடி அமல்செய்தல், நபுஸை அதன் இஷ்டப்படி நடக்கவிடாமல் தடுத்து மார்க்கப்படி நடத்தல், இதை முஜாஹதா யென்பார்கள். இப்படியாக நபுஸைப் பழக்குதல் (இதை றியாலத்து யென்பார்கள்.) பிரதி தினமும் தௌபா செய்துகொண்டே யிருத்தல் ஆகிய இவைகளும், இவைபோன்றவைகளும் மனதில் பிறக்கும் நன்மைகளாம்.

*இக்றாறுசெய்தல், குறுஆன் முதலான ஓத வேண்டியவைகளை ஓதிக்கொண்டிருத்தல், படிக்கவேண்டிய இல்முகளைப் படித்துக்கொள்ளுதல், நன்மையான கருமங்களைச் செய்யும்படிக்கு பிறருக்குச்சொல்லுதல், உபதேசம் செய்தல், உண்மை பேசுதல், இருவருக்கிடையிலிருக்கும் பொல்லாங்கை நீக்கி சமாதானஞ் செய்தல், குறுஆனையும் மார்க்க இல்முகளையும் ஓதிக்கொடுத்தல், ஒருவருக்கொருவர் †ஸலாஞ் சொல்லுதல், ஸலாத்திற்கு பிரதி சொல்லுதல்,

* இக்றாறு-தரிப்படுத்தல்; அது மார்க்கப்படி ஒப்புக்கொள்ள வேண்டிய விஷயங்களை உறுதிபடச் சொல்லுதல்.

† ஸலாமென்பது-ஈடேற்றம். அது ஒருவர்க்கொருவர் ஈடேற்றம் பெறுவதாகயென்பது அர்த்தம்.

தும்மினவன் சொன்ன அல்ஹம்துக்கு பிரதி சொல்லுதல், பிறர் வுடைய வீடு முதலான எல்லைகளில் பிரவேசிக்க வுத்திரவு கேட்கு தல், பிதா மாதாக்கள் முதலான பேசவேண்டிய கடமைக்காரர் களுடன் பேசுதல், அநியாயஞ் செய்கிறவனுக்கு நியாயஞ்சொல்லி அநியாயஞ் செய்யப்பட்டவனை மீட்டுதல், தனக்குத் தெரிந்த தைச் சொல்லும்படி சாக்ஷிகளுக்குச் சொல்லுதல், அப்படி சாக்ஷி சொல்லுகிறவனைப் பரிசுத்தவானென்று சொல்லுதல், அல்லா ஹூத் தஆலாவின் திருநாமங்களி லொன்றைச் சொன்னவனும், கேட்டவனும், "ஸூபுஹானல்லா" யென்பது போன்ற கலிமாக் களைச் சொல்லித் துதிப்பதும், நபி முஹம்மது ஸல்லல்லாஹூ அலைஹி வஸல்லமவர்களின் திருநாமங்களி லொன்றைச் சொன்ன வனும், கேட்டவனும், ஸல்லல்லாஹூ அலைஹி வஸல்லமென்பது போன்ற ஸலவாத்துகளைச் சொல்லி வாழ்த்துவதும், தாங்கக் கூடாத தங்கடமான பசியுள்ளவன் பிறரிடம் கேட்குதல், தங்கடக் காரனைப்பற்றி உபகாரத்திற்காக பிறரிடமறிவித்தல், தெரியாத விஷயத்தைத் தெரிந்தவர்களிடம் கேட்டு தெரிந்துகொள்ளுதல், தெரிந்த விஷயத்தை மறைக்காமல் கேட்பவர்களுக்குச் சொல்லிக் கொடுத்தல், சிறுபிள்ளைகள் பேசப் பழகும்போதே கலிமாவைச் சொல்லிக்கொடுத்து வருதல், வழி தவறினவனுக்கு இன்ன மார்க்க மாகப்போயென்று சொல்லுதல், களவுபோனதும் போக்கடித்தது முதலான பொருட்களை அறிந்திருந்தால் உடையவனுக்குத் தெரி வித்தல், வஸிய்யத்துச் செய்தல் ஆகிய இவைகளும் இவைபோன்ற வைகளும் நாவில் பிறக்கும் நன்மைகளாம்.

தொழும்போது ஸூஜூதுடைய தானத்தையே பார்த்துக் கொண்டேயிருத்தல், காலியானவர் தம்மிடம் வந்த வழக்காளி களைப் பார்க்குதல், சாக்ஷிக்காரன் சாக்ஷிக்கு ஏற்படும்போது சாக்ஷிசொல்லும்போது வழக்காளிகளைப் பார்க்குதல், பங்கு பிரித் துக்கொடுக்க ஏற்பட்டவன் அந்தப் பங்கு பிரிக்கும்படியாகிய பொருள்களைப் பார்க்குதல், அமானிதம் வாங்கிவைத்துக் கொள்ளு கிறவனதைப் பார்க்குதல், தான் கிறயத்திற்கு வாங்கின பொருள் களை அதில் ஏதும் சூதுண்டாவென்று பார்க்குதல், குறுஆன் முத லான கிதாபுகளைப் பார்க்குதல், உலமாக்களைப் பார்க்குதல், கஃபதுல் லையைப்பார்க்குதல், உஸ்தாதைப்பார்க்குதல், முஸ்லிமானவர்களை நல்ல பார்வையாகப் பார்க்குதல், ஏழைகள் ஆதரவாகக் கிருபை யாய்ப் பார்க்குதல், பிதா மாதா முதலான பந்துக்களைப் பார்க்கு

தல், நபிமார்கள் முதலானவர்களுடைய கபுறுகளைப் பார்க்குதல், அல்லாஹுத் தஆலாவின் மகிமையை யெண்ணி அவனைப் புகழ்வதற்காக வானம், பூமி, மலை, கடல் முதலான படைப்புகளைப் பார்க்குதல், நமக்கு முன்னிருந்தவர்களைப்போல நாமுமாய் விடுவோமென்பதை ஒப்பிட்டு அறிவதற்காக அவர்கள் ஆண்டனுபவித்த கட்டிடங்கள் முதலானவைகளைப் பார்க்குதலாகிய இவைகளும் இவைபோன்றவைகளும் கண்ணில் பிறக்கும் நன்மைகளாம்.

குறுஆன் ஓதுவதைக் கேட்குதல், குத்பாக்களைக் கேட்குதல், உபதேசஞ்சொல்வதைக் கேட்குதல், உஸ்தாது, பிதா, மாதா, காலி, அமீர் முதலானவர்களுடைய சொற்களை கேட்குதல், ஏவல் விலக்கல்களைச்செய்யும் அதிகாரியின் சொல்லைக் கேட்குதல், கூலி கொடுக்கும் எஜமானுடைய சொல்லைக் கேட்குதல், குற்றஞ்செய்து விட்டு மன்னிப்புக்கேட்டு சாட்டுச் சொல்லுகிறவனுடைய சொல்லைக் கேட்குதல், புருஷனுடைய சொல்லைக் கேட்குதல், எஜமானுடைய சொல்லைக் கேட்குதல், பத்வா கேட்கிறவனுடைய சொல்லைக் கேட்குதல், காலி, அமீர் முதலான நியாயாதிபதிகள் தம்மிடம் வந்து முறையிடுகின்றவனுடைய முறைப்பாட்டைக் கேட்குதல், ஏழைகளுடைய சொல்லையும், பிச்சைகாரனுடைய சொல்லையுங் கேட்குதல், நபிமார்களுடைய முஃஜிஸாத்து, ஒலிமார்களுடைய கறுமாத்துகளடங்கிய சரித்திரங்களைக் கேட்குதல், அல்லாஹுத் தஆலாவினுடைய நபிமார்கள் முதலானவர்களுடையதுமான புகழ்களைக் கேட்குதல், துஆ செய்பவர்களுடைய துஆவைக் கேட்குதல், இமாம் ஓதுகிற *கிறுஅத்தைக் கேட்குதல், தொழுகை முதலான எந்தவேளையிலுந்தான் ஓதுகிறதைத்தானே கேட்குதல், யாராவது நன்மையான விஷயங்களைச் சொல்லிக் கொண்டிருந்தால்கேட்குதல், பாங்கு †இகாமத்துகளைக் கேட்குதலாகியவைகளும், இவைபோன்றவைகளும் காதில் பிறக்கும் நன்மைகளாம்.

ஸக்காத்து முதலான ஸக்காத்துகள் கொடுத்தல், கப்பாறு கொடுத்தல், வட்டி அநியாயமா யபகரித்துச் சம்பாதித்ததுமான பொருள் முதலான சொத்துகளை ஏழைகளுக்குக் கொடுத்தல், சோறு முதலான உணவுகளைப் புசிப்பவர்களுக்குக் கொடுத்தல்,

---

* கிறுஅத்து-குறுஆன் ஓதுதல்.

† இகாமத்து-சமரிலே நிறுத்தல். அது தொழுவதற்காக யெழுந்து நிற்கும்படியாகச் சொல்லும் வாக்கியங்கள்.

அறுத்த நகத்தையும் சிரைத்தரோமத்தையும் புதைக்குதல்,
மலசலோபாதைக்குப் பின் துப்புரவு செய்தல், சரீரம், உடை,
இருப்பிடமாகிய இவைகளைப் பரிசுத்தஞ் செய்தல், குறுஆனையும்;
மார்க்க விஷயமான இல்முகளடங்கிய கிதாபு முதலானவைகளையும்
வலது கையாற்தொட்டு பரிமாறுதல், தலைமுடியை வலதுகையாற்
களைத்தல், மீசை வெட்டுதல், கமுக்கட்டு ரோமங்களைத்தல், *மிஸ்
வாக்கிடுதல், †ஸுருமாயிடுதல், நகமறுத்தல், உளுசெய்யும்
போதும் முழுகும்போதும் கழுவவேண்டிய வுறுப்புகளை கழுவல்,
ஸதக்கா கொடுத்தலாகிய இவைகளை வலதுகையாற் செய்தல், அம்பு
வித்தையை மறவாமல் பழகிக்கொண்டிருத்தல், கீதவாத்யங்களை
யுடைக்குதல், எழுதின சித்திரரூபங்களை யழித்தல், முஸ்லிமான
வனிடம் கள்ளிருந்தால் அதை நிலத்திலூற்றிவிடுதல், அநாதப்
பிள்ளையையும், பொருள்களையும் கிடக்கக்கண்டா லெடுத்துக்
காப்பாற்றுதல், அபாயஞ்செய்கிற துஷ்ட மிருகங்களை விலக்குதல்,
அப்படிப்பட்ட மனிதனை விலக்குதல், நெருப்பில் விழுகிற தண்ணீ
ரில் விழுகிற, மேலிருந்து கீழே விழுகிற ஜீவராசிகளையுங் காப்
பாற்றுதல், மாலை நேரமானபோது வெளியிலிருக்கிற பிள்ளை
களையும், மாடாடு முதலியவைகளையும் வீட்டிற்குள் கொணர்ந்து
சேர்த்தல், இராக்காலத்திற் கதவு சாற்றுதல், இராக்கால்த்தில்
படுக்கைக்குப் போகும்போது விளக்கை நூற்குதல், பண்டங்கள்
வைத்திருக்கும் பாத்திரங்கள் மூடுதல், குறுஆனையும் மார்க்
கத்துக்கு வேண்டிய இல்முகளடங்கின கிதாபுகளையும் எழுதுதல்,
தனக்கு அவசியமானதும் ஹலாலானதுமான கைத்தொழிர் செய்
தல், ‡முஸாபஹா செய்தல், தேடுகிற பொருளையாவது, இடத்தை
யாது நன்மையா யிருந்தால் காட்டுதல், தன்கையால் உண்ணக்
குடிக்க ஏலாதவர்களுக்கு உண்பித்தல், குடிப்பித்தல், காபிர்களை
பீஸபீல் வெட்டுதல், துஷ்டமிருகங்களையும், விஷஜெந்துக்களையு
மடித்துக்கொல்லுதல், தெருக்களிற் காண்கிற கால்களை மூடுதல்
பாதையிற் கிடக்கிற முட்களை யெடுத்தெறிதல், நடுப்பாதையி
லிருக்கிற மேடு பள்ளங்களை நிரப்புதல், நிலத்திற கிடக்கின்ற குறு
ஆன் ஆயத்து முதலான மார்க்க விஷயங்களெழுதின தாள்களை
யெடுத்துப் பேணி வைத்தல், தொழுகிற பள்ளிகளிற் கிடக்கிற

* மிஸ்வாக்கு-பற்கொம்பு.

† ஸுருமா-நீலாஞ்சனத்துள்.

‡ முஸாபஹா-முஸ்லீமானவர்கள் ஒருவருக்கொருவர் கைகொடுத்து
கொள்ளுதல்.

குப்பைகளை யெடுத்தெறிதல், எண்ணிக்கையாக ஓதவேண்டியவை களை *தஸ்பீஹைக்கொண்டாவது, விரல்களைக் கொண்டாவது எண்ணி ஓதுதல், கொட்டாவியைத் தடுத்தல், மையத்தைக் குளிப் பாட்டுதல், †கபன் கிழித்தல், கபனிடுதல், கபுறு வெட்டுதல், மையத்தை யடக்குதல் ஆகிய இவைகளும், மிவைபோன்றவை களும் கைகளிற் பிறக்கும் நன்மைகளாம்.

தொழுவதற்காக பள்ளிக்கு நடந்துபோகுதல், மார்க்க விஷய மான இல்முகளைப் படிப்பதற்காக நடந்துபோகுதல், மார்க்க விஷயமான இல்முகளைப் படித்துக்கொடுக்கவும், பிரசங்கிக்கவும் நடந்துபோகுதல், நன்மையான கருமத்தை ஏவவும் தீமையான கருமத்தை விலக்கவும் நடந்து போகுதல், அநியாயஞ் செய் யப்பட்ட ஏலாதவனுக்காக நியாயாதிபதியிடம் முறையிடப் போகுதல், ஒரு மனிதனுவது, மற்றப்பொருட்களாவது அபாய மான ஸ்திதியிலிருந்தா லதைவிட்டு மீட்டுவதற்காக நடந்து போகுதல், பந்து ஜனங்களைக் காண்பதற்காக அப்போதக்கப் போது நடந்து போகுதல், பிதாமாதாக்களைக் காண்பதற்காக அடிக் கடி நடந்து போகுதல், உலமாக்கள் முதலான ஸாலிஹானவர் களையும், உஸ்தாதுகளையும், சினேகிதர்களையுங் காண்பதற்காக நடந்து போகுதல், மார்க்கத்திற்காகுமான சந்தோஷம் வினவ நடந்து போகுதல், வியாதியஸ்தர்களைப் பார்ப்பதற்காக நடந்து போகுதல், துக்கம் வினவ நடந்து போகுதல், ஜனுஸாவைக் குளிப் பாட்டவும், கபனிடவும், தொழுவிக்கவும், அடக்கவும் வேண்டி நடந்து போகுதல், கபுறுகளை ‡ஸியாறத்துச் செய்ய நடந்து போகுதல், விருந்துண்ண நடந்து போகுதல் உடன்பட்ட கூலி வேலையைச் செய்வதற்காக நடந்து போகுதல், எஜமானுடைய வேலைக்கு நடந்து போகுதல், மனைவியானவள் புருஷனுடைய பணி விடைகளைச்செய்ய நடப்பது, நல்ல கருமங்களைப்பற்றி வலது காலை முன் வைத்து நடப்பது, பள்ளி முதலான இடங்களில் புகுதும் போது வலது காலையும், புறப்படும்போது இடது காலையும் முன் வைத்து நடப்பது, மலசலோபாதைக்குப் போகுமிடத்திற்குப் புகும்போது இடது காலையும், புறப்படும்போது வலது காலையும் முன் வைத்து நடப்பது, செருப்பு, மோஜா முதலானவைகளையு மணியும்போது வலது காலையும், கழற்றும்போது இடது காலையும்

* தஸ்பீஹு-ஜெபமாலை. அது ஓதுகின்ற மணிமாலை,
† கபன்-பிரேதவஸ்திரம்.
‡ ஸியாறத்து-காணுதல்,

முற்படுத்துவது ஆகிய இவைகளும் இவைபோன்றவைகளும் கால்களிற் பிறக்கும் நன்மைகளாம்.

ஹலாலான உணவுகளை உண்பது, தின்பது, குடிப்பது *சுபுறுவின் மீது வைத்துப் புசிப்பது, உணவுகளையும், தின் பண்டங்களையும் சூடாறினபின் புசிப்பது, பசி அல்லது தாகம் கடிசானபோது உண்பது அல்லது குடிப்பது, பிதாமாதாக்கள் முதலானவர்களுடைய கட்டளைக்குப் புசிப்பது, பலர் ஒன்று கூடி உண்பது, நபுஸைப் பழக்குவதற்காக பசித்திருப்பது, தீனைக்குறைப்பது, நோன்பிருப்பது, நோன்பு திறப்பது †ஸஹர் செய்வது விருந்துண்பதாகிய இவைகளும் இவைபோன்றவைகளும் வயற்றிற் பிறக்கும் நன்மைகளாம்.

வேண்டுமானபோது ஜிமாஉ செய்வது, பல மனைவிகளுடன் சமமாகப் புணர்வது, ‡இஸ்திஞ்சா செய்தல், ‖கத்தனு செய்த லாகிய இவைகளும் இவைபோன்றவைகளும் உபஸ்தத்தில் பிறக் கும் நன்மைகளாம்.

நிலையிலும், இருப்பிலும், படுக்கையிலும், அல்லாஹுத் தஆலாவை திக்றுசெய்தல், +ஔறத்தை மறைத்தல், ஒட் டுப் போட்டுத் தைத்த பழம் புடவைகளை உடுத்தல், பிதா மாதாக்களுக்கு நன்றிசெய்தல், பந்துக்களை நேசித்தல், மனைவி யானவள் புருஷனுடைய பாத்தியங்களைப்பேணி நிறைவேற்றல், புருஷன் மனைவியுடைய பாத்தியங்களைப்பேணி நிறைவேற்றல், பிள்ளைகளுடைய பாத்தியங்களைப்பேணி நிறைவேற்றல், பிள்ளை கள், பிதா, மாதாக்களுடைய பாத்தியங்களைப்பேணி நிறைவேற் றல், அடிமை எஜமானுடைய பாத்தியங்களைப்பேணி நிறை வேற்றல், எஜமான் அடிமையுடைய பாத்தியங்களைப்பேணி நிறைவேற்றல், அசலார்களுக்கு நன்றி செய்தல், நல்லோர் களுடன் கூடியிருத்தல், திக்று செய்கிற கூட்டத்தில் சேர்ந் திருப்பது, இல்முடைய சபையில் சேர்ந்திருப்பது, ×ஒலீமா

* சுபுறு-போஜன விரிப்பு.
† ஸஹர்-நோன்பிற்காகப் பின்னிரவிலுண்பது.
‡ இஸ்திஞ்சா-மலசலோபாதைக்கு யிருந்த பின் துப்புரவுசெய்தல்.
‖ கத்தனு-ஆண்குறியின் நுனித்தோலை யறுத்தல், இதுவே விருத்த சேதனம்.
+ ஔறத்து-உபஸ்தம்.
× ஒலீமா-விவாக விருந்து. அது விவாக முடிந்தபின் கொடுக்கப் படுவது.

கொடுப்பது, தொழுவது, தவறின தொழுகையை கலாசெய்வது, ஜமாஅத்துடன் தொழுவது, ஜனஸாவைத் தொழுவிப்பது, உலு செய்வது, உலுவுடனிருப்பது, பறுலான சுன்னத்தான முழுக்குகளை முழுகுவது, எவ்வித சுன்னத்தான கருமத்தையுஞ் செய்வது *இஃத்திக்காபாக யிருப்பது, நேர்த்திக்கடனை நிறைவேற்றல், †பித்துரு கொடுத்தல், ‡உலுஹிய்யா கொடுத்தல், ஹஜ்ஜு செய்தல், மார்க்கயுத்தஞ் செய்தல், கொடுக்கவேண்டிய கடனையிருத்தல், குபிர், றித்தத்து, பிதுஅத்து ஆகிய இவைகள் மனதிடனுக வொட்டாமல் எச்சரிக்கையா யிருத்தல், மார்க்கத்திற்குப் பணத்தினுலும் ஜடத்தினுலும் இயன்றமட்டும் உதவிசெய்தல், பழிக்குப்பழி கொடுத்தல், சத்தியத்தை நிறைவேற்றல், நியாயமாகத் தீர்ப்புசெய்தல், அனியாயமாகச் சம்பாதித்த பொருள்களைத் தானனுபவிக்காமல் விடுவது, முஸ்லிம்களுக்கு அதிகாரியாயிருக்க உடன்படுவது, கதீபு, இமாம், முஅத்தின் இவர்களாயிருக்க உடன்படுதல், பள்ளி, ‖மதுரஸா முதலிய தருமஸ்தலங்களைப் பரிபாலித்தல், அவைகளுக்கு வரும்படி பண்ணி வைத்தல், மார்க்கத்திற்கு விரோதமாகவும், முஸ்லிமானவர்களுக்கு விக்கினமாகவும், நேரிடுங் கெடுதிகளைத் தடுத்தல், சத்திரம், குளம், கிணறு முதலிவைகளைக்கட்டுதல், மார்க்கத்திற்கும் ஜனங்களுக்கும் உபயோகமான பொதுநன்மைகளைச் செய்தல், அதற்குதவி செய்தல், அதை நடத்தி வருதல், நல்ல ஏற்பாடுகளைச் செய்தல், புதிதாக இஸ்லாமானவர்களை யாதரித்தல், தாடிவைத்தல், அதை வெட்டாதிருத்தல், காபிர்களுடைய சொல்லுக்கும் செயலுக்கும் விரோதஞ் செய்தல், விவாகஞ் செய்தல், + அகீகா கொடுப்பது, பெருநாள் முதலான சுப நாட்களில் ஒருவரை யொருவர் வினவுதல், விருந்தாளிகளை யுபசரித்தல், உண்டு மிஞ்சினசோறு, உடுத்தி மிஞ்சின புடவைகளை ஏழைகளுக்குக் கொடுத்தல், கேட்கிற ஏழைகளுக்கு இல்லை யென்னுமல் கொடுத்தலாகிய வைகளும், இவைபோன்றவைகளும் உடலிற்பிறக்கும் நன்மைகளாம்.

---

* இஃதிக்காபு-றமலான் மாதத்தில் நோன்புடன் பள்ளியிற் றரித்திருத்தல்.

† பித்துரு-ஸக்காத்துக் கொடுக்கக் கடமைப்பட்டவர்கள், நோன்புப் பெருநாளில் கோதம்பு முதலான தானியங்களை தருமங் கொடுத்தல்.

‡ உலுஹிய்யா-ஸக்காத்துக் கொடுக்கக் கடமைப் பட்டவர்கள், ஹஜ்ஜுப் பெருநாளில் மாடு, ஆடு, ஒட்டகங்களை யறுத்துத் தருமங் கொடுத்தல்.

‖ மதுரஸா-கல்விச்சாலை.

+ அகீகா-பிள்ளை பிறந்தால் ஆடறுத்துக் கொடுத்தல்.

இந்த பஸலில் ஆதி தொடங்கி இதுவரையிலுஞ் சொன்ன இந்த நன்மையான கருமங்களைத்தான் ஹஸனுத்தென்றும், இபா தத்தென்றுஞ் சொல்லப்படும். ஆகையால் இவைகளை நன்று யறிந்து தக்கபடி அமல் செய்துகொண்டிருப்பதே முஸ்லிமான நம்மனைவர்கள் மீதிலுங் கடமையாம். இதைத் தப்பவிடாமற் செய்து நிறைவேற்றிக் கொள்ள தக்கயிடமும், காலமும் நமக் குண்டாயிருக்கின்றன. அந்தயிடம் பூமியும், காலம் வயதுமாம். எவனொருவனிந்த பூமியிலே யிருக்குங் காலத்தில்தானே மேற் சொன்ன இபாதத்தாகிய வணக்கங்களைச் செய்து முடிப்பானோ அவன் ஜயம் பெறுவான். அப்படிச் செய்து முடிக்காமல் வீணான வேலைகளிலும் மேலெண்ணத்திலும் பராக்காய் தன் காலமாகிய வயதை விருதாவிற் போக்கடித்து மௌத்தாகிறவன் இம்மையாகிய இந்த துன்யாவில் பேறுகெட்டுப் போவதுமல்லாமல் இனி மறுமை யாகிய ஆகிறத்திலும் யாதொரு பலனுமின்றி கைசேதப்பட்டுத் தவிப்பான்.

ஆகையால் முஸ்லிமான சகோதரர்களே! இனி நமக்கு இந்த் உலகத்திலல்லாமல் வேறு எந்த இடத்திலும், எந்தக் காலத்திலும், இவ்விதமாக யிடமும், காலமும் வாய்க்காது. அன்றியும் மேற்சொன்ன இபாதத்துகளிற் சிறிய ஒரு இபாதத் தையாவது செய்ய உத்தரவுக்கிடைக்காது. ஆனபடியால் உங்களு டைய ஆயுளிலுள்ள ஒவ்வொரு தினத்து ஒவ்வொரு நாழிகையில் வெளிபபடுகிற ஒவ்வொரு க்ஷணத்தையும் வீண்போக்காமல் மேற்சொன்ன நல்ல கருமங்களிற் போக்கி ஈடேற்றம் பெற்றுக் கொள்வீர்களாக. அப்படியே அல்லாஹுத் தஆலா நம்மனைவர் களுக்கும நல்லுதவி செய்வானாக ஆமீன்.

ஹஸனுத்து முடிந்தது.

---

## 11-ம் பஸல்.

## ஸைஆத்து.

ஸைஆத்து யென்பது தீமைகள். இந்தத் தீமைதான் தன்பு யென்றும, மஹுஸிய்யத்தென்றுஞ் சொல்லப்படும். அதாவது:- அல்லாஹுத தஆலா ஏவின கருமங்களைத் தவிர்வதும், விலகின கருமங்களைச் செய்வதுமாம். அதில் குபுறு, பிதுஅத்து, ஹறாம், மக்றூஹு யென்று நான்கு வகையுண்டு. இந்த நான்கு வகையான

தீமைகளடங்கலும் சொல்லாலும் செயலாலும் குணத்தாலும், கொள்கையாலும் வந்து நேரிடும். இவ்விதம் நேரிடுந் தீமைகள், மனம், நாவு, கண், காது, கை, கால், வயிறு, உபஸ்தம், உடலாகிய இவைகளில் விளையும். இவற்றின் விபரமாவன :—

குபுறு, மூடம், பிதுஅத்து, ஹுறாறு, செய்கை, கொள்கை முதலானவைகளில் தன்னிச்சைப்படி நடக்குதல், குறுஆனை ஓதி மறக்குதல், மேன்மையை உவக்குதல், புகழை விரும்புதல், மெய்ப்புக்காக அமல்ச்செய்தல், நீண்டகாலத்திற்கு ஆயுளுடனிருக்க விரும்புதல், பெருமை பாராட்டல், அகம் பாராட்டல், பொறாமை, மர்மம், மூமினானவர்களைப் பகைத்தல், வெறுத்தல், கோழைத்தனம், நிர்பயம், மோசக்கருத்து, நம்பிக்கை துரோகம், வார்த்தைப்பாடு மாறுதல், முஸ்லிம்கள் பேரில் கெட்டசிந்தனைக் கொள்ளுதல், குறிபார்க்குதல், உலோபம், வீண்சிலவு, அதிகசிலவு துன்யாவை உவந்திருத்தல், பேராசை, பித்தலாட்டம், அவசரப்படுதல், வீண்தாபதம், மோடி, வெட்கமில்லாமை, பதறுதல், நன்றி யறியாமை, மனச்சடைவு, அல்லாஹுத் தஆலா அல்லாத வஸ்துவைக்கொண்டு நம்பிக்கை வைத்தல், கெட்டவர்களை உவந்திருத்தல், உலமாக்களைக் கோபித்தல், துணிகரம், அல்லாஹுத் தஆலாவின் ஹுறுமத்தில் ஆதரவற்றிருத்தல், துன்யா தப்பிப்போவதைப்பற்றி விசனப்படுதல், அதற்காகப் பயப்படுதல், சூது பொல்லாங்கு விளைத்தல், தாக்ஷிண்யம், துன்யாவுக்காக மனிதரை மருவியிருத்தல், படபடப்பு, பிடிவாதம், முரண்டு, தன்னை யுயர்த்தல், மாறுபாடு, வஞ்சகம், கபடம், மந்தபுத்தி, மதியீனம், பாவச்செய்கையில் தரிப்பட்டிருத்தல், அடர்த்து பிறரெழுந்து நின்று மரியாதை செய்யவேண்டுமென்று ஆசித்தல், பிறரைத் தூஷித்தல், புறக்கணித்தல், வீண் காரியத்திற்கு பிரவேசித்தல், பிறர்பொருள் விரும்பல், வறுமைக்கஞ்சுதல், அல்லாஹுத் தஆலா கொடுத்ததைப் பற்றி மனச்சடைவுபடுதல், பாக்கியவானுக்குச் சங்கைசெய்தல், ஏழையைப் பரிகாசம் பண்ணுதல், துன்யாவைப்பற்றி பெருமை பாராட்டல், ஆகாததைக்கொண்டு அலங்கரித்தல், பிறருடைய பழுதை கவனித்தல், அல்லாஹுத் தஆலா கொடுத்த நிஃமத்தை மறந்து விடுதல், மார்க்கமல்லாத விஷயத்தில் ரோஷம் பாராட்டல், அல்லாஹுத் தஆலாவுடைய கலாவை பொருந்தாமலிருத்தல், அல்லாவுடைய காரியங்களை அசட்டை பண்ணுதல், நியாயமான விஷயத்தைத் தன் மனதிற்குப் பிடிக்காதிருந்தால் ஒப்புக்கொள்

ளாமல் விடுதல், பாவத்தைக்கொண்டு சந்தோஷப்படுதல், தான் நன்மை செய்வதற்காகப் புகழ்பட விரும்புதல், தான் ஹயாத்துட னிருப்பதைப்பற்றிச் சந்தோஷப்படுதல், அல்லாஹூத் தஆலாவை யும் ஆகிறுவையும் மறந்து விடுதல், தன்பொருட்டு கோபப்படுதல், துற்குணத்தை அல்லாஹூத் தஆலா பொறுத்துக் கொள்வா னென்று பாவச்செய்கையில் அச்சமற்றிருத்தல், துன்யாவுக்காக இல்முபடித்தல், படித்த இல்மைப் பிறருக்கு ஒளித்தல், இல்முப் படி அமல் செய்யாமலிருத்தல், இல்மைக்கொண்டும் உலமாக்கள் முதலானவர்களுடைய பாத்தியத்தை நிறைவேற்றுதிருத்தல், அவர்களை அலக்ஷியம் பண்ணுதல், அல்லாஹூத் தஆலாவுடைய விஷயத்திலும், நபி நாயகமவர்களுடைய விஷயத்திலும் வேண்டு மென்று பொய்யைக்காட்டி கெட்டிவிடுதல், கெட்ட ஏற்பாடுகளை யேற்படுத்தல், ஸுன்னத்தான விஷயத்தை விட்டு விடுதல், பித் அத்தான விஷயத்தை யெடுத்து நடத்தல், (கலாகதறை) மறுதலித் தல், அனியாயக்காரர்களை உவக்குதல், சத்தியத்தை முறித்தல், நேர்த்திக்கடனை நிறைவேற்றுமல் விடுதல், நல்லோர்களைப் பகைத் தல், அவர்களை வெறுத்தல், அவர்களைத் துன்பித்தல், காலத்தை யேசுதல், பொல்லாங்கான வார்த்தையைக் கற்பித்தல், இரக்கமற் றிருத்தல், பாவத்தைப் பொருந்தி யிருத்தல் மனிதர்களை அச்சுறுத் தல் ஆகிய இவைகளும், இவைபோன்றவைகளும் மனதில் விளையுந் தீமைகளாம்.

குபுறு ரித்தத்துகளுண்டாகிற வார்த்தைகளைப் பேசுதல், தப்பான வார்த்தைகளைப் பேசுதல், பொய்பேசுதல், புறம்பேசுதல் கோட்சொல்லுதல், பரிகாசம் பேசுதல், லஃனத்துச்செய்தல், திட்டுதல், அதப்பியம் பேசுதல், பிறரைப் பழிக்குதல், பழுது பேசுதல், ஒப்பாரி சொல்லுதல், குதற்கம்பேசுதல், துற்வழக்குப் பேசுதல், கீதம்பாடுதல், ரகசியத்தைப் பகிரங்கப்படுத்தல், வீணான விஷயங்களையே பாராட்டிப் பேசுதல், கேட்கக்கூடாதவனை யாசகம் கேட்குதல், ஒருவனை மானபங்கப்படுத்தல், தெரியாத வரிடத்தில் தெரியாத கேள்விகளைக் கேட்குதல், பிழையான வார்த் தைகளைப்பேசுதல், மனதி லொன்றும், வாக்கிலொன்று மாய்ப் பேசுதல், இங்கொன்று, அங்கொன்றுய்ப்பேசுதல், கெட்டசிபார்சு பண்ணுதல், கெட்ட கருமத்தைச் செய்யவும், நல்ல கருமத்தை விடவும் சொல்லுதல், கடினமாகப்பேசுதல், சபையில் தெரியாத மூடன் பேசத் தொடங்குதல், பாங்கு, இகாமத்து சொல்லும்

போதும், பேசாது தொழும்போதும் பேசுதல், குத்பா ஓதும் போது கிழக்கு வெளுத்தபின் துன்யாவின் பேச்சில் பராக்காய்ப் பேசிக் கொண்டிருத்தல், சலமலோபாதைகளுக் கிருக்கும்போது பேசுதல், ஜிமாஉ செய்யும்போது பேசுதல், முஸ்லிமானவன் மீது பதுஆச்செய்தல், காபிருக்கும் அநியாயக்காரனுக்கும் துஆச்செய்தல், குறுஆன் ஓதும்போது பேசுதல், தங்கடமில்லாமல் பள்ளியில் பேசிக்கொண்டிருத்தல், முஸ்லிமுக்குக் கெட்ட பேரிட்டழைத்தல், பொய் சத்தியம் பண்ணுதல், அல்லாஹுத் தஆலாவை அல்லாத யாரைக்கொண்டாவது எதைக் கொண்டாவது பிரமாணிக்கம் பண்ணுதல், அதிகாரம் வேண்டுமென்று கேட்குதல், தர்மசொத்தின் அதிகாரத்தை விரும்பிக் கேட்குதல், ஒலிய்யத்தையும், அதிகாரத்தையுங் கேட்குதல், தனக்குத்தானே (பதுஆ) செய்தல், மன்னிப்புக் கேட்பதை மறுதலித்தல், (குறுஆனுடைய) வாக்கியங்களுக்குத் தன்னிச்சைப்படித் தாத்பரியம் வைத்தல், ஒருவரோடொருவர் பேசிக்கொண்டிருக்கும்போது இடையிற்போய்க் கலக்குதல், தன் எஜமான் முதலானவர்களுடன் எதிர்த்துப்பேசுதல், மூன்று பேரிருக்கையில் ஒருவனை விட்டு மற்ற இருவரும் ரகசியம் பேசுதல், அந்நியபெண்களுடன் பேசுதல், *திம்மிக்கும் பகிரங்கமான பாவிக்குஞ் ஸலாம் சொல்லுதல், கெடுதி செய்பவனுக்கு வழி சொல்லிக் கொடுத்தல், குறுஆன் விஷயத்திலும் குதர்க்கம் பண்ணுதல், அவதூறு பேசுதல், இன்ன நட்சத்திரத்தின் காலத்தில் தான் மழை பெய்யுமென்கிறது, யாசகங்கேட்டு அலட்டுதல், ஸதகா கொடுத்து விட்டு சொல்லிக் காட்டுதல், அல்லாஹுக்காக கொடுயென்று கேட்குதல், அப்படிக் கேட்பதற்கு இல்லை என்று சொல்லுதல், ராஜாதி ராஜனென்று பேர் சொல்லுதல், அதிக விலை சொல்லுதல், ஒருவன் கேட்ட விலைக்கு அதிகமாகக் கேட்குதல், பொய்யானக் கடனை ஒப்புக் கொள்ளுதல், மெய்யானக் கடனை மறுதலிக்குதல், தனதல்லாத மனைவிமார்களை தனதென்று ஒப்புக்கொள்ளுதல், தனதான மனைவிமக்களை தன தல்லவென்று மறுதலிக்குதல், கண்டெடுத்தவைகளை உடையவர்களுக்குத் தெரிவிக்காமலும் சாட்சி வைக்காமலும் மறுதலிக்குதல், அக்கிரமமாக ஒலிய்யத்துசெய்தல், ஒருவன் பேசித் தீர்த்த பெண்ணை மற்றொருவன் பேசுதல், புருஷன் மனைவிகளுக்கு இடையில் பொல்லாங்கு பண்ணுதல், புருஷன்

* திம்மி-முஸ்லிமானவர்களுக்குக் கீழ்ப்படிந்திருக்கும் காபிர்.

மனைவிகளுக்கு இடையில் நடக்கும் அந்தரங்கங்களை வெளியிற் பேசுதல், மனைவி புருஷனிடத்தில் தலாக்கு கேட்குதல், மனைவியைப்பார்த்து நீ என் தாய் முதலானவர்களைக் குறித்து நானிவர்களுடைய பிள்ளையல்லவென்பது, தாய் தகப்பனல்லாதவர்களைக் குறித்து இவர்களுடைய பிள்ளை நான் என்பது, ஒருவனை அவன் தகப்பனைக் குறித்து அவனுடைய மகனல்ல வென்கிறது, ஒரு கூட்டத்திற் சேர்ந்தவனைச் சேராதவனென்கிறதும், ஒரு கூட்டத்திற் சேராதவனைச் சேர்ந்தவனென்கிறது, தீர்ந்துபோன *இத்தாவைத் தீரவில்லையென்கிறது, தீராத இத்தாவைத் தீர்ந்ததென்கிறது, †ஸிஹறு படிக்குதல், படித்துக் கொடுத்தல், செய்யச் சொல்லுதல், குறி சொல்லுதல், களவு பிடித்தல், பக்ஷிசாஸ்திரஞ் சொல்லுதல், சோதிடம் சொல்லுதலாகியவைகளும் இவைபோன்றவைகளும் நாவில் விளையுந் தீமைகளாம்.

பிறருடைய வெட்கத்தானங்களைப் பார்க்குதல், அந்நிய பெண்களைப் பார்க்குதல், ஏழைகளைக் கண் குறைவாய்ப் பார்க்குதல், எரிந்துவிழும் நட்சத்திரத்தைப் பார்க்குதல், துன்யாவினுடைய விஷயத்தில் மேன்மையுள்ளவர்களைப் பார்க்குதல், அண்டை அசல் வீட்டார்களைச் சுவர் முதலானவைகளிலுள்ள இல்லை இடுக்குகளால் பார்க்குதல், பார்க்க வேண்டியவைகளைப் பார்க்காதிருத்தல், பாவச் செய்கை முதலான தீங்கான செய்கைகளைப் பார்க்குதல், கூத்துப் பார்க்குதல், வேடிக்கைப் பார்க்குதல், ஒருவனை யொருவன் அநியாயஞ் செய்வதைப் பார்த்துக் கொண்டிருத்தல், ஈமானையவனுடைய செல்வத்தைப் பாராட்டிப் பார்க்குதல், தொழும்போது வலமிடம் திரும்பி பார்க்குதல், தாடி மீசை முளைக்காத பையனைப் பார்க்குதலாகியவைகளும் இவைபோன்றவைகளும் கண்களில் விளையுந் தீமைகளாம்.

ஒப்பாரியைக்கேட்பது, கீதராகங்களைக் கேட்பது, மேளவாத்தியங்களைக் கேட்பது, குறுஆனை தப்பாக ஓதுவதைக் கேட்பது, வாலிபப்பெண்ணுடைய பேச்சுக்குரலைக் கேட்பது, ‡ஒட்டுக்கேட்பது, குறுஆன் ஓதுதல் முதலான கேட்கவேண்டியவைகளைக் கேட்காமலிருப்பது, உபதேசங்களைக் கேட்காமலிருப்பது, உஸ்தாது

* இத்தா-புருஷன் இழந்தவள் குறித்தகாலம் வரையும் மற்றவனுக்கு வாழ்க்கைப்படாமல் காத்திருத்தலாம்.

† ஸிஹறு-சூனியம்.

‡ ஒட்டுக்கேட்பது-ஒத்துக்கேட்பது.

பிதா மாதா முதலானவர்கள் சொல்லும் நல்லவார்த்தைகளைக் கேட்காமலிருப்பது, வழக்காளிகளுடைய முறைப்பாட்டை நியாயாதிபதி கேட்காமலிருப்பது, பத்வா கேட்பதற்குக் காது கொடாமலிருப்பது, அநியாயத்திலகப்பட்டவனுடைய முறைப்பாட்டைக் கேட்காமலிருப்பது, ஏலாத ஏழைகளுடைய முறைப்பாட்டைக் கேட்காமலிருப்பது, *முஸீபத்தினால் கெட்டேனா ஐயையோ என்பனபோன்ற ஆகாத சொற்களைச் சொல்லக்கேட்பது, கோட்கேட்குதல், புறங் கேட்குதல், அவதூறு கேட்குதல், பரிகாசங் கேட்குதல், நிந்தனை கேட்குதல், பொய் கேட்குதல், வீண்பேச்சு கேட்குதல், பள்ளியிலிருந்து பேசும் துன்யாவின் பேச்சைக் கேட்குதல், அநியாயமான முறை பாட்டைக் கேட்குதல், வசை பேசுவதைக் கேட்குதல், சிற்றின்பப்பாட்டுகளைக் கேட்குதல், அதப்பிய வார்த்தைகளைக் கேட்கலாகியவைகளும் இவைபோன்றவைகளும் காதுகளில் விளையுந் தீமைகளாம்,

அநியாயமாகக் கொல்லுதல், காயப்படுத்துதல், அடிக்கல் சிற்றெறும்பைக் கொல்லுதல், பிராணிகளை நெருப்பினாற் சுடுதல் முகத்திலடித்தல், மனிதர்களினுறுப்புகளைச் சேதப்படுத்துதல், மூக்குக் குத்துதல், பச்சைக் குத்துதல், ஆண்பிள்ளைகளை விதையடிக்குதல், ஆண் குறியை யறுத்தல், பிறருடைய பொருளை அநியாயமாக எடுத்துக் கொள்ளுதல், அதைக்கொண்டு பிரயோஜனமடைதல், திருடுதல், அடைக்கலம் வாங்கினதை யெடுத்துக்கொள்ளுதல், தருமசொத்தை யெடுத்துக்கொள்ளுதல், †எத்தீம்களின் பொருளை யெடுத்துக்கொள்ளுதல், ஸக்காத்து வாங்கக்கூடாதவன் வாங்குதல், நேர்த்திக்கடனை வாங்கக் கூடாதவன் வாங்குதல், கப்பாரத்தை வாங்கக் கூடாதவன் வாங்குதல், கண்டெடுத்த பொருளைக் கொடாத விதமாக உபயோகப் படுத்துதல், ‡தாறுல் ஹறுபுக்குள் உத்திரவு பெற்றுப் போயிருந்தால் அங்குள்ள பொருட்களை அபகரித்தல், ‖பைத்துல்மால் பணங்களைப் பாத்தியமல்லாதவன் உபயோகப்படுத்தல், பெரியோர்களைப்போல் வேஷம் போட்டுக் கொண்டு வெகுமான முதலானவைகளை வாங்குதல், மார்க்கத்திற்காகத் தரும சொத்துகளை வாங்குதல், பைத்துல்மால் பணத்தில் தேவைக்கு அதிகமாகக் கேட்டு வாங்குதல், ஒரு எஜ

---

* முஸீபத்து-துக்கம்.
† எத்தீம்-தகப்பனற்ற பிள்ளை.
‡ தாறுல் ஹறுபு-திறைகொடுத்த காபிருடைய ஊர்.
‖ பைத்துல்மால்-திரவிய சாலை.

மானுடைய அடிமை வசமுள்ள பொருளை அந்த எஜமானுடைய உத்தரவன்றி வாங்குதல், சித்தபேதமுள்ளவன் வசமிருக்கும் பொருளை வாங்குதல், சிறு பிள்ளைகளின் வசமுள்ள பொருளை ஏமாற்றி வாங்குதல், பன்றி முதலானதும் மலம் ஜலம் முதலானதுமான நஜீஸ்களைத் தீண்டுதல், கள்ளைத் தீண்டுதல், சித்ரரூபம் செய்வது எதைப்பார்க்கக் கூடாதோ அதைத் தொடுவது, அநியாயமாகப் பொருட்களை சேதப்படுத்துதல், வீண் சிலவு செய்தல், அதிக சிலவு செய்தல், மெய்ப்புக்காக ஸதகா முதலானவை கொடுத்தல், ஒரு கடன் பட்டவனைக் கடன் கொடுத்தவன் பிடித்துக்கொண்டிருக்கும்போது அவனைக் கையைப் பறித்துத் தப்பவிடுதல், விருந்திற்குப் போனவன் அங்கிருந்து சோறு முதலானவைகளை எடுத்துக் கொண்டு வருதல், சூது முதலான விளையாட்டுகள் விளையாடுதல், புறுவைத்து வளர்த்து விட்டு விளையாடுதல், ஆடு மாடு கோழி காடை கௌதாரிகளை சண்டைக்கு விடுதல், இலகுக்காகப் பிராணியைக் கட்டி வைத்து அம்பெய்வது, துப்பாக்கியாற் சுடுவது, பள்ளியில் கை சேர்த்துக் கொண்டு போவது வருவது இருப்பது, சிற்றின்பப் பாடல் முதலானவைகளை எழுதுவது, காபிர் முதலானவர்களுடைய மார்க்க விஷயமான கிரந்தங்களை எழுதி வைத்துக்கொள்ளுதல், ஒருவர் செய்கையைப்பற்றி நியாயவிரோதமான கண்டன மெழுதுதல், துடக்குட னிருந்துகொண்டு குறுஆனை எழுதுதல், அப்படியே இருந்துகொண்டு குறுஆனை தொடுதல், ஒருவனுடைய பொருளை உத்தரவில்லாமல் பிறகு கொடுத்து விடலாமென்கிற எண்ணத்துடனும் எடுத்து அனுபவித்தல், முஸ்லிமுக்கு ஆயுத முதலானவைகளைக் கொண்டு அச்சங் காட்டுதல், குடுமி வைக்குதல், அறுத்த நகம் களைந்த மயிர் இவைகளை மலக்கிடங்கிற் போடுதல், கபுறில் முளைத்திருக்கும் பசும் பூண்டுகளைப் பிடுங்குதல், மையத்து அடங்கியிருக்கும் கபுறைத் தோண்டுதல் முன்பின் துவாரங்களை துப்புரவு செய்யும்போது உள்ளே விரலைச் செலுத்துதல், வலது கையால் மூக்குச் சிந்துதல், வெள்ளியல்லாத மற்ற மோதிரம் முதலானதுகளை யணிந்து கொள்ளுதல், அநியாயமாக அபகரித்துக் கொண்ட பொருளை யறிந்திருந்து ஹதியாவாகவாவது ஸதகாவாகவாவது வாங்குதல், கை கால்களின் நகங்களை அறுக்காமல் விடுதல், எழுதின சித்திர ரூபங்களை யழிக்காதிருக்குதல், அநாதப் பொருட்களைக் கண்டால் எடுக்காமல் விடுதல், அபாயமுண்டு பண்ணுகிற மனிதர் மிருகம் முதலானவைகளைத் தடுக்காமல் விடுதல், நெருப்பில் தண்ணீரில் விழுந்து சாகப்போகிற பிராணி

களையும் பொருட்களையுங் காப்பாற்றுமல் விடுதல், குழந்தை மாடு ஆடு இவைகளை மாலை நேரமானபோது வெளியிற் போவதைத் தடுக்காமலிருத்தல், படுக்கைக்குப் போகும்போது விளக்கை நூற்காமலிருத்தல், தின்பண்டமுள்ள பாத்திரங்களை மூடாமலிருத்தல், பசியாளிற்குச் சோறு போடாமலிருத்தல், பொன் வெள்ளி நாணயங்களை யுடைக்குதல், சூதான நாணயங்களை யடிக்குதல் பொய்மயிர் வைத்து முடிக்குதல், பல்லை அரத்தினுல் ருவி கூராக்குதல், முகத்துரோமங்களைப் பிடுங்குதல், கபுறுகளைத்தொட்டு முத்தமிடுதல், தாடியைக் கருப்பாக்குதல், துக்கமான சமயத்தில் முகத்திலடித்துச் சரீரத்தைக்கீறிப் புடவைகளைக் கிழிக்குதல், மொட்டையடிக்குதல், மையத்தினுடைய எலும்பை முறிக்குதல், குடித்து மிஞ்சின தண்ணீரைக் கேட்டவனுக்கு கொடுக்காமலிருத்தல், இஹ்றாம் கட்டினவர்கள் சிற்றெறும்பு முதலான பிராணியையுங் கொல்லுதல், *ஹறத்துக்குள்ளிருக்கும் புற்பூண்டு மர மட்டைகளைச் சேதப்படுத்துதல், உலுஹியா கொடாமலிருத்தல், அல்லாஹுத் தஆலாவுடைய திருநாமத்தைச் சொல்லாமலாவது வேறு நாமத்தைச் சொல்லியாவது ஹலாலான வஸ்துக்களை யறுக்குதல், மிருகங்களி னுறுப்புகளைச் சேதப்படுத்துதல், மிருகங்களுக்கு சூடுபோடுதல், ஹைவானைப் புசிப்பதற்கு அல்லாமல் கொல்லுதல், பிசகு தலாக †ஸபஹு செய்தல், பொய்பத்திரமெழுதுதல், பொய்சாக்ஷிபோடுதல், வட்டிப்பத்திரங்களெழுதுதல், கையெழுத்திடுதல், சாக்ஷிபோடுதல், மிருகங்கள் புணரும் போது வெருட்டி விலக்குதல், அளவிலும் நிறையிலும் சூதுபண்ணுதல், பிரதிப் பிரயோஜனத்தை பெண்ணிக் கடன்கொடுக்குதல், கெட்ட சிந்தையுடன் கடன் வாங்குதல், கடன் பட்டவன் தீர்க்கக்கூடுமாயிருக்க தீர்க்காமலிருக்குதல், பொருளை துர்வினியோகம் பண்ணுதல், கைகாட்டி மரம்போன்ற வழி யடையாளங்களை யெடுத்தல், தீர்க்க வேண்டிய உத்திரவாதங்களைக் கூடுமாயிருக்கும் போது தீர்க்காமலிருத்தல், ஒரு வஸ்துவை பெதற்காக இரவல் வாங்கப் பட்டதோ அதற்குகல்லாமல் மற்றதி லுபயோகப் படுத்துதல், ஜனங்களுக்குப் பொதுப் பிரயோஜனமான விஷயங்களைத் தடைசெய்தல், வேலை செய்தவனுக்குக் கூலி கொடுக்காமல் தாமதித்தல், வழிகளை வாடகைக்குக் கொடுத்து பணம் வாங்குதல், பொதுவான

---

* ஹறம் என்பது-இங்கே இஹ்றாம் கட்டும் எல்லை.

† ஸபஹு-ஹலாலான பிராணிகளைக் குறித்த ஆயுதங்களைக்கொண்டு அறுத்தல்.

தண்ணீரை உபயோகிக்க விடாமல் ஜனங்களைத் தடுக்குதல், மனைவி மக்களுக்குக் கொடுக்கவேண்டிய அன்ன வஸ்திரங்களைக் கொடுக்காமலிருத்தல், பிதா மாதா முதலான சுற்றத்தார்களுக்குக் கொடுக்க வேண்டிய பாத்தியங்களைக் கொடுக்காமலிருத்தல், அடிமையல்லாதவனை அடிமையாளுதல், அடிமை எஜமானுக்கு வேலை செய்யாமலிருத்தல், எஜமான் அடிமைக்கு அன்ன வஸ்திரங் கொடுக்காமலிருத்தல், அவனை அநியாயமாக யடிக்குதல், தற்கொலை செய்துகொள்ளுதல், கொலைக்கு உதவிசெய்தல், கள்ளு இறக்குதல், சாராயம் வடிக்குதல், இவைகளை வைத்து விற்குதல் இவைகளை வாங்குதல், பெருமைக்காக அம்பெய்தல் கையடை வாங்குதல், சிபார்சு பண்ணினதற்காகப் பரிதானம் வாங்குதல், அநியாயமாக பங்கிடுதல், மேளவாத்திய மடிக்குதல் வீணை முதலானவைகளை மீட்டுதல் அவைகளைச் செய்தலாகிய இவைகளும் இவைபோன்றவைகளும் கைகளில் விளையுந் தீமைகளாம்.

கிபுலாவுக்கு நேராகக் கால்களை நீட்டுதல், குருஆனுக்கு நேராகக் கால்நீட்டுதல், கூத்துப்பார்க்க போகுதல், பாவமான வேறெந்த விஷயமும் நடக்கு மிடங்களுக்குப் போகுதல், தாய் தகப்பன் உத்திரவில்லாமல் பிரயாணம் போகுதல், *உபா முதலான வியாதிகளுக்காக பயந்து அப்புறப்பட்டு போகுதல், அந்நியருடைய கட்டிடங்களிலுத்திரவில்லாமற் பிரவேசித்தல், கபுறுகளை மிதிக்குதல் தாண்டுதல் நடக்குதல், பெண்பிள்ளை ஜனுஸாவுடன் போகுதல், துடக்குடன் பள்ளிக்குட் பிரவேசித்தல் மார்க்க விஷயமான கிதாபுகளுக்கு நேராகக் கால்நீட்டுதல், தின்பண்டங்களை மிதிக்குதல், மனிதர்களையும் மாடாடு முதலானவைகளையும் உதைக்குதல், வஸ்துக்களை காலை கொண்டு சேதப்படுத்துதல், அநியாயக்காரர்க ளிருக்குமிடத்திற்குப் போகுதல், பிரதி தினமும் அதே தொழிலாக வேட்டைக்குப் போகுதல், வீண் வேட்டைக்கும் போகுதல் வீண் விளையாட்டிற்குப் போகுதல், பள்ளி மதுரஸா †மகுபுறு முதலான யிடங்களுக்கு இடது காலை முன்வைத்து போகுதல், மல சலோ பாதை முதலானவைகளுக்கு வலது காலை முன்வைத்துப் போகுதல், செருப்பு கால் சட்டை இவைகளை இடது காலாற் போடுதல், அவைகளை வலது காலாற் கழட்டுதல், தொழுகிறவனுக்கு எதிர் நடக்குதல், ஜும்ஆ முதலான தொழு

---

* உபா-வாந்திபேதி.

† மகுபுறு-ஜனுஸாக்களை யடக்கும் தானம்.

கைக்கு பள்ளிக்குப் போகாமலிருத்தல், படிக்கவேண்டிய இல்முகளைப்படிக்கப் போகாமலிருத்தல், படித்துக் கொடுக்கவேண்டிய இல்முகளை படித்துக் கொடுக்கப் போகாமலிருத்தல், பறுலான ஹஜ்ஜு பீஸபீல் முதலானவைகளுக்குப் போகாமலிருத்தல், போகவேண்டிய விருந்துண்ணப் போகாமலிருத்தல், ஜனுஸாவுக்குப் போகாமலிருத்தல், நன்மையை யேவவும் தீமையை விலக்கவும் போகாமலிருத்தல், அநியாயத்தில் அகப்பட்டவனுக்கு உதவி செய்யப் போகாமலிருத்தல், மையத்தைக் குளிப்பாட்ட கபன் செய்யப் தொழுகப் போகாமலிருத்தல், அபாயத்திற்கு இலக்காயிருக்கிற பிராணிகளையும் பொருட்களையும் காப்பாற்றப் போகாமவிருத்தல், சுற்றத்தார்களைவினவ போகாமலிருத்தல் நல்லோரையும் வியாதியஸ்தரையும் வினவப் போகாமலிருத்தல் சந்தோஷம் வினவப்போகாமலிருத்தல் துக்கம் வினவப்போகாமலிருத்தல் அடிமை எஜமானுடைய வேலைக்குப் போகாமலிருத்தல், கூலிக்காரன் வேலை செய்யப் போகாமலிருத்தல், புருஷனுடைய வேலைக்கு மனைவி போகாமலிருத்தலாகிய இவைகளும் இவை போன்றவைகளும் கால்களில் விளையுந் தீமைகளாம்.

ஹறுமான வஸ்துக்களைத் தின்னுதல் குடித்தல் தங்கடமுண்டு பண்ணுகிற வஸ்துக்களைத் தின்னுதல் குடித்தல், வழிநடையிலும் கடையிலும் தின்னுதல் குடித்தல் வெள்ளி பொன் பாத்திரங்களில் வைத்துத் தின்னுதல் குடித்தல், ஆகாத விஷயங்கள் நடக்கிற விருந்தில் போய் உண்ணுதல் மெய்புக்காகவாவது பெருமைக்காவாவது கொடுக்கிற விடத்திற்போய் உண்ணுதல், தின்னும்போது துப்ப வேண்டியவைகளைக் கிபுலாவிற்கு நேரே துப்புதல், கிபுலாவிற்கு நேராகவும் பள்ளியைச் சேர்ந்த யிடத்திலும் சுவர்களிலும் துப்புதல், ஒட்டைப் பாத்திரங்களில் குடிக்க வேண்டுமானால் அதன் ஒட்டையில் வாய்வைத்துக் குடித்தல் சுடுகிற சோற்றிலும் நீரிலும் வாயாலூதி உண்ணல் குடித்தல் மிஞ்ஜின தண்ணீரை இடது புற மிருப்பவனுக்குக் கொடுத்தல் *கூஜாவில் வாய் வைத்துக் குடித்தல், தண்ணீரை ஒரே மூச்சிற் குடித்தல், சுடச்சுட வுண்ணுதல் தின்னுதல் சோற்றை முகர்ந்து பார்த்தல் சோறுண்ணும் போது பாத்திரத்தில் கையை யுதறுதல் தலையைக் குனிந்த வண்ணமாக உண்ணுதல், தின்ற எச்சில்களை அந்த பாத்திரத்திலேயே போடுதல், பாவிகள் வீட்டிலுண்ணுதல்

* கூஜா-நீர்கரகம்.

தாய் தந்தையர் முதலானவர்களுடைய பிரியத்திற்கு மாற்றமாக உண்ணுமலிருத்தல் தின்னுமலிருத்தல் றமலான் நோன்பை விட்டு விட்டு உண்ணுதல் குடித்தல் நோன்பை முறித்துண்ணுதல் குடித்தல் புருஷனுடைய உத்திரவில்லாமல் சுன்னத்தான நோன்புகளைப் பிடித்தல் இரண்டு பெருநாள் துல்ஹஜ்ஜு மாதத்து பதினென்று பன்னிரண்டு பதின்மூன்று இந்த நாட்களில் நோன்பு பிடித்தல், மஸ்துள்ள வஸ்துக்களை யுண்ணுதல் குடித்தல் எத்தீம்களுடைய பொருளைத் தின்னுதல், அழையா விருந்திற்கு போயுண்ணுதல் ஆகிய இவைகளும் இவை போன்றவைகளும் வயிற்ருல் விளையுந் தீமைகளாம்.

*வினு விவாத்து †சுஹாக்கு மிருகப் புணர்ச்சி காலப் புணர்ச்சி ஹைறு நிபாஸ்காரியைத் தொப்புளுக்குக் கீழ் முழங்காலுக்குமேல் எங்கையாவது சுகம் பாராட்டுதல், கையா விந்திரியத்தை வெளிப்படுத்துதல், புணர இடம் பாடில்லாத சிறு பெண்ணைப் புணர்த்தல், புணர ஏலாதவளைப் புணர்த்தல், விலைக்கு வாங்கின அடிமைப்பெண்ணை ‡இஸ்திபுரு செய்யாமற் புணர்த்தல், இருமனைவி யுள்ளவன் ஒருத்திபார்க்க ஒருத்தியைப் புணர்த்தல், மலசலோபாதைக்கிருக்கும்போது கிபுலா சூரியன் சந்திரன் இவைகளை முன்னேக்கியிருத்தல் கிபுலாவை பின்நோக்கியிருத்தல் இவ்விதமே செய்யம்படி குழந்தைகளை விடுதல், விலைபெற்ற வஸ்துவைத் தின்பண்டத்தைக் கொண்டு மலசலோ பாதைக்கிருந்த பின் துடைத்தல் தின்றெரிந்த இறைச்சிமுள் முதலானதால் துடைத்தல் மலசலோபாதைக் கிருந்து துப்புரவு செய்யாதிருத்தல் பாதையில் பலம் தரும் மரத்தின்கீழ் நிழலுக்கிருக்குமிடத்திலும் பாம்பு பெருச்சாளி நண்டு உடும்பு இவைகளின் வளையிலும் நீரிலும் மலசலோபாதைக்கிருத்தல் நின்றநிலையில் மலசலம் விடுத்தல் துப்புரவு செய்யுமிடத்தில் குழியில் பாத்திரத்தில் ‖ஹம்மாமில் கல்லுத்தரையில் சுவரில் காறறுக் கெதிரில் மலஜலம் விடுத்தல், கத்தனு செய்யாமலிருத்தல் வெட்கத்தானங்களை புருஷர் மனைவியல்லாத மற்றவர்கட்குக் காட்டுதல், நிர்வாணமாய் குளித்தல் பள்ளிகளில் புணருதல், தலாக்கு சொல்லப்பட்ட மனைவியை விதிப்படி மீட்டு முன்புணர்தல், கூட்டில் வாங்கின அடிமையான

* வினு-விபசாரம்,
† சுஹாக்கு-பெண்ணுடன் பெண்புணருதல்.
‡ இஸ்திபுரு-ருதகவரவுபார்த்தல்.
‖ ஹம்மாம்-ஸ்நான கட்டடம்.

வளைப் புணர்தல், மையத்தை புணர்தல், சாட்சியும் ஒலியு மில்லா நிகாஹூ காரியைப் புணர்தல், சிலகாலத்திற்குப் பின் நீக்கிவிடலாமென்று நினைத்து செய்த நிகாஹூ காரியைப் புணர்த் தல், கூலி வேலைக்கு சம்பளத்திற்கு அமர்ந்தவளைப் புணர்த்தல், ஆகிய இவைகளும் இவைபோன்றவைகளும் உபஸ்தத்தினுல் விளை யும் தீமைகளாம்.

தொழுகையை விட்டிருத்தல், வேளைத்தவறித் தொழுதல், தொழுகையை முறிக்கும் விஷயத்துடன் தொழுதல், தொழும் போது ஹறுமை மக்றூகைச் செய்தல், ஜூம்ஆத் தொழுகை ஜமாஅத்துத் தொழுகை இதுகளை விடுதல், உலுவில்லாமல் தொழு தல், செய்யவேண்டிய உலுவை செய்யாமல் விடுதல், முழுகவேண் டிய முழுக்கை முழுகாமல் விடுதல், தனித்த தொழுகையில் பாங்கு இகாமத்தை விடுதல், சுன்னத்து *முவக்கதாக்களை விடு தல், இஃதிக்காபைவிடுதல், பஞ்சாவைக்குதல், வேஷம் போடு தல், ஏன்றவன் ஹஜ்ஜை விடுதல், செய்யவேண்டிய பீஸபீலைச் செய்யாமல் விடுதல், பீஸபீலில் வெருண்டோடுதல், மையத்தை யெடுத்து அடுக்காமற்போடுதல், நாட்டுச் சர்க்கரை அதிக விலைக்கு விற்க நாடி வாங்கிக் கட்டிவைக்குதல், விற்குந்தானியாதிகளை விற் காமல் கட்டுதல், பஞ்சகாலத்தில் தானியாதிகளை உள்ளூராருக்கு விற்காமல், அதிக விலையை நாடி அசலூராருக்கு விற்குதல், அடி மைகளையும் மிருகங்களையும் தாய்க்கும் பிள்ளைக்கும் இடையில் பிரித்து விற்குதல், †ஹிபத்தாகக் கொடுத்ததை மீட்டுக்கொள் ளுதல் வேட்டைக்கும் காவலுக்கு மல்லாமல் நாய் வளக்குதல் கபுறுகளில் விளக்கேற்றிவைத்தல், கபுறுஸ்தானங்களைத் தொழு கிற தானமாக்கிக் கொள்ளுதல், தொழுகாத பெண்ணை வைத்து நடத்துதல், குறுஆன் கிதாபு முதலானவைகளைக் காப்பாற்று வதற்கல்லாமல் தலைக்கு வைத்து படுத்தல், அல்லாஹூத் தஆலா வின் திருநாம முதலானது எழுதின தாட்களில் வஸ்துக்களை வைத்துமடித்தல், குறுஆன் ஓதக்கூடாமல் பழையதாகிவிட்டால் அந்தத் தாட்களை மற்ற கிதாபுகளுக்கு அட்டையாக ஒட்டுதல், குறுஆன் முதலான கிதாபுகளின்மீது புடவை முதலானவைகளை வைக்குதல் குறுஆன் முதலானவைகளைப் புழங்குதல், மேளவாத் திய முதலானவைகளின் கருவிகளைவைத்திருக்குதல், பள்ளியி

* முவக்கதா-ஸ்திரப்பட்டது.

† ஹிபத்து-பிரதிப்பிரயோசனங் கருதாமல் யாவருக்கும் எதையுங் கொடுத்தல்.

விருந்துகொண்டு ஸதக்கா முதலானவைகளைக் கொடுக்குதல், மாருட்டமாக யெடுத்த பிறர்பொருளை அனுபவிக்குதல், ஒருவனுடைய பொருளை விற்கும்படி ஒருவன் பயமுறுத்தினதற்காக விற்ற பொருளை வாங்குதல், அதை அனுபவித்தல், உடையவன் சம்மதமில்லாமல் விற்பதை வங்குதல், அதை யனுபவித்தல் ஸதக்காவாக ஒருவனுக்குக் கொடுக்கும்படி கொடுத்ததைக் கொடுக்காமலெடுத்துக் கொள்ளுதல், நீந்தத் தெரியாதவன் படகு ஏறுதல், பல சரக்குக் கடைக்காரனுக்கு கடன் கொடுத்தல், அவன் சரக்கிலெதையாவது அனுபவித்தல், கூத்து வேடிக்கை முதலானவைகளைச் செய்தல், சுத்தப்பட்டுப் புடவையை வெள்ளிநூல் பொன்னூல் நெய்தபுடவையை ஆண்பிள்ளை யணிதல், பொன்னரைஞாண் போட்டுக் கொள்ளுதல், பெருமைக்காக விலையுயர்ந்த கைலேஞ்சி முதலானவைகளை போட்டுப் புழங்குதல், அழகுக்காகச் சுவர்கள் ஜன்னல் முதலானவைகளுக்கு முலாம்பூசுதல் அவைகளுக்கு உறை போடுதல், காற்சட்டை, கையொலி முதலானவைகளைப் பெருமைக்காக கால்வழிவிடுதல், இஹ்ராம் கட்டினவர்கள் தைத்த புடவையை உடுத்துதல், அவர்கள் தலையை முகத்தை மூடுதல், பிறருடைய புடவையை உத்தர வில்லாமலுடுத்தல், அன்னிய பெண்கள்மேல் தன் சரீரம்பட நெருங்குதல், நீதவானன அரசன் ஸெய்யிது உலமாக்கள் தவிர மற்றவர்களுடைய கையை, வாயை தலையை காலை முத்தமிடுதல், அநியாயமாக அபகரித்த கட்டிடத்தில் குடியிருத்தல், தாய் தந்தைக்கு விரோதம் செய்தல், அவர்களுக்கு நன்றி செய்யாமல் விடுதல், சுற்றத்தாரை வெறுத்திருத்தல், புருஷனை மனைவி நோவித்தல், மனைவியை புருஷன் நோவித்தல், புருஷன் மனைவியையுடைய பாத்தியங்களையும் பேணாமலிருத்தல், சவாக்ஷணை செய்யவேண்டியவர்களுக்குச் செய்யாமலிருத்தல், பிள்ளைகளை நன்னடைக்கையில் பழக்காமல் விடுதல், அன்னிய பெண்ணுடன் தனித்திருத்தல், சொல் செயல் நடை உடைகளால் ஆண்பிள்ளை பெண்பிள்ளைபோலப் பாவித்தல், ஆண்பிள்ளை பெண் வேஷம்போடுதல், கெட்டவர்களுடைய சபையிலிருக்குதல் நடக்கிற பாதைகளில் உட்கார்ந்திருத்தல் பாதியுடல் வெய்யிலிலும் பாதியுடல் நிழலிலுமாக உட்கார்ந்திருத்தல், ஜனங்கள் சூழ வளைந்திருக்கும் சபையில் நடுவிலுட்காருதல், ஒருவனுக்குரிய யிருப்பிடத்திற் போயுட்காருதல், ஒருவனிருப்பிடத்தில் அவனையகற்றிவிட்டு உட்காருதல், இரண்டு பேர்களுக்கிடையில் விலக்கிவிட்டு நடுவிலுட்காருதல், பள்ளியிலிருந்து, மார்க்கவிஷயங்களைச் சொல்லித்

கொண்டிருப்பவரைத் தடுத்தல், தூக்கத்துக்காக பள்ளியிற்போயிருத்தல், கபுறடியில்தானே தூக்கம்வினவுதல், கபுறடியில் ஆடறுத்துச் சோறாக்குதல், ஜனங்கள் தூக்கம்வினவ வரட்டுமென்று வாசலிற் பாய்போட்டுட்கார்ந்திருந்தல், பள்ளிவாசலிலிருந்து வியாபார முதலானவைகளைச் செய்தல், ஒருவருக்கு ஸலாம் சொல்லும்போது தலையைக்குனிதல், சூனியஞ் செய்தல், துற்குறி பார்க்குதல், குறிசொல்லுதல், சோதிடஞ்சொல்லுதல் கேட்குதல், குறிகாரர் கொடுக்கிற நரிக்கொம்பு, வேர் முதலானவைகளை வாங்கிகட்டிக் கொள்ளுதல், வசியஞ்செய்தல், மாந்திரீகஞ் செய்தல், முத்திரையுள்ள நாணயங்களை மாலைகோர்த்து நெற்றியிற் கட்டுதல், நரை பிடுங்குதல், மீசையை வளர்க்குதல், பெண்பிள்ளை குதிரையேறுதல், கலியாணத்தில் ஒலிமாகொடாமலிருத்தல், இறைச்சியைத் தின்ற, மீன் தின்ற மணத்தைக் கையைவிட்டு நீக்காமற்படுத்துத் தூங்குதல், ஆண்பிள்ளை குப்புறப்படுத்துத் தூங்குதல், பெண்பிள்ளை மல்லாந்து படுத்துத் தூங்குதல், சுற்றுச் சுவரில்லாத மேல்தளங்களிற் படுத்துத் தூங்குதல், உயர்ந்த பாறைக்கல் முதலானவைகளிற் படுத்துத் தூங்குதல், வேடிக்கைக்காக மிருகங்களின் கழுத்தில் மணி கட்டுதல், பெண்பிள்ளை வாரிசான ஆண்துணையில்லாமல் வழிப்பிரயாணம் போகுதல், நிறுத்தாட்டின வாகனத்தை விட்டிறங்காமல் உட்கார்ந்திருத்தல், தக்க வழித்துணையில்லாமல் பிரயாணம் போகுதல், வெங்காய முதலான துர்நாற்றமுள்ளதைத்தின்று பள்ளிக்குப் போகுதல், ஆகாதவஸ்துக்களை யலங்கரித்துக் கொள்ளுதல், பகுத்த இல்முப்படி அமல் செய்யாமலிருத்தல், உலமாக்களை லகுப்படுத்தல், அவர்களுடைய பாத்தியத்தை நிறைவேற்றாமலிருத்தல், கெட்ட ஏற்பாடுகளை ஏற்படுத்தல், ஒளலியாக்களுக்கு விரோதஞ்செய்தல், மனிதர்களுக்கு அச்சமுண்டாவதற்காக கொடுமையாக நடக்குதல், தன்னைப் பொருந்திக்கொள்ளாத கூட்டத்திற்கு இமாமாக நின்று தொழுதல், கபுறுக்குநேரில் தொழுதல், பெண்பிள்ளை மேனி தெரிய மெல்லிய ஆடைகளையுடுத்தல், நடக்கும்போது நெளிந்து வளைந்து நடக்குதல், பூமிபதிர நடக்குதல், கடன் கொடுத்துத் தீர்க்கச் சக்தியற்றவனைச் சிறைச்சாலையிலடைத்தல், சுங்கம் வாங்குதல், அதற்குதவிசெய்தல், அந்த வேலை பார்க்குதல், சுன்னத்தான ஹஜ்ஜுக்குப் புருஷன் உத்திரவில்லாமல் இஹ்றாம் கட்டுதல், மக்கத்திற்குப் போகிறவர்கள் இஹ்றாம் கட்டும் எல்லையிற் போனவுடனே இஹ்றாம் கட்டாமலதைக் கடத்தல், ஹறத்துக்குள்

செய்யக் கூடாதவைகளைச் செய்தல், மதீனாவிலுள்ளவர்களுக்கு யாதொரு குற்றமுஞ்செய்யாதிருத்தல், மக்காவைப் பேணுவது போல மதீனாவையும் பேணாமலிருத்தல், உலுஹிய்யா கொடுத்த ஆடு மாடுகளின் தோலை விற்குதல், திராக்ஷைப்பழம் முதலானவைகளைச் சாராயம் வடிப்பதற்காக விற்குதல், லிவாத்து செய்கிறவனுக்குப் பையன்களை விற்குதல், விபசாரத் தொழிலாளிக்கு பெண்களை விற்குதல், மேளவாத்தியங்கள் செய்கிறவனுக்கு மரம் விற்குதல், பகையர்களுக்கு ஆயுதங்களை விற்குதல், ஒரு பொருளை ஒருவனிடத்தில் விற்றுவிட்டுப் பின்னும் ஒருவனுக்கு விற்குதல், ஒருவனுக்குத் தீர்ந்துபோன பொருளை மற்றொருவன் வாங்குதல், கொள்வனவு விற்பனவுகளில் மோசஞ்செய்தல், அசல் வீட்டுக் காரருக்குச் சங்கட முண்டுபண்ணுதல், பெருமைக்காக வேண்டியதற்கு அதிகமான கட்டிடங்களைக் கட்டுதல், குருடனுக்குப் பிசகான வழியைக் காட்டுதல், ஒருவனுக்கே சொந்தமான நடபாதையில் உத்திரவில்லாமல் நடத்தல், இருவருக்கும் பொதுவான சுவர் முதலானவைகளில் ஒருவருத்திர வில்லாமல் ஒருவர் எதையுஞ் செய்தல், தர்மகர்த்தனுடைய கருத்துக்கு விரோதமாக அந்த கர்மத்தை நடத்துகிறவன் செய்தல், பாலிகான பெண்ணை ஒலிகாரன் விவாகம் பண்ணிக்கொடாமல் விலக்குதல், முஸ்லிமானவர்களை மூன்று தினத்திற் கதிகமாக வெறுத்திருத்தல், மனிதர்களைப் பிறக்கணித்தல், ஆச்சரியப்படுத்தல், பெண்களைக் கூட்டிக்கொடுத்தல், புருஷன் மௌத்தானாலும் இத்தா இராமலிருத்தல், அதை முறித்தல், எஜமான் துரோகம், அடிமைகளை ஏலாத விஷயத்தில் ஏவுதல், ராஜதுரோகம், அமீர், கலீபா, இமாம் இவர்கள் கொடுத்த பைஅத்தை முறித்தல், மார்க்கவிஷயமான உத்தியோகங்களில் அருகனல்லாதவைகளை நியமித்தல், அதில் அருகனை விலக்கல், அரசன் குடிகள்மீது அக்கிரமஞ்செய்தல், வழிபறித்தல், ஒருவன்மீது அடர்ந்தேறுதல், எதிரியுடைய அபாயத்தினின்று தன்ராச்சியத்தைக் காப்பாற்றாமல் விடுதல், பெருமைக்காக குதிரைகளை அதிகமாக வைத்துக் கொள்ளுதல், பெருமைக்காக குதிரைப்பந்தியம் விடுதல், பெருமைக்காக அம்பெறிந்து விளையாடுதல், ராஜாக்கள் முதலான பிரபுக்களுடைய தாட்சண்ணியத்திற்காக அல்லாஹுத்தஆலாவுக்குப் பொருத்த மல்லாத விஷயத்தைச்செய்தல், குடிகாரருடன் கூடுதல், துஷ்டர்களுடன் கூடுதல், துஷ்டத்தனஞ் செய்தல், சிறு பாவத்தையானாலும் விடாமற் செய்தல், தௌபாவை விடுதல், உரிமைவிட்ட அடிமையை வேலை

வாங்குதல், பருலான விஷயங்கள் அல்லாத மற்ற வியங்களுக்காக புருஷனுடைய உத்திரவில்லாமல் வீட்டை விட்டுப் புறப்படுதல், பெண்பிள்ளைகள் மணம் பூசிக்கொண்டு வெளிப்படுதல், புருஷனுடன் பிணங்கிக்கொள்ளுதல், விபசாரிகளுடன் இடம்பண்ணுதல், சோரபுருஷனுடன் சேர்தல், *விபசாரத் தொழிற் செய்தல், நான்கு பெண்களுக்கு அதிகமாக விவாகஞ்செய்தல், மனைவியைத் துராகிர்தஞ்செய்தல், மனைவிமீது வாது செய்தல், பெண்கள் அன்னிய ஆண்பிள்ளைகளுக்கும், விபசாரிகளுக்கும், காபிர் பெண்களுக்கும் வெட்காமலிருத்தல் ஆகிய இவைகளும் இவை போன்றவைகளும் உடலில் விளையுந் தீமைகளாம்.

ஆகையால் முஸ்லிமான சகோதரர்களே! இந்தப் பசலில் சொல்லப்பட்ட தீமைகளில் ஒன்றையாவது மனதாறச் செய்வதை விட்டும் அதிகம் பேணுதலும், எச்சரிப்புமாயிருக்கவேண்டியது நம் ஒவ்வொருவர் மீதும் முக்கிய கடனும். ஒருக்கால் இவ்விதத் தீமை எதுவும் ஒரு சந்தர்ப்பத்தில் நேரிட்டால் உடனே தௌபா செய்து மீளவேண்டியது அதிக முக்கிய கடனாகும். அப்படியே அல்லாஹுத்தஆலா தீமைகளும் நம்மீது வராமல் பாதுகாத்து நல்லுதவி செய்வானாக ஆமீன்.

ஸையிஆத்து முடிந்தது.

---

## 12-ம் பஸல்.

## குறூறு.

குறூறு என்பது மருட்சிமையையென்று சொல்லப்படும். அது துன்யாவிலும், ஷைத்தானினாலும், ரபஹினாலும் உண்டாகும்.

துன்யா என்பது அல்லாஹுத்தஆலா குறுஆனில் திருவுளமானபடி விளையாட்டு வேடிக்கை வீண் அலங்காரம், குணத்தாலும், குலத்தாலும், பணத்தாலும் தன்னை மதித்தல், பணத்தாலும் ஜனத்தாலும் பெருமை பாராட்டல் ஆகிய ஐந்து வகையையுடையதாம். இந்த ஐந்து விஷயங்களும இம்மையில் மாத்திரம் அற்பசுகத்தைக் கொடுத்து மறுமையில் யாதொரு பிரயோஜனத்தையும் கொடாமலழிந்து போகிறவைகளாம. ஆகையாலிந்த

* உபசாரமென்பது-அன்னிய ஸ்திரீயைப் புணருதல். வினைச்செய்தல்.

ஐந்து கெட்ட விஷயங்களையும் விரும்புகிற ஒவ்வொருவனும் அல்லாஹுத் தஆலாவின் கோபத்திற்குரியவனுவான். இந்தக்கெட்ட விஷயங்களைச் செய்யும்படியாக வருத்துகிற வஸ்துக்கள் பெண்கள், சந்ததிகள், பொன், வெள்ளி, வாகனங்கள், ஒட்டகம், ஆடு, மாடு முதலியவை, கிராமங்கள் ஆகிய இவைகளாம். இவைகள் மீது ஒருவன் இச்சை வைத்தால் மேற்சொன்ன கெட்ட விஷயங்களை வருத்தும். எவனொருவன் இவைகளின் சுகத்தை அனுபவிக்க வேண்டுமென்று அதிலாசைகொண்டு அவ்வாசை விட்டு நீங்காமல் அவற்றை உவப்பமனதிலறுதிகரித்துச் செய்வானுகில் மேற்சொன்ன விஷயங்களைத் தடையின்றிச்செய்து அவைகளில் தானே முழுகிப்போவான். ஆகையால் அவனுக்கு நஷ்டமேயன்றி வேறில்லை. துன்யாவின் சுபாவமானது தன்னை விரும்பினர்வர்களுக்கு நன்மைக்கு மாற்றமான கருமங்களைப் போதித்து ஆசைகாட்டி மதிமயங்கி ஏமாற்றி முடிவில் மோசஞ் செய்வதாம். இதன் விவரங்களை அடியிற் சொல்லுகிறோம்.

துன்யாவின் குணமானது நபுஸுக்கும், ஷைத்தானுக்கும் ஒற்றுமையாயிருக்கும். ஆனதுபற்றி இந்த துன்யா நமக்குச் சத்துருவேயாம். அதன் மருட்டுதல் மகா கொடியதாகையால் அம்மருட்டுதலுக்குச் சற்று மிடங்கொடாமல் எவ்விதமிருக்கவேண்டுமோ அவ்விதமாகவே இருக்கவேண்டும். துன்யா யென்பதற்கு பொருளற்ப மென்பதாம் துன்யா மனிதர்களை மருட்டும். எவனொருவன் அந்த மருட்டு தலிலகப்பட்டு ஆகிறத்தை நினைத்துப் பாராமல் அக்கிரமமாய் நடந்து வருவானே அவனுக்கு குடியிருப்பு நரகமேயல்லாமல் வேறில்லை. துன்யாவானது வீண் வேடிக்கையில் விளையாட்டுமே யாம். ஆகிறுவானது அப்படிப்பட்டதல்ல, எப்போதும் அழியாத ஹயாத்தையுடையது. துன்யாவை விரும்புகிறவர்கள் தங்கள் சத்துருக்கு அகப்பட்டவர்கள் போலாவார்கள். அதனுல் அல்லாஹுத் தஆலாவின் கோபத்திற்கு இலக்கா நேரிடும். பாவங்களில் துன்யாவைப் பின் தொடர்வது அல்லாஹுத் தஆலாவுக்கு மாறுசெய்வது கொடிய பாவங்களாம் துன்யாவை நமபுகிறவர்கள் ஒடுக்கத்தில் கிடைக்கும் கெடுதி இன்னதென்று அறியமாட்டார்கள். துன்யாவில் மருட்சியில் மூங்கிக் கிடக்கும்போது திடீறென்று மௌத்து வந்திடுமே அப்போது தான துன்யா அவர்களுக்குச் செய்தமோசம் இன்னதென்று தெளிவாய்த் தெரியும். மனிதர்கள் துன்யாவின் மருட்சியாகிய

தூக்கத்தால் தூங்குகிறார்கள். இனி மௌத்து வந்தவுடன் விழித்துக்கொள்ளுவார்கள். அப்போது துன்யாவின் காரியங்களின்னவையென்று தெரியும். இத்துன்யாவின் நீளமான காட்சிகளையும், வாழ்வுகளையுமற்றுங் காரியங்களையுமப்போது நினைத்தால் எல்லாம் மனாம் கண்டதுபோலிருக்கும். துன்யாவின் இன்பமெல்லாம் துன்பமாகவும், இனிப்பெல்லாங் கசப்பாகவும், செல்வ மெல்லாம் வறுமையாகவும், சந்தோஷமெல்லாம் துக்க மாகவும், சுகமெல்லாம் வருத்தமாகவும், மேன்மையெல்லாம் தாழ்மையாகவும், பெருமையெல்லாம் சிறுமையாகவும், லாமமெல்லாம் நஷ்டமாகவும், நன்மையெல்லாந் தீமையாகவும், நல்லதெல்லாங் கெட்டதாகவும், நற்குறியெல்லாம் துற்குறியாகவும் புரண்டுபோகும். துன்யாவை நம்பினவர்களுக்கு அதுசெய்யும் மோசம் இப்படித்தான். துன்யாவை நம்பி மோசம் போனவர்கள் மௌத்து வந்தபோது தங்கள் செய்கையை நினைத்துக் கைசேதப்படுவார்கள். அந்தக் கைசேதம் ஒருபோதும் விட்டு நீங்காது. அப்போது கைசேதப்பட்டு சலிப்பதனால் யாதொருப் பிரயோஜனமு முண்டாகமாட்டாது. அது எதுபோலென்றால் ராஜ குமாரனொருவன் ஒரு ராஜ கன்னிகையை விவாகஞ்செய்து அவளுடன் புணர்ச்சி செய்யுமுன் மதுபானத்தைக் குடித்து மஸ்துகொண்டு சிறு நீருக் இருக்க வெளியில் வந்தவன் தனக்கெதிரிலிருந்த யஹூதிக் கோயிலைக்கண்டு அதைத் தன் வீடென்றெண்ணி நுழைந்தான். அப்போது அந்தக் கோயிலிலன்றுசெத்த விகாரரூபமும், அதிவிர்த்தாப்பியமுள்ள ஒருபெண் பிரேதம் பாடையுடன் வைக்கப்பட்டிருந்தது. அதையந்த ராஜகுமாரன் கண்டு தன் மனைவி கட்டிலிற் படுத்துறங்குகிறாளென்றெண்ணி அந்தக் கிழப்பெண் பிணத்துடன் புணர்ச்சி செய்தான். அவனப்படிச் செய்துக்கொண்டிருக்கையில் வெளியிற்போன இராஜகுமாரன் நெடு நேரம்வரையும் வீட்டிற்குத் திரும்பி வாராமையால் அனேகர் பல திக்குகளிலும் தேடப் புறப்பட்டார்கள். அவர்களிற் சிலர் மேற்படிக்கோயிலுள் வந்து நுழைந்தார்கள். அப்போது பொழுதுவிடியும் வேளையும், புணர்ச்சி முடியுந் தருணமும, அவனுக்கு மஸ்துதெளியுஞ் சமயமுமாயிருந்தது. தேடிவந்தவர்கள் அவனிருக்கும் ஸ்திதியைக் கண்டவுடன் அவன் மஸ்துதெளிந்து தன்னைத் தேடிவந்தவாகள் தன் செய்கையைப்பார்த்துக் கொண்டதை யறிந்து அதற்காக அவன் அதிக வெட்கத்துடன் கைசேதப்பட்டான். அவன் படும் வெட்கமும் கைசேதமும், தான் செய்துமுடிந்த கருமத்தை எவ்வளவும் மாற்ற

வும், மறைக்கவுமாட்டாதே. ஆகையால் அவன் படும் கைசேதம் யாதொரு பிரயோஜனத்தையும் கொடுக்கமாட்டாது. அது போலவே துன்யாவை நம்பி மோசப்பட்டவர்கள் படும் வெட்கமும், கைசேதமும், யாதொரு பிரயோஜனத்தையுங்கொடுக்க மாட்டாது. மேற்படி ராஜகுமாரன் கெட்ட கருமத்தைச்செய்து தப்பிப் போனதைப்பற்றி கைசேதப்பட்டு பிரயோஜனப்படாமற் போனதுபோல் துன்யாவை நம்பி மோசம்போய்த் தப்பிப்போன கருமத்தைப் பற்றி கைசேதப்பட்டு பிரயோஜனப் படாமற் போவார்கள்.

இன்னும் துன்யாவானது ஒருவன் செய்த பயிர் நல்ல மழையினுற் செழித்து வளர்ந்திருக்க, அவனதைக்கண்டு இதனுல் நாம் பலன் பெறலாமென்று எண்ணி மகிழ்ச்சி யடைந்திருக்கையில், அந்தப் பயிர் திடீரென்று காய்ந்து, கரிந்தழிந்து அவனுக்குப் பலன் கொடாமற் போனதுபோலவே முடிவில் யாதொரு பலனுங்கொடாம லழிந்துபோவதாம். அதற்காகவே துன்யாவை விரும்பவேண்டாமென்றது. எவனொருவன் துன்யாவின் வாழ்வைப் பார்க்கிலும், ஆகிரத்தின் வாழ்வு அதிக மேன்மையும், நிலைமையுமுள்ளதென்று நம்பி துன்யாவை வெறுத்தானே அவன் அல்லாஹுத்தஆலாவிடத்தில் தன் குற்றத்திற்காக மன்னிப்பும், பொருத்தமும் பெறுவான். இன்னும் துன்யாவுக்கு ஒரு உதாரணமுண்டு. அதென்னவென்றுல் தண்ணீர் தாகமுடைய ஒருவன் கானலைக்கண்டு அதைத் தண்ணீரென்றெண்ணி கிட்டமுடுக, அது தண்ணீறல்லவென்றும், கானலென்றுமறிந்ததுமன்றி அது அவன் தாகத்திற்குதவாமற் போனதுபோலாம். இன்னும் துன்யாவானது நஞ்சு கலந்ததும் மதுரமான குடிப்புக்கு ஒப்பாகும். எவனொருவன் இந்த குடிப்பு மதுரமாயிருந்தாலும் நஞ்சு கலந்ததென்று அறிந்துக்கொண்டானே அவனதைக்குடிக்காமல் தப்பிக்கொள்ளுவான். அறியாதவன் மதுரத்தை விரும்பிக் குடிப்பானுனுற் கட்டாயம் மோசப்படுவான். மேற்காட்டிய உதாரணங்களை மனதிற் றரிபாடாகவைத்து அடிக்கடி ஞாபகப்படுத்திக் கொண்டு வரவேண்டும்.

இனி கியாமத்துநாளில் துன்யாவை ஒரு அவலக்ஷணமுடைய கிழவினுருவத்திற் கொண்டுவந்து மனிதரெல்லொரும் பார்க்கும்படி நிறுத்தி இது துன்யாவென்று எல்லோருக்கு மறிவிக்கப்படும். அப்போது துன்யாவை நம்பி அதற்காகச் செய்த கெடுதிகள் ஒவ்வொன்றையும், ஒவ்வொருவனுக்குச் சொல்லிக்

காட்டப்படும். அதன்பிறகு துன்யாவாகிய அந்தக் கிழவியை நரகத்தி லெடுத்தெறிவார்கள். அவள்கூடவே அவளை நம்பினவர்களையும் நரகத்திற்குப் போகும்படி உத்திரவு செய்யப்படும்.

அல்லாஹுத் தஆலா துன்யாவை மூன்றாகப் பகுத்து அதிலொருபங்கை மூஃமின்களுக்கும், ஒருபங்கை முனாபிகீன் களுக்கும், மற்றொருபங்கை காபிரின்களுக்குக் கொடுத்திருக்கிறான். ஆகையால் மூஃமினானவர்கள் தங்களுக்கு ஆகிரத்திலுபயோகப் படத் தக்கதான ஸாலிஹான அமல்களைத் துன்யாவிற்றானே செய்துகொள்ளுவார்கள். முனாபிகுகள் தங்களையு மற்றவர்களையும் பலவகையான ஆடையாபரண முதலானவைகளா லலங்கரித்துக் கொண்டு அதுவே பராக்காக யிருப்பார்கள். காபிர்கள் தங்கள் வாழ்வைக்கொண்டு மகிழ்ந்து அதையே சதமென்று நம்பி அதனின்பத்தை யனுபவித்துச் சுகித்துக்கொண்டிருப்பார்கள். ஆகையால் மேற்சொல்லியபடி ஸாலிஹான அமல்களைச்செய்வது மூஃமின்களுக்குச் சொந்தமும் தங்களையு மற்றவைகளையு மலங்கரித்து அதுவே பராக்காக யிருப்பது முனாபிகுகளுக்குச் சொந்தமுமாம். துன்யாவின் வாழ்வில் சுகிப்பது காபிர்களுக்குச் சொந்தமுமாம். ஆகவே மேற்சொல்லியபடி ஸாலிஹான அமல்களைச் செய்வது நம்மனைவோர்பேரிலும் முக்கிய கடமையாம். முனாபிகு, காபிர் இவர்களுக்கு ஒப்பாக அலங்கரிப்பதும் சுகிப்பதுமாகாது. துன்யாவில் வாழ்வே காபிர்களுக்குச் சொந்தம். துன்யாவில் மூஃமின்கள் பெரிய வாழ்க்கை யுடையவர்களா யிருந்தாலும் அதிற் பற்றிலாம லிருப்பார்கள். அதனாற்றான் துன்யாவானது மூஃமின்களுக்குச் சிறைச்சாலை யென்றும் காபிர்களுக்குப் பூங்காவனமென்றும் சொல்லப்பட்டது. துன்யாவில் காபிர்களுக்குப் போதிக்கிற வாழ்க்கையைப் பார்க்கிலும், அளவற்ற வாழ்க்கை கொடுக்கப் படும். ஆனால் மூஃமின்கள் அவ்வாழ்க்கையை விரும்பிக் காபிராய்ப் போவார்க ளென்பதற்காகவே அவ்விதப்பெரிய வாழ்க்கையைக் கொடுக்கவில்லை. இதைக்கொண்டு துன்யாவின் வாழ்க்கை காபிர்களுக்குச் சொந்தமென்று நன்றாய் விளங்குகின்றன. இவ்விதப் பெருவாழ்வு மழிந்துபோவதாகையால் தான் அல்லாஹுத் தஆலா துன்யாவில் காபிர்களுக்குக் கொடுத் திருக்கிறான். எப்போது மழியாத பேரின்பவாழ்க்கையை மூஃமின்களுக்கு ஆகிரத்தில் கொடுக்கத் தயார் செய்து வைத்திருக்கிறான். ஆகையால் ஆகிரத்தில் வனுப்பமான வாழ்வை யிழந்த காபிர்களுக்கு துன்யாவில்

வந்த வாழ்வைகண்ட மூஃமின் அதன்பேரில் ஆசைவைக்கக் கூடாது. ஏனென்றால் அவ்வாழ்க்கை தற்காலம் நயமாகத் தோன்றினபோதிலும் முடிவில் மோசமாகும். அந்த மோசம் இன்னதென்று இப்பொழுது தெரியாது.

ஒரு மனிதன் ஹலறத்து ஈஸா அலைஹிஸ்ஸலாமவர்களிடம் வந்து நான் உங்களை விட்டுப் பிரியாம லெப்போதும் உங்கள் கூடவே யிருப்பேனென்று சொன்னான். அதற்கு அவர்கள் உடன்பட்டு அவனை யழைத்துக்கொண்டு ஒரு ஆற்றினருகிற் போயுட்கார்ந்து தங்களிடத்திலிருந்த மூன்று ரொட்டிகளில் இரண்டு ரொட்டிகளை யிருவருந் தின்றபின் ஈஸா அலைஹிஸ்ஸலா மவர்களெழுந்து ஆற்றிலிறங்கித் தண்ணீர் குடித்துவிட்டு திரும்பிவந்து மற்றொரு ரொட்டியைப் பார்க்க அதைக் காணவில்லை. அப்போது அந்த மனிதனைப் பார்த்து மீதியாயிருந்த ரொட்டி எங்கே? என்று கேட்டார்கள், அதற்கவன் நானறியேன் என்றான். பிறகு யிருவரும் அங்கிருந்து புறப்பட்டுப் போகும்போது ஒரு பெண் மானைக் கண்டார்கள். அந்த மானுடன் இரண்டு குட்டிகளு மிருந்தன. அதின் ஒரு குட்டியை ஈஸா அலைஹிஸ்ஸலாமவர்கள் தங்களருகிலழைத்து அதையறுத்து அதனிறைச்சியை சுட்டிருவருந் தின்றுவிட்டு, மறுபடியும் அந்த மான் குட்டியை உயிராக்கி யனுப்பி விட்டு அந்த மனிதனைப் பார்த்து இந்த அற்புதத்தை உனக்குக் காண்பித்த அல்லாவினாணை மேற்படி ரொட்டியை யெடுத்தவன் யாரென்று கேட்டார்கள். அப்போதவன் நானறியே னென்றான். பிறகு அங்கிருந்து இருவரும் ஒரு ஆற்றருகிற் போய் ஆண்டவரவர்கள் அந்த மனிதனுடைய கையைப் பிடித்துக் கொண்டு தண்ணீரின்மேல் நடந்து ஆற்றைக் கடந்து அக்கரைப் பட்டபின் மறுதரமு மவனைப் பார்த்து, இந்த அற்புதத்தை உனக்குக் காண்பித்த அல்லாவினாணை மேற்படி அந்த ரொட்டியை யெடுத்தவன் யாரென்று கேட்டார்கள். அதற்கு அவன் நானறியேனென்றான். பிறகு அங்கிருந்திருவரும் ஒரு வனத்திற் போயுட்கார்ந்தார்கள். அப்போது ஈஸா அலைஹிஸ்ஸலாமவர்கள் மணலைக் கூட்டி ஒரு மேடாகக் குவித்து, அதைப்பார்த்து அல்லாஹுதஆலாவின் உத்தரவுபடி அது பொன்னாகக் கடவதென்றார்கள். உடனே அது பொன்னாயிற்று, பின்பு அதை மூன்றாகப் பங்கிட்டு அந்த மனிதனைப் பார்த்து இந்த மூன்று பங்கில் ஒரு பங்கெனக்கு ஒரு

பங்கு உனக்கு மற்றொரு பங்கு அந்த ரொட்டியை யெடுத்தானே அவனுக் கென்றார்கள்.

உடனே அந்த மனிதன் மேற்படி ரொட்டியை யெடுத்தவன் நான்தானென்றான். அப்படியானல் மூன்று பங்கையும் நீயே யெடுத்துக் கொள்ளென்று அந்தப் பொன்னை அவனிடத்தி லொப்பித்து விட்டு அவனைவிட்டு பிரிந்துபோய் விட்டார்கள். பிறகு அவன் அந்தப் பொன்னைக் காத்துக்கொண்டு உட்கார்ந்திருந்தான். அப்போதந்த வழியாக இரண்டு பேர் வந்தார்கள். வந்த இரண்டு பேரும் இவனையும், இவன் வசமிருக்கும் பொன்னையுங் கண்டு அந்தப்பொன் வைத்திருக்கிறவனைக் கொன்று விட்டு அதை அவர்களிருவரும் எடுத்துக்கொள்ள வேண்டுமென்று எத்தனப்பட்டபோது பொன் வைத்திருந்தவன் அதை யறிந்து இருவரையும் பார்த்து இந்தப் பொன்னை நாம் மூவரும் பங்கிட்டுக் கொள்ளலாமென்று சொன்னான். அதற்கவர்கள் சம்மதப்பட்டார்கள். பிறகு இவன் அவ்விருவரையும் பார்த்து உங்களில் ஒருவனை ஊருக்குள்ளனுப்பி பசியாறத் தின்பண்டம் வாங்கி வரும்படிச் செய்ய வேண்டுமென்று சொன்னான். அதற்கவ்விருவரிலொருவன் சம்மதித்துப் போனான். தின்பண்டம் வாங்கப்போனவன் நாம் இந்தத் தின்பண்டத்தில் நஞ்சை கலந்து அவ்விருவருக்குங் கொடுத்து அவர்களைக் கொன்று விட்டு அப்பொன் முழுவதையும் நாமே கைப்பற்றிக்கொள்ள வேண்டுமென்று தனக்குள்ளே நினைத்து அப்படியே வாங்கின பண்டத்தில் நஞ்சைக் கலந்து கொண்டு வந்தான். இதிப்படி இருக்க தின்பண்டம் வாங்குவதற்கு இவன் ஊருக்குட் போனபோது அங்கிருந்த இருவருங்கூடி அவன் தின்பண்டம் வாங்கிக்கொண்டு வந்தவுடன் அவனைக் கொன்று விட்டு நாமிருவரும் இந்தப் பொன்னைப் பங்கிட்டுக் கொள்ளலாமென்று தீர்மானித்தார்கள். தின்பண்டம் வாங்கிக் கொண்டு வந்தவன் தன் எண்ணப்படி அவ்விருவருக்கும் தின்னும்படிக் கொடுத்தபோது அவ்விருவரும் அதை வாங்கிக்கொண்டு அவனைக் கொன்று விட்டு பிறகு அதைத் தின்றார்கள். அதில் நஞ்சு கலந்திருந்தபடியால் அவ்விருவ்ரும் உடனே மாண்டு போனார்கள். ஆகக்கூடிய மூவரும் அருகில் மாண்டு கிடக்க மேற்படிப் பொன் இருந்தது. ஈஸா அலைஹிஸ்ஸலாமவர்கள் திரும்பவும் அந்த வனத்தின் வழியாய் வரும்போது பொன்னையும் அதனருகில் மாண்டு

கிடக்கும் மூவரையுங் கண்டு இதுதான் துன்யா, இதைப்பற்றி பயப்படுங்களென்று தங்களைச் சேர்ந்தவர்களுக்குச் சொன்னார்கள்.

ஆகிரு காலத்தில் அபாயத்தை வருத்துவதற்கு ஏதுவான துன்யாவையும், அதன் செல்வத்தையும் விரும்பக் கூடாது. ஆகையால் அதை வெறுத்திருக்க வேண்டியது கடமை. அல்லாஹூத் தஆலாவையும், அவன் கொடுக்கும் மேலான ஆகிரத்தின் வாழ்வையும் காதலித்து அதனால் துன்யாவின் இச்சையில் பற்றற்றிருப்பதுவே வெறுப்பாகும். இந்த வெறுப்புதான் ஷுஹூதென்று சொல்லப்படும். அவ்விதம் துன்யாவை வெறுத்திருப்பவர்களின் அடையாளமாவது வருமை வந்தபோது சலிக்காமலும், வாழ்வு வந்தபோது மகிழாமலும், இழந்து போவதைப் பற்றித் தேடாமலும், சேகரமாயிருக்கிற வஸ்துக்களைச் செலவு செய்வதும், துன்யாவை நாடாமலும், ஆகிரத்தைப் பார்க்கிலும் துன்யாவை பெரிதென் றெண்ணமலுமிருப்பதாகிய இக்குணங்களே. ஆகையால் அப்படிப்பட்ட மேலான குணத்தைக் கொள்வது ஒவ்வொருவர் பேரிலுங் கடமையாயிருக்கின்றது, அந்தப்படி குணங்கொண்டு ஆகிரத்தில் ஈடேற்றம் பெற்றுக் கொள்ள வேண்டியது கடமையாம்.

இவ்வித குணங்கொள்ளாமல் துன்யாவையே சதமென்று நம்பி இருப்பவர்கள் ஆகிரத்தில் அபாயமடைவார்கள். ஏனென்றால் அல்லாஹூ தஆலா துன்யாவை ஆகிரத்திற் போய்ச்சேர்வதற்கான வழியாகவும், அவ்வழியில் நடப்பவர்கள் தங்கு மிடமாகவும் படைத்திருக்கிறானே தவிர மனிதரனைவரும் எக்காலமும் தரிப்பட்டிருக்கும்படியான அழியாப்பதியாக படைக்கவில்லை. ஆனதால் பூமியிலுண்டான சகல படைப்புகளும் அந்த வழியில் நடந்து தங்கியிருந்து முடிவில் ஆகிரத்திற் போய்ச் சேர்வது நிச்சயம். அப்படியே அனைவரும் துன்யா என்னும் வழியில் நடந்து கொண்டும், தங்கிக் கொண்டும் இருக்கிறார்கள், வரவர அவ்வழி தொலைந்து கொண்டும் ஆகிரு முடுகிக் கொண்டும் வருகின்றன. ஒரு ஊரை நாடிப்போகிற பிரயாணி தான் நாடிப்போகிற ஊரைச் சேர்கிற வரையில் நடந்து போகிற வழியை அதிக விரைவிற் கடக்கவும், இடையில் தங்கிக் களையாறவும் விரும்புவானே தவிர தான் நாடிய ஊரைச் சேராமல் நடந்து போகும் இந்த வழியிலேயே என்னென்றும் இருந்துவிட வேண்டுமென்றும் நாடமாட்டான். அதுபோலவே ஆகிரத்திற்குப் போகிற பிரயாணிகளாகிய

மனிதர்கள் நடந்துபோகிற வழியும், தங்குமிடமுமாகிய இந்த துன்யாவில் என்னென்றும் இருந்துவிட வேண்டுமென்று நாடாமல் ஒன்று கூடியும் ஆகிறத்திற்குப் போய்ச் சேர்வதையே நாடிக் கொண்டிருக்கவேண்டும். எவனாவது அழிந்து போகப்படும் துன்யாவை வீணாக நம்பி நடந்து கொள்ளுவானாகில் அத்துன்யா நிலையில்லாம லழிந்து போவதுமன்றி அதை நம்பினவனும் அல்லாஹுத் தஆலாவின் கோபத்திற் குள்ளாகி மோட்சத்தை இழந்து விடுவான். துன்யாவில் எந்தக் கருமத்திலும் தனக்குத் தேவையான மட்டிற்கும் செய்து கொள்வதே யல்லாமல் அதிக கபடமாகச் செய்யக்கூடாது. ஒருவன் தனக்கு குடியிருக்க எவ்வளவு போதுமானதோ அவ்வளவிற்கு ஒரு வீட்டை கட்டிக் கொள்ளவேண்டும். அப்படிக்கல்லாம லதற்கு அதிகமாகக் கட்டினானாகில் அந்த அதிகமான கட்டடங்களை கியாமத்து நாளிலவன் தூக்கிச் சுமக்கும்படி தொந்தரவு செய்யப்படுவான். ஹலரத்து அப்பாஸ் றலியல்லாஹு அன்ஹு அவர்கள் கட்டியிருந்த ஒரு மெத்தை வீட்டை இடித்து விடும்படி நபி நாயகமவர்கள் ஏவினதாக கிதாபுகளிற் சொல்லப்பட்டிருக்கிறது. இவைகளெல்லாம் துன்யாவின் மீது நம்பிக்கை இல்லையென்பதற்குக் குறிகளாம்.

இந்த அற்ப துன்யாவில் பாவிகளுக்கு எவ்வளவு அதிகமான வாழ்வு வந்தபோதிலு மதைக்குறித்து நோட்ட மிடக்கூடாது. அதைக் கொண்டு அவர்கள் மோக்ஷமடையார்கள், நல்லவர்களுக்கு எவ்வளவு அதிகமான வறுமை வந்த போதிலும் அதைக்குறித்து கவலைப்படக்கூடாது. அதைக்கொண்டு அவர்கள் பலன் பெருவார்கள். இதைப்பற்றி ஒரு கிஸ்ஸாவுண்டு. அதாவது ஒரு மூஃமினும், ஒரு காபிரும் மீன்பிடிப் பதற்காக வலைகொண்டு போய்க் கடலருகில் நின்றுக்கொண்டு காபிரானவன் தான் வணங்கும் புத்தின்பேரைச் சொல்லியும் மூஃமினானவர் அல்லாஹுத் தஆலாவின் திருநாமத்தைச் சொல்லியும் வலைகளை வீசி யிழுத்த போது காபிருடையவலை நிறைந்தமீனும், மூஃமினானவருடைய வலை வெறுமையாகவும் வந்தது. அப்படியே அடுத்தடுத்து சூரியனஸ்தமிக்கும் வரையும் இருவரும் வலைகளைவீசி யிழுத்துக்கொண்டேயிருந்தார்கள். அப்படி வீசியிழுக்கும் ஒவ்வொருதடவையிலும் காபிருடையவலை மீன்நிறைந்து மூஃமினானவருடைய வலை ஒன்றுமில்லாத வெறும்வலையுமாகவே வந்துகொண்டிருந்தன. பின்பு சூரியன் அஸ்தமான வேளையானபோது கடைசித்தாமாக

இருவரும் வலைகள்வீச அப்போது காபிருடைய வலை முன் போலவே மீன் நிரைந்தும், மூஃமினனவருடைய வலை ஒரே மீனுடனும் வந்தன. அப்போது அந்த மூஃமினனவர் தம்வலையில் வந்த மீனைக்கண்டு அதைக் கையால் பிடித்தார் அந்த மீன் உடனே அவர் கையில் நின்று வழுவி கடலில் விழுந்து போயிற்று. அதனு லவர் வெறுங்கையுடன் வீடுவந்து சேர்ந்தார். மேற்படி காபிரோ தனக்கு அகப்பட்ட அதிக மீனுடன் வீடுவந்து சேர்ந்தான். அப் போதந்த மூஃமினன வருடனிருக்கும் மலக்கு அன்றையதின மவருக்கு நேரிட்ட விசனத்தைப்பற்றியும் துக்கப்பட்டு வானத் தளவிற் போனபோது அந்த மூஃமினனவருக்குச் சுவற்கத்தில் தயா ராயிருக்கும் மாளிகைகளையும் அந்த காபிருக்குத் தயாராயிருக்கும் நரகத்திலுள்ள தானங்களையும் அல்லாஹுத் தஆலா காண்பித் தான். அப்போதந்த மலக்கு மூஃமினனவர் தமக்குத் தயாராயி ருக்கும் இந்த சுவர்க்கத்தில் வருவாரானல் அவருக்கு இப்போதி ருக்கும் விசனமும், அந்தக் காபிரானவன் தனக்குத் தயாராயிருக் கும் இந்த நரகத்தில் வருவானுனல், அவனுக்கிப்போதிருக்குஞ் சந்தோஷமும் பெரிதல்லவென்று சொன்னுர்களென்பதே. ஆகை யால் துன்யாவின் வாழ்வை விரும்புவதைப்பார்க்கிலும் ஆகிரத்து வாழ்வை விரும்புவதுதான் கடமை. ஒருவன் ஆகிரத்தின் பலனைப் பெற நாடினுல் அல்லாஹுத் தஆலா அதை விருத்திசெய்வான். துன்யாவின் பலனை நாடினுல் அதில் சொற்ப பலனைத்தான் கொடுப்பான். ஆனுலும் ஆகிரத்திலவனுக்கு எவ்வளவும் பயனில் லாமற் போய்விடும். அல்லாஹுத் தஆலா மனிதர்களுக்குத் துன் யாவிற் கொடுத்திருக்கிற எவ்வித மேலான வாழ்வாயிருந்தாலும் அது துன்யாவில் இருக்குமளவு முபயோகப் படுத்திக் கொள்ளுகிற அற்ப வாழ்வேயாம். இனி ஆகிரத்தில் கொடுப்பதற்காக வைத் திருக்கும் வாழ்வோ என்றென்றுமாறு ததுமழியாததும், அதிக மேன்மையானதுமா யிருக்கும். அல்லாஹுத் தஆலா *எவன் என்பலாய்கு ஸபூறு செய்யவில்லையோ, எவன் என் நிஃமத்துக்கு ஷுக்குறு செய்யவில்லையோ, எவன் என் கற்பனைக்குச் சம்மதித் திருக்கவில்லையோ அவன் என் வானத்தின்கீழ் குடியிருக்காமல் என்னைத் தவிர வேறு ஆண்டவனிருந்தால் அவனைத்தேடிக் கொண்டு அப்புறப் பட்டுப் போய் விடலாமென்று திருவுளமா

* இந்த வாக்கியம் தௌறாத்து முதலான நான்கு வேதங்களிலிருந்து கண்டெடுக்கப்பட்டதென்று கஃபுல் அஹ்பாபுறலி யல்லாஹு அன்ஹு அவர்கள் சொல்லுகிறுர்.

Q7:332
N46



யிருக்கிறான். ஆகையால் வறுமை முதலான பலாய்கள் வந்தபோது அவைகளைப் பற்றி சஞ்சலப்படாமல் பொறுமையுட னிருக்க வேண்டும். அதனாலாகிரத்தில் தகுந்த பிரயோஜனங் கிடைக்கும். வாழ்வு வந்தபோது அதைப்பற்றி நன்றியறிதலுட னிருக்கவேண்டும். அதனால் வாழ்வு அதிகப்படும். துன்பங்கள் நேரிட்டபோது அந்தத் துன்பங்கள் நலாவிலுள்ள தென்று அவைகளுக்குச் சம்மதித்திருக்கவேண்டும். அதற்குத் தவாபு கிடைக்கும். எப்படியென்றால் பாவிகளாயிருந்தால் பாவம் மன்னிக்கப்படும். பாவிகளல்லாதிருந்தால் பதவி உயர்த்தப்படும்.

இனி ஷைதானென்பவன் இபுலீஸும், அவனுடைய மக்களும். நபி ஆதம் அலைஹிஸ்ஸலாமவர்களுடைய மக்களாகிய மனிதர்களில் நபி ஈஸா அலைஹிஸ்ஸலா மவர்கள் தவிர மற்ற ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு ஷைத்தானுண்டு. ஒவ்வொரு மனிதனும் பிறந்தவுடன் ஒவ்வொரு ஷைத்தான் அவனைப்பற்றிப் பிடித்துக்கொண்டு அந்த மனிதன் மௌத்தாகும் வரையும் அவனை விட்டுப் பிரியாமல் கூடவேயிருந்து மௌத்தானால் பிரிந்துபோவானாகையால் ஒவ்வொரு ஷைத்தானும் தான் பற்றிப்பிடித்து நிற்கும் ஒவ்வொரு மனிதனையும் நல்வழியிற் செல்லவிடாமல் தினந்தோறும் கலைத்து வழிகேட்டில் யிழுத்துவிடுவதற்கே முயற்சியும், பிரயாசையு மெடுத்துக்கொண்டேயிருப்பான். ஆனதால் ஒவ்வொரு மனிதனும் ஷைத்தானுடைய கலைத்தலுக் கிடங்கொடாமல் தப்பித்துக்கொள்வது மகாகஷ்டம்.

ஷைத்தானானவன் மனிதனுடைய நரம்பின் துவாரங்கள் தோறும் சஞ்சரித்து, சரீரமெங்கும் வியாபித்து இருதய கமலத்துட்சென்று நன்மையான கருமங்களைச் செய்ய வொட்டாமலும், தீமையான கருமங்களைச் செய்யும்படியும் கலைத்து துற்போதனை செய்துகொண்டே யிருப்பான். அவன் இருதயகமலத்தி லிருந்துகொண்டு உருத்தோற்றமும், தொனியு மில்லாமல் போதிக்கும் போதனை மனிதனுக் குதிக்கும் வுதிப்பைப்போலிருக்கும். அந்த வுதிப்பை ஷைத்தானுடைய போதனையென்றும், மனிதனுடைய மனோவுதிப்பென்றும் பிரித்தறியக்கூடாது. ஆனாலுமந்தவுதிப்பு தீமையானதா யிருந்தாலிது ஷைத்தானுடையதென்று அறிவுள்ளோர் கண்டுகொள்வார்கள். இன்னுமவன் எவ்விதரூபத்துடனாவது முகதாவில்வந்து கலைப்பதுமுண்டு. மனிதர்களைக் கலைத்து கெடுப்பதற்குத் தகுந்த அனேக தந்திரோபாயங்கள் ஷைத்தான்களுக்குத்

111452

தெரியும். யாராரை எந்தெந்த விதத்தி லெதைக்கொண்டு ஏமாற்றி வழிகெடுக்க வேண்டுமோ அப்படியே செய்வான். ஷைத்தானுடைய கபடத்தையும், மோசத்தையும் விட்டு அச்சந்தீர்ந்திருக்கக் கூடாது. ஒவ்வொருவரும் பிரதிதினமும் ஷைதானுடைய மோசத்தைப்பற்றி அல்லாஹுதஆலாயிடத்தில் காவல் தேடிக்கொண்டிருக்க வேண்டியது மல்லாமல் அந்த மோசங்களிலிருந்து தப்பிக்கொள்ளும் கருமங்களையும் செய்துவரவேண்டும். அந்தக் கருமங்களில் முக்கியமானது சகல வஸ்துக்களையும் படைத்து ஆள்கிற சர்வ வல்லமையுள்ள அல்லாஹுதஆலா நமது உதிப்பு, நினைப்பு, அகம், புறம், சொல்; செயல் முதலிய எல்லாவற்றையும் எப்போது மறைவின்றி அறிந்துகொண்டும், பார்த்துக் கொண்டு மிருக்கிருனென்பதை மனதில் தரிபாடாகவைத்து அல்லாஹுத் தஆலாவை எதிரே பார்த்துக்கொண்டிருப்பது போலப் பாவித்து நடந்து கொள்ள வில்லையோ அவன் மனதில் ஷைத்தான் கொண்டாட்டமாய்க் குதிகொள்வான். அப்படி குதிகொண்டாலு மேற்சொன்னபடி அல்லாஹுத் தஆலாவை திக்றுச்செய்தால் உடனே அந்த ஷைத்தான் மனதைவிட்டு வெருண்டோடுவான். இதற்குத் திருஷ்டாந்தம் அல்லாஹுத் தஆலாவுடைய திக்றுயில்லாத மனம் தீபமில்லா யிருளடர்ந்த ஒரு அறை வீட்டிற்குச் சமானம். அல்லாஹுத் தஆலாவின் திக்று இருளையறுக்கும் ஒரு தீபத்திற்குச் சமானம். ஆகையால் எவனொருவன் அல்லாஹுத் தஆலாவினுடைய திக்றை இடைவிடாமற் செய்து கொண்டிருக்கிருனே அவனுடைய மனம் பிரகாச முள்ள தீபம் எரியும் அறைவீடுபோலத் துலங்கும் ஆனது பற்றி ஷைத்தானுடைய கலைத்தல் அங்கு எவவளவுஞ் செல்லாது.

ஆதியில் நபி ஆதம் அலைஹிஸ்ஸலா மவர்களுக்கு ஸுஜூது செய்யாமல் இபுலீஸ் மறுத்து லஃனத்துச்செய்யப் பட்டபோது ஆதமுடைய மக்களை நான் கலைத்து வழிகெடுப்பேனென்று வாக்கிட்டபடி மூஃமின்களைக் கலைத்து தனக்கிஷ்டர்களாயிருக்கும் காபிர்களுடன் சேர்ப்பதற்கு எப்போதும் பிரயாசை யெடுத்துக் கொண்டிருப்பானுகையால் அதற்கெவ்வளவும் யிடங்கொடாமல வனையும், அவன் மக்களையும் ஜன்மப்பகையர்களாகச் சாதித்துக் கொண்டு எச்சரிக்கையாகவே யிருக்கவேண்டும்.

ஷைத்தானில் மனுஷ ஷைத்தானுமுண்டு. எவன் ஷைத்தானுடைய குணமும், தொழிலு முள்ளவனே அவன்தான் மனுஷ

ஷைத்தானென்று சொல்லப்படுவான். ஷைத்தானுக்கு எவ்வளவு அச்சமும் எச்சரிப்பும் வைத்து நடந்து கொள்ளவேண்டுமோ அவ்வளவு அச்சமும், எச்சரிப்பும் மனுஷ ஷைத்தானுக்கும் வைத்து நடந்து கொள்ளவேண்டும்.

நபுஸ் என்பது துற்பிச்சை. இதை நபுஸ் அம்மாரு என்று சொல்லுவார்கள். இன்னும் நபுஸ் மூத்ம இன்னு, நபுஸ் மூல்ஹிமா, நபுஸ் லவ்வாமாவென்கிற மூன்று தொழிற் பெயர்களும் அதற்குண்டு. ஆனாலும் நாமிந்த மூன்று வித நபுஸ்களையும் இந்த இடத்தில் சொல்லாமல் குமாறு என்னும் மருட்சியை வருத்துகிற மேற்சொன்ன நபுஸ் அம்மாருவைப் பற்றியே சொல்லுகிறோம்.

நபுஸ் என்கிறது துற்பிச்சை ஆகையால் அதன் செய்கைகள் அனைத்தும் துற்செய்கைகளாகவே இருக்கும். அந்த துற்செய்கைகள் உண்டாவதற்குக் காரணம் அந்த நபுஸேயாம். இந்த நபுஸைக் கொண்டே சகல துற்குணங்களும் பிறக்கும். அந்த துற்குணங்களைக்கொண்டே சகல துற்செய்கை களுண்டாகும். இந்த நபுஸ் ஷைத்தானுக்கும் பிரதானமான ஏவலாளாயிருக்கும் நபுஸானது ஷைத்தானுடைய விருப்பத்திற்குத் தக்கபடி துணை நின்று தன்னுடைய நாயனுக்கு வழிப்பட்டு மார்க்க நிபந்தனைகளுக்குக் கீழ்ப்படிந்து நற்கருமங்களைச் செய்யாமல் மாறுசெய்து மார்க்க விதிக்கு விரோதமாய்த் தனக்கிச்சையான துற்கருமங்களை செய்து கொண்டிருக்க மிகவும் கருத்துள்ளதாம். ஆகையால் அவ்விதமே சொல்லாலும் செயலாலும், பார்வையாலும், ஊணாலும், உறக்கத்தாலும், நடையாலும், உடையாலும், மற்ற எல்லாவகையாலும் பாவங்களைச் செய்யும் படியாக நமக்குப் போதித்து ஆசையுண்டாக்கிக் கொண்டேயிருக்கும். இதுவே அந்த நபுஸுக்குத் தொழில். இன்னும் நபுஸுடைய தொழிலும் ஒன்றுக்கொன்று ஒற்றுமையாகவே யிருக்கும். ஆகையால் ஷைத்தானைப்போ லிருந்த நப்ஸும் நமக்கு சத்துருவாம். ஷைத்தானைப்பற்றி எச்சரிப்பாயிருப்பதுபோல இந்த நபுஸைப்பற்றியும் எச்சரிப்பாக இருக்கவேண்டும். இந்த நபுஸ் துன்மார்க்கத்தில் தன்னிச்சையாய்ப் பிரவேசித்து நம்மையுமதற்குடன் படுத்தும். அப்போது நாமதற்கு எவ்வளவு மிடங்கொடாமலிருப்பது மல்லாமல் அந்த நபுஸினுடைய துற்குணங்களை மாற்றி நற்குணங்களை அதற்கு வருத்தவேண்டும். அப்படிச் செய்வது காபிர்களுடன் பீஸபீல் செய்வதைப் பார்க்கிலும் பெரிய

காரியமாம். இதைத்தான் நபி நாயகமவர்கள் ஜஹாதுல் அக்பறு என்று திருவாய் மலர்ந்து சொன்னார்கள்.

அந்த நபுஸினுடைய துற்குணங்களைப் போக்குவதற்கும், அதற்கு நற்குணங்களை வருத்துவதற்கும் பரிகாரமுண்டு, அதாவது அல்லாஹுத் தஆலா தனக்கு வழிப்படாமல் மாறு செய்த பாவிகளை ஆகிரத்தில் விசாரணை செய்து குற்றம் பிடித்து ஏன் எனக்கு நீங்கள் மாறு செய்தீர்களென்று கேட்கும்போது நாம் என்ன வகை சொல்லுவோமென்றும் அப்போது நமக்கு என்ன கதிகிடைக்குமோ என்றும் எண்ணிப்பயந்து நபுஸுக்கும் பயமுறுத்தி அதற்கேற்ற உபாயங்களை நாட்குநாள் உபதேசித்து வருவதுதான். எவனொருவன் இந்தப்படி பரிகாரஞ்செய்து நபுஸுடைய துற்குணங்களை நீக்கி நற்குணங்களை வருத்தினானோ அவன் தடையின்றி ஈடேற்றம் பெறுவான். அவன் குடியிருக்கும் தானம் சுவர்க்கமேயாம். எவனொருவன் நபுஸை வசப்படுத்தாமல் துற்குணங்களில் முழுக அடித்தானோ அவன் பேறுகேட்டு நரகம் புகுதுவானென்பதில் தடையில்லை.

இவ்விதமான துன்யாவை நம்பி ஷைத்தானுக்குடன்பட்டு நபுஸுக்கு வழிப்பட்டு மருண்டு கெட்டோர்களனேகருண்டு. முற்காலத்திலுள்ள அனேகம் கௌமுகள் திரண்ட ஆஸ்தியும், பொன், வெள்ளி முதலிய ஆபரணாதிகளும், கணக்கற்ற புதையல்களும், உன்னதமான மாடமாளிகைகளும், பூங்காவனங்களும் உடையவர்களாயிருந்தார்கள். அரசர்களிலும் அனேகர் அதிக பலமும், விஸ்தீரணமுமுள்ள கோட்டை கொத்தளங்களையுடைய அனேக பட்டணங்களையும், ரதகஜ துரகபதாதிகளென்னும் சேனைகளையும், மந்திரி, பிரதானிகளையும், கணக்கற்ற பிரஜைகளையு முடையவர்களா யிருந்தார்கள். அதனாலவர்களுக்கு தன்னை மதிப்பும், அகங்காரமும், பெருமையும் அதிகமாயின. அவர்கள் ஒவ்வொருவரும் சரீரபலமும் மனோதிடமு முள்ளவர்களா யிருந்தது பற்றி துன்யாவின் வாழ்வையே நம்பி இறுமாந்து மனைவி மக்களுடன் அதிக ஆனந்தமாய்ச் சுகித்துக் கொண்டிருந்தார்கள். அவர்கள் தங்கள் காயமும் ஆயுசும் வாழ்க்கையுமழிந்து போம் என்பதற்காக கொஞ்சமும் மெண்ணிபார்க்கவில்லை. அவைகள் என்றென்றும் நிலைத்திருக்குமென்றே நம்பி யிருந்ததால், மனமருண்டு தங்களுக்கு நிகர் ஒருவருமில்லையென்றும் யாதொரு அபாயமு முண்டாகாதென்று நினைத்திருந்து நாடியபடி யெல்

லாமக்கிரமமான தீமைகளையும் பொல்லாங்குகளையும் செய்து வந்தார்கள். அவர்களில் சிலர் தங்களை நாயனென்றும் வணங்கும்படி குடிகளைத் தொந்தரை செய்தவர்களுமுண்டு. அவர்கள் காபிராயிருந்ததற்காகத் தக்க தண்டனையை ஆகிரத்தில் கொடுப்பதற்கு நம்அாது, பிர்ஔன் முதலானவர்களை அல்லாஹுதஆலா நேமித்து வைத்திருந்தும், அவர்கள் இந்த துன்யாவில் செய்த அனியாயத்திற்கு பதிலாக துன்யாவில் தானே கடூரமான தண்டனையாகப் பலவித அபாயங்களை யடைந்து *ஹலாக்கானார்கள். அவை பெரியப் பட்டணங்களையும் சுழற்றிக் கொண்டு போகும் பெருங்காற்றும், மலைகளும் பிளக்கத்தக்க பயங்கரமான பெருஞ்சத்தமும் பூமிசுரிய வாங்குதலும், மலைகளும் முழுகத்தக்க ஜலப்பிரளயமும், கடலில் தாழ்தலும் முதலான வைகளே. இவ்வித அபாயமடைந்தபின் அந்தத் துஷ்டர்களிருந்த யிடங்களும் பாழடைந்து நாசமாயின. ஆதுவுடைய மகன் ஷத்தாதென்பவன் வாழ்வின்பெருக்கத்தினால் சுவர்க்கத் திற்குப் பிரதியாக, நானும் ஒரு சுவர்க்கத்தை யுண்டுபண்ணு வேனென்று முந்நூறு வருஷம் வரையும் பாடுபட்டு அதிக விஸ்தாரமான ஒரு பூங்காவனத்தை யுண்டுபண்ணினான். அதைத் தான் இறம் என்று சொல்வார்கள். அந்தப் பூங்காவனமும், அதிலுள்ள பட்டணமும், அலங்காரத்தில் பூமியில் எங்குமில்லாத விதமாயிருந்தது, அதில் ஷத்தாது குடி போகும்போதே ஆகாயத்திலிருந்து பயங்கரமும், அமளியுமான சத்தமொன்று கிளம்பி அதனால் ஹலாக்கானான். அவன் கட்டின பட்டணமும் பாழாய் நாசமடைந்தது. ஹலறத்து தானியால் அலைஹிஸ்ஸலாமவர்கள் பனீ இஸ்ராயீல்கள் குடியிருந்த ஒரு பட்டணத்தில் புகுந்தபோது அது மனிதசஞ்சார மில்லாமலிருக்கக் கண்டு எங்கும் சுற்றிப் பார்த்துக்கொண்டு ஒரு மாளிகை யருகில் வந்தார்கள். தானியாலே நீர் இந்த மாளிகைக்குட்புகுந்து அங்குள்ள அதிசயத்தை பாருமென்று ஆகாயத்திலிருந்து ஒரு சப்தம் கேட்டது. உடனே உட்புகுந்து பார்க்க தீபாஜூ பட்டுவிரித்த கட்டிலின்மேல் ஒரு பிரேதம் உருவினவாளொன்று மேல்வைக்கப்பட்டதாய் வளர்த்தாட்டி யிருக்கக்கண்டு நெருங்கிநின்று பார்த்தார்கள். அந்தப் பிரேதத்தின் தலைமாட்டில் ஒரு கடிதமிருந்தது, அதை யெடுத்து வாசித்தார்கள். அதில்:—நான் றாம் ராச்சியத்து அரசன்: பூமி முழுவதையும் ஆண்டேன். ஆயிரம் பட்டணங்

* ஹலாக்கு-மடிதல்.

களைப் புதிதாகக் கட்டினேன். ஆயிரம் பட்டணங்களை பகைவர் வசமிருந்து பிடித்தேன். ஆயிரம் பெண்களை விவாகஞ்செய்து ஆயிரமக்களைப் பெற்றேன், கணக்கற்ற திரவியங்களைக் குவியல் குவியலாக ஆயிரம் புதயல்களைப் போட்டு வைத்தேன். எவரும் சுகிக்காத விதமாய் ஆயிரம் வருஷம்வரையும் சுகித்திருந்தேன். முடிவில் கொடுமையான பஞ்சமொன்று தலைப்பட்டு நானும், என் கௌமுகளும் மடிந்துபோனோம். எனக்குப்பின்வரும் ஜனங்களே! நீங்கள் பொருளைச் சம்பாதிக்க வேண்டி எவ்வித பாடுபட்டாலும் என்னைப்போலச் சம்பாதித்து எனக்குச் சமானமாக மாட்டீர்கள். அப்படியானாலும் என்னுடைய பெரிய திரவியம் எனக்கு பிரயோஜனப்படாமற் போனதுபோல் உங்களுக்கும் பிரயோஜனப்படாமல் தான் போம். ஆகையால் திரவியத்தைச் சேர்த்துவைக்க விரும்பி அதிக பாடு படாதீர்களென்றெழுதியிருந்ததாம். பிர்ஔனுடைய காரிய காரணாகிய காறூனென்பவன் திரண்ட ஆஸ்தி வந்தனாயிருந்தான். அவனுக்கு ரசவாதவித்தையும் சித்தியாயிருந்தது. அவனுடைய பொக்கிஷப் பெட்டிகளின் கோற்சாவிகள் மாத்திரம் அறுபது கோவேறு கழுதையின் பாரமாயிருந்தனவாம். அதனாலவன் அகங்காரங்கொண்டு நபி மூஸா அலைஹிஸ்ஸலாமவர்களுக்கு விரோதியும் துஷ்டனுமாயிருந்தான். ஒருநாள் அவன், ஊர் சுத்திவரும்போது அவனுடைய மாளிகை முதலான சொத்துக்களெல்லாவற்றையும் அல்லாஹுத் தஆலாவின் கட்டளைப்படி பூமி சரித்து உள்ளே இழுத்துக்கொண்டது. அன்று முதலவன் கியாமத்து வரும் வரையும், நான் ஒன்றிற்கு ஒரு ஆளுபாரம் பூமியிற்றாழ்ந்தலைந்துகொண்டே போகிறான். இவ்விதக் கெட்டோரில் இன்னுமனேகர் பரம துஷ்டர்களாயிருந்து நாசமடைந்தார்கள். அவர்களிவ்விதங்கெட்டு நாசமடையக் காரணமாயிருந்தவை துன்யாவும், ஷைத்தானும், நபுஸுமேயாம்.

இனி துன்யாவை நம்பாமலும், ஷைத்தானுக்குடன் படாமலும், நபுஸுக்கு வழிப்படாமலும் எச்சரிக்கையாயிருந்து ஸாலிஹான அமல்களைச் செய்துவருகிறார்கள். எல்லோரும் நல்லோர்களென்று சொல்லப்படுவார்கள். யாராவது ஒருவர் நல்லோராக வேண்டுமானால் இந்த கிதாபில் நன்மை யென்றும், தீமையென்றும பகுத்துக்காட்டி யிருப்பவற்றில், தீமையைவிலக்கி, நன்மையை யெடுத்து நடப்பதே போதுமானதாயிருக்கும். அப்படி நடப்பவர்கள் மனதில் துன்யாவின் நம்பிக்கை எவ்வளவும் உடன்

படமாட்டார்கள். நபுஸுக்கு எள்ளளவும் வழிப்படமாட்டார்கள். துன்யாவை நம்பி அதை விரும்புகிறவன் எவனே அவனையே வைத்தாலும், நபுஸும் கெடுக்க இடமுண்டாகும். ஆகையால் நல்லோர்களுடைய இருதயமானது பிரதானமாக துன்யா வெறுப்பதிலேயே நோக்கமாயிருக்கும் இதற்கு ஒரு திஷ்டாந்தரம் சொல்லுகிறோம். அது:—

முற்காலத்திற் மூஃமினான அரசர் ஒருவரிருந்தார். அவருக்கு ஒரு ஆண்பிள்ளை பிறந்து, பிராயம் எத்தினபின் அல்லாஹுத் தஆலாவின் பாதையில் விருப்பமுற்று தமக்குரிய ராஜாங்கத்தையும், இவ்வுலக வாழ்க்கையும் வெறுத்து ஒரு கம்பளியை மாத்திரம் போர்த்துக்கொண்டு வனவாசியாய்ப் போய்விட்டது. அதன் பின்னும் ஒருவர் பின்னொருவராய் சில ஆண் மக்கள் பிறந்து பருவம் எத்தினவுடன், ஒருவரொருவராய்ப் புறப்பட்டு அப்படியே வனவாசியாய்ப் போய்விட்டார்கள். பிறந்த பிள்ளைகளெல்லாரும் வனவாசிகளாய்ப் போனபின் கடைசியாய் ஒரு ஆண்பிள்ளை பிறந்தது. அப்போது தந்தையாகிய அரசர் மந்திரி முதலானவர்களையழைத்து இதற்குமுன் பிறந்த மக்களெல்லாரும் வனவாசிகளாய் போய்விட்டார்கள். அது உங்களுக்குத் தெரிந்த விஷயம். இப்போது கடைசியாய் ஒரு மகன் பிறந்திருக்கிறான். இவனுமப்படியே போய்விடுவானானால், எனக்குப்பின் என் ராஜாங்கத்தை ஒப்புக்கொண்டு நடத்த ஒருவருமில்லாமற்போய் அன்னியர் வந்து கைக்கொள்வார்கள். அப்போது உங்களுக்கு அதிக கஷ்டம் நேரிடும். ஆகையால் இப்போது பிறந்திருக்கிற பிள்ளை தனக்குப் பிராயம் வந்தவுடன் வனவாசியாய்ப் போகாமல் என்னுடனிருந்து எனக்குப்பின் ராஜாங்கத்தை ஒப்புக்கொள்ளச் செய்யும் உபாயம் என்னவென்று கேட்டார். அதற்கந்த மந்திரிகளெல்லாம் ஒன்றுகூடி ஆலோசித்து அதிக சிங்கார முள்ள பூங்காவனமொன்றுண்டாக்கி, அதிக யலங்காரமான பங்களா ஒன்று கட்டி அந்த பங்களாவில் தங்கள் மகனை தாயுடன் குடியிருக்கும்படியாகவும், பிள்ளை வளரத்தக்க விநோத வேடிக்கைகளையும், ஆடல் பாடல்களையுங்கொண்டு இவ்வுலக வாழ்க்கையின் இச்சையை ஊட்டும் படியாகத்தக்க ஆட்களை நியமித்து எப்போதும் கூடவே இருக்கும்படியாகவும் செய்யவேண்டும். இப்படிச் செய்தால் தங்கள் மகனுக்கு உலக வாழ்க்கையி னிச்சையுண்டாம். வனவாசியாகப்போக மனம்வராது. தங்களுக்குப்பின் ராஜாங்கத்தை ஒப்புக்

கொண்டு நடத்த அந்தப் பிள்ளைக்கு யாதொரு தடையுமிரா தென்று சொன்னார்கள். அப்படியே அரசர் சிங்காரவனமும், பங்களாவும் தயார்செய்து அதில் தாயையும், பிள்ளையையுங் குடியிருத்தி, மந்திரிகள் சொன்னபடி மற்றக்காரியங்களையும் நியமித்ததும் உத்தரவின்றி மகனை வெளியில் விடக்கூடாதென்று மேற்படி சிங்காரவனத்து வாசலில் காவற்காரர்களையும் நியமித்து வைத்தார். அப்படியிருக்கையில் ராஜகுமாரருக்கு வயது வந்தது. ஒரு நாள் அவர் தமமுடன் இருப்பவர்களைப் பார்த்து இந்தச் சிங்காரவனத்து மதில்களுக்கு அப்புறம் என்னயிருக்கிறதென்று கேட்டார். அதற்கவர்கள் அங்கும் நம்மைப்போல மனிதர்கள் தான் குடியிருக்கிறார்களென்று மறுமொழி சொன்னார்கள். அதற்கவர் அதைப்போய் நான் பார்க்கவேண்டுமேயென்று கேட்டார். தங்கள் தந்தை உத்தரவின்றித் தாங்கள் போகக்கூடாதென்று அவர்கள் தடுத்தார்கள். பிறகு அவர் எவ்விதமும் தாம் வெளியே போய்ப் பார்க்கவேண்டுமென்று தந்தையிடம் உத்தரவு பெற்றுக் கொண்டு சில இஷ்டருடன் வனத்தை விட்டு வெளிப்பட்டார். அவர் வெளிப்பட்டவுடன் அந்தச் சிங்காரவனத்து மதிட் சுவரில் உடல் மெலிந்து, முதுகு வளைந்து, பார்வை குன்றி அதிக விர்த்தாப்பியமுள்ள ஒரு மனிதன் வாயினீர் தாடி வழியே ஓட, நிற்க சக்தியற்றவனாய்ச் சாய்ந்துகொண்டு நிற்பதைக்கண்டு தம் இஷ்டர்களைப் பார்த்து இந்த மனிதன் இவ்விதமாக நிற்பதேனென்று கேட்டார். இக்கேள்விக்கு அவர்கள் இவனுக்கு வயது முதிர்ந்து விட்டது. அதனால் இப்படியாகி விட்டானென்று பதில் சொன்னார்கள். அப்போது ராஜகுமாரர் பின்னும் அவர்களைப் பார்த்து வயது முதிர்ந்து இப்படியாவது இவனுக்கு மாத்திரம் உரியதா? எல்லா மனிதர்க்கும் உரியதா? வென்று கேட்டார். இது மனிதரெல்லாருக்கும் உண்டுமென்று மறுமொழி சொன்னார்கள். அப்போது ராஜகுமாரர் எவன் இவ்விதமாகப் பாத்தியப்பட்டிருக்கிறானோ, அவன் சுகிக்கும் சுகம் என்ன சுகமென்று சொல்லிவிட்டு பங்களாவுக்குத் திரும்பிவிட்டார். அவர் சொன்ன இந்தச்சொல் தந்தை காதில் விழவே இவ்வித எண்ணத்தை அவர் மனதை விட்டு மாறும்படி ஆட்களுக்கும் கட்டளை பண்ணினார். அந்த ஆட்கள் அப்படியே நாள்தோறும் மாற்றிவிட்டார்கள். பின் ஒரு வருஷத்திற்குப் பிறகு, மேற்படி ராஜகுமாரர் தந்தையின் உத்தரவுப் பிரகாரம் ஒரு நாள சிங்காரவனத்தை விட்டு வெளிப்புரப்பட்டார். அப்போது ஒரு வாலிபன் சரீரமுழுதும் ரணங்கொண்டு சீழ் வடிந்து

கொண்டிருக்கவும், அதனால் அவன் நிறங்குன்றி உருமாறினவனாய் உபத்திரவம் தாங்கமாட்டாமல் எவரிடத்திலும் முறையிட்டுக் கொண்டிருக்கவும், மேற்படி இராஜகுமாரர் கண்டு தம் இஷ்டர்களைப் பார்த்து இவனுடைய காரியம் என்ன வென்றுகேட்டார். அதற்கு அவர்கள் இவனுக்குத் தாங்கக்கூடாத ரணவியாதி கண்டிருக்கிறதென்றார். இந்த வியாதி இவனுக்கு மாத்திரம் வந்ததா? எல்லாருக்கும் வருமா? யென்று இராஜகுமாரர் கேட்டார். இக்கேள்விக்கு அவர்கள் எல்லாருக்கும் வருமென்று விடை சொன்னார்கள். அப்போது இராஜகுமாரர் எவன் இவ்வித வியாதிகளுக்கு உடலெடுத்தானோ அவனுடைய சுகம் என்ன சுகமென்று சொல்லிவிட்டுப் பங்களாவுக்குத் திரும்பி விட்டார். இந்தச் சொல்லையும் தகப்பனார் கேள்விப்பட்டு, அவர் எண்ணத்தை முன்போலவே மாற்றும்படி கட்டளை பண்ணினார் அப்படியே மாற்றிவிட்டார்கள். மறுபடியும் ஒருவருஷம் சென்றபின் மேற்படி இராஜகுமாரர் முன்போலவே தோட்டத்திலிருந்து வெளிப்பட்டார். அப்போது நாலு பேர் கூடி ஒரு மையத்தை அடக்குவதற்காகச் சுமந்துகொண்டு வந்தார்கள். இவர் அதைப்பார்த்து இஷ்டர்களிடம் திரும்பி இது என்னவென்று கேட்டார். அதற்கு அவர்கள் இது மையத்து என்று சொன்னார்கள். இராஜகுமாரர் இதை யெங்கே தூக்கிக்கொண்டு போகிறார்களென்று கேட்டார். கபுறுக்குக் கொண்டு போகிறார்களென்று இஷ்டர்கள் சொன்னார்கள், இராஜகுமாரர் கபுறுயென்பது என்னவென்று கேட்டார். அதற்கு இஷ்டர்கள் கபுறுயென்பது ஒரு மண்ணறை அதில் புகுந்தவன் கியாமத்துவரையும் வெளிப்படமாட்டானென்று சொன்னார்கள். உடனே இராஜகுமாரர் அந்த மையத்தைச் சுமந்துகொண்டு போகிரவர்களைப்பார்த்து இதை கீழே இறக்கிவையுங்கள் நான் அதனுடன் பேசவேண்டும் என்றார். அப்படியே இறக்கிவைத்தார்கள இராஜகுமாரர் அந்த மையத்தின் முகத்தை திறந்து மௌத்தானவன் யௌவனப்பிராய முள்ளவனாகவும், கண்கள் மூடப்பட்டவனாகவும், இருக்கக் கண்டு உனக்கு என்ன சம்பவித்ததென்று கேட்டார். அப்போது அந்த மையத்து யாதொரு உசும்புதலும் இல்லாமலிருந்தது. அதை இராஜகுமாரர் பார்த்து இஷ்டர்களிடம் திரும்பி இவன் என்னுடன் பேசாதிருக்க இவனுக்கென்னகேடு பிடித்ததென்று கேட்டார். இக்கேள்விக்கு அவர்கள் இவனிறந்து போனவன் பேசமாட்டான். இனி கபுறில் மலக்குகளுடன் பேசுவானென்று மறுமொழி சொன்னார்கள். அப்போது

இராஜகுமாரர் இவனை அடக்கக்கொண்டுபோகிற கபுறுக்கு என்னை யும் அழைத்துக்கொண்டு போங்கள். நானதைப் பார்க்க வேண்டு மென்று சொன்னார். அப்படியே மையத்தைத் தூக்கிக் கொண்டு இருவரையு மழைத்துக்கொண்டு போனார்கள். இராஜகுமாரர் அங்கே போய் கபுறை பார்த்தவுடன் இந்த மையத்தானவன் கியாமத்து வரையும் இருக்குமிடம் இதுதானே யென்றார். இஷ்டர்கள் ஆமென்றார்கள். பின்னும் அவர் இஷ்டர்களைப்பார்த்து இவ்விதம் மையத்தாய் கபுறில் அடங்கி யிருப்பது இவனுக்கு மாத்திரம் உடையதா எல்லாருக்கும் உடையதாவென்று கேட்டார். இக் கேள்விக்கு அவர்கள் இது எல்லாருக்குமுடையதுதான். நாம் எல் லாரும் இப்படியே மௌத்தாய் கபுறுகளில் அடங்குவோமென்று சொன்னார்கள். இதைக்கேட்ட ராஜகுமாரர் எவனிப்படி மையத் தாய் கபுறில் அடங்க போகிறானோ அவனுடைய வாழ்க்கை என்ன வாழ்க்கை, இப்படியே நாமும் மையத்தாய்ப் போகுந்தருணத்தில் நமக்கு கபுரில் உதவவும் உபயோகப்படவுமான தக்க கருமங்களை இப்போதே தயார் செய்துவைத்துக் கொள்ளவேண்டியது நமக்குக் கடமையல்லவா. இந்தக்காரியம் நாம் இப்போது சுகித்துக் கொண் டிருப்பதைப் பார்க்கிலும் மகா பெரிய காரியமென்று சொல்லிக் கொண்டே தான் ஏறியிருக்கும் வாகனத்தைவிட்டுக் கீழிறங்கி, தம் ஊரைவிட்டும் வனவாசியாக முகம்போனதிக்கில் ஓடினா ரென்பதே.

(நல்லோராகவேண்டிய ஒவ்வொருவரும் இவ்விதமே வீடு வாசல்களையும், மனைவிமக்கள் முதலானவைகளையும் விட்டுவனவாசி களாய்ப் போய்விடவேண்டுமென்பது நமது கருத்தல்ல அப்படி நாம் சொல்லவுமில்லை. இம்மையின் வாழ்க்கை நிலைபெறாது. ஆகை யால், இதில் நம்பிக்கைவைத்து மோசம்போக கூடாதென்பது ஞாபகத்தில் வைத்திருக்கும்படி எச்சரிக்கை பண்ணவேண்டியே இந்த கிஸ்ஸாவை நாம இங்கே எழுதினோம்.

ஆகையால் முஸ்லிமான சகோதரர்களே! துன்யாவானது அழிந்துபோவதும், மனிதர்களை மருட்டி மோசஞ்செய்வதும், ஷைத்தானானவன் எவ்விதத்திலும் மனிதர்களைக்கெடுத்து வழிக் கேட்டில் இழுத்துவிட எண்ண முள்ளவனும், நபுஸ் அம்மாரா வானது துன்யாவின்மீது இச்சையும், ஷைத்தானுடைய கோரிக் கைகளுக்கு வழிப்படுவதையும் உடையதுமா யிருப்பதால் நாமெவ்வி தத்திலும் இந்த மூன்று விஷயங்களிலும் மோசம்போகாமல் மகா

எச்சரிப் புடனிருந்து ஸாலிஹான அமல்களைச்செய்து கொண்டு இடைக்கிடைவந்து மருட்டுகிற துன்யாவின் இச்சையையும் ஷைத்தானுடைய கலைத்தலையும் நபுஸுடைய துற்குணத்தையும் எவ்வளவும் அணுகவொட்டாமல் பயபக்தியுடனிருக்க வேண்டியது எல்லார் மீதும் கடமையாம். அப்படியே அல்லாஹுத் தஆலா நம் மனைவர் மனதிலும் துன்யாவின்மீது இச்சை யுண்டாகாமலும் ஷைத்தானுடைய கலைத்தலுக்கு இடம் பாடுண்டாகாமலும் நபுஸுடைய துற்குணத்திற்குவழிப் படாமலும் கார்த்து, ஸாலிஹான அமல்களிலேயே தரிபாடாக்கி நேர்வழியைக்கொடுத்து ஈடேற்றி ரக்ஷிப்பானாக ஆமீன்.

குறாய முடிந்தது.

---

## 13-ம் பஸல்.

## தௌபா.

தௌபா யென்பது மீளுதல். அதாவது:—ஒருவன் தான் செய்த பாவத்தைவிட்டு மீளுதலாம். தௌபாவுக்கு மூன்று *ஷறுத்துகளுண்டு. அவை செய்தபாவத்தைக் குறித்து மனஸ்தாபப் படுதல்: அந்தப்பாவத்தை இனி எப்போதும் செய்வதில்லை என்று கருத்துவைத்தல்: அந்தப் பாவத்தை மறுபடியும் செய்யாமல் விட்டொழிதலாம். ஒருவன் செய்யும் பாவமானது பிரர் சம்பந்த முள்ளதும், பிரர் சம்பந்த மில்லாததுமென்று இரண்டுவகைப் படும். பிரர் சம்மந்தமில்லாத பாவமானது தொழுகை, நோன்பு, ஸக்காத்து, ஹஜ்ஜு முதலானவைகளை விடுவது போன்றவைகள். இவ்விதப் பாவச்செய்கைகளுமுண்டு. அவை:—விஞ செய்தல், கள்ளருந்தல் போன்றவைகள். இவ்விதப் பாவங்களுக்குச் செய்யும் தௌபாவுக்குத்தான் மேற்சொன்ன மூன்று ஷறுத்துகளும் உரியவை. இனி பிரர் சம்பந்தமுள்ள பாவமானது கொலை, களவு, புறம்பேசுதல் முதலியவைகளாம. இவ்விதப் பாவங்களுக்குச் செய்யும் தௌபாவுக்கு மேற்சொன்ன மூன்று ஷறுத்துகளுடன் செய்த பாவத்தினல் விக்கினப்பட்ட பிறரிடத்தில் நிவர்த்தி பண்ணிக்கொள்ளுதலும் கூடிய நான்கு ஷறுத்துகளுண்டு. அதன் விவரமாவது ஒருவன் ஒருவனைக் கொன்றுவிட்டால் அல்லது காயப்படுத்தினல், கொல்லப்பட்டவனுடைய பாத்தியகாரனிடத

---

* ஷறுத்து-கடமை.

தில் மன்னிப்புக் கேட்குதல், காயப்பட்டவனிடத்திலும், அவன் இல்லாவிட்டால் அவனுடைய பாத்தியக்காரனிடத்திலும் மன்னிப்புக் கேட்குதல், ஒருவன் ஒருவனைப் புறம்பேசினால் பேசினவன் பேசப் பட்டவனிடத்தில் மன்னிப்புக் கேட்குதல், இல்லாததைப் பற்றி புறப்பேசினால் ஒருவனைப்பற்றி எவனிடத்தில் பேசினானோ அவனிடம் பேசினவன்போய் நான் இன்னானைப்பற்றிப் பேசினது பொய் இதை நீ யறிந்துகொள்ளென்று சொல்லி விட்டு, பேசப் பட்டவனிடம்போய் நான் உன்னைப்பற்றி இன்னானிடத்தில் பொய் பேசினேன். அதை நீ மன்னிக்கவேண்டுமென்று மன்னிப்புக் கேட்குதல். ஒருவன் ஒருவனுடைய பொருளைத் திருடிக்கொண்டால் திருடினவன் அந்தப்பொருளை திருடப்பட்டவனிடத்திற் கொண்டு போய்க் கொடுத்துவிட்டு மன்னிப்புக்கேட்குதல்: திருடப் பட்டவன் இல்லாவிட்டால் அவனுடைய நியாயமான பாத்தியக்காரனிடத்திற் கொண்டு போய்க் கொடுத்துவிட்டு மன்னிப்புக் கேட்குதல்: திருடப்பட்டவன் மௌத்தாய் அவனுடைய பாத்தியக்காரனும் இல்லாவிட்டால் அந்தப்பொருள் பொறுமான தொகையை அல்லது பொருளை ஏழைகளுக்கு ஸதக்காவாகக் கொடுத்து அந்த தவாபைத் திருடப்பட்டவனுக்குச் சேர்க்கும்படி துஆசெய்தல்: ஒருவனுடைய பொருளை ஒருவன் திருடினதல்லாமல் தட்டி முதலான எவ்வித நியாய விரோதமாகவாவது அபகரித்துக் கொண்டாலும் மேற்சொன்னபடியே நிவர்த்திச் செய்துகொள்ளவேண்டும். இனி திருடினாலாவது நியாய விரோதத்தினாலாவது, ஒருவனுடைய பொருளை ஒருவன் பெற்று கொண்டபின் அந்தப் பொருளையுடையவ னின்னானென்று அறியக் கூடாவிட்டால், அந்தப்பொருளை அல்லது அது பொறும்படியான தொகையையுடையவனை அறிந்தால் இனிக்கொடுத்துவிடலாமென்ற யெண்ணத்துடன் ஏழைகளுக்குச் ஸதக்காவாகக்கொடுக்க வேண்டியது. இவ்விதப் பொருளின்தொகை தெரியாவிட்டால் அது இவ்வளவதாயிருக்குமென்று கூடிய பிரயாசையுடன் நிதானித்துக்கொடுக்க வேண்டியது. இனி திருடியோ, நியாய விரோதமாயோ பெற்ற பொருளையுடையவனுக்குக் கொடுத்து விடச் சக்தியற்றிருந்தால், உடையவனிடம்போய்த் தெரிவித்து மன்னிப்புப் பெற்றுக் கொள்ளவேண்டியது.

இவ்வித நிவர்த்தி செய்வதெல்லாம் மேற்சொன்ன மூன்று ஷுறுத்துகளுடனேயே செய்யவேண்டியது. ஒவ்வொரு பாவத்துக்

கும் பாவத்துக்கு தக்கபடி இவ்வித நான்கு ஷுறுத்துகளுடன் தெளபா செய்யப்பட்டதோ அந்தப் பாவத்துக்கு மறுதலைபான நன்மையைச் செய்யவேண்டும்; எதுபோலவென்றால் கெட்ட விஷ யம் நடக்கும் இடத்தில் ஒருவன்போனுல் அவன் அதற்கு தெளபா செய்ததுபோலாம். அப்படிச் செய்வதுடன் அந்தப் பாவத்தை மன்னிக்கவேண்டுமென்று அல்லாஹுத் தஆலா இடம் மனவருத் தத்துடன் இரந்து கேட்கவும். இதைத்தான் *இஸ்திருபாது யென்று சொல்லுவார்கள்.

பறுது முதலான கருமங்களை விட்டுவிட பாவத்திற்கு மேற் சொன்னபடி தெளபாசெய்து மீளுவதுடன் அந்தக் கருமங்களை கலாசெய்யவேண்டியது.

இனி ஒரு முஸ்லிமானவன் மற்றொரு முஸ்லிமானவனுக்கு விக்கினமுண்டாக மேற்சொன்னபடி செய்தபாவங்களுக்கு தெளபா செய்யவேண்டும். இப்படித் தெளபா செய்யாவிட்டால் கியாமத் தில், செய்தவன் செய்யப்பட்டவனுக்கு உத்திரவாதியாவான். திம் மிக் காபிருக்கு விக்கினமுண்டாக ஒரு பாவத்தைச் செய்துவிட் டால் கியாமத்தில் அந்தக் காபிருக்கு உத்தரவாதஞ்செய்ய இட மில்லை. ஆகையால் துன்யாவிலேயே மேற்சொன்ன ஷுறுத்து களுடன் (ஸதக்காக கொடுத்தல், துஆ செய்தல் போன்றவை நீங்க) தெளபாசெய்து பரிகரித்துக் கொள்ளவேண்டும். அப்படிக் கொள்ளாவிட்டால் அந்தப் பாவத்துக்கும் பிரதி வேதனையே தவிர நிவர்த்தியில்லை. ஹைவான்களுக்கு விக்கினமுண்டாக ஒரு பாவத் தைச் செய்துவிட்டால் அதற்குப் பிரதி வேதனையே தவிரப் பரி கார மில்லை. ஆகையால் ஹைவான்களுக்கும் எவ்விதமான விக்கின மும் உண்டாக்காமலிருப்பது முக்கிய கடனும்.

பிறருக்கு விக்கினமுண்டாகும்படியாகச் செய்யும் பாவங் களுக்கு மேற்சொன்ன நிவர்த்திகளுடன் தெளபாச் செய்தால் மாத்திரம் கபூலாகுமல்லாமல், இவ்வித நிவர்த்தி செய்யாமல் செய் யப்படும் தெளபா ஒருபோதும் கபூலாகமாட்டாது.

ஆகையால் முஸ்லிமான சகோதரர்களே! நாம் முக்கியமாய்ப் பாவமான விஷயங்களில் ஒரு சிறிய பாவத்தையாவது மனதாரச் செய்வதை விட்டு, மகா எச்சரிப்புடனிருக்கவேண்டும். அப்படி இருந்தும் அவ்வித பாவங்களிலொன்றை எவ்விதமாகவாவது

* இஸ்திருபாறு-பாவமன்னிப்புக் கேட்குதல்.

செய்துவிட்டால் மேற்சொன்னபடி உடனே தௌபாசெய்து மீள வேண்டியது. அதைவிட முக்கியமாம் இன்னும் பாவத்துக்குப் பரீகாரமாக தௌபா ஒன்று இருக்கிறதென்கிற தைரியத்துடன் ஒரு பாவத்தைச் செய்துவிட்டு தௌபா செய்துவிடலாமென்கிற எண்ணங்கொண்டு ஒரு சிரிய பாவத்தைக்கூடச் செய்யக்கூடாது. அப்படி எண்ணிச்செய்தால் சிரிய பாவமும் பெரிய பாவமாய்விடும். இப்படி எண்ணங்கொள்வதை அல்லாஹு தஆலா அறிந்திருக்கிறுன். அது எஜமான் துரோகமும் ஆகும். இன்னும் செய்த பாவத்துக்கு நிவர்த்தியாக உடனே செய்து கொள்ளவேண்டிய தௌபாவை தவணை போட்டு இன்று செய்யலாம் நாளை செய்யலாமென்று நாட்களைப் போக்கக்கூடாது. அல்லாஹு தஆலா நாம் யாதொரு பாவத்தையுஞ் செய்யாமல் பாதுகாத்து, செய்தபாவங்களுக்கு தௌபாசெய்யும்படி நல்லுதவிசெய்து, அந்த தௌபா கபூல் செய்து பிழை பொருத்து ரக்ஷிப்பானுக ஆமீன்.

தௌபா முடிந்தது.

---

## 14-ம் பஸல்.

## ஸக்கருத்து.

ஸக்கருத்தென்பது ஐம்பொறிகளும் ஒடுங்கி யடங்கி அனுபவித்தவையெல்லாம் மறைந்து போகும்படியான ஒருவித மயக்கம். அது மௌத்துக்கு அடையாளமாய் அதற்கு முன்னுண்டாம். ஸக்கருத்தில் ஆகிருவைச் சேர்ந்த விஷயங்களனைத்தும் வெளியாகும். அன்றியும் துன்யாவில் மறைக்கப் பட்டிருந்தவைகளும் வெளிப்படும். ரூஹை கைப்பற்றவரும் மலக்கல் மௌத்து அலைஹிஸ்ஸலா மவர்களையும், இன்னும் பல மலக்குகளையும், மௌத்தான மனிதர்களையும் அப்போது காணக்கூடும். நன்மை தீமைகளின் பட்டோலைகளும் காட்டப்படும். இனி அடையப்போகிற கதியின்னதென்றும் அப்போது தெரியும். ஒருவன் ஸக்கருத்தை அநுபவிக்கும்போது அவனுக்கு அச்சமும், துயரமும், கைசேதமும் மதிகரிக்கும். தான்செய்த பாவங்களால் இனிப்படும் அதாபின் பயங்கரமான காக்ஷிகளைக் கண்டு நடுங்குவான். இன்னும் ஸக்கருத்து வேளையிலதை யனுபவிக்கிறவன் யாரானுலுஞ்சரி அவர்களுடைய ஈமானைக் கொடுக்கவேண்டுமென்று இப்லீஸ் வந்து, அதற்கு ஆகுமான அநேக விதக் குபுறு வார்த்தைகளைச் சொல்லும்படி

பலவிதத் தந்திரங்கள் செய்வான். அவனை இபுலீஸென்றும் அவன் சொல்லுந்தரமான வார்த்தைகள் குபுறுயென்றும் அறியாதவர்கள் அதற்கு உட்பட்டு, ஈமானை யிழந்துவிடுவார்கள். ஈமானுக்கு விரோதமான சொல், செயல் உருதியனைத்தையுந் தெளிவா யறிந்தவர்கள் அந்த அபாயத்தை விட்டுத் தப்பித்துக்கொள்வார்கள். யார் யாரெந்தந்த கருமங்களை துன்யாவில் அப்பியாசப்படுத்தி வந்தார்களோ, முக்கியமாய் அதுவே ஸக்ராத்தில் மேலிடும். கலிமாவை அப்பியாசப் படுத்தினவர்களுக்குக் கலிமாவும், வீண்வார்த்தைகளை அப்பியாசப் படுததினவர்களுக்கு அவ்வீண் வார்த்தைகளுமே ஸக்கறுத்தில் தானுக நாவில் நடக்கும், அதைத் தடுக்க எவராலும் எவ்விதமுங் கூடாது. நபி நயாகமவர்கள் திருவாய் மலர்ந்து "நீங்கள் உயிரோடிருக்கையில் எப்படி யிருந்திர்களோ அப்படி மௌத்தாவீர்கள், எப்படி மௌத்தானீர்களோ அப்படி யெழுப்பப் படுவீர்கள்" என்று சொல்லியிருக்கிறுர்கள். ஸக்றுத்தில் கியாமத்து அடையாளங்கள் அடங்கலும்தோற்றுவாம். பெரிய கியாமமாகிய துன்யாவின் அழிவுக்குப் பல அடையாளங்கள் இருப்பது போல்சிறிய கியாமமாகிய மௌத்துக்கு ஸக்கறுத்துத்தான் அடையாளம்.

ஸக்கறுத்தானது பெரும்பாலும் அபாயத்திற்கு இடம்பாடானது. அந்த வேளையில் இபுலீஸ் பல வகையிலும் முன்னுக்கு வருவான். ஸக்றுத்தை அனுபவிக்கிறவர்களுக்கு மகா கொடுமையான வருத்தமும், திட்டுமுட்டு, திகிலடியும், ஆயாசமும், களைப்பும், தாகமும், நாவரட்சியும், பலவிதச் சங்கடங்களும் அதிகப்பட்டிருக்கும். தாங்கக்கூடாத தாகத்தினுல் நாவரண்டு தவிக்கும்போது, இபுலீஸ் தண்ணீர் கொண்டுவந்து அருகில் நின்று, இதோபார் தண்ணீர் குடிக்க விரும்பினுல் தருகிறேன் நான், அதைமாத்திரம் நீ சொல்லென்று ஆசைகாட்டி பல விதக் குபுறு வார்த்தைகளைச் சொல்லிச்சொல்லி ஏமாற்றுவான். அவன் சொல்லச் சொல்லுஞ் சொற்கள் குபுறுயென்று கண்டயறிக்கூடாத தந்திரமான வகையாகவுமிருக்கும். இன்னும் அவன் நான் சொல்வதைச்சொல் உனக்குள்ள சகல வருத்தங்களும் தீர்ந்துபோமென்றும், இன்னும் பலவிதமான வழிகேட்டிற்கு ஏதுவான போதனைகளையும் ஆசை காட்டுவான். ஸாலிஹான அமல்களைச் செய்துவந்த அதிஷ்டவான்கள் அவன் கபடமோசத்திற்கு உட்படமாட்டார்கள்.

ஒருவனுக்குச் சாகுமளவும் எவ்விதத் துன்பமும், துயரமும், வருத்தமுஞ்சிறிதும் இல்லாதிருந்தாலும், அவனுக்கு ஸக்கறாத்து வருத்தமுண்டாவது நிச்சயம். ஆகையால் அவன் அதைப்பற்றி இராப்பகல் துக்கத்தில் முழுகி சகல சுகங்களையும் விட்டொழித்துத் துக்கப்படவேண்டியதல்லாமல் சகித்துக்கொண்டிருப்பது தகுதி யல்ல. ஸக்கறாத்து வருத்தம் அதை அனுபவித்தவனுக்கே இப்படி யென்றுந் தெரியுமல்லாமல், மற்றவர்களுக் கெவ்விதமெடுத்துச் சொன்னாலும் எவவளவுந்தெரியாது. மௌத்தான ஒருவன் மீண்டு வந்து தான்பட்ட ஸக்றாத்து வருத்தத்தை மனிதர்களுக்குத் தெரி விப்பானானால், அவர்களதை இப்படியென்று தெரிந்துகொள்ளா விட்டாலும் அவன் சொல்லிகாட்டும மாதிரியிலேயே திகில்கொண்டு துன்யாவின் சுகத்தை அறவே மறந்து, இனி ஒருபோதும் அதில் பிரவேசிக்க மாட்டார்கள். ஒருவன் அனுபவிக்கும் ஸக்கறாத்து வருத்தத்தில், ஒரு ரோமக்கா லத்தனையெடுத்து, வானத்துடைய வர்கள் பூமியை யுடையவர்களாகிய எல்லார்மீதும் வைத்தால் அதைத் தாங்கமாட்டாமல் அவர்கள் அனைவரும் ஒருமிக்க மடிந்து போவார்கள். அதில் அணுவளவுமெடுத்து எல்லா மலைகள்மீதும் வைத்தால் அவைகள் உருகிப்போம். அந்த வருத்தம் உடலையும், றூஹையும் பற்றிப் பிடித்து வருததப்படுவதாகையால் தான் அது இப்படி யென்று அறியக்கூடாத கொடுமையான வருத்த மென்று சொல்லப்படுகின்றது. ஸக்கறாத்தை நஜூஉஹூஉயென்று சொல்வார்கள். நஜூஉஹூஉ என்பதற்குப் பிடுங்குதலென்பது பொருள். உடலிற் பரவி நிற்கும் றூஹைப் பிடுங்குவதால்தான் ஸக்கறாத்துக்கு நஜூஉஹூஉவென்று பெயர்கிடைத்தது. ஒருவனுக்கு ஸக்கறாத்து வந்திட்டபின் அவனுடைய றூஹைகாலின் பெரு விரல் தொடங்கிக் கொஞ்சங் கொஞ்சமாய் வாங்குவார்கள். தொண் டைக் குழியில் வந்தபோது அவனுடைய தௌபா வாசல் அடைப் படும். அதன்பின் அவன் தௌபா செய்வது பிரயோஜனந் தராது.

ஸக்கறாத்தில் பயங்கரமான மூன்று சங்கடங்களுண்டு. அவற் றில் முதலாவது ஸக்கறாத்து வருத்தம், இரண்டாவது மலக்கல் மௌத்து அலைஹிஸ்ஸலாமவர்கள முதலான மலக்குகளைக்காணும் பயங்கரமான காக்ஷி, மூன்றாவது அனுபவிக்கப் போகிற நரக வேதனைகளைப் பாரகுதல். இந்த மூன்று சங்கடங்களும பாவிக் குத்தான் நேரிடும். ஸாலிஹானவர்களுக்கு ஸக்கறாத்தின் விஷயங்

களெல்லாம் இலகுவாயிருக்கும். நல்லவனுக்கும் சரி, கெட்டவனுக்கும் சரி, ஸக்கறுத்திலேயே நீ சுவர்க்கம் புகுதுவாய், நீ நரகம் புகுதுவாயென்று தெரிவிக்கப்படும்.

இன்னும் ஸக்கறுத்தில் நற்குறி மூன்றும் துற்குறி மூன்றும் உண்டு. நற்குறிகளாவன :—ஸக்கறுத்து வேளையில் உடல் உசம்புதலின்றி ஒடுங்கி யடங்கி நெற்றி வியர்ப்பதும், கண்களில் நீர் ததும்புவதும், உதடுகள் உலர்ந்திருப்பதுமாம். துற்குறிகளாவன :—கழுத்திற் சுருக்கிவிட்டார்போல் உறுமுவதும், உடல் சிவந்து தோற்றுவதும், உதடுகள் சாம்மல் பூத்திருப்பதுமாம். ஸக்கறுத்தை அனுபவிக்கிறவனைச் சூழ்ந்திருப்பவர்கள் அவன் முகத்தை கிபுலாபுறம் திருப்பிவைத்து கலிமாவை மெல்லாவாகச் சொல்லிக் கொடுக்கவேண்டும்.

ஸக்கறுத்தின் முடிவு ஹுஸ்னுல் காத்திமா யென்றும், சூவுல் காத்திமாயென்றும், இருவகைப்படும். ஹுஸ்னுல் காத்திமா யென்பது அழகிய முடிவு. அது ஈமானுடன் மௌத்தாவதாம். சூவுல் காத்திமாவென்பது கெட்டமுடிவு. அது ஈமான்மாறி மௌத்தாவதாம். அல்லாஹு தஆலாவுடைய திக்றை மறவாம லிருப்பதும, அவனுடைய அச்சத்தை மனதில் பதியவைத்திருப்பதும், மார்க்கத்தை பேணி நடப்பதும், நற்கருமங்களைச் செய்வதும், துற்குணங்களை விலக்கி நற்கருமங்களில் பழகிக்கொண்டிருப்பதும், ஆகிறவின் ஆசை அதிகமாயிருப்பதும், மௌத்தில் வரும் மோசங்களை நினைத்து நினைத்து அச்சத்துடன் எச்சரிக்கையா யிருப்பதும், ஈமானுக்குப் பழுதை வருத்தும் சொல்லையும், செயலையும், எண்ணத்தையும் சுத்தமாகத் தெரிந்துகொண்டு அவை அணுகாமல் நடந்து கொள்வதும், வருகிற நஷ்டங்களைப் பொறுத்திருப்பதும், மனம் வாக்குக் காயமாகிய முப்பொறிகளும், ஒத்துப் பரிசுத்தமாய் வணங்குவதும், இன்னுமுள்ள நன்மையான விஷயங்களும், ஹுஸ்னுல் காத்திமாவைத்தரும். ஹலாலை ஹறாமென்றும, ஹறாமை ஹலாலென்றும் எண்ணி நடப்பதும், அறியா மலாயினும் குபுறுவார்த்தைகளைச் சொல்வதும், மார்க்கத்திற்கு விரோதமான சொல்லைச் சொல்வதும், செயலைச் செய்வதும, எண்ணத்தை யெண்ணுவதும், மற்றுமுள்ள தீமையான விஷயங்களும், சூவுல்காத்திமாவில் கொண்டு போய் விடும. பெரும்பாலும ஸககறுத்தில்தான் ஈமான் பறிபடும். பெரியோரனைவரும ஸக்கறுத்தையும், காத்திமாவையும் பற்றி மிக

பயந்திருக்கிறார்கள். நபிநாயகமவர்களும், ஸக்கறாத்தின் கொடுமை தாங்கக்கூடாது யென்றறிந்து உங்களுக்கு அதை இலகு படுத்த வேண்டுமென்று அல்லாஹுதஆலாவிடம் பலதரம் துஆ கேட்டிருக்கிறார்கள். மற்ற நபிமார்களும் அப்படியே கேட்டிருக்கிறார்கள்.

ஸாலிஹானவனுடைய ஸக்கறாத்தில் நபிநாயகமவர்களும் ஜிபுரயீல் அலைஹிஸ்ஸலாமவர்களும், றூஹுமத்துடைய மலக்குகளும் வந்து சந்திப்பார்கள். ஜிபுரயீல் அலைஹிஸ்ஸலாமவர்களும் தங்கள் சிறகினால் அவனுடைய முகத்தைத் தடவி நபி நாயகமவர்களை அவனுக்குக் காட்டி, இவர்கள் தாம் உன்னுடைய நபி முஹம்மது. இவர்களுக்கு நீ கலிமாச்சொல்லென்று சொல்லிக் கொடுப்பார்கள். அப்போது இபுலீசுடைய மாயாஜாலம் அங்கே பலிக்காது வெருண்டோடுவான்.

ஒவ்வொருவனுக்கும் ஸக்கறாத்து நடந்து றூஹு தொண்டைக் குழியில் வந்து தௌபா வாசலும் அடைப்பட்டு மௌத்து நெருக்கமானவுடன், அவனுடைய உறுப்புகள் ஒன்றுக்கொன்று பிரிவுக்காக ஸலாஞ் சொல்லிக்கொள்ளும். றூஹு உடலுக்கு ஸலாஞ்சொல்லும். அந்த வேளையில் ஒருவர் பின் ஒருவராக நான்கு மலக்குகள் வருவார்கள். அவர்களில் முதலாவதாக றிஸ்க்குடைய மலக்கு வந்து அவனைப் பார்த்து உலகமெங்கும் தேடினேன். இனி உனக்கு அணுவளவு றிஸ்குமில்லையென்று சொல்லுவார்கள். இரண்டாவதாகக் குடிப்புடைய மலக்குவந்து அப்படியே சொல்வார்கள். மூன்றாவதாக மூச்சுடைய மலக்குவந்து அப்படியே சொல்லுவார்கள். நாலாவதாகத் தவணையுடைய மலக்குவந்து அப்படியே சொல்லுவார்கள். அதன்பின் கடைசியாகக் கிராமன், காத்திபீன் என்னும இரண்டு மலக்குகளும் வருவார்கள்.

இந்த இரண்டு மலக்குகளும் அவனவன் பிறந்தது முதலாக மௌத்துவரையும் ஒவ்வொருவனிடத்திலும், சாட்டப்பட்டவர்கள். இதுபோல ஜின்னுக்கும், ஷைத்தானுக்கும் சாட்டப்பட்டிருப்பார்கள். இந்த இரண்டு மலக்குகளும் ஹபலத்தென்னும் பெயர் சொல்லப்படும். ஹபலத்தென்பதற்குக் காவற்காரரென்பது அர்த்தம். இரவும் பகலும் அவனைப் பிரியாதிருந்து அவனுக்கு நேரிடும் ஆபத்துகளை விலக்கி பாதுகாத்துக் கொண்டிருப்பார்கள். ஒரு மலக்கு அவனுடைய வலதுபுறம் ஒரு மலக்கு இடதுபுறமாயிருப்பார்கள். அவன் உட்கார்ந்திருந்தால் அவர்களும் வலமும் இடமு

மாய் உட்கார்ந்திருப்பார்கள். நடந்தால் முன்னும், பின்னுமாய் நடப்பார்கள். படுத்தால் தலைமாட்டிலும், கால்மாட்டிலுமாய் நிற்பார்கள். ஆனால் அவன் ஜிமாஃ செய்யும்போது மலஜலோபாதைக்கு இருக்கும்போது மாத்திரம் அவனை விட்டுப் பிரிந்து தப்புரவானவுடன் சேர்ந்து கொள்வார்கள்.

இன்னும் அந்த மலக்குகள் அவனுடைய நன்மை தீமைகளான சொல், செயல், நினைப்பு எல்லாவற்றையும் ஒன்று விடாமல் எழுதி வருவார்கள். அவன் முனங்கும் முனக்கம் முதலாய் எழுதப்படும். அப்படியெழுதி வருவதானுலேதான் அவர்களுக்குக் கிராமன்-காத்திபீனென்று பெயர். வலது புறத்தில் இருக்கும் மலக்கு நன்மையும் இடது புறத்திலிருக்கும் மலக்கு தீமையையும் எழுதுவார்கள். நன்மையானல் உடனே எழுதப்படும். தீமையானல் உடனே எழுதத் தொடங்கும்போது நன்மை எழுதுகிற மலக்கு அதை எழுதவிடாமல் தடுத்துக் கொஞ்சம் பொறும், இவன் தௌபாசெய்தாலுஞ் செய்வானென்று சொல்லுவார்கள். அதனல் அதை எழுதாமல் ஒரு ஸாஅத்தாகிய இரண்டரை நாழிகை நேரமட்டும் நிறுத்திவைப்பார்கள். இதற்கிடையில் அவன் அந்தத் தீமைக்கு தௌபா செய்து விட்டால் எழுதமாட்டார்கள். இல்லாவிட்டால் எழுதி விடுவார்கள். அதற்கு நன்மையை எழுதுகிற மலக்கிடம் சாக்ஷி வாங்குவார்கள். இப்படியே ஒவ்வொருவனுக்கும் பகல் முழுவதும் ஒரு புஸ்தகமும், இராமுழுவதும் ஒரு புஸ்தகமுமாக, நாளொன்றிற்கு இரண்டு புஸ்தகங்கள் எழுதப்பட்டு, வருஷத்திற்கொருதரம் ஷஃபான் மாசத்துப் பதினைந்தாம் இரவில் ஒன்றுகச் சேர்த்து, ஒரு கட்டாகக் கட்டிவைப்பார்கள். இவ்விதம வருஷத்திற்கொரு கட்டாகச்சேர்த்து வருவார்கள்.

மேற்சொன்னபடி ஸக்கறுத்தில் மௌத்து முடுகினபோது அந்த இரண்டு மலக்குகளும் மேற்படிப் பட்டோலைப் புஸ்தகக் கட்டுகளைக் கொணர்ந்து அவனுக்குக் காட்டிபடித்து பாரென்று சொல்வார்கள், அவன் அதைப் படித்து நன்மை அதிகமாயிருந்தால் சந்தோஷமும், தீமை அதிகமாயிருந்தால் துயரமும் படுவான. பின்பு அந்த மலக்குகள் அந்தக் கட்டுகளை ஒன்றுகச் சேர்த்துக கட்டுக்கட்டி முத்திரையிட்டு, அவன் கழுத்தில் மாட்டி விடுவார்கள். இனி கியாமத்தில் அந்தக் கட்டுடன்தான் எழுந்திருப்பான.

ஆகையால் முஸ்லிமான சகோதரர்களே! இப்படிப்பட்ட ஸக்கறுத்து இலகுவாகும்படிக்கும், அந்த வேளையில் இபுலீஸ் வந்து

கலைக்காத படிக்கும் ஞவுல் காத்திமா வந்து சேரிடாமல் ஹுஸ்னுல் காத்திமா கிடைக்கும் படிக்கும், தக்கபடி நடந்து கொள்வதும் அனைவர் மீதும் கடனும். அல்லாஹு தஆலா அப்படியே நமக்குக் கிருபை செய்து நல்லுதவி புரிவானுக ஆமீன்.

ஸக்கருத்து முடிந்தது.

---

## 15-ம் பஸல்.

## மௌத்து.

மௌத்தென்பது மரணம். அது உடலை விட்டு றூஹுபிரிவதாம். றூஹு பிரிந்தபோது உடல் பிரேதமாகும். அவ்விதம் உடலையும், றூஹையும் பிரிப்பதற்காக அல்லாஹு தஆலா ஒரு மலக்கை நியமித்திருக்கிறுன். அவர்கள் பெயர் இஸ்றுயீல் மலக்கல் மௌத்தென்றும் சொல்வார்.

மௌத்தை அனுப்பிப்பது மனிதர் முதல் எல்லா ஜீவன்கள் மீதும் விதி ஆனதால் ஜீவராசிகள் அனைத்தும் இறப்பது நிச்சயம். ஒருவனுக்கு மௌத்து ஒரு காரணம் பற்றியும் வரும். பற்றுமலும் வரும். காரணம்பற்றி மௌத்து வியாதியில் மௌத்தாவது, காரணம் பற்ருத மௌத்து திடீறென்று வரும் சடுதி மரணம்.

மௌத்திஞலுண்டாகும் வருத்தம் கூரிய வாளினுல் ஆயிரம் வெட்டுப்படுவதைப் பார்க்கிலும் அதிகக் கொடுமையாயிருக்கும், மௌத்தின் வருத்தத்தில் ஒரு ரோமக்காலத்தனை யெடுத்து எல்லா ஜீவராசிகள் மீதும் வைத்தால் அதை தாங்க மாட்டாமல் ஒரு மிக்க மடிந்துபோகும். எல்லா ஜீவராசிகளும் தாங்கக்கூடாத மௌத்திஞுடைய முழு வருத்தத்தையும் ஒவ்வொரு ஜீவனும் அனுபவிக்க வேண்டியதாயிருக்கின்றது.

மௌத்து வருவதற்கு ஒவ்வொருவருக்கும் தவணை குறிக்கப் பட்டிருக்கின்றது. அந்தத் தவணை ஆனபோது அதற்கு ஒரு க்ஷணப்பொழுது முந்தாமலும், பிந்தாமலும் மௌத்தாவார்கள். அந்தத் தவணைக்கு க்ஷணப்பொழுது தாமதிக்க வேண்டுமென்று எவ்விதம் கெஞ்சி மன்றுடினுலும மலக்கல மௌத்து அலைஹிஸ்ஸலாமவர்கள உடன்படமாட்டார்கள். மௌத்தை விட்டுத் தப்பிக் கொள்வதற்கு எந்தப் பிராணிக்கும் சக்தியில்லை. ஒருவனுக்குத் தவணையானபோது அவன் எந்தத் தலத்தில் எவ்வித மறைவில்

என்ன பந்தோபஸ்திலிருந்த போதிலும் அவனை மௌத்துப் பிடித்துக்கொள்ளும். மௌத்தின் தவணை யின்னகாலத்தி லின்னவேளையில் இன்னவிடத்தில் இன்னவிதம் தனக்கு வருமென்று எவனும் அறியமாட்டான். மௌத்து திடுகூறாய் வந்து பிடித்துக்கொள்ளும். அப்போது யாராயிருந்தாலும் கைசேதப்படாமற் போகமாட்டார்கள். எவ்விதங் கட்டுக் காவலி லிருந்தாலும், எங்கே ஓடி யொளித்தாலும் மௌத்து விடாது. இன்னான் யின்ன காலத்திலின்ன நேரத்தில் மௌத்திருந்தால் அந்த நேரத்திலேயே மௌத்தாவான். அதை யவனறிய மாட்டான். இதற்கு ஒரு திருஷ்டாந்தம் :—

முற்காலத்தில் மலக்கல் மௌத்து அலைஹிஸ்ஸலாமவர்களை எல்லாரும் நேரிற் காண்பது வழக்கம். ஒருநாள் அவர்கள் நபி ஸுலைமான் அலைஹிஸ்ஸலா மவர்களின் சபையில் வந்து அங்கிருந்த ஒரு பாவியரை உறுக்கிப் பார்த்து விட்டுப்போனார்கள்: அந்தப் பாவியர் உடனே நபியவர்களிடம், நபியே! மலக்கல் மௌத்து வந்து என்னை உறுக்கிப் பார்த்து விட்டுப் போகிறார். அதனாலெனக்கு அச்சமாயிருக்கின்றது. தாங்கள் தயவுசெய்து இப்போதே என்னைச் சீனாராஜ்ஜியத்திற்கொண்டு போய் விட்டுவிடும்படி காற்றுக்கு உத்திரவு செய்யவேண்டுமென்று கேட்டார். அப்படியே காற்றுக்கு உத்திரவு கொடுத்தார். காற்று அவரைச் சீனாராஜ்ஜியத்தில் உடனே கொண்டுபோய் விட்டுவிட்டது. பிறகு மலக்கல் மௌத்து அலைஹிஸ்ஸலாமவர்கள் நபியவர்கள் சபைக்கு வரவே, அவர்களை நபியவர்கள் பார்த்து தாங்களந்த பாவியரை ஏன் உறுக்கிப் பார்த்தீர்களென்று கேட்டார்கள். அதற்கு மலக்கல் மௌத்து அலைஹிஸ்ஸலாமவர்கள் நபியே! அந்தப் பாவியரின் ரூஹை இன்றைக்குச் சீனாராஜ்ஜியத்தில் கைப்பற்றும்படி கட்டளை பிறந்திருக்கின்றது. அப்படி இருக்க அவர் இங்கிருக்கிறாரே, இங்கிருந்து இன்றைக்கே எப்படி சீனாவுக்கு போவாரென்று தான் உறுக்கிப் பார்த்தேனென்று பதில் சொன்னார்கள். இதைக்கேட்ட நபியவர்கள் "அவர் தங்களைக் கண்டு பயந்து சீனாவுக்குத் தம்மை அனுப்பிவிடும்படித் தாமாகக் கேட்டுக்கொண்டார். அப்படியே காற்று அவரை யங்கே கொண்டுபோய் விட்டுவிட்டது" என்று சொன்னார்கள். மலக்கல் மௌத்து அலைஹிஸ்ஸலாமவர்கள் இதைக்கேட்டு உடனே அங்குபோய் அவருடைய ரூஹை கைப்பற்றினார்களென்று (தூர்துல் ஹிஸான்) என்னும் அரபி கிரந்தம் சொல்லுகின்றது.

மௌத்து முடுகினபோது அநேகர் நான் துன்யாவில் அல்லாஹு தஆலாவுக்கு வழிப்படாமல் மாறுசெய்தேன். பரிகாசக்காரர்களில் ஒருவனு யிருந்தேன். அதனைல் நேரிட்ட கைசேதம் எனக்கு மிகவும் பெரியதாயிற்று; இனி என்ன செய்வேனென்றும், அநேகர் என்னை இப்போது மௌத்தாக்காமல் இன்னும் சில காலம் உயிரோடிருக்கவிட்டால் நன்மை செய்தவர்களில் நானும் ஒருவனுவேனென்றும், ஆநேகர் எஜமானே என்னை இந்த மரண கண்டத்தை விட்டு விடுதலை செய்ய வேண்டுகிறேன். அப்படிச் செய்தால் நான் செய்யாமல் தவறிப்போன நற்கருமங்களைச்செய்து முடிக்கிறேனென்றும், அநேகர் யஜமானே! என்னை இன்னும் சொற்பநாள் தவணை கொடுத்து இந்த மௌத்திலிருந்து மீளுவிப்பாயானுல் நான் தான தருமங்களைச் செய்து ஸாலிஹானவர்களுடன் ஆய்விடுவேனென்றும் சொல்லிப் பரிதாபிப்பார்கள். இவ்விதம் பரிசுத்தமான சொற்களை அவரவர் கொள்ளலாமே தவிர கவனிக்கப்படும் சொற்களல்ல; அவற்றுல் பிரயோசனமும் உண்டாகாது.

மௌத்து உண்மையானது, அது யாரையும் விடாது, அதுவும் இந்நேரத்தில் இன்னவிதமாகத்தான் வரும் என்று கண்டறிந்து ஆறியமர்ந்து இருக்கவும் இடமில்லை. காலையில் இருந்தவன் மாலையில் இருப்பான் என்பது நம்பிக்கையல்ல. நபி நாயகமவர்கள் அபீ தருதா றலியல்லாஹு அன்ஹு அவர்களுக்கு நீர் உமது நபுஸை மையத்தாகப் பாவித்துக் கொள்ளும் என்று ஒஸிய்யத்துச் செய்தார்கள். மௌத்து வரும் நேரத்தை யறிய யாதொரு அடையாளமும் இல்லாமையால், ஒவ்வொருவரும் எப்போதும் மையத்தா யிருப்பதாகவே வைத்துக்கொள்ள வேண்டும். நபி நாயகமவர்கள் ஒவ்வொரு இரவும் படுக்கைக்குப் போகுமுன் ஒஸிய்யத்து நாமா ஒன்று எழுதி வைத்து விட்டுத்தான் படுப்பார்கள். ஏனெனில் அது படுத்தவன் விழித்து எழுந்திருப்பான் என்பது நிச்சயமல்லவே, ஆகையால்தான் ஒவ்வொருவரும் அதுபோல ஒஸிய்யத்து நாமா எழுதி வைத்து வருவது நியாயமே, புத்திமான் யார் என்றுல் மௌத்தை நினைத்தவனும் மௌத்துக்கு வேண்டிய பிரயத்தனங்களைச் செய்து கொண்டவனும் என்று சொன்னுர்கள். இன்னும் (ஷஹீதானவர்களுடன் அல்லாதவனும் எழுப்பப்படுவானே) என்று கேட்டதற்கு நாள் ஒன்றுக்கு இருபது தரம் மௌத்தை நினைத்துப் பயந்தவனும் எழுப்பப்படுவானென்று சொல்லி ஹயாத்

ஷைதப் பார்க்கிலும் மௌத்தை அதிகமாக நீங்கள் நினையுங்கள்
என்றும் திருவாய்மலர்ந்து சொன்னார்கள்.

வாழ்நாளில் சென்றவை போக மீந்திருக்கும் வயது இத்தனை
யென்பது யாருக்கும் தெரியாது. வயதெல்லாம் போய்க் கடுகளவு
நேரம் மாத்திரம் மீந்து அஜல் சமீபித்திருந்தாலும், என்றும்
இருந்ததுபோல இருப்போமென்று நினைப்பதன்றி, அஜல் முடுகி
வந்துவிட்டது என்ற அறிக்கை இல்லை. ஆகையால் ஒவ்வொரு
நிமிஷத்திலும் மௌத்து வந்துவிடும் என்றே எண்ணிக் கொள்ள
வேண்டும். அப்படி எண்ணிக்கொள்வது மாத்திரமல்ல, மௌத்
தாகும்போது, பின்னும் உதவத்தக்க நன்மையான கருமங்களைச்
செய்து சேகரித்துவைத்துக் கொள்ளவும் வேண்டும். நன்மை
செய்ய நாளையாகட்டும். பின்னையாகட்டும் என்று தாமதப்படுத்தி,
நாட்கழிக்கக்கூடாது. அப்படி நாட்கழித்து மௌத்துவந்து விட்
டால் மௌத்தாகும் போதும், பின்னமுண்டாகும் அச்சத்திற்கும்,
திடுக்கத்திற்கும், சலிப்பிற்கும், துக்கத்திற்கும் அளவிராது;
அவற்றிற்குச் சொல்லிக் காட்ட உவமையுமில்லை. மௌத்தைப்
பற்றி எச்சரிக்கையாக நற்கருமங்களைச் செய்துகொண்டு வந்
தாலோ மௌத்தாகும்போது பின்னுமுண்டாக்கும் சந்தோஷத்திற்
கும், ஆனந்தத்திற்கும் அளவிராது. அவற்றிக்கும் சொல்லிக்
காட்ட உவமையில்லை.

ஆகையால் முஸ்லிமான சகோதரர்களே! நமக்குத் திடீ
ரென்று அஜல் வந்துவிடுமென்பதை அடிக்கடி நினைத்து தக்கபடி
நடந்துகொள்ளவேண்டும். அப்படிக்கன்றி நாம் இன்றைக்கு
மிருந்து நாளைக்குமிருந்து, அடுத்த நாளைக்கும் மௌத்தாகாம
லிருப்பதைப்பார்த்து இப்படித்தான் இன்னும் யிருப்போம்
மௌத்துக் கடைசியில் வருமென்று மருண்டுபோகிறோம். நாம்
நம்பிக்கையிலிருக்குங்காலம் நமக்குத் திடுகூறாக மோசஞ் செய்து
நம்மை விழுத்தாட்டும்; அப்போது பறக்க விழிப்போமன்றி காரி
யம் பலிக்காது. மௌத்தென்னும் பிரவாகத்திற்குப் பள்ளத்
தாக்கும், அபாயமென்னும் அம்புக்குச் சரியான இலகுமாயிருக்
கிறது. அதுகளை விட்டுத் தப்பிக்கொள்ளமாட்டோமல்லவா!
ஆனதால் மௌத்தை மறந்திடாமல் ஸாலிஹான கருமங்களை உள்ளச்
சத்துடன் செய்துகொண்டும், செய்த தீமைகளுக்காக அடுத்
தடுத்து தௌபாசெய்து கொண்டு மிருக்கவேண்டும். அப்படியே

பிருக்கும்படி அல்லாஹு தஆலா நம்மனைவருக்கும் கிருபைசெய்து மௌத்தின் நேரம் வரும்போது நல்லுதவி புரிவானாக ஆமீன்.

மௌத்து முடிந்தது.

---

## 16-ம் பஸல்.

### கபுறு.

கபுறு என்பது பிரேதக்குழி. அது இறந்துபோனவனுடைய ஜடலம் பிறருடைய பார்வைக்கு மறைவாய்த் தங்கும் தானம். தரையிலோ, மலையிலோ, மரத்திலோ, அகழ்ந்தகுழி யானாலும் கடலில் அலைந்தலைந்து உருக்குலைந்து தங்குமிடம் எதுவானாலும், மீன் முதலானவை, புலி முதலானவை, கழுகு முதலானவைகளின் வயிற்று இரப்பையானாலும், கபுறு என்றே சொல்லப்படும். மேற் சொன்னவைகளில் எதில் ஒருவனுடைய ஜடலம் தங்குகின்றதோ அதிலிருந்துதான் ஆகிரத்தில் அவன் எழுப்பப்படுவான். அது வரையும் அங்கிருந்து மீளமாட்டான். அதைத்தான் பறுஜகு என் பார்கள். அதில் இருப்பவனை இவ்வுலகத்தார் காணவும், அவனு டன் பேசவும், அங்கிருந்து பிறருக்கும் சத்தத்தைக் கேட்கவும், ஏலாது.

ஒருவன் மௌத்தாய் அவன் ஜடலம் கபுறில் அடங்கின பின், அவனுடைய றூஹு ஸாலிஹாயிருந்தால் இல்லீனிலும், பாவியா யிருந்தால் ஸிஜ்ஜீனிலும் போய்ச் சேரும். இல்லீன் என்பது நர கத்திற்குப் பிரதியாய் ஏழு பூமிகளுக்கும் கீழாயுள்ளது. கியாமத்து வரையும் ஜடம் கபுறில் தரிபட்டிருப்பதுபோல றூஹு அங்குத் தரிப்பட்டிருக்கும். இருந்தாலும ஸாலிஹுடைய றூஹு மற்றி டங்களுக்கும் போய்வர இடம்பெறும். பாவிகுடைய றூஹு அங்கிருந்து பெயரக்கூடாமல் கைதியாயிருக்கும். அங்கிருக்கும் றூஹுகளுக்கும், கபுறிலிருக்கும் சடலங்களுக்கும், நித்திரையில் ஒருவனுடைய ஜடலத்தை விட்டுப்பிரிந்த றூஹுக்கும் அந்தச் சடலத்திற்கும் சம்பந்த மிருப்பதுபோலச் சம்பந்தப்பட்டிருக்கும். இன்னும கபுறுக்கும் அதில் அடங்கினவன் போய்ச் சேரப்போகிற சுவர்க்கத்திற்கும் அல்லது நரகத்திற்கும் இடையில் வாசல் திறந்து வைக்கப்பட்டிருக்கும். மௌத்தானவன் ஆகிறுவுக்குப் போகும் வழியில் நடக்கவேண்டிய *மன்ஜில்களில் கபுறு முந்தினது. அவ னுக்கு கபுறில் இலகுவானால் மறறவைகளிலும இலகுவாம்.

---

* மன்ஜில் - தங்கிப் போகுமிடம்

பறுலகானது துன்யாவைப் பார்க்கிலும் மிகப்பெரிதாயிருக்கும். ஒருவன் தாய்வயிற்றிலிருந்து துன்யாவில் பிறந்தவுடன் அந்தவயறு அவனுக்கு எவ்வளவு சிறிதாய்க் காணப்படுகிறதோ அதுபோல் மௌத்தாய் பறுஸுக்குப் போனபின் அவனுக்கு துன்யா மிகச் சிறியதாய்க் காணப்படும். அங்கு உள்ள றூஹுகள் ஒன்றையொன்று சந்தித்துச் சம்பாஷிப்பதும், முந்தி மௌத்தாய் அங்கிருக்கும் றூஹு பிந்தி மௌத்தாய் அங்குப்போகும் றூஹைவந்து சந்தித்து, துன்யாவைப்பற்றி விசாரிப்பதும் உண்டு. ஒருவன் மௌத்தாய் அவன் உடல் எவ்விதமாயாவது உலைந்தழிந்து உருக்குலைந்து போனாலும், புத்தியும் அறிவும் அழியமாட்டாது, பேதகப்படவுமாட்டாது, றூஹைப்போல் அந்த உடலும் இன்பதுன்பங்களை அநுபவிக்கும்.

மௌத்தானவனுக்கு ஹயாத்தாயிருக்கிறவனுடைய எல்லாக் காரியங்களும் தெரிவிக்கப்படும். கபுறுக்கு அருகில் நடக்கும் எந்தகாரியத்தையும் அவன் கண்டறிவான். ஹயாத்தாயிருக்கிற உவப்புள்ள ஒருவன் கபுறுக்கு வந்தால் அவனை கபுறிலிருப்பவன் கண்டு மகிழ்வான்.

ஒருவன் மௌத்தானவுடன் அங்கு நடக்கும் காரியமடங்கலும் மையத்தாயிருப்பவனுக்கு நன்றாய்த் தெரியும். அவன் குளிப்பாட்டிக் கபன் செய்யப்பட்டோ வேறு எவ்விதமாகவோ அவனுடைய கபுறில்போய் அடங்கினவுடன் மௌததாகும்போது பிரிக்கப்பட்ட றூஹை ஜடலத்தில் மீள்வித்து ஹயாத்தாக்கப்படுவதும், அப்போது அந்த கபுறுதான் முந்தி அவனுடன் பேசும். அப்படி கபுறுபேசுவது ஸாலிஹானவனாயிருந்தால் நன்மையானவைகளாகவும், பாவி கானவனாயிருந்தால் தீமையானவைகளாகவும் இருக்கும். அதன்பின் முதல் ரூமான் எனனும் மலக்கு வருவார்கள். வந்து அவனைப்பார்த்து நீ செய்த நன்மை, தீமைகளையெல்லாம் எழுது என்று சொல்வார்கள். அதற்கு அவன் மையும், எழுதுகோலும், தாளும் இல்லையே எப்படி எழுதுவேன் எனபான். அந்த மலக்கு உன்வாய் உமிழ்நீரே மை, உன் கைவிரலே எழுதுகோல், உன்கபன் புடவையே தாளாக எழுது என்று அவன் கபனில் ஒரு துண்டைக் கிழித்துக் கொடுப்பார்கள். எழுதப்படிக்காத பெண்பிள்ளையாயிருந்தாலும் சரிதான் செய்த நன்மை தீமையில் ஒன்றும் விடாமல எழுதவரும். அப்படியெழுதினபின் அதைச்சுருட்டி முடக்கிக் கழுத்தில கட்டிவிட்டு இந்த மலக்குபோய் விடுவார்கள்.

அவன் பிற்பாடு கபுறடியில் இருக்கிறவர்கள் சொல்வதையும், செய்வதையும் அவன் அறிவான். ஆகையால்தான் *"தல்கீன்" ஓதவேண்டியதாயிற்று. கபுறின் தலைமாட்டில் ஒருவன் இருந்து கொண்டு கபுறிலிருப்பவனைக் கூப்பிட்டால் அதற்கு அவன் பிரதி சொல்லுவான். ஆனால் அது இவனுக்குக் கேட்காது. அப்போது தான் "தல்கீன்" ஓதவேண்டும். தலகீன் ஓதும்போதே "முன்கர்-நகீர்" என்னும் இரண்டு மலக்குகளும் கபுறில் வருவார்கள். அவர்களுக்கும் தல்கீன் ஓதுவது கேட்கும். அதை அவர்கள் கேட்டு நாம் கேட்கப்போகிற கேள்விகளை இவனுக்குச் சொல்லிக் கொடுக்கிறார்கள் என்று ஒருவருக்கொருவர் பேசிக்கொள்வார்கள்.

"முன்கர்-நகீர்" என்னும் இரண்டு மலக்குகளும் மிக்க கறுத்த மேனிகளையும், நீலநிறமுள்ள பயங்கரமான கண்களையும், மின்னலைப்போலப் பளீரென்று கண்ணை மழுக்கும் பார்வைகளையும் உடையவர்களாய் வளர்ந்து நீண்ட ரோமங்கள் தரையில் சிய்க்க இழுத்துக்கொண்டு அகளும் இடி இடிக்கும் பெரிய சத்தத்துடன் வந்து, பருத்து நீண்ட தங்கள் பற்களால் கபுறைத் தோண்டி அமளியுடன் உள்ளே நுழைந்து கபுறிலிருப்பவனை அசைத்து உசுப்பி எழுந்திருக்கச்செய்து பின் வரும கேள்விகளை அவனிடம் கேட்பார்கள். அக்கேள்விகளாவன :—

"மன்றப்புக்க" (உன் ஆண்டவன் யார்?) "வமாதீனுக்க" (உன் மார்க்கம் எது?) "வமன் னபிய்யுக்க" (உன்னுடைய நபி யார்?) "வமா கிபுலத்துக்க" (உன்னுடைய கிபுலா எது?) "வமா இமாமுக்க" (உன் இமாம் யார்?) "வமா இகுவானுக்க" (உன்னுடைய சகோதரர் யார்?) என்பனவாம். இந்த கேள்விகளுக்கு ஸாலிஹானவன அல்லாஹு றப்பீ (என் ஆண்டவன் அலலா) "வல்இஸ்லாமுதீனி" (என மார்க்கம் இஸ்லாம) வமுஹம்மதுன் னபிய்யி (என்னுடைய நபி முஹம்மது, "வல்கஃபதது கிபுலததி" (என்னுடைய கிபுலா கஃபா) "வலகுறுஆனு இமாமி" (என் இமாம் குறுஆன்) "வல்முஸ்லி மூன இகுவானி" (என்னுடைய சகோதரர் முஸ்லிம்கள்) என்று நேரானவிடை கொடுப்பான். இவ்விதம் சொன்னவுடன் அந்த இரண்டு மலக்குகளும் அவனைப் பார்த்து நீ இப்படிச் சொல்வாயென்று எங்களுக்குத் தெரியும் என்பார்கள். உடனே அவனுடைய கபுறு நாலாயிரததுத் தொளாயிரம் சதுரமுழ விஸ்தீரண முள்ளதாக ஆக்கபபடும். அதில் எங்

* தல்கீன்-படித்துக்கொடுத்தல்.

கும் பிரகாசிக்கும்படியான ஒளிவும் உண்டாகும். அப்போது அந்த மலக்குகள் அவனைப் பார்த்து நீ சுகமாய்படுத்திரு என்று சொல்லி விட்டுப் போய் விடுவார்கள், பிறகு மகவஜீ சுராமம், நறுமணமும், அழகுமுள்ள உடையும் உடைய ஒருவர் வந்து அவனுக்கு நன்மாராயஞ் சொல்வார். அவனும் அவருக்கு நன்மாராயஞ் சொல்லி நீர் யார் என்று கேட்பான். அப்போது அவர் நான் நீ செய்த நல்ல அமல்கள் என்று சொல்வார். அப்போது சுவர்க்கத்து வாசல்களில் ஒன்றை அவனுடைய கபுறுக்கு நேரே திறந்துவிடுங்கள், சுவர்க்கத்து விரிப்புகளில் ஒன்றை இவன் கபுறில் விரியுங்கள் என்று ஒரு சப்தம் பிறக்கும். உடனே மலக்குகள் அப்படியே செய்வார்கள்.

பாவியானவன் மேற்கண்ட கேள்விகளுக்கு நேரான மறுமொழி சொடாமல், தாறுமாறுமாய் பலவிதம் உளறுவான். அப்போது அந்த மலக்குகள் அவனைப்பார்த்து நீ இப்படி உளறுவாயென்று எங்களுக்குத் தெரியும் என்பார்கள். உடனே அவனுடைய கபுறுக்கு அவனை நெருக்கும்படி உத்திரவு பிறக்கும். பிறக்கவே ஒரு விலாயெலும்பு மற்றொருவிலாவில் தைத்துப் புறப்படும்படி கபுறு அவனை நெருக்கும், அந்த வேதனை கியாமத்துவரையும் அவனை விட்டு நீங்கமாட்டாது. பிறகு விகாரரூபம், துர்கந்தமும், அருவருப்புமுள்ள உடையையும் உடைய ஒருவர் வந்து அவனுக்குத் துன்மாராயஞ் சொல்வார், அவனும் அவருக்குத் துன்மாராயஞ்சொல்லி, நீர் யார் என்று கேட்பான். அப்போது, அவர் நான் நீ செய்த கெட்ட அமல்கள் என்று சொல்வார். அப்போது குருடும் செவிடுமுள்ள ஒரு மிருகம் அவன் மீது ஏவி விடப்பட்டு, அது வந்து தன் கையிலிருக்கும் மனிதர்களாலும், ஜின்களாலும் அசைக்க ஏலாதாய் இருப்புத்தடியால் மூர்த்தி ஒருதரம் அவனை அடிக்கும், உடனே அவன் நொறுங்குண்டு மண்ணோடு மண்ணுவான். ஆனபின் அவனுக்கு ஹயாத்து உண்டாகும். பின்னும் அந்த மிருகம் இரண்டு கண்களுக்கு இடையில் அடிக்கும் அந்த அடியின் சப்தம் மனிதர் தவிர, மற்றப்படைப் புகள் அனைத்திற்கும் கேட்கும், உடனே நரகத்து வாசல்களில் ஒன்றை அவன் கபுறுக்கு நேரே திறந்துவிடுங்கள், நரகத்து அக்கினிப் பலகைகளில் இரண்டு பலகைகளைக் கொண்டுபோய்ப்போட்டு அவனைக் கிடத்தாட்டுங்கள் என்று ஒரு சத்தம் பிறக்கும். அப்படியே செய்யப்படும். பின் தொண்ணூற்றொன்பது சட்டித்தலைப் பாம்பு

களை அவன்மேல் ஏவிவிட்டு கடித்துக்கொண்டு, பிடுங்கிக்கொண்டும் இருக்கும்படி வேதனை செய்யப்பட்டு, கியாமத்துவரையும் அந்த வேதனைகளை அநுபவித்துக் கொண்டிருப்பான்.

கபுறில் போயடங்கின நல்ல அமல் இல்லாத ஒவ்வொருவனுடைய ஸ்திதியும் ஆழ்ந்த சமுத்திரத்தில் விழுந்து தாழ்கிறவனுடைய ஸ்திதிக்கு ஒப்பாயிருக்கும். சமுத்திரத்தில் தாழ்கிறவன் தன்னைக் கைகொடுத்துக் கரைசேர்ப்போருடைய ஆதரவை நாடுவதுபோலவே மேற்சொன்னபடி கபுறில் அடங்கினவனும், ஹயாத்தா யிருப்பவனுடைய ஆதரவை நாடுவான். ஆகையால் ஹயாத்தா யிருப்பவர்கள், மௌத்தானவர்களுக்காக பாத்திஹா, ஸதகா துஆ முதலானவைகளைச்செய்து வரவேண்டும், அவற்றைக்கொண்டு தவாபு அதிகப்படுவது மன்றி அதாபும் இலகுப்படும். அப்படிச்செய்யும் பாத்திஹா முதலானதுகளை ஒளிவிளுலான தாம்பாளங்களில் வைத்துப் பட்டாடைகொண்டு மூடி இன்னான் மகன் இன்னான் உனக்கனுப்பின வெகுமதி இது என்று அந்தந்த கபுறாளியிடம் சேர்த்து, அவனுக்குச் சந்தோஷத்தை உண்டாக்கப்படும், இதற்குத் திருஷ்டாந்தமாவது.

வழிப்பயணக்கார ஒரு முதியவர் ஒரு மைதானத்தில் இராத் தங்கினார். அவர் நித்திரை செய்யும்போது அங்கே கபுறாளிகள் கூடிக்கொண்டிருக்கிறதாகவும், அவர்கள் எல்லாரும் பலவகையாய்க் கிடக்கும் பழவர்க்கங்களைப் பொறுக்குகிறதாகவும் அவர்களில் ஒருவர் மாத்திரம் சும்மாய் உட்கார்ந்திருப்பதாகவும் தாம் அவரிடம்போய் எல்லாரும் பொறுக்கி யெடுக்கிறார்களே நீர் ஏன் சும்மா யிருக்கிறீர் என்று கேட்டதாகவும் அதற்கு அவர் இவர்கள் எல்லாரும் அன்றாடம் கிடைக்கிற சொற்ப பிரயோஜனத்தை அவரவர் பாகப்படி பங்கிட்டுப் பொறுக்கிக் கொள்ளுகிறார்கள். அவ்விதச்சொற்பமான என்பாகத்தையும் அவர்களுக்கே விட்டுவிட்டு நான் சும்மாயிருக்கிறேனே எனக்கோ அதிகமான பிரயோஜனம் அன்றாடகம் கிடைக்கிறது என்று பதில் சொன்னதாகவும் அது எப்படியென்று இவர் கேட்டதற்கு இந்தவூரில் இந்த கடையில் என மகன் ஒரு மிட்டாய் கடை வைத்திருக்கிறான் அவன் ஒவ்வொரு நாளும் குறுஆன் முழுவதையும் ஓதி எனக்கு ஹதியா செய்கிறான் அதுதான் எனக்குக் கிடைக்கும் பிரயோஜனம் என்று அவர் சொன்னதாகவும், சொர்ப்பனங்கண்டு அப்படியே போய் அந்தவூரில் விசாரணை பண்ண உண்மையாயிருந்தது, என்று ஒரு

அரபி கிரந்தம் சொல்லுகின்றது. ஆகையால் கபுருளிகள் பேரால் கத்தம் பாத்திஹா செய்வது முக்கியமேயாம். கபுறில் அதாபு மெத்தவுண்டு, தொழுகையைப் பேணுதலாய் தொழாதவனை கபுறு நெருக்கும். கபுறு நெருப்பாய் எரியும் (சுஜா அல்அறகு) என்னும் சர்ப்பம் பலவித வேதனைசெய்யும். கியாமத்துவரையும் இவை ஒழியாவாம். சிறு நீருக்கிருந்து துப்புரவு செய்யாத குற்றத்திற்கு மாத்திரம் கபுறில் நடக்கும வேதனை கொஞ்சமல்ல. நபி நாயகமவர்கள் ஒரு கபுறில் போகும்போது தங்கள் சரீரம் விலவிலத்து உதரச் சற்றுநேரம் தலை குனிந்து நின்று திரும்பினார்கள். அப்போது அருகிலிருக்கும் அஸ் ஹாபிகள் யாறஸூலல்லா! தங்கள் சரீரம் விலவிலக்க ஏன் தலைகுனிந்து நின்றீர்கள் என்று கேட்டதற்கு, இந்த கபுருளியைப் படுத்தும் வேதனை கண்ணாற் காணக் கூடியதல்ல. என்ன பாவத்திற்காக இவ்விதக் கொடிய வேதனை செய்யவேண்டும் என்று கேட்டேன், சிறு நீருக்கிருந்து துப்புரவு செய்யாத பாவத்திற்காக இவ்வித வேதனையைப் பார்க்கச் சகிக்காமல்தான் என் சரீரம் பதறிற்று என்று திருவாய்மலர்ந்து சொன்னார்கள், என்றால் மற்றப்பாவங்களுக்கு எவ்வித வேதனை கபுறில் நடக்கும் என்பதை புத்திமான் எண்ணிப் பார்க்க கடவன், கபுருளிக்கு அதாபு இலகுவாகவும், தவாபு அதிகமாகவும் பாத்திஹா, ஸதகா முதலானதுகளைச் செய்துவரவேண்டுமே தவிர அதாபை உண்டு பண்ணவும், அதிகப்படுத்தவும் ஏதுவான துக்கப்படுதல், ஒப்பாரி சொல்லுதல், கட்டியழுதல், மாரடித்தல், முதலான துற்கருமங்களை நினைத்துப்பாராமல் விட்டொழிய வேண்டும்.

முஸ்லிமான சகோதரர்களே! நாம் கட்டாயம் இறந்து போவோம். கபுறில் அடங்குவோம் என்பதை அறிந்திருக்கிறோம். இருந்தாலும் அங்கு நடக்கும் வேதனைகளை நினைத்து அஞ்சுகிறோம் இல்லை. துன்யாவை இச்சித்து, கபுறை மறந்து காலத்தைக் கழிக்கிறோம். இனி மௌத்து வந்தபின் கபுறுக்குபோவோமே, அங்கு நமக்கு யார் துணை? அங்கு உண்டாகும் பயங்கரமும், திகிலும் எம்மட்டும்? நாம் மனபோக்கின்படி நடத்தின துற்கருமங்களெல்லாம் அங்கு தீங்காய் விளையுமே, நற்கருமங்கள் செய்திருந்தால் மாத்திரம் அவை வந்து முன்னின்று உதவுமன்றி வேறே ஒன்றும் உதவாதே, ஆனபடியால் நாம் கபுறு உண்டென்று அறிந்திருப்பதற்குச் சரியாக அதன் அதாபுகளை எண்ணிப்

பயந்து அங்குக் கிடந்து பாடுபடத்தக்க தீவினைகளை அறவே மறந்து, மணவரை மாப்பிள்ளைப்போலச் சுகமாயிருக்கத்தக்க நல்வினைகளை ஓய்வில்லாமல் செய்து வருவது நமது கடமையும், நமது சொந்த காரியமுமாம். அல்லாஹுத் தஆலா அப்படியே நம் அனைவருக்கும் நல்வினைசெய்து தீவினை ஒழிக்கவும், கபுறில் சுகம் பெற்றிருக்கவும் கிருபை செய்து நல்லுதவி புரிவானாக ஆமீன்.

கபுறு முடிந்தது

முதற்பாகம் முற்றிற்று.

---

## இரண்டாம் பாகம் பாபுல் ஆகிறு.

பாபுல் ஆகிறு என்பது ஆகிறுவுடைய பாபு. ஆகிறு என்பது முடிவு, அது மறுமையாம்; கியாமமாகி, சூரு ஊதி, ஆலத்தின் கோர்வை குலேயும் ஆரம்பமுதல் ஆகிறு என்று சொல்லப்படும். இரண்டாம் பாகமாகிய இந்த பாபுல் ஆகிறுவின் விஷயங்கள் அடங்கலும் பதினாறு பஸல்களாய் அடங்கி யிருக்கின்றன. அவற்றுள்:-

---

### 1-ம் பஸல்.

### அலாமத்துல் கியாமா.

அலாமத்துல் கியாமா என்பது கியாமத்து அடையாளம். அது பலவகையாய் கியாமத்து அடுத்தபோது வெளியாகும். அவ்வடையாளங்களில் பிரதானமான அடையாளங்கள் பத்து. அவை தஜ்ஜால் வருதல், நபி ஈஸா அலைஹிஸ்ஸலாமவர்கள் வருதல், யாஜூஜு, மாஜூஜு கூட்டம் வருதல், தாபத்துல் அறுலு வருதல், ஒரே மாதத்தில் தொடர்ச்சியாய் மூன்று தரம் சந்திர கிரஹணம் பிடித்தல், ஒருவிதப் புகை கிளம்பி வருதல், சூரியன் மேற்கில் உதயமாதல், நெருப்புப் புறப்படுதல் இந்தப்பத்து அடையாளங்கள் அல்லாமல் இமாம் மஹுதி றளியல்லாஹு அன்ஹு அவர்கள் வருதல் முதலான இன்னும் பல அடையாளங்கள் உண்டு. எல்லா அடையாளங்களும் நடந்து தீர்ந்த பிறகு தான் கியாமத்து வெளியாகும்.

மேற் சொன்ன பத்து அடையாளங்களில் முதலாவது தஜ்ஜால் வருதலாம். தஜ்ஜால் என்பவன் ஆச்சரியகரமான ஒரு மனிதன், அவன் நபி நாயகமவர்கள் ஹயாத்தோடிருக்கும் காலத்தி

லேயே முஸ்தபா என்கிற பட்டணத்தில் பிறந்து பின் காபு மலையில் சிறைப்படுத்தப்பட்டிருக்கிருன், இனி கியாமா அடுத்தபோது அவன் சிறை நீங்கி வருவான். அவன் வருவதற்கு முன் மூன்று வருஷம் வரையும் ஒரே பஞ்சமாய் இருக்கும். அந்தக் கொடிய பஞ்சத்தால் மனிதர்கள் மிக வருந்துவார்கள், அந்தக் காலத்தில் குருசான் ராஜ்ஜியத்திலிருந்து தஜ்ஜால் வெளிப்பட்டு வருவான். அவன் தனக்கு வேண்டிய அளவு உயரவும் பறக்கவும் திராணி உள்ளவன். அவனைத் தொடர்ந்துகொண்டு கூட்டங்கூட்டமாய் யஹூதிகள் வருவார்கள். அவன் வரும்போது அவனுக்கு வலம், இடம் இருபுறமும் மும்முரமான புசலும், பயங்கரமான சத்தமும் உண்டாயிருக்கும். அவனுடைய வலதுகண் ஒளிமயக்கின பளிங்கு போலவும், இடதுகண் மாரலாகவும் இருக்கும். அவனுடைய இரண்டு புருவங்களுக்கிடையில் “காபிரு பில்லாஹி” என்று எழுதியிருக்கும். இதன் பொருள் :—“இவன் அல்லா அளவில் காபிரானவன்” என்பதாம். இந்த எழுத்தை மூஃமின்களே வாசித்துப் பார்த்து இவன் காபிரு என்று அறிவார்களன்றி, காபிர்கள் அறியமாட்டார்கள். இன்னும் அந்த எழுத்தை மூஃமினன ஆண்களும், பெண்களும் எழுத்து வாசிக்கப் படிக்காதிருந்தாலும் வாசிப்பார்கள். அவன் கோவேறு கழுதை மீது ஏறி யிருப்பான், தன்னை ஆண்டவன் என்று சொல்லுவான். அவனுடன் இரண்டு மலைகள் யிருக்கும், ஒன்றை சுவர்க்கமென்றும் ஒன்றை நரகமென்றும் சொல்வான். அவனுக்கு எவன் வழிப்பட்டானே அவனை சுவர்க்கமென்ற மலையில் போடுவான், அது நரகமாயிருக்கும். வழிப்படாதவனை நரகமென்ற மலையில் போடுவான். அது சுவர்க்கமாயிருக்கும். அவன் மக்கா, மதீனு, பைத்துல் முகத்திஸ, தூறுசீனு இந்த நான்கு யிடங்கள் தவிர, பூமி முழுவதுஞ் சுற்றி எங்கும் வருவான். பூமியிலுள்ள புதையல்களும், பொன், வெள்ளி, ரத்தினங்களும், தின்பண்டங்களும் பழவர்க்கங்களும் மலைமலையாக அவன் கூடவரும். தன்னை வழிபட்டவர்களுக்கு அவற்றைக் கொடுப்பான். அதுகளைப் பெற்றுக் கொண்டவர்கள் அவனை “ஆண்டவன்” என்பார்கள். இன்னும் அவன் மௌத்தானவர்களை ஹயாத்தாக்குவான், பிறவிக்குருடு, குஷ்டம் இன்னுமுள்ள ரோகங்கள் எல்லாவற்றையும் சுகமாக்குவான். அவன் ஏவினல் வானம் மழையைப் பேயவைக்கும், பூமிபயிர்களை முளைப்பிக்கும், மூஃமினுனவர்களை யெல்லாம் தன்னை ஆண்டவனென்று

சொல்லும்படி கட்டாயப்படுத்துவான், ஆக்குவான். அவன் எங்கும் திரிந்து பாபில் என்னும் பட்டணத்திற்கு வருவான். அங்கு அவனை கிழுறு அலைஹிஸ்ஸலாமவர்கள் காண்பார்கள். அவர்கள் முன்னும் தன்னை ஆண்டவன் என்று அவன் சொல்லுவான். அதை அவர்கள் தடுப்பார்கள். அதனால் அவன் கோபமுற்று அவர்களை வெட்டி விடுவான். அல்லாஹுத்தஆலா உடனே அவர்களை ஹயாத்தாக்குவான். மறுபடியும் வெட்டுவான் ஹயாத்தாவார்கள். இப்படி மூன்று தரமும் நடக்கும். பின்பு கிழுறு அலைஹிஸ்ஸலாமவர்கள் அவனை விட்டுப் போய்விடுவார்கள். அவன் நாற்பதுநாள் வரையும் பூமியில் இருப்பான், அந்த நாற்பதுநாளும், ஒருநாள் ஒருவாரம் போலவும் இருக்கும். அப்படி யிருக்கும் போதே நபி ஈஸா அலைஹிஸ்ஸலா மவர்கள் வருவார்கள்.

நபி ஈஸா அலைஹிஸ்ஸலாமவர்கள் வானத்திலிருந்து, திமஸ்கு நகரத்துக் கிழ்த்திசை *மனாராவில் இறங்குவார்கள்: இறங்கினபின் இரண்டு மஞ்சட்புடவை உடுத்திக்கொண்டு, பச்சைத் தலைப்பாகை கட்டிக் கொண்டு, வாளாயுதம் அணிந்துகொண்டு, கையில் வல்லயம் பிடித்துக்கொண்டு, ரோஜாப்பூ நிறமுள்ள மேனியும், பூரணச் சந்திரன் போன்ற முகத்தையும் உடையவர்களாய், இரண்டு கைகளையும் இரண்டு மலக்குகளுடைய தோட்களில் போட்டுக் கொண்டு, எழுபதினாயிரம் மலக்குகள் பின்வர, அங்கிருந்து பைத்துல் முகத்திஸுக்கு வருவார்கள். அவர்களுடைய வாடை தஜ்ஜாலுடைய நாசியில் எத்தும், உடனே அவன் வெருண்டு ஓடுவான், நபி ஈஸா அலைஹிஸ்ஸலாமவர்கள் அவனைத் தொடர்ந்துபோய்க் கொன்றுவிடுவார்கள். தஜ்ஜாலைக் கொன்று விட்டு பைத்துல் முகத்திஸுக்குத் திரும்பி வருவார்கள். அப்போது முஸ்லீம்கள் எல்லாரும் அவர்களை வந்து தெரிசிப்பார்கள். நபி ஈஸா அலைஹிஸ்ஸலாமவர்கள் அவர்களைப்பார்த்து நின்று "ஜனங்களே" எல்லா நபிகளுக்கும் முஹம்மது நபி மேலானவர்கள். அவர்களுடைய மார்க்கம் மேலானது, நான் அவர்கள் மார்க்கத்தில் தான் இருக்கிறேன், நீங்களும் அந்த மார்க்கத்திலேயே தரிபட்டிருங்கள்" என்று சொல்லுவார்கள். இன்னும் அவர்கள் சிலுவைகளை உடைத் தெறிவார்கள், கஃபாவிற் போய் ஹஜ்ஜு செய்வார்கள். நஸாறாவில் உள்ள ஒரு பெண்ணை விவாகஞ்செய்துகொண்டு, தீனுல் இஸ்லாமை மகிமைப் படுத்தினவர்களாயிருப்பார்கள். அப்படி யிருக்கையில் அல்லா

* மனாரா - கோபுரம்.

ஹூத் தஆலா அவர்களுக்கு, நான் யாஜூஜூ மாஜூஜூ கூட்டத்தாரை வெளிப்படுத்தப் போகிறேன், அவர்களை எதிர்க்கயாராலும் ஏலாது. நீர் உமது கூட்டத்தாருடன் தூரு சீனாவுக்குப் போய் விடும் என்று ஒஹி அனுப்புவான். இவ்வித ஒஹி வந்தவுடன் நபி ஈஸா அலைஹிஸ்ஸலாமவர்கள் தங்கள் கூட்டத்தாருடன் அங்கிருந்து புறப்பட்டு தூரா சீனாவுக்குப் போய் விடுவார்கள். அதன் பிற்பாடு யாஜூஜூ மாஜூஜூ கூட்டத்தார் வருவார்கள்.

யாஜூஜூ, மாஜூஜூ என்னும் கூட்டத்தார் நபி நூஹூ அலைஹிஸ்ஸலா மவர்களின் குமாரர்களில் ஒருவராகிய யாபிது என்பவரின் வமிஷத்திலுள்ளவர்கள். அவர்கள் நீளத்திலும், அகலத்திலும் ஒரு ஜாண் அளவு சதுரமான ஒருவகையாரும், அப்படியே ஒரு முழ அளவு சதுரமான ஒருவகையாரும், நூற்றிருபது முழ நீளமான ஒருவகையாருமாக மூன்று வகையாயிருப்பார்கள். அவர்களின் தொகையை அல்லாஹூ தஆலாதான் அறிவான். அத்தனை பெரிய திரளான கூட்டத்தார், அவர்களில் மிகத்தாழ்ந்த பலயீனமுள்ள ஒருவன் அறுபது மணங்கு நிறையுள்ள பாறைக் கல்லைத் தூக்கி யெடுப்பான். இப்போது அவர்கள் சூரியன் உதயமாகும் தானத்தின் பக்கத்தில் அடைக்கப்பட்டிருக்கிறார்கள். அங்கிருந்து அவர்களும் பாதையான மலைகளுக்கு இடையிலுள்ள ஒரு கணவாயை ஸூல்தான் ஸிக்கந்தர் துல்கறுனைன் அவர்கள் இரும்புக் கற்களை அடுக்கி, செம்பையுருக்கி வார்த்து அடைத்து வைத்திருக்கிறார்கள். இனி அந்தக் கூட்டத்தார் வருங்காலம் ஆனவுடன் அந்த இரும்புச்சுவர் இடிந்து விழுந்துபோம். அந்த வழியாய்ப் புறப்பட்டு வருவார்கள். வந்து மக்கா, மதீனா, பைத்துல் முகத்திஸூ, தூருசீனா இந்நான்கு இடங்கள் தவிர பூமியெங்கும் போய் எல்லாராச்சியங்களையும் தங்கள் வசமாக்கிக் கொண்டு, நாம் பூமியைப் பிடித்துக் கொண்டோம். இனி வானத்தையும் பிடித்துக் கொள்ளுவோம என்று சொல்லிக் கொண்டு, ஆகாயத்தில் அம்பு மாரி பொழிவார்கள். அந்த அம்புகளெலலாம் அலலாஹூத் தஆலாவின் கட்டளைப்படி ரத்தக் கடவில தோய்த்து அவர்களிடம் எறியப்படும். அதைக் கண்டு அவர்கள் வானத்தையும் பிடித்துக் கொண்டோம் என்று சந்தோஷப்படுவார்கள். அவர்கள் பூமி முழுவதும பரவியிருந்து பண்ணும் அமளியைப் பொறுக்கமாட்டாமல நபி ஈஸா அலைஹிஸ்ஸலாமவாகள் அல்லாஹூத் தஆலாவிடம் அவர்களை நாசமாக்கும்படி துஆக் கேட்பார்கள். உடனே

அல்லாஹுத் தஆலா ஒருவித புழுக்களை அந்தக் கூட்டத்தார் மீது அனுப்புவான். அந்தப் புழுக்கள் வந்து அவர்களில் ஒவ்வொருவர் பிடரியிலும் ஒவ்வொன்றாக மொய்த்துக் கொள்ளும். அதனால் அவர்கள் எல்லாரும் ஒரேகாலத்தில் ஒருமிக்க மடிந்து போவார்கள். பூமி முழுவதும் அவர்களின் பிணத்தால் மூடப்பட்டிருக்கும். பிறகு அல்லாஹுத் தஆலாவின் ஏவலால் ஒருமழை பெய்து, அந்தப் பிணங்களை யெல்லாம் வாரிக் கொண்டுபோய்க் கடலில் தள்ளும். அதன்பின் முஸ்லிமானவர்கள் சந்தோஷப்படுவார்கள். அதற்குப் பிற்பாடு நபி ஈஸா அலைஹிஸ்ஸலாமவர்கள் தூராசீனாவிலிருந்து பைத்துல் முகத்திஸுக்கு வருவார்கள். அவர்கள் பூமியில் இறங்கின நாற்பதாம் வருஷம் மக்காவில் ஹஜ்ஜு செய்து விட்டு, மதீனாவுக்கு வருவார்கள். வந்தவுடன் அல்லாஹுத் தஆலாவின் கலாவான அஜல்முடுகி, தொழுகையில் ஸுஜூதில் இருக்கும்போது வபாத்தாய், நபி நாயகமவர்களின் கபுறுக்கு பக்கத்தில் உமறு றலியல்லாஹு அன்ஹு அவர்களின் கபுறுக்கு அருகில் அடக்கப்படுவார்கள். அதன் பிறகுதான் தாபத்துல் அறலு வெளிப்படும்.

தாபத்துல் அறலு ஒருவிதம் பாரிய மிருகம். அதற்கு இரண்டு சிறகுகள், இன்னும் அது காளைமாட்டுத் தலையும், மனித முகமும், பன்றிக் கண்ணும், யானைக் காதும், மாட்டுக் கொம்பும், ஒட்டைக் கழுத்தும், சிங்க நெஞ்சும், பூனை யிடுப்பும், தும்பையாட்டு வாலும், ஒட்டகக் காலும், வேங்கை நிறமும் உள்ளதாயிருக்கும். அது சபா மலைக்குப் பக்கத்தில் பூமியின் பிளப்பு வழியாய் வெளிப்பட்டுவரும். அதற்கு இரண்டு கைகளும் உண்டு. வலது கையில் நபி ஸுலைமான் அலைஹிஸ்ஸலாமவர்களின் முத்திரை மோதிரமும், இடது கையில் நபி மூஸா அலைஹிஸ்ஸலாமவர்களின் ஆஸாவும் வைத்திருக்கும். மனிதருடன் பேசும், முஸ்லிமையும், காபிரையும், பிரித்தறிவிக்கும், மஷ்றிகு மகுறிபு வரைக்கும் பறந்து திரியும். இவ்விதம் நாற்பது வருஷம் வரையும் இருக்கும். அதன் பின்பு கிரஹணம் பிடிக்கும்.

ஒரே மாதத்தில் தொடர்ச்சியாய் ஒன்று மகுறிபிலும்; ஒன்று மஷ்றிகிலும், ஒன்று அறபிலுமாக மூன்று சந்திர கிராணம் உண்டாம். அதன்பின் ஒரு விதப்புகை யுண்டாம்.

அந்தப்புகை பயங்கரமானதும், திகிலடி தரத்தக்கதுமாய் வந்து, பூமி முழுவதையும் சூழவளைந்து தெறிந்து கொள்ளும்.

அதனால் மனிதர்கள் திகிலடிபட்டுக் கஷ்டத்தில் கிடந்து தவிப்பார்கள். அவ்விதம் நாற்பது நாள்பரியந்தம் அந்தப் புகையிருந்து தீர்ந்துபோம். அது தீர்ந்தபின், ஹபசிராஜன் கஃபாவை இடிப்பதற்காகப் பெரும்படை திரட்டிக் கொண்டு வருவான். அதை அறிந்து முஸ்லிமானவர்கள் எல்லாரும் ஒருங்குதிரண்டு, அவனை எதிர்த்துப் படைசெய்வார்கள். அப்போது அந்த அரசனே ஜெயமடைந்து முஸ்லிமானவர்களை முறியச் செய்துவிட்டு, கஃபாவை இடித்துப் போடுவான். அப்போது அல்லாஹுத் தஆலா கஸ்தூரியைப் பார்க்கிலும் அதிக வாசனையுள்ள ஒரு காற்றை வரச்செய்வான். அந்தக் காற்றைக்கொண்டு முஸ்லிமானவர்கள் எல்லாரும் மௌத்தாய் விடுவார்கள். "அல்லா" என்று சொல்லுகிறவன் ஒருவனுவது பூமியில் இல்லாமல், எல்லாரும் காபிரா யிருப்பார்கள். அப்போதே குறுஆனை உயர்த்தப் படும். அது எழுதப்பட்டதாளெல்லாம் எழுத்தன்றி வெறிதாய் விடும், தௌபா வாசல் அடைப்பட்டுப்போம். அதன்பின் ஈமான் கொள்வது கூடாது. அதன் பிறகுதான் சூரியன் மேற்கில் உதயமாகும்.

மூன்றுநாள் பரியந்தம் சூரியன் உதயமாகாமல் இரவாகவே யிருக்கும். நாலாநாள் மேற்கிலிருந்து சூரியன் உதயமாய் வரும். அப்போது அது சுடரில்லாமல் கிரஹணம் பிடித்திருப்பதுபோல் மயங்கியிருக்கும். அப்படியே அந்தச் சூரியன் உச்சிவரையும் வந்து, மீண்டும் மேற்கிலேயே போய் அஸ்தமிக்கும். அடுத்த நாள் வளமைபோல் உதயமாய் நடக்கும். அது நடந்தது முதல் நூற்றிருபது வருஷம் வரையும் மனிதர்கள் பூமியில் தரித்திருப்பார்கள். எல்லாரும் மஸ்து பிடித்தாற்போல் இருப்பார்கள். அப்படி யிருக்கும் போதுதான் நெருப்பு வெளிப்படும்.

மகா கொடுமையான அந்த நெருப்பு, அதன் என்னும் பட்டணத்தின் கீழிருந்து வெளிப்படும். வெளிப்பட்டு வந்து மனிதர்கள் கூடவே யிருந்து எல்லாரையும் சூழவளைந்து திரட்டிக்கொண்டு போய் இனி மஹ்ஷர் வெளியாகும் தானத்திற் சேர்க்கும். ஜின்னையும், ஷைத்தான்களையும், மிருகாதி சர்வ பிராணிகளையும், அப்படியே திரட்டிக் கொண்டுபோய் அங்கே சேர்க்கும். அப்போது கியாமாமிகச் சமீபமாயிருக்கும்.

அலாமத்துல் கியாமா முடிந்தது.

## 2-ம் பஸல்.

## கியாமா.

கியாமா என்பது எழுந்திருத்தல். அது துன்யா ஒழிந்து போய், ஆகிரு வெளியாய், கல்குகள் அடங்கலும் உயிர்பெற்று எழும்புதல், அதைத்தான் கியாமத்துநாள் என்பார்கள். அந்த நாள் துன்யாவின் வருஷத்தில் ஐம்பதினுயிரம் வருஷம் பிரமாண முள்ள ஒரே நாளாம். மௌத்து மனிதனுடைய காலத்திற் முடிவாவதுபோல், கியாமா துன்யாவினுடைய காலத்திற்கு முடிவாம். அந்த நாளில் ஆரம்பத்தில் இரண்டு தரம் சூறு ஊதப்படும்.

சூறு என்பது ஒருவித ஊது கொம்பு. அது ஒரு தலை சிறுத்து ஒரு தலை பருத்துமுள்ள காளை கொம்புபோல் இருக்கும். அதன் தலைப்புறச் சுற்றளவு ஆலத்தின் பிரமாணமுள்ளதாம். இஸ்றாபீல் அலைஹிஸ்ஸலாமவர்கள் அந்தக் கொம்பை ஊதுவதற்குத் தயாராய் வாயில் வைத்துக்கொண்டு, அல்லாஹுத் தஆலாவின் ஏவலை எதிர்பார்த்துக்கொண்டே இருக்கிறுர்கள்.

இனி இதற்கு முந்தின பஸலில் சொல்லப்பட்ட அடையாளங்கள் அனைத்தும் தீர்ந்து மேற்சொன்னபடி கியாமா சமீபமானவுடன், அல்லாஹுத் தஆலா இஸ்றாபீல் அலைஹிஸ்ஸலாமவர்களை சூறு ஊதும்படி ஏவுவான். உடனே அவர்கள் ஊதுவார்கள். இதுதான் முதல் சூறு, படுத்தவன் படுத்துக்கொண்டும், இருந்தவன் இருந்துகொண்டும், நின்றவன் நின்று கொண்டும், நடந்தவன் நடந்துகொண்டும், பேசினவன் பேசிக்கொண்டும், உறங்கினவன் உறங்கிக்கொண்டுமாக மனிதர்கள் பல பராக்காய் இருக்கும்போது திடீரென்று சூறு ஊதப்படும். இந்த முதல் சூறு ஊதும்போதே அல்லாஹுத் தஆலாவின் உத்தரவுகொண்டு, இஸ்றாயீல் அலைஹிஸ்ஸலாமவர்கள் அல்லாஹுத் தஆலா நாடின சிலர் தவிர வானத்திலும், பூமியிலுமுள்ள எல்லாக் கல்குகளுடைய ரூஹையும் ஒரே நேரத்தில் கைப்பற்றுவார்கள். சூறுடைய சத்தத்தின் அமளிகொண்டே எல்லாரும் மௌத்தாய் விடுவார்கள். மலைகள் நொருங்கி பஞ்சு பஞ்சாய்ப் பறக்கும். கடல்கள் எல்லாம் கொதித்து கொந்தளித்து வற்றி வறண்டுபோம். பூமி இடிந்து தகர்ந்து சமதரையாய் விடும். சூரியனும் சந்திரனும் நக்ஷத்திரங்களும் ஒளி மழுங்கிக் கருத்துப்போம். ஏழுவானங்களும் அதிர்ந்து நிலை குலைந்து அலைந்து கொண்டு நிற்கும்.

அப்போது அல்லாஹுதஆலா மலக்கல் மௌத்து அலைஹிஸ்ஸலாமவர்களை விளித்து நீர் உம்முடன் எழுபதினாயிரம் ஜபானியாக்களைக் கூட்டிக்கொண்டு நரகத்திலுள்ள நெருப்பு விலங்கு எழுபதினாயிரமும், நெருப்புச் சங்கிலி எழுபதினாயிரமும் எடுத்துக்கொண்டு என் கோபத்துடன் இபுலீஸிடம்போய் அவனை மௌத்தாக்கும் என்று உத்திரவுசெய்வான். உடனே இஸ்ராயீல் அலைஹிஸ்ஸலாமவர்கள் மேற்சொன்னபடி ஜபானியாக்களை அழைத்துக்கொண்டு, விலங்குகளையும், சங்கிலிகளையும், எடுத்துக்கொண்டு, கல்குகள் அடங்கலும் கண்டால் அஞ்சிக்கலங்கி அழியத்தக்க பயங்கரமான ரூபத்துடன் பூமியிலிரங்கி இபுலீஸிடம் வருவார்கள். வந்தவுடன் அவன் இவர்களைக் கண்டு தட்டுக்கெட்டு தடுமாறி அஞ்சி நிலத்தில் விழுந்து உருண்டு புரண்டு எழுந்து மஷ்ரிகுபுறம் ஓடுவான். மலக்கள் மௌத்து அலைஹிஸ்ஸலாமவர்கள் அவனை விடாமல் வெருட்டிக்கொண்டு பின் தொடர்ந்தே போய், அவனை முடுகி நின்று, ஏண்டா இபுலீஸே! நீ எத்தனை காலம் ஜீவனோடிருந்து எத்தனை கூட்டத்தை வழிகெடுத்தாய். ஓடாதே நில், நான் இப்போது உனக்கு மௌத்தை புகட்டப் போகிறேன் என்று சொல்லுவார்கள். இதைக்கேட்டு அவன் பின்னும் அஞ்சிகலங்கி, வெருண்டோடுவான். மலக்கல் மௌத்து அலைஹிஸ்ஸலாமவர்களும் துரத்திக் கொண்டே போவார்கள். பின் அவன் நபி ஆதம் அலைஹிஸ்ஸலாமவர்கள் அடங்கியிருக்கும் தானத்தில்போய் நின்றுகொண்டு ஆதமே! நான் லஃனத்துச் செய்யப்பட்டவனும், விலகித் தள்ளப்பட்டவனும், தூரப்பட்டவனும் ஆனது உம்மாலல்லவா, என்று சொல்லி விட்டு, மலக்கல் மௌத்து அலைஹிஸ்ஸலாமவர்களைத் திரும்பிப்பார்த்து, நீர் எனக்கு என்ன குடிப்பை குடிப்பாட்டி எவ்விதவேதனை கொண்டு என் ஆவியைப் பற்றுவீர் என்று கேட்பான். அதற்கு அவர்கள் "லலா" என்னும் நரகத்துக்குடைய குடிப்பை உனக்குக் குடிக்கக் கொடுத்து "ஸயீறு" என்னும் நரகத்து வேதனை கொண்டு உன் உயிரை வாங்குவேன் என்பார்கள். இதைக்கேட்டு அவன் பின்னும் அதிகமாயஞ்சிக் கலக்கமுற்று மருண்டோடுவான். மலக்கல் மௌத்து அலைஹிஸ்ஸலாமவர்களும் தொடர்ந்தே போவார்கள். இவ்விதம் ஓடும் இபுலீஸ் முன் ஆரம்பத்தில் லஃனத்துசெய்யப்பட்டு எந்தத்தானத்தில் இறங்கினானோ அந்தத்தானம் போய்ச் சேர்வான். உடனே ஜபானியாக்கள் எழுபதினாயிரம் பேர்களும் அவனைச் சூழ வளைந்துகொண்டு, மறுபுறம் போகவொட்

18

டாமல் வல்லயங்களாலும், சூலங்களாலும் குத்திமறிப்பார்கள். அப்போது அவன் நெடுமறஞ்சாய்வது போலத்தரையில் சாய்ந்து விழுவான். விழுந்தவுடன் அவனுக்கு ஸக்கறாத்து உண்டாகும். அந்த ஸக்கறாத்தில் அவனுடைய தொண்டையிலிருந்து ஒரு விதச் சிலேட்டும் சத்தம் கிளம்பும். அந்தச் சத்தத்தைக் கேட்டால் மலக்குகளும், மனிதர்களும் திகில் கொண்டு மௌத்தாய் விடுவார்கள். இபுலீஸ் அவ்வித அமலியான சத்தத்துடன் ஸக்கறாத்தில் இழுத்துக்கொண்டு, அல்லாஹுத் தஆலா நாடினகாலம் வரையும் கிடந்து பின்பு சாவான்.

பிறகு அல்லாஹுத் தஆலா மலக்கல் மௌத்து அலைஹிஸ்ஸலாமவர்களைக் கூப்பிட்டு, என்னுடைய அடியார்களில் மௌத்தாகாமல் மீந்திருக்கிறவர்கள் யார்? என்று கேட்பான். அதற்கு அவர்கள் ஆண்டவனே! ஜிபுறயீலும், மீக்காயீலும், இஸ்றாபீலும், அடியேனும், அறுஷைச் சுமந்திருப்பவர்களுந்தான் மீந்திருக்கிறோம் என்று மறுமொழி சொல்லுவார்கள். உடனே அவர்களை மௌத்தாக்கும்படி அல்லாஹுத் தஆலா கட்டளை பண்ணுவான். அப்படியே ஜிப்றயீல் அலைஹிஸ்ஸலாம், இஸ்றாபீல் அலைஹிஸ்ஸலாம், அறுஷைச் சுமந்த மலக்குகள் ஆகிய இவர்களெல்லாரையும் மௌத்தாக்குவார்கள். இஸ்றாபீல் அலைஹிஸ்ஸலாமவர்கள் மௌத்தாகும்போது ஸூறை அருகில் வைத்து விடுவார்கள். அவர்கள் எல்லாரும் மௌத்தான பின் அல்லாஹுத் தஆலா மலக்கல் மௌத்து அலைஹிஸ்ஸலாமவர்களைப் பார்த்து இப்போது மீந்தவர் யார்? என்று கேட்பான். அதற்கு அவர்கள் உன் அடியானாகிய நான் தான் மீந்திருக்கிறேன் என்று பதில் சொல்வார்கள். உடனே அல்லாஹுத் தஆலா அவர்களைப் பார்த்து இஸ்றாயீலே! என்னுடைய படைப்புகளில் நீரும் ஒரு படைப்புதான். ஆகையால் நீரும் மௌத்தாய் விடும் என்று கட்டளையிடுவான். உடனே அவர்கள் சுவர்க்கத்திற்கும். நரகத்திற்கும இடையில் போய் விழுந்து நாற்பது வருஷம் வரையும் ஸக்கறாத்தில் கிடந்து, ஸக்கறாத்து வருத்தத்தை அநுபவித்துக்கொண்டு, ஸக்கறாத்து வருத்தம் இப்படியிருக்குமென்று முந்தியே நான் அறிந்திருந்தால் மூஃமின்களுடைய றூஹை வாங்கும்போது அவர்களுக்கு இரங்குவேனே என்று பெருஞ்சத்தமிட்டு அலரிக்கொண்டு, அல்லாஹுத் தஆலாவின் கட்டளைப்படி மௌத்தாய் விடுவார்கள்,

முதல் ஸூறு ஊதினபோதே இடிந்து தகர்ந்து சமதரையான பூமியும், குலைந்து அலைந்தவானமும், அறுஷும், குறுஸும், லௌஹும், ஸுவர்க்கமும், நரகமும்தவிர மற்றப்படைப்புகள் அடங்கலும் அழிந்துபோம். பின் மேற்சொன்ன மலக்குகளும் மௌத்தாய், அல்லாஹுத் தஆலா தனியவனா யிருப்பான். அப்படியிருக்கும்போது அல்லாஹுத் தஆலா உலகத்தை ஆண்ட ராஜாக்கள் எல்லாரும் இப்போது எங்கே? மாடமாளிகைகளை கட்டிக் குடியாயிருந்து கொண்டு செல்வத்தில் இறுமாந்து கிடந்தவர்கள் எங்கே? என்னுடைய இரணத்தைத்தின்று கொண்டு, என்னை யல்லாத வஸ்துவை வணங்கினவர்கள் எங்கே? இப்போது ராஜாங்கம் யாருடையது என்று தன்னில் தானே கேட்பான் இக்கேள்விகளுக்கு மறுமொழி சொல்ல ஒருவரும் இல்லை. ஆகையால்தன் கேள்விகளுக்கு மறுமொழியால் ராஜாங்கம் அடக்கியாளும் ஒருவனாகிய அல்லாவுக்கே உடையது என்று தானே சொல்லிக்கொள்வான்.

பிற்பாடு அல்லாஹுத் தஆலா கல்குகளை எழுப்பநாடுவான். அப்படி நாடினவுடன் மலக்குகளிலே கர்றூபீன்களையும், அறுஷைச் சுமந்தவர்களையும் முந்தி ஹயாத்தாக்கி எழுப்புவான். அந்த மலக்குகளுடைய வலிமையையும் மகிமையையும் எண்ணிக்கையையும் அல்லாஹுத் தஆலாதான் அறிவானன்றி, மற்றயாவரும் அறியமாட்டார்கள். அவர்கள் ஹயாத்தாய் எழுந்தவுடன் அல்லாஹுத் தஆலா அந்தக் கர்றூபீன்களைப்பார்த்து, லௌஹ் எங்கே? என்று கேட்பான். அதற்கு அவர்கள் அது அறுஷில் கொளுவப் பட்டிருக்கின்றது என்று மறுமொழி சொல்வார்கள். பிறகு அல்லாஹுத் தஆலா இடம்ருந்து "லௌஹே"! என்று கூப்பிடுதலான ஒரு சத்தம் பிறக்கும். அந்தச்சத்தத்தினால் அது அஞ்சி நடுங்கித்துடிக்கும். லௌஹ் என்பது ஐந்நூறு வருஷத் தூரப் பிரயாணமுள்ள ஒரே ஆணிமுத்திலது ஒருபலகை. அதற்கு லௌஹுல் "மஹு" வலான (பேணப்பட்ட பலகை) என்று பெயர். அதில்துவக்கமுதல் கியாமத்துவரையுமுள்ள எல்லா விஷயங்களும் அடங்கியிருக்கும்.

இவ்விதம் லௌஹ் மேற்சொன்ன சத்தத்தினால் அஞ்சி நடுங்கினவுடன் அல்லாஹுத் தஆலா அதைப்பார்த்து யான் உன்னிடம் தந்த வஸ்துக்கள் எங்கே? அதுகளை நீ என்ன செய்தாய்? என்று கேட்பான். இக்கேள்விக்கு அது நான் அந்த வஸ்துக்களை

இஸ்றாயீலிடம் கொடுத்து விட்டேன் என்று பதில் சொல்லும். உடனே அல்லாஹுத் தஆலா இஸ்றாபீலைத்தன்னிடம் கொண்டுவரும்படி கர்றாபீன்களுக்குக் கட்டளையிடுவான். அப்படியே எழுபதினாயிரம் கர்றாபீன்கள் புறப்பட்டு இஸ்றாயீல் அலைஹிஸ்ஸலா மவர்களுடைய மகாமிற்போய் இஸ்றாயீலே! அல்லாவுடைய கூப்பிடுதலுக்கு ஜவாபு சொல்லும் என்று சொல்வார்கள். அப்படிச்சொல்லும் போதே அல்லாஹுத் தஆலா இஸ்றாயீல் அலைஹிஸ்ஸலாமவர்களை ஹயாத் தாக்குவான். உடனே அவர்களை கர்றாபீன்கள் அழைத்துக் கொண்டு போய் அல்லாஹுத் தஆலாவின் சமூகத்தில் விடுவார்கள். அப்போது அல்லாஹுத் தஆலா புறத்திலிருந்து யாஇஸ்றாயீல்! என்று ஒரு சத்தம் பிறக்கும். அந்தச்சத்தத்தினால் அவர்கள் உடல்நடுங்கி ஒரு சிட்டுக்குருவியைபோல் சிறுத்து அஞ்சி நிற்பார்கள். லௌஹித்திலிருந்து நீ வாங்கின என்னுடைய அமானத்தை என்ன செய்தாய்? என்று அல்லாஹுத் தஆலா கேட்பான். உடனே அவர்கள் நான் அதை இஸ்றாபீலிடம் கொடுத்துவிட்டேன் என்று சொல்லுவார்கள். உடனே அல்லாஹுத் தஆலா இஸ்றாபீலைக்கொண்டுவரும்படி கர்றாபீன்களுக்கு உத்திரவு பண்ணுவான். முன்போலவே எழுபதினாயிரம் கர்றாபீன்கள் அவர்களுடைய மாகாமிற்போய் இஸ்றாபீலே? அல்லாஹுத தஆலாவுடைய கூப்பிடுதலுக்கு பதில் சொல்லும் என்று சொல்லுவார்கள். உடனே அல்லாஹுத் தஆலா அவர்களை ஹயாத்தாக்குவான். பிறகு கர்றாபீன்கள் அவர்களை அழைத்துக் கொண்டுபோய் அல்லாஹுத் தஆலாவின் சமூகத்தில் விடுவார்கள். அபபோது யாஇஸ்றாபீல்! என்று அல்லாஹுத் தஆலாவின் புறத்திலிருந்து ஒரு சத்தம் பிறக்கும். அந்தச்சத்தத்தினால் அவர்கள் நடுநடுங்கி நிற்பார்கள். அல்லாஹுத் தஆலா அவர்களைப்பார்த்து இஸ்றாயீல் என்னுடைய அமானத்தை உன்னிடம் தந்தாரா? அதை நீ என்ன செய்தாய் என்று கேட்பான். அதற்கு அவர்கள் நான் அதை மீக்காயீல் இடத்திற் கொடுத்துவிட்டேன் என்று பதில் சொல்லுவார்கள். மீக்காயீல் அலைஹிஸ்ஸலா மவர்களைக் கொண்டுவரும்படி கர்றாபீன்களுக்கு அல்லாஹுத் தஆலா உத்திரவு பணணுவான். உடனே எழுபதினாயிரம்பேர் அவர்களுடைய மகாமிற்போய் மீக்காயீலே? அல்லாஹுத் தஆலாவுடைய கூப்பிடுதலுக்கு பதில் சொல்லும் என்பார்கள். உடனே அல்லாஹுத் தஆலா அவர்களை ஹயாத்தாக்குவான். கர்றாபீன்கள்

அவர்களை யழைத்துக் கொண்டுவந்து அல்லாஹுத் தஆலாவின் சமுகத்தில் விடுவார்கள். அப்போது யாமீக்காயீல்! என்று அல்லாஹுத் தஆலா புறத்திலிருந்து ஒரு சத்தம் பிறக்கும். அந்தச் சத்தத்தினுல் அஞ்சிப்பயந்து நிற்பார்கள். அப்போது அல்லாஹுத் தஆலா என்னுடைய அமானத்தை இஸ்றாபீல் உன்னிடம் தந்தாரா? நீ அதை என்ன செய்தாய்? என்று கேட்பான். உடனே அவர்கள் அதை ஜிபுறயீலிடம் கொடுத்து விட்டேன் என்று சொல்லுவார்கள். உடனே ஜிபுறயீலைக் கொண்டுவரும்படி அல்லாஹுத் தஆலா கர்றூபீன்களுக்கு உத்திரவு பண்ணுவான். எழுபதினுரம் கர்றூபீன்கள் அவர்களுடைய மகாமிற்போய், ஜிபுறயீலே! அல்லாஹுத் தஆலாவுடைய கூப்பிடுதலுக்கு பதில் சொல்லும் என்று சொல்லுவார்கள். அப்போது அல்லாஹுத் தஆலா அவர்களை ஹயாத்தாக்குவான், பிறகு கர்றூபீன்கள் அவர்களையழைத்துக் கொண்டு வந்து அல்லாஹுத் தஆலாவின் சமுகத்தில் விடுவார்கள். உடனே அல்லாஹுத் தஆலாவின் சமுகத்திலிருந்து யாஜிபுறயீல்! என்று ஒரு சத்தம் பிறக்கும். அந்த சத்தத்தினுல் அவர்கள் அஞ்சிநடுநடுங்கிநிற்பார்கள். அப்போது யாஜிபுறயீல்! மீக்காயில் என் அமானத்தை உன்னிடம் தந்தாரா? நீ அதை என்ன செய்தாய்? யென்று அல்லாஹுத் தஆலா கேட்பான். அதற்கு அவர்கள் யான் அதை முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் இடத்திற்கு கொடுத்துவிட்டேன் என்று சொல்லுவார்கள்.

அதன் பிறகு அல்லாஹுத் தஆலா ஸுவர்க்கத்திற்கு அதிபதியாகிய றிலுவான் என்னும் மலக்குக்கு என்னுடைய ஹபீபு முஹம்மதுக்காகவும் அவருடைய உம்மத்துக்காகவும், சுவர்க்கங்களை யெல்லாம் அலங்கரியும் என்று கட்டளைப் பண்ணிவிட்டு, மேற்சொன்ன கர்றூபீன்களைப் பார்த்து நீங்கள் என்னுடைய ஹபீபாகிய முஹம்மது இடத்திற்குப்போய், அவரையழைத்துக் கொண்டு வாருங்கள், என்று உத்திரவுசெய்து, பிறகு ஜபுறயீல் அலைஹிஸ்ஸலாமவர்களை யழைத்து அவர்களோடு இரண்டு பட்டாடைகளையும், இஸ்றாபீல் அலைஹிஸ்ஸலாமவர்களை யழைத்து அவர்களோடு லிவாவுல் ஹம்து என்னும் கொடியையும், கூடக் கொண்டு போகும்படி அனுப்புவான். இந்த மலக்குகள் அனைவருக்கும் நபி முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்களிடத்திற்கு மிக மிருதுவாகவும், தாழ்மையாகவும், போகும்படி

அல்லாஹுத் தஆலாவின் கட்டளை பிறக்கும். அப்படியே, கர்ரூபீன்களும், நான்கு மலக்குகளும் பூமியிலிறங்கி, நபி முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்களுடைய கபுறைத் தேடிக்கொண்டு வருவார்கள். அப்போது அந்த கபுறு இருக்கும் தானம் அவர்களுக்குத் தெரியாது. அவ்விதம் தெரியாமல் தேடிக்கொண்டு வரும்போது ஜிபுறயீல் அலைஹிஸ்ஸலாமவர்கள் பூமியைக்கூப்பிட்டு பூமியே! ஷபீஉல் முதுனபீன் முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்களுடைய மேன்மையான கபுறு எங்கிருக்கிறது? என்று கேட்பார்கள். அதற்கு பூமி அல்லாஹுத் தஆலா என்னை இடித்துப் பரப்பிச் சமதரையாக்கி விட்டானே நான் அந்த கபுறை எப்படி யறிவேன். எனக்குத் தெரியாது, என்று அவர்களுக்கு பதில் சொல்லும். அதனுல் ஜிபுறயீல் அலைஹிஸ்ஸலாமவர்களும், மற்ற மலக்குகளும் மனமயங்கி நிற்பார்கள். அப்போது நபி முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்களுடைய கபுறு இருக்குர் தானத்திலிருந்து பெரிய பிரகாசமுள்ள ஒரு ஒளிவானது ஒரு ஸ்தம்பம்போல எழுந்து வானம் வரையில் உயர்ந்து இலங்கிக்கொண்டிருக்கும். அந்த ஒளிவைக் கண்டு இதுதான் முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்களுடைய கபுறு என்று அவர்கள் அறிந்துகொண்டு அவ்விடம் நெருங்குவார்கள். நெருங்கி நின்று கொண்டு ஜிபுறயீல் அலைஹிஸ்ஸலாமவர்கள் முதலான நான்கு மலக்குகளும் நபி முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்களைக்கூப்பிடு வதற்காக ஒருவருக்கொருவர் நான் கூப்பிடமாட்டேன், நான் கூப்பிடமாட்டேன், என்று தர்க்கம் பண்ணிக்கொண்டு முடிவில் மீக்காயீல் அலைஹிஸ்ஸலாமவர்கள் “அஸ்ஸலாமு அலைக்கும் யாமுஹம்மது!” என்று சொல்லுவார்கள். அதற்கு கபுறிலிருந்து பிரதியொன்றும்வராது. அதன் பிறகு ஜிபுறயீல் அலைஹிஸ்ஸலாமவர்கள் “துப்புரவான ரூஹே! துப்புரவான் ஜடலத்தில் மீளநுழை” என்று சொல்லுவார்கள். அதற்கு கபுரில் யாதொரு ஊசாட்டமும் கேளாது. அதன் பிறகு, இஸ்றாபீல் அலைஹிஸ்ஸலாமவர்கள் விண்ணப்பம் செய்வதற்காகவும், கணக்கு கொடுப்பதற்காகவும். தீர்ப்பு பெருவதற்காகவும், எழுந்திரும் என்று சொல்லுவார்கள். உடனே நபி முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்களுடைய கபுறு அதிர்ந்து தளும்பி வெடிக்கும். மறுதரமும் அப்படியே சொல்லுவார்கள். அப்போது அந்தக்கபுறு பிளந்து விரியும். உடனே ஹபீபு றப்பில் ஆலமீன் காத்திமுன்னபிய்யீன் நபி முஹம்மது முஸ்தபா

ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்கள் தங்கள் கபுறில் எழுந்திருப்பார்கள். அப்போது அவர்கள் சிரசிலும் தாடியிலும் மண் ஒட்டியிருக்கும். அந்த மண்ணைத்தங்கள் கையினால் தட்டிக் கொண்டு, வலதுபுறமும், இடதுபுறமும், திரும்பிப்பார்ப்பார்கள். பார்த்தபோது பூமியானது தன்மேலிருந்த கட்டிடங்கள் முதலானவைகளில் ஒன்று மில்லாமல் நிலைகுலைந்து சமதரையாயிருக்கக் கண்டு கண்ணீர் சிந்த அழுவார்கள். அப்போது ஜிபுறயீல் அலைஹிஸ்ஸலாமவர்கள் முஹம்மதே! ஏன் அழுகிறீர்கள்? தாங்கள் அல்லாஹுத் தஆலா இடத்தில் மகாமேலான பதவிபெற்றவர்களாயிருக்கிறீர்களே எழுந்திருங்கள் என்று சொல்லுவார்கள். அப்போது முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்கள் அவர்களைப் பார்த்து, ஜிபுறயீலே! இது எந்தநாள் என்று கேட்பார்கள். அதற்கு முஹம்மதே! அஞ்சாதீர்கள். இது கியாமத்து நாள், கைசேதப் படும்நாள், விண்ணப்பஞ் செய்யும்நாள், சந்திக்கும்நாள், பிரியும் நாள், வெருண்டோடும்நாள், என்று ஜிபுறயீல் அலைஹிஸ்ஸலாம் சொல்லுவார்கள். அப்போது முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்கள் அவர்களைப்பார்த்து ஜிபுறயீலே! எனக்கு நீர் நன்மாராயம் சொல்லும் என்று சொல்லுவார்கள். அப்போது ஜிபுறயீல் அலைஹிஸ்ஸலாமவர்கள் முஹம்மதே! தங்களுக்கு நன்மாராயம் உண்டாவதாக இதோ ஸுவர்கத்து வாகனமாகிய புறாக்கைப் பாருங்கள், தாசைப்பாருங்கள், பட்டாடைகளைப்பாருங்கள், லிவாவுல் முஹம்மதைப் பாருங்கள் இவையெல்லாம் தங்களுக்காக அல்லவா? என்று சொல்லுவார்கள். இந்தச்சொல்லை நபிமுஹம்மது ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள்கேட்டு, இதுகளைப்பற்றி நான் உம்மிடம் கேட்கவில்லை. என்னுடைய உம்மத்தைப்பற்றியேகேட்கிறேன். அவர்கள் எங்கே? அவர்களுடைய காரியம் எப்படி? என்று கேட்பார்கள் அப்போது ஜிபுறயீல் அலைஹிஸ்ஸலாமவர்கள் முஹம்மதே! அல்லாஹுத் தஆலாவுடைய சிறப்பின் ஆணை தங்கள் கபுறுக்கு முந்தி ஒருவருடைய கபுறும் பிளக்கவில்லை என்று சொல்லுவார்கள். இஸ்றாபீல் அலைஹிஸ்ஸலாமவர்களும் இன்னும் நான் அதற்காக சூறு ஊதவில்லை என்பார்கள். இதுகளை நபி நாயகமவர்கள் கேட்டு, இப்போதுதான் என் கண்கள் குளிர்ந்து கல்பும் மகிழ்ந்தது, என்று சொல்லி, பட்டாடைகளை வாங்கி ஒன்றையுடுத்தி ஒன்றைப் போர்த்து தாஜை வாங்கிச் சிரசிலணிந்து எழுந்து நின்று இன்றையதினம் நான் என் இடுப்பை வரித்து கட்டிக்கொண்டு, என் உம்மத்துக்காக முன்முடுவேன்

என்று சொல்லுவார்கள். அப்போது ஜிபுறயீல் அலைஹஸ்ஸலாமவர்கள் முஹம்மதே, புறாகில் ஏறிக்கொண்டு அல்லாஹுத் தஆலாவின் சமுகத்திற்கு வாருங்கள் என்று அழைப்பார்கள். உடனே நபி நாயகமவர்கள் புறாக்கில் ஏறுவார்கள். புறாக்கு ஓடி கண்ணுக் கெட்டிய தூரமாக அங்கிருந்து நடந்து அல்லாஹுத் தஆலாவின் சமூகத்தில் போய்ச் சேரும். உடனே நபி நாயகமவர்கள் புறாக்கை விட்டிறங்கி ஸுஜூதில் விழுவார்கள். அப்போது அல்லாஹுத் தஆலா என் ஹபீபே! முஹம்மதே! இது றுக்கூஉ ஸுஜூது செய்யும், விசாரணைகள் தலையை உயர்த்தும். நீர் விரும்பினதை என்னிடம் கேளும் தருகிறேன், ஷபாஅத்து செய்யும் உத்திரவு தருகிறேன் என்று சொல்லுவான். அப்போது நபி நாயகமவர்கள் தலை நிமிர்ந்து எழுந்திருப்பார்கள்.

பிறகு அல்லாஹுத் தஆலா நபி நாயகமவர்களைப்பார்த்து, முஹம்மதே! ஜிபுறயீல் என் அமானத்தை உம்மிடம் தந்தாரா? என்று கேட்பான். அதற்கு ஆம் என்பார்கள். அதை என்ன செய்தீர்? என்று கேட்பான். அதை என் உம்மத்திடம் கொடுத்திருக்கிறேன் என்பார்கள். அதன்பின் முஹம்மதே! நீர் பைத்துல் முகத்திஸில் இருக்கும் பாறைக்கல்லில் போய் உட்கார்ந்திரும் என்று கட்டளைபண்ணுவான். அப்படியே அவர்கள் அங்கே போய், தங்கள் உம்மத்துமீது நினைவாக வரும் வழியைப்பார்த்துக்கொண்டு உட்கார்ந்திருப்பார்கள். முதல்ஸூறு ஊதினமுதல் இதுவரையும் நாற்பது வருஷங்கள் ஆய்விடும்.

முதல் ஸூறூதின நாற்பது வருஷங்களுக்குப் பிற்பாடு அல்லாஹுத் தஆலா இஸ்றாபீல் அலைஹிஸ்ஸலாமவர்களுக்கு ஸூறை எடுத்துக்கொள்ளும்படி கட்டளை பண்ணுவான். அப்படியே அவர்கள் அதை அறுஷிலிருந்து எடுத்துக்கொள்வார்கள். பின் அல்லாஹுத் தஆலாவின் உத்திரவு கொண்டு வானத்திலிருந்து சுக்கிலத் தன்மையான மழையொன்று நாற்பது நாள்வரையும் பெய்து, அந்த நீர் பூமிக்குமேல் பன்னிரண்டு முழம் உயர்ந்து கட்டி நிற்கும். அதனுல் இறந்து உக்கின எலும்பு, நரம்பு சதை தோல், நகம் ரோமம், வற்றிவறந்த ரத்தம், இவையெல்லாம் பழைய படி உண்டாய் முன்னிருந்தபடி உண்டாய் முன்னிருந்தபடி முன் இறந்துபோன ஜீவகோடிகளுடன் ஜடலம் அடங்கலும் உருச்சமைந்து தயாராகும். அப்போது அல்லாஹுத் தஆலா ஸூறு ஊதும்படி ஏவுவான்.

உடனே இஸ்றாபீல் அலைஹிஸ்ஸலாமவர்கள் ஸூறு ஊதுவார்கள். ஸூறில் கல்குகளுடைய தொகை எவ்வளவோ அவ்வளவு துவாரங்கள் இருக்கும். அந்த ஒவ்வொரு துவாரத்திலும் ஒவ்வொரு கல்கின் றூஹையும் அல்லாஹுத் தஆலா அப்போது சேர்ப்பான். இஸ்றாபீல் அலைஹிஸ்ஸலாமவர்கள் ஸூறில் வாயை வைத்து, இறந்து மடிந்த ஜடலங்களே! எக்கியுலைந்த எலும்புகளே! கிழிந்து அழிந்த தோல்களே! நைந்து மக்கின நரம்புகளே! உதிர்ந்து பிரிந்த ரோமங்களே! நீங்கள் அடங்கலும் அல்லாஹுத் தஆலாவிடம் விண்ணப்பஞ் செய்யவும், கணக்குக் கொடுக்கவும், தீர்ப்புப்பெறவும், கபுறுகளிலிருந்து எழுந்திருங்கள்; என்று சொல்லிக் கொண்டே ஊதுவார்கள். அப்போது அல்லாஹுத் தஆலா இஸ்றாபீலே! இன்னும் ஊதும், நான் ஹயாத்தாக்கிறேன் என்பான். மறுபடியும் மறைந்திருக்கிற றூஹுகளே, ஆலத்தை ஆள்கிற அல்லாஹு தஆலா விண்ணப்பஞ் செய்வதற்காக உங்கள் ஜடலங்களில் மீள நுழையுங்கள் என்று சொல்லி ஊதுவார்கள். ஊதும்போது என் வல்லபத்தின் ஆணையாக, சிறப்பின் ஆணையாக ஒவ்வொரு றூஹும் அந்தந்த ஜடலத்தில் மீளநுழை என்று அல்லாஹுத் தஆலா சொல்வான். அந்த க்ஷணமே ஒவ்வொரு றூஹும் தன் தன் ஜடலத்தில் நுழைந்துகொள்ளும். அப்போதே கபுறுகள் எல்லாம் படீரென்று பிளக்கும். மடிந்துபோன மனிதர்களும் மலக்குகளும், ஜின்களும், ஷைத்தான்களும் உயிர்த்து எழுந்திருப்பார்கள். மிருகாதி ஊர்வனமும், பறப்பனவுமாகிய எல்லாப்பிராணிகளும் உயிர்பெற்று எழுந்திருக்கும்.

உயிர்த்தெழும்பும்போது காபிர்கள் “எங்களுக்கு என்ன கேடு, எங்களைத் தூக்கத்திலிருந்து எழுப்பினவர் யார்” என்றும் முஃமின்கள், “இது அல்லாஹுத் தஆலா சொன்ன வார்த்தைப்பாடாம், முறுஸலான நபிமார் எல்லாரும் உண்மை சொன்னார்கள்” என்றும் சொல்லிக்கொண்டு எழுந்திருப்பார்கள். அவர்கள் எழுந்திருக்கும்போது நிர்வாணிகளாகவும், கத்னா இல்லாதவர்களாகவும், அஞ்சிப்பதறும் மனதை யுடையவர்களாகவுமே இருப்பார்கள். எல்லாரும் இவ்விதம் எழுந்த பின் யாதொரு பேச்சு மூச்சின்றி மேல் நோக்கினவர்களாய், நாற்பது வருஷம் வரையும் ஒரே நிலையாய் நிற்பார்கள். அவர்கள் நிற்பது, அகன்ற மைதானில் வெட்டுக்கிளிகள் கும்பல் கும்பலாய்த் திரண்டு மொய்த்

திருப்பதுபோல இருக்கும். மனிதர்கள் இருபத்து நான்கு வகை யாயிருப்பார்கள். அவை :—

பித்னகாரர் குரங்கு ரூபமும், லஞ்சம் வாங்கிகள் கரடி ரூப மும், ஓரம்பேசிகள் குருடும், அமலில் பெருமை யடித்தோர் செவிடும், குருடுமையும், விதி விலக்குகளைப் பிறருக்குச் சொல்லி யும், தான் செய்யாதோர் ஊனீர் வாடிய நாவைத் தின்கிறவர்களும் பொய் சாக்ஷிக்காரர் தீயால் கூடப்பட்டவர்களும், ஆகாதாரின் பத்தை அனுபவித்தோர் காலுந்தலையும் வளையக்கட்டப்பட்டுத் துர்க்கந்தம் நாறுகிறவர்களும், வேத நிபந்தனை மீறினோர் குடியர் போலவும், புறம் பேசிகள், கில்பூசின காற் சட்டைக்காரரும், கோள் சொல்லிகள், பிடரியில் நாக்குத் தொங்கினவர்களும், பள்ளி லிருந்து வீண்மொழி பேசினோர் மிருக ரூபமாய் வாயால் அக்கினி கக்கினவர்களும், வட்டி வாங்கிகள், பாம்பும், தேளும் நிறைந்த பெரு வயிற்றுக்காரரும், அசல் வீட்டாரை நோவித்தவர்கள், கை கால் அற்றவர்களும், பொருளை அல்லாவுக்காகச் செலவிடா மல் சேகரித்து வைத்திருந்தோர் நெற்றியிலும், முதுகிலும், விலா விலும் மற்ற இடங்களிலும் சூடுபோடப்பட்டவர்களும், தொழு கையை இலகுவாய் விட்டவர்கள் பன்றி ரூபமும், வர்த்தகத்தில் பொய் சொன்னவர்கள் வாயால் ரத்தம் வடியக் குடல் தள்ளின வர்களும், அல்லாஹு—த் தஆலாவுக்கு அஞ்சாமல் மனிதர்களின் வெட்கத்திற்கு அஞ்சி மறைவாகத்திற் கருமஞ் செய்தவர்கள் சரீ ரத்தில் ஊனம் வடிகிறவர்களும், பத்தினிகளைப் பழுது பேசினவர் கள் பிடரியில் நாக்குப் புறப்பட்டவர்களும், சாக்ஷி சொல்ல மறு தலித்தவர்கள் வாயில் நாவில்லாமல் ரத்தமும், சீழும் வடிந்தவர் களும், விளசெய்தவர்கள் பறுஜிலிருந்து ஊனமும், சீழும் வடிந் தவர்களும், எத்தீம்களுடைய சொத்தை தின்றவர்கள் முகங்கறுத் துக் கண்கள் நீல நிறமாய் வயிற்றில் நெருப்பு நிறைந்தவர்களும், பிதா மாதாக்களை நோவினை செய்தவர்கள் குஷ்டரோகம் பிடித்த வர்களும், கள்ளுக்குடித்தவர்கள் நாவு கொம்பு போலத் தளளி நீண்டு உதடுகள் முழங்காலவரை தொங்கி, வயிற்றிலிருந்து மலம் வெளிப்படுங் குருடர்களுமாய், நபிமார்களும், உலமாக்களும், ஷஹீதானவர்களும், பீஸபீல் செய்தவர்களும், குர்ஆனை மனப் பாடஞ்செய்து அதின் முறைமைப்படி நடந்தவர்களும், பலவித வியாதி முதலான பலாய்களில் அகப்பட்டுப் பொருமையோடு அனுபவித்தவர்களும், வளமையாக பாங்கு சொன்னவர்களும்,

நீதமுள்ள அரசர்களும், அந்தரங்கக் கொடை கொடுத்த தயாளர்களும், சொல் செயல், நிய்யத்துகளின் உண்மை யுள்ளவர்களும் விதி விலக்கல்களை உபதேசித்த ஸாலிஹானவர்களும், அல்லாஹுத் தஆலாவுக்காக நோன்பு வைத்தவர்களும், அநியாயமாய்க் கொல்லப்பட்டவர்களும், வெள்ளிக் கிழமையில் மௌத்தானவர்களும், நிபாஸுடைய காலத்தில் மௌத்தான பெண்களும், புருஷனுக்கு வழிப்பட்ட ஸாலிஹான பெண்களும், தங்கள் மானத்தைக் காப்பாற்றினவர்களும், அல்லாஹுத் தஆலாவின் திக்றை அதிகமாகச் செய்தவர்களும், இவர்களைப் போன்ற இன்னும் பலரும் முகங்கள் பூரணச்சந்திரனைப்போல் பிரகாசிக்கும் படியாகத் தங்கள் வாய்களைத்திறந்து ஷஹாதத்துக் கலிமாவையும் இது வாகிறது அல்லாஹு தஆலாவினுடைய வார்த்தைப்பாடாம், முறுஸலான நபிமார்கள் உண்மை சொன்னார்கள், என்று ஆயத்தையும் ஓதுகிறவர்களுமாக எழுந்து நிற்பார்கள்.

இவ்வித வகையார்களில் கடைசி வகையாகிய இருபத்து நான்காம் வகையான கூட்டத்தாரிடத்தில் அல்லாஹுத் தஆலாவுடைய உத்திரவுகொண்டு மலக்குகள் வந்து கைகொடுத்து நன்மாராயஞ் சொல்லி, அவர்களின் சரீரத்திலுள்ள மண்ணைத்துடைப்பார்கள். துடைக்கும்போது நெற்றிமன் மற்ற மண்ணெல்லாம் துடைபட்டுப்போம். அப்போது நெற்றிமண் கபுறு மண் அல்ல, அவர்கள் தொழுதபோது செய்த சுஜூதினால் ஒட்டினமண், ஆகையால் அதைத்துடைக்காதீர்கள். அந்த மண் ஸுவர்க்கம் புகுதும் வரையும் துடைபடாது, விட்டு விடுங்கள் என்று ஒரு சத்தம் பிறக்கும். பிறகு அல்லாஹுத் தஆலா ஸுவர்க்கத்து அதிபதியாகிய றிலுவான் என்னும் மலக்கு என்னுடைய ஸாலிஹான அடியார்களை அவர்கள் கபுறிலிருந்து எழுப்பியிருக்கிறேன். அவர்கள் பசித்தவர்களாயும், இருக்கிறார்கள். அவர்களுக்காக நீர் வேண்டிய ருசியுள்ள பதார்த்தங்களையும், குடிப்புகள் முதலானவைகளையும் எதிரேகொண்டு போவீராக, ஏனென்றால் அவர்கள் மனிதர்களெல்லாரும் தூங்குகிறபோது விழித்திருந்து தொழுதார்கள். எல்லாரும் உண்டு தின்று கொண்டிருக்கும்போது நோன்பாயிருந்தார்கள், என்று உத்திரவு செய்வான். அப்படியே அந்த மலக்கு தயார் செய்வித்துக்கொண்டு மேற்சொன்ன ஸாலிஹான கூட்டத்தாரிடம் கொண்டுவந்து கொடுப்பார்கள். பிறகு அந்த மலக்குக்கு சுவர்க்

கத்து வாகனங்களைக் கொண்டுவரும்படி உத்திரவாகும். அப்படியே கொண்டு வருவார்கள். மேற்சொன்ன லாவிஹான கூட்டத்தாரனைவரும், அந்த வாகனங்களில் ஏறுவார்கள். உடனே கஸ்தூரிமணமுள்ள மேகம் ஒன்றுவந்து அந்தக் கூட்டத்தாருக்கு மாத்திரம் குடையிட்டு நிற்கும். எல்லாரும் மேற்சொன்னபடியே நிற்பார்கள்.

கியாமா முடிந்தது.

---

## 3-ம் பஸல்.

## ஹஷ்று.

ஹஷ்று என்பது சேர்க்குதல். அது கபுறுகளிலிருந்து எழுந்த கல்குகளடங்கலையும், விசாரணைக்காக ஒருங்கு சேர்த்தலாம். அல்லாஹுத் தஆலா கல்குகளை நன்மை தீமைகளைப்பற்றி விசாரிக்க நாடினபோது எல்லா கல்குகளையும், ஹாஜர்படுத்தும்படி ஜிபுரயீல் அலைஹிஸ்ஸலாமவர்களுக்குக் கட்டளை பண்ணுவான். அப்போது அவர்கள் கல்குகளே அடக்கி ஆளும் சர்வ வல்லமையுள்ள அல்லாஹுத் தஆலாவின் சமூகத்தில் விசாரணைக்காக விரைந்து வாருங்கள், என்று சத்தமிட்டு அழைப்பார்கள். அப்போது அல்லாஹுத் தஆலா ஒவ்வொருவருக்கும் சாக்ஷிசொல்லவும், அவரை அழைத்துக்கொண்டு வரவும் இரண்டிரண்டு மலக்குகளை நியமிப்பான். இரண்டு மலக்குகளும் அவரவர் உலகத்தில் இருக்கும்போது கூடவிருந்து நன்மை தீமைகளை, எழுதிவந்த கிறுமன் காத்திபீன் என்னும் மலக்குகள்தாம். அதன்பின் அல்லாஹுத் தஆலாவின் உத்திரவுப்படி ஒரு பெருநெருப்பு வெளிப்பட்டுப் பூமி முழுவதையும் சூழ வளைந்துகொண்டு மனிதர்களைச் சிதறவிடாமல் மறித்து மூஃமினானவர்களைத் தீங்கொன்றுஞ் செய்யாமல் காபிர்களுடைய முகங்களைப்பற்றிப் பிடிக்கவும் அதனால் அவர்கள் வெருண்டோடுவார்கள். ஓடுந்திசையெல்லாம் நெருப்பு மயமாயிருப்பதால் ஓடி யொதுங்க இடமின்றி அனைவரும் ஒன்றாய் மஹ்ஷருடைய தானத்தில் வந்து சேர்வார்கள். மனிதர்களனைவரும் கூட்டங் கூட்டமாகக் கடல்அலை ஒன்றுக்குப்பின் ஒன்றாய் வருவது போல் வந்து சேர்ந்த பின் மிருகங்கள் முதலான ஜீவராசிகளனைத்தும் வெருண்டோடாமல் விசாரணை நாளென்று அஞ்சித்தலை குனிந்து தாழ்மையுடன் வந்து மனிதர்களுக்குப் புறத்தில் நிற்கும்.

ஜின்களும், ஷைத்தான்களும், அதனதன் துஷ்டத்தனங்களைத் தையும் விட்டுத் தாழ்மையுடன் வந்து நிற்கும். இந்தக்காட்சி களெல்லாவற்றையும் நபி முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹி வஸல் லமவர்கள் முன்சொன்ன பாறைக்கல்லில் உட்கார்ந்து பார்த்துக் கொண்டிருந்து மனிதர்களில் ஒவ்வொரு கூட்டம் வரும்போதெல் லாம் ஜிபுறயீல் அலைஹிஸ்ஸலாமவர்களைப் பார்த்து என்னுடைய உம்மத்து எங்கே? என்று கேட்பார்கள். அதற்கு அவர்கள் தங்க ளுடைய உம்மத்து ஆகிர் உம்மத்தாகையால் அவர்கள் எல்லாருக் கும் கடைசியில் வருவார்கள் என்று சொல்லுவார்கள். அப்படி யிருக்கையில் ஜிபுறயீல் அலைஹிஸ்ஸலா மவர்கள் சொன்னது போலவே நபி முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்களு டைய உம்மத்து கடைசியாய், வருவதைக்கண்டு ஜிபுறயீல் அலை ஹிஸ்ஸலாமவர்கள் அழுவார்கள். அவர்கள் அழுவதை நபி நாயக மவர்கள் பார்த்து ஜிபுறயீலே ஏன் அழுகிறீர் என்று கேட்பார்கள். இக்கேள்விக்கு அவர்கள் முஹம்மதே! தங்களுடைய உம்மத்தைப் பற்றி அழுகிறேன், என்று மறுமொழி சொல்ல, உடனே நபி நாயக மவர்களும் அழுதுகொண்டு ஜிபுறயீலே என்னுடைய உம்மத் தின் காரியம் எப்படி, அவர்கள் எங்கே என்று கேட்பார்கள். அதற்கு ஜிபுறயீல் அலைஹிஸ்ஸலாமவர்கள் நபி நாயகமவர்களைப் பார்த்து, முஹம்மதே! இதோ தங்களுடைய உம்மத்து வருகிறார் கள் பாருங்கள். அவர்கள் ஸுஜூது செய்யும் உறுப்புகள் வெளுத்த வர்களாய் வருகிறார்களே அவர்களாயிருப்பார்கள், என்று சொல்லி காட்டுவார்கள். உடனே நபி நாயகமவர்கள் தங்கள் உம்மத்தை ஆவலுடன் பார்ப்பார்கள். அப்போது அந்த உம்மத்து அனைவரும் வாகனங்களில் ஏறினவர்களாயும் தங்களுடைய நபிக்கு ஸலாம் சொன்னவர்களாயும், கை யெடுப்பவர்களாயும், தங்களுடைய நபியைக்கண்டு கொண்டதை பற்றியும் சந்தோஷத்தை யுடையவர் களாயும் நன்மாராயம் பெற்றவர்களாயும், ஸாலிஹானவர்களாயும், இருப்பதைப் பார்த்து அளவற்ற ஆனந்தமடைந்து அல்லாஹுத் தஆலாவுக்கு சுக்குறுசெய்வார்கள். அதன் பிறகு தங்கள் உம்மத் தில் பாவியானவர்கள் பாவச்சுமையைச் சுமந்தவர்களாயும், தண் ணீர்சிந்த அழுதவர்களாயும், முஹம்மதே, முஹம்மதே என்று சப்தமிட்டு அலறினவர்களாயும் வருவார்கள். வரும் இந்தக் கோலத்தை நபி நாயகமவர்கள் பார்த்து உம்மத்தே, உம்மத்தே என்று சொல்லி வாய்விட்டு அழுவார்கள். இவர்களில் அதிகம் பேர் நபி நாயகமவர்களை காணமாட்டார்கள்.

இவ்வித மிருக்கையில் ஜிபுறயீலே, முஹம்மதுடைய உம்மத்து எங்கே என்று ஒரு சத்தம் பிறக்கும். அப்போது ஜிபுறயீல் அலைஹிஸ்ஸலாமவர்கள், யாறப்பூ! அவர்கள் தங்களுடைய நபி முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்களிடத்தில் இருக்கிறார்கள். அவர்கள் மிகவும் பலவீனர்கள் என்று சொல்லுவார்கள். அப்போது அல்லாஹுத் தஆலா ஜிபுறயீலே அந்த உம்மத்தை விசாரணைக்குக் கொண்டுவரும்படி முஹம்மதுக்குச் சொல்லும், என்று சொல்லுவான். அப்போது ஜிபுறயீல் அலைஹிஸ்ஸலாமவர்கள் சஞ்சலப் பட்டவர்களாயும், அழுகிறவர்களாயும், நபி நாயகமவர்களிடத்தில் வந்து முஹம்மதே தங்களுடைய உம்மத்தை அல்லாஹுத் தஆலா விசாரணைக்கு அழைத்துவரச் சொன்னான் என்று சொல்லுவார்கள். உடனே நபி நாயகமவர்கள் அங்கிருந்து அழுதுகொண்டு புறப்பட்டு அல்லாஹுத் தஆலாவின் சமுகத்திற்போய் யாறப்பூ, என்னுடைய உம்மத்து மானபங்கப் பட்டவர்களும் பயந்தவர்களும் பலயீனர்களுமா யிருக்கிறார்கள், என்று சொல்லுவார்கள். அப்போது அல்லாஹுத் தஆலா, முஹம்மதே! அவர்களை கட்டாயம் விசாரிக்கத்தான் வேண்டும். அதற்காக அவர்கள் வரத்தான் வேண்டும் என்று சொல்லுவான். மறுத்தும் நபி நயாகமவர்கள் அப்படியே சொல்லுவார்கள். அதற்கு அல்லாஹுத் தஆலா முன்சொன்னது போலவே சொல்லுவான். நபி நாயகமவர்கள் பின்னும் அப்படியே சொல்லுவார்கள். அப்போதும் அல்லாஹுத் தஆலா முன்போலவே சொல்லுவான். இவ்விதம் மூன்று தரம் சொன்ன பிறகு நபி நாயகமவர்கள் அல்லாஹுத் தஆலா இடத்தில் நான் நபி ஆதம் அலைஹிஸ்ஸலாமவர்களிடம் போகவேண்டும். அதற்கு நீ உத்தரவு தருவாயாக என்று கேட்பார்கள். அப்படியே உத்தரவு கொடுப்பான். உடனே நபி நாயகமவர்கள் அழுதுகொண்டு அங்கிருந்து நபி ஆதம் அலைஹிஸ்ஸலாமவர்களிடததிற்போய் என்பிதாவே! என்னுடைய உம்மத்துக்கு நான் நபி, தாங்களோ தகப்பனாயிருக்கிறீர்கள். அவர்களுக்கு ஒரு வில்லங்கம் நேரிட்டால், துக்கமும், கைசேதமும் நமக்குத்தான். ஆகையால் அவர்கள் செய்த பாவங்களை யெல்லாம் நாமிருவரும் பங்கிட்டு எடுத்துக்கொள்ளலாம். அப்போது அவர்கள் ஸலாமத்துப் பெறுவார்கள், என்று சொல்லுவார்கள். இந்தச் சொல்லை நபி ஆதம் அலைஹிஸ்ஸலா மவர்கள்கேட்டு மகனே நான் என்னுடைய நபுஸில் பராக்காயிருக்கிறேன். அல்லாஹுத் தஆலா குறுஆனில் ஆதம் தன் ஆண்டவனுக்கு மாறுசெய்து வழி

தவறினர் என்று சொன்னுனே அதை நீர் அறியவில்லையா? அப்படியிருக்க பின்னும் நான் அவர்கள் செய்த பாவத்தையும் எப்படிச் சுமப்பேன் என்று சொல்வார்கள். இதைக்கேட்டு நபிநாயகமவர்கள் தலையில் கையை வைத்துக்கொண்டு 'உம்மத்தீ' 'உம்மத்தீ' என்று அலறினவர்களாய், இப்போது நான் என் மகள் பாத்திமாவை நினைக்கவில்லை, என் கண்மணியான ஹஸன் ஹுஸைன் இருவரையும் நினைக்கவில்லை, பின் என் நபுஸையும், நினைக்கவில்லை, என் உம்மத்தைத்தான் நினைக்கிறேன் • என்று சொன்னவர்களாய் தங்கள் உம்மத்து இருக்கும் தானத்தில் வருவார்கள். அப்போது 'முஹம்மதே உம்முடைய உம்மத்தை விசாரணைக்குக் கொண்டுவாரும். என்று ஒரு சத்தம்கேட்கும். கேட்டவுடன் நபிநாயகமவர்கள் தண்ணீர் தாரைதாரையாய் ஓட அழுதுகொண்டு உம்மத்தைப்பார்த்து என் உம்மத்தே! நீங்கள் அல்லாஹுத் தஆலாவின் சமுகத்தில் விசாரணைக்கு அழைக்கப்படுகிறீர்கள் என்று சொல்லுவார்கள். இதைக்கேட்ட பாவிகள் எல்லாரும் தாங்கள் செய்த பாவங்களை நினைத்துத் திகில்பிடித்து அழுவார்கள். அதைப்பார்த்து நபிநாயகமவர்களும் அழுதுகொண்டு "இன்றையதினம் நான் என் இடுப்பை இருகவரிந்து கட்டிக்கொண்டு என்னுடைய உம்மத்துக்கு மன்றுடுவேன்" என்று சொல்லிவிட்டு தங்கள் உம்மத்தை மெதுவாக நடத்திக்கொண்டு மலக்குகள் புடைசூழ்ந்துவர மஹ்ஷறு வெளியில் வந்து சேர்வார்கள்.

ஹஷ்ரு முடிந்தது.

---

## 4-ம் பஸல்.

## மௌகிபு.

மௌகிபு என்பது விசாரிக்குந்தானம். அது கல்குகளை விசாரிக்கக்கொண்டு வந்து நிறுத்தாட்டும் இடம். மஹ்ஷறு என்பதும் அதுதான். அந்தததானம் ஷாம்ராஜ்யத்தால் பைத்துல் முகத்திஸுக்கு அருகில்வெண்மையும், அதிக விசாலமும் உள்ளதாய் சமதரையாயிருக்கும் ஒரு அகன்ற மைதானம் அந்த மைதானில் நபிநாயகமவர்களின் உம்மத்து வந்து சேர்ந்தபின் மற்ற மனிதர்களும் ஜின்களும், ஷைத்தான்களும், கூட்டங்கூட்டமாய் வந்து சேர்வார்கள் அதன்பின் மிருகம் முதலான ஊர்வன பறப்பனவாகிய சகல ஜீவகோடிகளும் திரள்திரளாய் வந்து நிறம்பும். மனி

தர்களும், ஜின்களும், ஷைத்தான்களும், நூற்றிருபது அணியாக வகுக்கப்படுவார்கள். அவர்களில் மூஃமின்கள் மூன்று அணியாய் நிற்பார்கள்.

அதன் பிறகு என்னுடைய ஹபீபு முஹம்மதுக்காக ஒரு மேடைபோடுங்கள் என்று அல்லாஹுத் தஆலா மலக்குகளுக்குக் கட்டளை பண்ணுவான். உடனே அறுஷுக்குப் பக்கத்தில் ஒளியினால் ஒருமேடைபோடப்படும். அதினருகில் லிவாவுல் ஹம்து என்னும் கொடி நாட்டப்படும். அங்கே பின்னும் எழுபதினாயிரம் கொடிகளை நாட்டி, எழுபதினாயிரம் அணிகளாய் மலக்குகள் நிலை பிரியாமல் நிற்பார்கள். அந்த அணிகளில் அணியொன்றுக்கு ஐந்து லட்சம் மலக்குகளாய் நிற்பார்கள். மூஃமினானவர்கள் அடங்கலும் லிவாவுல் ஹம்தைச் சூழ்ந்து நிற்பார்கள். நபிமாரனை வருக்கும் அவரவர் தரப்படி மேடைகள் போடப்பட்டிருக்கும். அவர்களுக்கும் லிவாவுல் ஹம்துக்குக் கீழாகக்கொடிகளும் நாட்டப்படும். ஹலறத்து அபூபக்கர் றலியல்லாஹு அன்ஹு, ஹலரத்து உமறு றலியல்லாஹு அன்ஹு, ஹலறத்து உதுமான் றலியல்லாஹு அன்ஹு, ஹலரத் அலி றலியல்லாஹு அன்ஹும் ஆகிய இந்த நால்வருக்கும் நான்கு மேடைகள் போடப்பட்டு நான்கு கொடிகளும் நாட்டியிருக்கும். ஷஹீதானவர்களுக்கும் மேடைகள் போடப்படும். ஹலறத்து மஆதிபுனு ஜபல் றலியல்லாஹு அன்ஹு அவர்களுக்கும், ஹலறத்து அபீதற்று றலியல்லாஹு அன்ஹு அவர்களுக்கும், ஹலறத்து உபையிபுனு கஃபு றலியல்லாஹு அன்ஹு அவர்களுக்கும், ஹலறத்து இமாம் ஹஸன் றலியல்லாஹு அன்ஹு அவர்களுக்கும், ஹலறத்து இமாம் ஹுஸைன் றலியல்லாஹு அன்ஹு அவர்களுக்கும் ஒவ்வொரு கொடி நாட்டப்படும்.

பிற்பாடு அல்லாஹுத் தஆலா இடத்திலிருந்து ஆதமே தௌபாச் செய்தவர்களை யெல்லாம் நீர் சேர்த்துக்கொள்ளும். நூஹே ஷுக்று செய்தவர்களை எல்லாம் நீர் சேர்த்துக் கொள்ளும், இபுறுஹீமே தயாள குணமுள்ளவர்களை யெல்லாம் நீர் சேர்த்துக்கொள்ளும், இஸ்மாயீலே உண்மையுள்ளவர்களை யெல்லாம் நீர் சேர்த்துக்கொள்ளும், யூசுபே பரதேசிகளை யெல்லாம நீர் சேர்த்துக்கொள்ளும், ஐயூபே பிணியாளிகளை யெல்லாம் நீர் சேர்த்துக்கொள்ளும், தாவூதே ஓதுவார்களை யெல்லாம் நீர் சேர்த்துக்கொள்ளும், ஸுலைமானே நியாயமுள்ள ராஜாக்களை யெல்

லாம் நீர் சேர்த்துக்கொள்ளும், மூஸாவே! சுத்தமான வணக்கக்காரர்களை யெல்லாம் நீர் சேர்த்துக்கொள்ளும், ஹாரூனே! ஆலிம்களை யெல்லாம் நீர் சேர்த்துக்கொள்ளும், ஷுஐபே! முதியோர்களை யெல்லாம் நீர் சேர்த்துக்கொள்ளும், ஸகரிய்யாவே! பேரின்பப்பிரியமுள்ளவர்களை யெல்லாம் நீர் சேர்த்துக்கொள்ளும், யஹ்யாவே! நிராசைகாரர்களை யெல்லாம் நீர் சேர்த்துக்கொள்ளும், ஈஸாவே! பேரின்பவுவப்புள்ளவர்களை யெல்லாம் நீர் சேர்த்துக்கொள்ளும், முஹம்மதே! றஸூல்மார்களையும் நபிமார்களையும், ஆரிபீன்களையும் நீர் சேர்த்துக்கொள்ளும் என்று உத்திரவு பிறக்கும்.

பிறகு அபூபக்கரே! விசுவாசக்காரர்களை யெல்லாம் நீர் சேர்த்துக்கொள்ளும், உமரே! நீதவான்களை யெல்லாம் நீர் சேர்த்துக்கொள்ளும், உதுமானே! கொடையாளிகளை யெல்லாம் நீர் சேர்த்துக்கொள்ளும், அலியே! பீஸபீல்காரர்களை யெல்லாம் நீர் சேர்த்துக்கொள்ளும்; ஹஸனே! ஷஹீதானவர்களை யெல்லாம் நீர் சேர்த்துக்கொள்ளும், ஹுஸைனே! அனியாயமாகக் கொல்லப்பட்டவர்களை யெல்லாம் நீர் சேர்த்துக் கொள்ளும், மஆதிபுனு ஜபலே! மார்க்கவிதி யறிந்தவர்களை யெல்லாம் நீர் சேர்த்துக்கொள்ளும், உபையிபுனு கஃபே! குர்ஆனை யறிந்தவர்களை யெல்லாம் நீர் சேர்த்துக்கொள்ளும், அபூதர்றே! நிராசை பெற்றவர்களை யெல்லாம் நீர் சேர்த்துக்கொள்ளும், அபூதறுதாவே! பகீர்களை யெல்லாம் நீர் சேர்த்துக்கொள்ளும் என்று உத்திரவு பிறக்கும்.

"அன்பியாக்களே! அவர்களுடைய கூட்டங்களே! எவனொருவன் அல்லாஹுத் தஆலாவைத் தெரிந்துகொண்டானோ அவனுக்கு அல்லாஹுத் தஆலாவின் உவப்புக்கிடைக்கும்" என்று ஒரு சத்தம் பிறக்கும்.

கல்குகளனைத்தும் தாராதரப்படி எங்கும் பரவி நெருங்கிச் சேர்ந்து நிற்பார்கள். அப்போது என்னுடைய கல்குகளே! நீங்கள் எல்லாரும் துன்யாவிலிருந்துகொண்டு செய்யாதவைகளை யெல்லாம் செய்யும்போது நான் பார்த்துக்கொண்டு சும்மாயிருந்தேனல்லவா? ஆனதால் இப்போது நீங்கள் சும்மா இருங்கள் என்று அல்லாஹுத் தஆலா கட்டளையிடுவான். இன்னும் இன்றையதினம் ஒவ்வொரு நபுஸும் அது செய்தவைகளுக்குத் தக்க கூலி கொடுக்கப்படும், அநியாயமென்பது இன்றைக்கு

இங்கில்லை; வெகு விரைவாய் அல்லாஹுத்தஆலா விசாரணையை முடிப்பான்; எனக்கு வழிபட்டவனை இன்றைக்குச் சங்கையாக்குவேன்; மாறு செய்தவனை வேதனை செய்வேன்; என்னுடைய வார்த்தைப் பாட்டை மாற்றமாட்டேன் என்றும் அல்லாஹுத் தஆலா சொல்லுவான்.

பிறகு சூரியனைக் கொண்டுவரும்படி மலக்குகளுக்கு உத்திரவு பிறக்கும். உடனே துன்யாவிலும் முந்நூற்றறுபது மணங்கு பெரிதாயுள்ள இந்தச் சூரியனை ஒவ்வொரு விடத்திலும் முந்நூற்றறுபது சிறுவடங்கள் தொடுத்த முந்நூற்றறுபது பெரும் வடங்கள் பூட்டின வண்டியில் வைத்து, ஒவ்வொரு சிறுவடத்திலும் முந்நூற்றறுபது மலக்குகள் நின்று பிடித்திழுத்துக்கொண்டு வருவார்கள். அந்தச் சூரியன் அல்லாஹுத் தஆலாவின் சமுகத்தில் வந்தவுடனே ஸுஜூது செய்யும் அப்போது அல்லாஹுத் தஆலா அதைப்பார்த்து என்னுடைய அடியார்களில் எவனையாவது உன்னை வணங்கும்படி நீ ஏவினதுண்டா என்று கேட்பான். அதற்கு அது என்னுடைய எஜமானுகிய ஆண்டவனே! நீ துப்புரவானவன்; வணங்கப்படப் பாத்திரமான நாயன் உன்னையல்லாமல் ஒருவனும் இல்லையே, அப்படியிருக்க உன்னுடைய அடியார்களை என்னை வணங்கும்படி அடிமையாகிய நான் எப்படி ஏவுவேன். அவர்களில் சிலர் அப்படிச் செய்தார்கள். அதற்கு நான் பொருந்தவில்லையென்று சொல்லும். அப்போது அல்லாஹுத் தஆலா அதைப்பார்த்து நீ உண்மை சொன்னுயென்று சொல்லி விட்டு, அதற்கு துன்யாவி லுண்டாயிருந்த வெப்பத்திலும் இரட்டிப்பாக்கி கல்குகளுடைய தலைக்குமேல் நெருங்கும்படி உத்திரவு செய்வான். உடனே அந்தச் சூரியன் இரண்டு புருவத்திற்கும் இடையிலுள்ள இடைவெளி எவ்வளவோ அவ்வளவாக கல்குகளுடைய தலைக்கும் தனக்கும் முடுகுதலாய் நெருங்கி நிற்கும். அப்போது அறுஸுடைய நிழலைத் தவிர வேறே எந்த நிழலும் அங்கிராது. நல்லோரனைவரும் அந்த நிழலில் ஒதுங்கி நிற்க இடம் பெறுவார்கள். மற்றவர்களெல்லாம அந்தச் சூரியனுடைய அதிகச் சூடான வெய்யிலில் அகப்பட்டுக் கொள்வார்கள். தாங்க மாட்டாத காங்கையின் கொடுமையால் ஒருவருக்கொருவர் தள்ளிக்கொண்டும், மோதிக்கொண்டும், தத்தளித்துத் தடுமாறிக் கலங்குவார்கள். ஒவ்வொரு கல்கினுடைய மூளையும் கொதித்துருகி வேர்வையுடன் கலந்து, ரோமக்கால் வழியாய்ப் பிரவாகித்

துத் தரையில் வழிந்து கட்டி நிற்கும். அது கல்குகள் செய்த வினைக்குத் தக்கபடிச் சிலர்க்கு முழங்தாள் வரையும், சிலர்க்குத் தலைக்கு மேலுமாக உயர்ந்து நிற்கும். கல்குகளுடைய வேர்வைக ளெல்லாம் பொதுப்படத் தரைக்குமேல் எழுபது பாகம் உயர்ந்து நிற்கும். அநேகர் அதில் மூழ்கிக் கிடந்து தத்தளிப்பார்கள். நூறு வருஷம் இவ்விதமாயிருக்கும். பிறகு நூறு வருஷம் வரையும் மிகவும் பயங்கரமான இருள்வந்து கல்குகளைச் சூழ்ந்து கொள்ளும். அவ்விருளில் அனைவரும் அகப்பட்டுக்கொண்டு கண்ணோடு கண் தெரியாமல் திசைகள் தோறும் தத்தளித்துத் தடுமாறி நிற்பார்கள். அதன் பிறகு நூறு வருஷம் வரையும் தாங்கமாட்டாத பயங்கரத்தினால் ஒருவர்மேல் ஒருவர் விழுந்து மோதிக்கொண்டு அலைவார்கள். ஆக இந்த முந்நூறு வருஷத்திலும் ஒவ்வொருவரும் தம்தம் நபுஸூக்கு வந்து பிடித்திருப்பதை யெண்ணி, அதே பராக்காய் கவலையில் முழுகிக் கிடப்பார்களே யல்லாமல் ஆணை ஆணென்றும், பெண்ணைப் பெண்ணென்றும், ஒருவரை யொருவர் அறியமாட்டார்கள். இந்த முந்நூறு வருஷமும் துன்யாவுடைய வருஷமாம்.

இந்த முந்நூறு வருஷத்துச் சங்கடத்தில் அகப்பட்டுத் தவிக்கும்போது, மூஃமினான ஒவ்வொருவரும் ஆண்டவனே! எங்களுக்கொரு தீர்மானத்தைச் செய்து எங்களை நரகத்திற்கு அனுப்புவதாயிருந்தாலும் அனுப்பு, இந்த வேதனையினின்றும் எங்களைக் கிருபைசெய்து நீக்குயென்று கேட்பார்கள். அப்போது ஒரு மேகம் வெளிப்பட்டு வந்து குடைபோலக் கவியும். அந்த மேகத்தின் நிழல் மூன்று கிளையாயிருக்கும். அந்த நிழல் பார்வைக்கு நிழலாகத் தோற்றுமே யல்லாமல் நிழலின் சுபாவ குணமுள்ளது அல்ல. அது உண்டானவுடனே கல்குகளடங்கலையும் அந்த நிழலிற் போகும்படிக்கு உத்திரவு பிறக்கும். பிறந்தவுடன் ஜனங்கள் மூன்று கூட்டமாகப் பிரிந்து அந்த நிழலின் மூன்று கிளை வழியாய்ப் போவார்கள். அந்தக் கூட்டங்கள் ஒரு கூட்டம் மூஃமின்களும், ஒரு கூட்டம் முனாபிகுகளும், ஒரு கூட்டம் காபிர்களுமாயிருக்கும். இந்த மூன்று கூட்டத்தாரும் அந்த மூன்று கிளையான நிழல்களிலும் போனபோது மூஃமினானவர்களுடைய கிளை ஒளிவாகவும், முனாபிகுகளுடைய கிளை சூடாகவும், காபிர்களுடைய கிளை பகையாகவு மிருக்கும்.

இப்படி யிருக்கையில் ஜனங்கள் திரண்டு நபி ஆதம் அலைஹிஸ்ஸலா மவர்க ளிடத்திற்குப்போய், ஆதமே! தாங்கள் மனிதரெல்லாருக்கும் பிதாவாகையால் தாங்கள் எங்களுக்காக வேண்டி அல்லாஹுத் தஆலா யிடத்திற்போய், விசாரித்து முடிவுசெய்யும்படி மன்றாட வேண்டுமென்று சொல்லுவார்கள். அதற்கு அவர்கள் நான் அல்லாஹுத் தஆலா தின்னவேண்டாமென்று விலக்கின மரத்தின் கனியைத் தின்று அவனுக்கு மாறு செய்திருக்கிறேன். ஆகையால், எனக்கு அவன் சமூகத்திற்கு மன்றாடப்போக எனக்கு வெட்கமாயிருக்கிறது. நீங்கள் நூஹு இடத்திற்போய்ச் சொல்லுங்களென்று சொல்லி விடுவார்கள். பிறகு எல்லாரும் நபி நூஹு அலைஹிஸ்ஸலாமர்களிடத்தில் வந்து சொல்லுவார்கள் அதற்கு அவர்கள் நான் உலகத்திலுள்ள ஜனங்களை நாசஞ் செய்யும்படி அல்லாஹுத் தஆலா இடத்தில் பதுஆ செய்தேன். அப்படியே அவன் பிரவாகத்தைக்கொண்டு அந்த ஜனங்களை நாசமாக்கினான். அவ்வளவு ஜனங்களை நாசமாக்கும்படி பதுஆச்செய்தவன் நானாகையால் இப்போது அவன் சமூகத்திற்கு போக வெட்கப்படுகிறேன். நீங்கள் இபுறாஹீமிடம் போங்களென்று சொல்லுவார்கள். ஜனங்கள் அங்கிருந்து நபி இபுறாஹீம் அலைஹிஸ்ஸலா மவர்களிடத்தில் வந்து சொல்லுவார்கள். அதற்கவர்கள் நான் என் மனைவியாகிய ஸாறாவைச் சகோதரியென்றும், ஊர் ஜனங்கள் திருவிழாக் கொண்டாடப்போக என்னையுமழைத்தபோது வியாதியஸ்தனாயிருக்கிறேனென்றும் கோயிலிலுள்ள புத்துக்களை யெல்லாம் உடைத்து விட்டு, பெரிய புத்து உடைத்ததென்றும் மூன்று பொய் சொல்லி யிருக்கிறேன். அப்படிப்பட்ட நான் அல்லாஹுத் தஆலாவின் சமூகத்திற்போக வெட்கமாயிருக்கிறது. நீங்கள் மூஸாவிடம் போங்களென்று சொலலுவார்கள். ஜனங்கள் அங்கிருந்து நபி மூஸா அலைஹிஸ்ஸலாமவர்களிடத்திற்போய்ச் சொல்லுவார்கள். அதற்கு அவர்கள், நான் கிபத்திக் கிளையிலுள்ள ஒருவனை காயமில்லாமல் தவறுதலாகக்கொன்று விட்டேன். ஆகையால் அல்லாஹுத் தஆலாவின் சமூகத்திற்போக வெட்கப்படுகிறேன்; நீங்கள் ஈஸாயிடம் போங்களென்று சொல்லுவார்கள். ஜனங்கள் அங்கிருந்து நபி ஈஸா அலைஹிஸ்ஸலாமவர்களிடத்திற் போய்ச் சொல்லுவார்கள். அதற்கு அவர்கள், நஸாறாக்களென்னை ஆண்டவனென்று வணங்கினார்கள்; அதை நினைத்து நான் எப்படி அல்லாஹுத் தஆலாவின் சமூகத்திற் போகிறதென்று வெட்கப்பட்டுக் கொண்டு என் நபுஸில்

பராக்காயிருக்கிறேன்; நீங்கள் முஹம்மது நபியிடத்திற்போய் முறையிட்டுச் சொல்லுங்களென்று சொல்லுவார்கள். உடனே ஜனங்கள் 'முஹம்மதே' 'முஹம்மதே' என்று சத்தமிட்டு அழுது கொண்டு வருவார்கள். அறுஸாக்குக் கீழ் உட்கார்ந்திருக்கும் மறியம், ஆஸியா, கதீஜா, பாத்திமா றலியல்லாஹு அன்ஹுன்ன இந்த நால்வரில் மறியம் அலைஹிஸ்ஸலாமவர்கள், அந்த ஜனங்கள் முஹம்மது நபியுடைய உம்மத்து, தங்கள் நபியைக் காணுமல் தேடுகிறார்களென்று சொல்லுவார்கள். அவர்கள் சொல்லும் இந்தச் சொல்லும் நபி முஹம்மது முஸ்தபா ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்களுடைய காதில் விழும். அப்போது நபி ஆதம் அலைஹிஸ்ஸலாமவர்களும், முஹம்மதே! உங்களுடைய உம்மத்து உங்களைக்காணுமல் தேடிக் கொண்டு வருகிறார்களேயென்று சொல்லுவார்கள். அப்போது நபி முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்கள் சப்தமிட்டு என்னுடைய உம்மத்தே, நீங்களெல்லாரும் எங்கே அலைந்து திரிந்துகொண்டு போகிறீர்கள். நான் உங்களை விட்டு மறைந்திருக்கவில்லை; உங்களுக்காக அல்லாஹுத் தஆலா இடத்தில் கேட்கிறேன்; எல்லாரும் என்னருகே வாருங்களென்று கூப்பிடுவார்கள். இந்தச் சப்தத்தை ஜனங்களெல்லாரும் கேட்டு அவர்களிடத்தில் வந்து சேர்ந்து, யாறஸூலுல்லா எங்களை விசாரணை செய்து தீர்மானிக்கும்படி அல்லாஹுத் தஆலா விடத்தில் மன்றுடுங்களென்று சொல்லுவார்கள். இச்சொல்லை நபி நாயகமவர்கள் கேட்டு அழுதுகொண்டு, உம்மத்தே, நீங்கள் சஞ்சலப்படாதீர்கள், உங்கள் காரியத்தைப்பற்றி நான் அதிகக் கவனமுள்ளவனுயிருக்கிறேனென்று சொல்லி அவர்களை அழைத்துக் கொண்டு அறுஸாக்குத் தாழ்வில் வந்து அல்லாஹுத் தஆலாவுக்கு ஸுஜூது செய்வார்கள். அப்போது அல்லாஹுத் தஆலாவின் உத்திரவுப்படி ஒரு மலக்கு வந்து நபி நாயகமவர்களின் வலது புஜத்தை பிடித்துக் கொண்டு, "முஹம்மதா" என்று மெள்ளக் கேட்பார்கள். அதற்கு நபி நாயகமவர்கள் "ஆம்" என்று சொல்லுவார்கள். பிறகு மலக்கு ஆனல் தலையை யுயர்த்துங்கள், நீங்கள் விரும்பினதைக் கேளுங்கள், கொடுக்கப்படுமென்று சொல்லுவார்கள். உடனே நபி நாயகமவர்கள் தலையை யுயர்த்தி எழுந்து நின்று 'றப்பீ' எனக்கு நீ வார்த்தைப்பாடு செய்திருக்கிறபடி ஷபாஅத்து செய்யும். அதிகாரத்தை இப்போது கொடுத்தருள்; நான் ஷபாஅத்து செய்கிறேன், நீ தீர்ப்பு செய்யென்று சொல்லுவார்கள், உடனே அல்லாஹு தஆலா "முஹம்மதே" நீர் அவர்

களுக்கு ஷபாஅத்து செய்யும், அந்த அதிகாரத்தை நான் உமக்குத் தந்தேனென்று சொல்லுவான். பிறகு நபி நாயகமவர்கள் அங்கிருந்து ஜனங்களிடத்தில் வந்து சேர்ந்து நிற்பார்கள்.

அப்படி யிருக்கையில் வானமானது உஞ்சலாடுவது போல் அலேந்தாடி, காற்றுடிபோலச் சுழன்று சுற்றிக் கொண்டிருக்கும். அப்போது, பருப்பத்திலும் கனத்திலும் ஏழு வானத்தைப் பார்க்கிலும் அதிகமாகிய கமாம் என்கிற மேகமானது எல்லா வானங்களுக்கும் மேலாக யிருந்து திடீரென்று ஏழாவது வானத்தில் விழும்; உடனே யந்த வானம் படீரென்று தெரித்துப் பிளக்கும். பிறகு அந்த மேகம அங்கிருந்து ஆறுவது வானத்தில் விழும்; அந்த வானமும் அப்படியே பிளக்கும் இவ்விதமாகவே அந்த மேகம் ஒவ்வொரு வானத்திலும் விழுந்து பிளக்கச் செய்து கொண்டு முதலாம் வானத்தில் வந்து விழும். உடனே முதலாம் வானமும் படீரென்று பிளக்கும். அப்போது அதிலுள்ள நக்ஷத்திரங்க ளெல்லாம் உதிர்ந்து கொண்டுபோம். அதனல் பூமி இருள் மயமாயிருக்கும். வானம் பிளந்த சத்தத்தை கல்குகளடங்கலும் காது தெரிக்கக்கேட்டு ஸ்மரணையற்றுக் கலங்கி நிற்பார்கள். ஏழு வானத்து மலக்குகளும் ஒவ்வொரு வானத்து மலக்கு ஒவவொரு கூட்டமாகப் பூமியில் இறங்குவார்கள். இறங்கும்போது தஸ்பீஹு தஹ்லீலு செய்து கொண்டு இறங்கி கல்குகளடங்கலேயும் வளேந்து கொள்வார்கள். அதன் பிறகு அதாபுடைய மலக்குகள் பெருங்கூட்டமாக இறங்குவார்கள். அவர்கள் உருவத்தில் மஹா பெரிதானவர்களும், அதிக வலிமை யுடையவர்களும், மிகவும் குரூரமுள்ளவர்களுமா யிருப்பார்கள். ஒவ்வொருவருடைய இரண்டு புருவத்தின் இடைவெளி ஐந்நூறு வருஷத் தூரப்பிரமாண முள்ளதாயிருக்கும். குற்றவாளிகளுடைய காலேயும், தலேயையும் வளேத்து இழுத்துக்கட்டி விசாரணக்குக் கொண்டுபோகும் உத்திரவு அவர்களுக்குக் கொடுக்கப்படும். அவர்களேக் கண்ட நபிமார் முதலானவர்களும் அஞ்சிப் பயந்து குப்புற விழுவார்கள். கல்குகள் அடங்கலும் அந்த மலக்குகள் இறங்கும் ஆரவாரத்தின் அமளியால் அஞ்சிக் கலங்கி நம்மைத்தான் பிடிப்பார்கள். நம்மைத்தான் பிடிப்பார்கள், என்று ஒவ்வொருவரும் எண்ணித் தயங்குவார்கள். அப்படித் தயங்குகிறவர்களில் சிலர் அந்த மலக்குகளிடம் போய், நீங்கள் அல்லாஹுத் தஆலாவின் கட்டளேயைக் கொண்டு வந்திருக்கிறீர்களோ என்று கேட்பார்கள். அதற்கு அவர்கள் திடுக்கிட்டு

நம்முடைய ஆண்டவனுடைய கட்டளை எங்களிடமில்லை, இனி வரும் யென்று பெருஞ் சப்தமிட்டுச் சொர்வார்கள்.

பிறகு முந்தி வானம் பிளந்தபோது அங்கிருந்து இறங்கின மலக்குகள் எல்லாரிலும் மனிதர், ஜின் இவர்களுக்கு அதிகமான தொகையுடைய முதல் வானத்து மலக்குகள் வந்து கல்குகளடங் கலையும் நடுவில் வைத்துக் கோட்டைபோல வளைந்து முதல் அணியாய்ச் சூழ்ந்து கொள்வார்கள். அதற்குப் பின் அவர்களி லும் அதிகமான இரண்டாம் வானத்து மலக்குகள் வந்து அவர்களை நடுவில் வைத்து இரண்டாம் அணியாய்ச் சூழ்ந்து கொள்ளுவார்கள். ஒருவருக் கொருவர் அதிகமான மற்ற வானத்து மலக்குகளும், அப்படியே ஒருவருக்குப்பின் ஒருவராக வந்து ஒரு அணிக்குப் பின் ஒரு அணியாய்ச் சூழ்ந்து கொள்ளுவார்கள். ஆகவே கல்கு கள் எல்லாம் நடுவில் வைக்கப்பட்டு, ஏழுவானத்து மலக்குகளும் ஏழுகோட்டை மதிலைப் போலிருக்க சூழ்ந்து நிற்பார்கள். அதற் குப்பின் கர்றூபீன்களும் அறஷைச் சுமந்த மலக்குகளும் அணி யணியாய் இறங்குவார்கள்.

பிற்பாடு அல்லாஹுத் தஆலாவின் கட்டளையைப் பெற்றுக் கொண்டு ஒரு மலக்கு இறங்குவார்கள். அவர்கள் மகா வலுப்ப மானவர்கள்; அநேக மலக்குகள் திரள் திரளாய்ப்புடைச் சூழ, முன் சொன்ன கமாம் என்னும் மேககுடையில் அவர்கள் இறங்கி அவர்களுக்குப் போடப்பட்டிருக்கும் குறுஸியில், உட்கார்ந்து கொண்டு "மனிதர்களே, ஜின்களே, இனி உங்கள் பட்டோலைகள் படிக்கப்படும். அதில நன்மையைக் கண்டவன் அல்லாஹுத் தஆலாவைப் புகழவேண்டும். தீமையைக் கண்டவன் தன்னைத் தானே நிந்தித்துக்கெள்ளவேண்டும்" என்று எல்லாருங் கேட்கச் சொல்லுவார்கள்.

அதன்பின் நரகத்தைக் கொண்டுவரக் கட்டளை பிறக்கும். ஜிபு றயீல் அலைஹிஸ்ஸலாமவர்கள் நரகத்து அதிபதியாகிய மாலிக்கு அலைஹிஸ்ஸலாமவர்களிடம்போய் அல்லாஹுத் தஆலா நரகத் தைக்கொண்டு வரும்படி உத்திரவு செய்திருக்கிறான் என்று சொல் லுவார்கள். இதைக்கேட்ட அந்த மலக்கு இது எந்த நாள் என்று கேட்பார்கள். அதற்கு ஜிபுறயீல் அலைஹிஸ்ஸலாமவர்கள், "இது கியாமத்து நாள்" என்று மறுமொழி சொல்லுவார்கள். பின் னும் அந்த மலக்கு கல்குகளை யெல்லாம் அல்லாஹுத் தஆலா ஹாஜராக்கி விட்டானு? முஹம்மது நபியும், அவர்கள் உம்மத்

தும் எங்கே? அந்த உம்மத்து நரகத்துக் கொடுமையை எப்படிச் சகிப்பார்கள் என்று கேட்பார்கள். இந்தக் கேள்விக்கு ஜிபுறயீல் அலைஹிஸ்ஸலாமவர்கள் எல்லாரும் ஹாஜராகி விட்டார்கள். முஹம்மது நபியும், அவர்கள் உம்மத்தும் அல்லாஹுத் தஆலாவின் சமுகத்தில் இருக்கிறார்கள். அந்த உம்மத்து நரகக் கொடுமையைச் சகிக்கும் விதம் இப்படியென்று நான் அறியேன், அது அல்லாஹுத் தஆலா நாடியபடியும் என்று பதில் சொல்லுவார்கள். பின்பு மாலிக்கு அலைஹிஸ்ஸலாமவர்கள் நரகத்தைப் பார்த்து "நரகமே எழுந்திரு" என்று உரத்த சத்தமாகச் சொல்லுவார்கள். உடனே அது எழுந்திருக்கும். நரகம் ஆயிரம் வருஷத் தூரப்பிரமான இடையுள்ள ஒட்டகக் கால்போன்ற நான்கு கால்களும், முப்பதினாயிரம் தலைகளும், தலையொன்றிற்கு ஆயிரம் வாய்களும், வாய்யொன்றிற்கு உஹது மலையிலும் முப்பதினாயிரம் பங்கு பெரிதான முப்பதினாயிரம் கடைவாய்ப் பற்களும் உண்டாயிருக்கும், உதடுகள் ஒவ்வொன்றும் பூமியின் பரப்பை போலிருக்கும். மேல் உதடுகளில் உதடொன்றிற்கு முப்பதினாயிரம் சங்கிலிகள் போடப்பட்டிருக்கும். சங்கிலி ஒன்றிற்கு ஆயிரம் காணைகளிருக்கும். இன்னும் நரகத்திற்கு எழுபது மூவாயிரம் வடங்கள் பூட்டப்பட்டிருக்கும். மாலிக்கு அலைஹிஸ்ஸலாமவர்கள் நரகத்தை இழுத்துக்கொண்டு அல்லாஹுத் தஆலாவின் சமுகத்தில் போகும்படி ஜபானியாக்களுக்கு உத்திரவு செய்வார்கள். உடனே மனிதர்களிலும், ஜின்களிலும் நாற்பதினாயிரம் பங்கு அதிகமான ஜபானியாக்கள் ஒவ்வொரு அணியாக எழாயிரம் அணிகள் நின்று நரகத்தை இழுப்பார்கள். அவ்வளவு பேர் இழுத்தும் அது கொஞ்சம் நகராமல், ஒரு வருஷத்தூரப் பிரயாணம் கீழே பதிந்துபோம், அதைக் கண்டு மாலிக்கு அலைஹிஸ்ஸலாமவர்கள், நரகமே! நீ அல்லாஹுத் தஆலாவின் கட்டளைக்கு மாறு செய்கிறாயோ, என்று கேட்பார்கள். அதற்கு அது நான் அப்படிச் செய்யவில்லை என்று சொல்லும். அப்படியானால் நட என்று ஏவுவார்கள். மலக்குகள் இழுக்க அது நடக்கும். நரகம் அவ்விதம் நடக்கையில் புலி சீறிப்பாய்வதுபோல மூச்செறியும், மூச்செறிந்து சீறுந்தோறும் மண்டபம்போன்ற மஞ்சள் நிறமுள்ள அக்கினிக்கங்கிகள் அதிலிருந்து தெரிக்கும் கல்குகளைச் சூழ வளைந்துக்கொள்ளும்படி பெரிய புகையும், இருளும் அதிலிருந்து புறப்படும், அந்த நரகம் கொதிக்கிற அமளியான சத்தம் எல்லா கலகுகளுக்கும் கேட்கும். இவ்விதம் நரகம் வரும்போது கல்கு

களைப் பார்த்து, அடங்கலையும் ஒரே விழுங்கில் விழுங்கிவிடத் தாவிப்பாயும், ஜபானியாக்கள் பாயவொட்டாமல் இழுத்துக்கொள்ளுவார்கள். அதை மனிதர்கள் பார்த்து, அஞ்சிக் கலங்கி கண்ணீர் அற்று ரத்தம் வரும் வரையும் அழுவார்கள். பாவிகள், கட்டாயம் நாம் மோசப்பட்டோம். நமர்கு அபாயம் வந்து விட்டது என்று தீர்மானித்துக் கொள்ளுவார்கள். நரகம் பின்னும் கொரேமான சத்தமாக ஒரு மூச்செரியும். அதனால் மனிதர் மனங்களெல்லாம் திடுக்குற்றுப்பயம் நிரம்ப அநேகர் வெருண்டு ஓடுவார்கள். அநேகர் முழந்தாட் படியிட்டும், அநேகர் முகங் கவிழ்ந்தும் விழுவார்கள். அநியாயக்காரர்கள், நாங்கள் கெட்டோமே கெட்டோமே; என்று அலறுவார்கள். நம்பிக்கைக்காரர்கள் நபுஸீ! நபுஸீ என்று சத்தமிடுவார்கள். மறுபடியும் நரகம் ஒரு மூச்செறியும், அதனால் ம்னிதர்கள் முன்னிலும் இரட்டிப்பாய்க் கலக்கம் பிடிப்பார்கள். அவர்களின் பலமெல்லாம் ஒடுங்கிப்போம். நாம் அகப்பட்டுக் கொண்டோம் என்று எண்ணுவார்கள். பின்னும் ஒரு மூர்செறியும், அதனால் எல்லாரும் தரையில் விழுந்து, மேலே நோக்கினவர்களாய்க் கிடப்பார்கள். பாவிகளின் வயிற்றிலுள்ள குடல்களெல்லாம் ஜீரணித்து மனங்கள் கலங்கி, அறிவு தடுமாறி, உயிர்கள் கண்டத்தளவில் வந்துவிடும்.

நரகம் இவ்விதம் வருகையில், ஜபானியாக்களில் பயங்கரந்தரத்தக்க ஒருவர் தம்கையில் மகாபெரிய இரும்புத்தடி யொன்று பிடித்துக்கொண்டு “துன்யாவில் பேராசையும், மேலெண்ணமும் வைத்துப் பாவத்தைக்கொண்டு காலத்தை கழித்த இன்னான் மகன் இன்னான் எங்கே” என்று பெருந்தொனியிட்டு, ஒவ்வொருவனைப் பெயர் சொல்லி அலறி பயமுறுத்தி, அவனைப் பற்றிப் பிடிக்க ஓடி நெருங்கி வருவார்கள். கல்குகள் அதைக்கண்டு முன்னிலும் பலமடங்கு அதிகத் திகிலும் பயமும் பிடித்து, மெருள்வார்கள்.

நரகத்தை மேற்கண்டபடி மலக்குகள் இழுத்துக் கொண்டு அல்லாஹுத் தஆலாவின் சமுகத்தில் வந்து நிறுத்துவார்கள். உடனே அது அலலாஹுத் தஆலாவுக்கு ஸுஜூது செய்யும். அப்போது அல்லாஹுத் தஆலா அதைப்பார்த்து, நரகமே நீ பேசுவாயாகவென்று சொல்லுவான். உடனே அது வாய் திறந்து வணக்கத்திற்குத் தக்க நாயன் அல்லாஹுத் தஆலாவைத் தவிர வேறில்லையென்று முந்திக் கலிமாவை சொல்லிவிட்டு, நாயனே

உன்னுடைய இரணத்தைத் தின்று நீயல்லாத வஸ்துவை வணங்கினவர்களேயும், இரவிலும், பகலிலும் உனக்கு மாறு செய்தவர்களேயும், உன்னுடைய சிறப்பின்மீதும், வல்லமைமீதும் சத்தியமாக நான் வேதனை செய்வேன் என்று சொல்லும். அப்போது அல்லாஹுத் தஆலா அதைப்பார்த்து இன்றையத்தினம் உன் வயிற்றை மனிதர்களைக் கொண்டும், ஜின்களைக்கொண்டும் நான் நிறப்புவேன் என்று சொல்லுவான். பிறகு ஜபானியாக்கள் நரகத்தை அங்கு இழுத்துக்கொண்டு போய் அறுஸுக்கு இடது புறத்தில் நிறுத்தாட்டுவார்கள்.

அறுஸானது எல்லா உலகங்களேயும் அவ்வுலகங்களிலுள்ள எல்லாவற்றையும் தூக்கி அதற்கு நடுவில் வைத்தால் மிகவும் அகன்ற ஒரு மைதானின் நடுவே ஒரு சிரிய மோதிரத்தை வைத்த மாதிரியா யிருக்கும். அத்தனைப்பெரிய அறுஸை அன்றைக்கு எட்டு மலக்குகள் சுமந்து நிற்பார்கள். அந்த மலக்குகள் ஒவ்வொருவருக்கும் மனு, புலி, காளை, கழுகு ஆகிய இந்த நான்கின் முகங்களேப்போன்ற நான்கு முகங்களுண்டா யிருக்கும். இன்னும் ஒவ்வொருவருக்கும் நன்நான்கு சிறகுகளுண்டாயிருக்கும், அவர்கள் ஒவ்வொருவரையும் அறுஸைப்பார்க்க விடாமல் இரண்டு இரண்டு சிறகுகள் அவரவர் முகங்களுக்குமேல் மறைத்துக்கொண்டிருக்கும்.

காரியம் இவ்வித மிருக்கும்போது நபிமாரனைவரும் தங்கள் தங்கள் சொந்த விஷயங்களேப்பற்றி அல்லாஹுத் தஆலாவின் சமுகத்தில் முறைபாடு செய்வதற்காக விரைந்து போவார்கள். அப்படிப் போகிறவர்களில் முந்தினவர்கள் (கலீல்) நபி இபுறுஹீம் அலைஹிஸ்ஸலாமவர்களா யிருப்பார்கள். அவர்கள் முந்திப்போய் அறுஸின் முன்னிரப்பைப் பிடித்துக் கொண்டு, ஆண்டவனே! நான் உன்னுடைய அடியானும் கலீல் என்கிற தோழனுமாகிய இப்றுஹீம், ஆகவே என்னுடைய விருத்தாப்பியத்திற்காக நீ கிருபைசெய், என்னுடைய மக்கள் இஸ்மாயீல் இஸ்ஹாக்கு இவர்களேப்பற்றி நான் கேட்கவில்லே, என்னுடைய விருத்தாப்பியத்தைப் பற்றியே கேட்கிறேன் என்று சொல்லுவார்கள். அப்போது அல்லாஹுத் தஆலா, இபுறுஹீமே! ஒரு தோழன் தன்னுடைய தோழனுக்குத் தீங்கு செய்வானே என்று அவர்களுக்கு பதில் சொல்லுவான். அதன் பிறகு நபி மூஸா அலைஹிஸ்ஸலாமவர்கள் அப்படியே வந்து நின்றுகொண்டு ஆண்டவனே நான் உன்னுடன் பேசின மூஸா,

இப்போது நீ என்னை காப்பாற்றவேண்டும். என்னுடன் பிறந்த ஹாரூனைப்பற்றிக் கேட்கவில்லை, என்னைப்பற்றியே கேட்கிறேன் என்று சொல்லுவார்கள். அதன் பிறகு நபிஈஸா அலைஹிஸ்ஸலாமவர்கள் வந்து ஆண்டவனே நான் உன்னுடைய அடியானாகிய ஈஸா, இன்றையதினம் என்னுடைய தாய் மறியமைபற்றிக் கேட்க வரவில்லை. என்னைப்பற்றியே கேட்கவந்தேன், ஆகையால் என்னை நீ காப்பாற்று என்று சொல்லுவார்கள். அப்படி இருக்கையில் அழுகுரலும், அமளியான சத்தமும், அதிக மும்முரமாய்க் கிளம்பும், கல்குகளடங்கலும் அகன்றமைதானில் வெட்டுக்கிளி மட்டில்லாது பரவி மொய்த்திருப்பதுபோல மொய்த்திருப்பார்கள்.

பிற்பாடு நபி முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்கள், ஆண்டவனே உன் அடியானாகிய நான் இன்றைய தினம் என்னைப் பற்றியாவது என் மகள் பாத்திமாவைப்பற்றியாவது என் கண்மணியான ஹஸன் ஹுஸைன் இருவரைப்பற்றியாவது கேட்கவில்லை. என்னுடைய உம்மத்தைப்பற்றி மாத்திரம் கேட்கிறேன். நீ அவர்கள் மீது இறங்கி கிருபைசெய் என்று சப்தமிட்டு கேட்பார்கள். இந்த சப்தத்தை நரகம் கேட்டு இவர் யார்? எல்லாரும் தங்கள் தங்களைப்பற்றிக் கேட்க இவர் மாத்திரம் தம் உம்மத்தைப்பற்றிக் கேட்கிறாரே, இதென்ன புதுமை என்று சொல்லும். அப்போது மாலிக்கு அலைஹிஸ்ஸலாமவர்கள் அதைப்பார்த்து வாயை மூடு. அவர்கள் துன்யாவுக்கும் ஆகிறாவுக்கும் நாயகமாகிய முஹம்மது நபி அல்லவா? என்று சொல்லுவார்கள். முஹம்மது என்னும் திருநாமத்தை நரகம் கேட்ட மாத்திரத்தில் திகில்பிடித்து அங்கிருந்து ஐந்நூறு வருஷப் பிரயாணத்தூரம் விலகிப்போம். ஜபானியாக்கள் அதை இழுத்து, பழையபடி கொணர்ந்து நிருத்துவார்கள். அப்போது நரகம் ஆண்டவனே! முஹம்மது நபியுடைய உம்மத்தை என்னுடைய வேதனையை விட்டு நீ காவல் செய். அவர்கள் மிகவும் பலவீனர்கள், வேதனை தாங்கார் என்று அல்லா இடம் இரங்கிக்கேட்கும். அப்போது நபி நாயகமவர்கள் புடவையை இடுப்பில் இருகவரிந்து கட்டிக்கொண்டு அல்லாஹுத் தஆலாவின் சமுகத்தில் போய் ஸுஜூது செய்வார்கள். அங்கிருந்து உம்மத்திடம் வருவார்கள். பின்னும்போய் ஸுஜூது செய்வார்கள் திரும்பி உம்மத்திடம் வருவார்கள். மறுபடியும்போய் ஸுஜூது செய்வார்கள், இப்படிச் செய்துகொண்டு தங்கள் உம்மத்துக்காகக் கண்ணீர்

சொரிய அழுது பாடு பட்டுக் கலங்குவதை மற்ற நபிமார்கள் பார்த்து ஸுபுஹானல்லா இந்தச் சங்கைப்பெற்ற முஹம்மது தங்கள் உம்மத்துக்காக எவ்வளவு பாடுபடுகிறார்கள் பாருங்கள் என்று சொல்லிக் கொள்ளுவார்கள்.

அதன்பின் அல்லாஹுத் தஆலா முஹம்மதே, உம்முடைய உம்மத்தை விசாரணைக்காக முற்படுத்தும் என்று நபி நாயகமவர்களுக்குக் கட்டளை பண்ணுவான். நபி நாயகமவர்கள் எல்லாருக்கும் முன் தங்கள் உம்மத்தைக் கொண்டுபோய்த் தயாராய் நிறுத்திக் கொள்வார்கள். மற்றகல்குகள் எல்லாரும் அவர்களுக்குப் பின் விசாரணைக்குத் தாயாராய் நிற்கும்.

அப்போது ஸுவர்க்கத்தைக் கொணரும்படி மலக்குகளுக்கு அல்லாஹுத் தஆலா கட்டளை பண்ணுவான். உடனே மலக்குகள் ஸுவர்க்கத்தை கொணர்ந்து அறுஷின் வலதுபுறம் நிறுத்தி அதன் வாசல்களைத் திறந்துவைப்பார்கள். பின்பு மீஸான் ஆகிய தராசைக்கொணர்ந்து நிறுத்தும்படி கட்டளை பிறக்கும். அப்படியே அது நிறுத்தப்படும். அதன்பின் ஸிறாத்து ஆகிய பாலம் போடக் கட்டளை பிறக்கும். உடனே அதைக்கொணர்ந்து மஹஷறு மைதானுக்கும் ஸுவர்க்கத்திற்கும் இடையில் நரகத்து முது மேல் போடுவார்கள்.

மௌகிபு முடிந்தது.

---

## 5-ம் பஸல்.

## கிஸாஸு.

கிஸாஸு என்பது உத்தரித்தல். அது மனிதர் முதலான ஜின் ஷைத்தான்களும், மிருகம் முதலான சகல பிராணிகளும், ஒருவருக்கொருவர் ஒன்றுக்கொன்று செய்தகுற்றத்திற்கு உத்திரவாதம் பண்ணுதலாம்.

மனிதர் முதலான சர்வஜீவகோடிகளும் விவரிக்கப்பட்ட ஒழுங்கு நிறுத்தப்படும். ஸுவர்க்கம், நரகம், மீஸான், ஸிராத்து அனைத்தும் தயார் படுத்தப்பட்டும், தீர்ந்தபின் அல்லாஹுத் தஆலா முந்தி மனிதர், ஜின் அல்லாத மிருகம் முதலானமற்றப் பிராணிகள் அனைவற்றையும் தன்சமுகத்தில் ஒன்றொன்றாகக்

கொண்டுவரச்செய்து, ஒன்றுக்கு ஒன்றுசெய்த குற்றத்தைப்பற்றி விசாரணைபண்ணி, குற்றஞ் செய்தபிராணியைக் குற்றஞ் செய்யப் பட்டபிராணிக்கு பதில்கொடுக்கும்படி தீர்மானிப்பான். அப்படித் தீர்மானித்த தீர்ப்பும், உடனே நிறைவேற்றப்படும். எப்படி என்றால் கொம்பில்லாத ஒரு மாட்டைக் கொம்புள்ள ஒருமாடு முட்டியிருந்தால், முட்டபட்ட கொம்பில்லாமாட்டுக்கு அப்போது கொம்பைக்கொடுத்து தன்னை முட்டினமாட்டை பதிலுக்கு முட்டச்செய்வதாம். இதுபோலவே சகலத்திற்கும் தீர்ப்பும் நிறைவேற்றுதலும் செய்துமுடித்து, அந்தப் பிராணிகள் எல்லாவற்றையும் "மண்ணோடு மண்ணாக" என்று அல்லாஹுத் தஆலா கட்டளை யிடுவான். உடனே அவை அடங்கலும் மடிந்து மண்ணோடு மண்ணாய் விடும். இனி அவைகளுக்கு மீட்சியேயில்லை. இதைப் பார்த்துக்கொண்டு நிற்கும் காபிர்கள், நாங்களும் இப்படி மண்ணோடு மண்ணாய் மடிந்திடக்கூடாதா? அப்படியாய் விட்டால் எங்களுக்கு வேதனையிராதே என்று சொல்லுவார்கள்.

அதன்பிறகு அடக்கியாளும் அரசனும், நியாயாதி பதியுமா யிருக்கிறேன். ஸுவர்க்கத்திற்குப் போகிறவன் ஒருபிழை செய்திருந்தால் அதைத் தீர்த்துக் கொள்ளுமுன் அவன் ஸுவர்க்கத்திற்கும் போகவேண்டியதில்லை. எவனும் ஸுவர்க்கத்திற்குப் போகவேண்டியவனுக்கு ஒருபிழை செய்திருந்தால் அவன் அதை தீர்த்துக்கொள்ளு முன் நரகத்திற்குப்போகக் கூடாது. அந்தப் பிழை ஒரு அடி அடித்ததும் ஆகும் என்று அல்லாஹுத் தஆலாவின் கட்டளை பிறக்கும். அந்தக் கட்டளை பிறந்த பின் " ஒருவருக்கொருவர் அநியாயஞ்செய்து கொண்டதால் ஏற்படும் வழக்காளிகள் எங்கே?" என்று கூப்பிடப்படும். உடனே இரண்டு வழக்காளிகள் கொண்டு வரப்படுவார்கள். அவர்களில் ஒருவன் குற்றஞ் செய்தவனும் மற்றொருவன் குற்றஞ்செய்யப் பட்டவனுமாயிருப்பார்கள், குற்றத்திற்கு தக்கபடி குற்றஞ் செய்தவனுடைய நன்மையைப்பிடுங்கி குற்றஞ்செய்யாதவனுக்குக் கொடுக்கப்படும். குற்றஞ் செய்தவன் நன்மையற்றவனானல் குற்றஞ் செய்யப்பட்டவனுடைய பாவத்தைக் குற்றத்திற்குத் தக்கபடி யெடுத்து குற்றஞ் செய்தவன் மேற் சுமத்தப்படும். குற்றஞ்செய்தவன் ஒலியாயிருந்தால் அந்த ஒலியுடைய நன்மைகளை அந்த ஒலியினாற் குற்றஞ் செய்யப் பட்டவனுக்குப் பிடுங்கிக் கொடுக்கப்பட்டு அவற்றில் ஒரு அணுவளவு மீதியானல், அதை அந்த ஒலி ஸுவர்க்கம் புகுதும்வரையும்

அதிக மாக்கப்படும். இனி குற்றஞ் செய்தவன் முழுதும் பாவி யாயிருந்தால் குற்றஞ் செய்யப்பட்டவனுடைய பாவத்தை யெடுத்து அவன் நரகம் புகுதும்வரையும் அவன்மேல் அதிகமாகச் சுமத்தப்படும்.

ஒருவன் தான் துன்யாவில் பாவமான காரியங்களைச் செய்யும் போது அதனை விலக்காமற் பார்த்துக்கொண்டிருந்த மற்றொரு வனை அவன் பார்த்துக்கொண்டிருந்ததினால் தனக்கு அபாயம் வந்ததென்று அவன்மேல் வழக்குக் கொண்டு வருவான். இதற் கும் அதுவே தீர்ப்பு.

இனி இரண்டு வழக்காளிகள் குற்றஞ் செய்தவன் யாதொரு நன்மையுமில்லால் அல்லாஹுத் தஆலாவுக்கு உவந்தவனும் குற் றஞ் செய்யப்பட்டவன் யாதொரு பாவமுமில்லாதவனுமாய் வந்து வழக்கிடுவார்கள். இவர்களில் குற்றஞ் செய்தவன் தான்செய்த குற்றத்திற்கு அபராதமாகக் கொடுக்கத் தன்னிடத்தில் நன்மை இல்லாததினாலும், அல்லது அதற்குப் பிரதியாகக் குற்றஞ் செய் யப்பட்டவனுடைய பாவத்தைச் சுமந்துகொள்ளக் குற்றஞ்செய் யப்பட்டவனிடத்தில் பாவம் இல்லாததினாலும், குற்றஞ் செய்த வனை நிவர்த்திசெய்யும் வறையும் விடமாட்டேன் என்று நிர்பந் தப்படுத்துவதனாலும், குற்றஞ்செய்தவன் தப்பித்துக்கொள்ள வழியில்லாதிருக்கையில் குற்றஞ் செய்யப்பட்டவனை அல்லாஹுத் தஆலா மேலே அண்ணாந்துபார் என்று ஏவுவான். அவன் பார்த்த போது அவனுடைய கண்களுக்கு மிகவும் அலங்காரமுள்ள ஒரு பூங்காவனமும், அதற்குள் விசித்திரமான ஒரு பொன்மாளிகையும் தோன்றும். அதை அவன் கண்டு ஆண்டவனே இது யாருடை யது என்று கேட்பான். அதற்கு அல்லாஹுத் தஆலா இந்தப் பூங்காவனமும், பொன் மாளிகையும், அவற்றிற்குக் கிறயங்கொடுக் கிறவன் எவனோ அவனுடையவை என்று சொல்லுவான். அதைக் கேட்ட அவன் ஆண்டவனே இவற்றிற்குக் கிறயங்கொடுக்கிறவன் யார்? என்று கேட்பான். இக்கேள்விக்கு அல்லாஹுத் தஆலா அப் படிக் கிரயங்கொடுக்கிறவன் நீதான் என்று சொல்லுவான். அதற்கு அவன் நான் எதைக்கொண்டு கிரயங்கொடுப்பேன் என்பான். அப்போது அல்லாஹுத் தஆலா அவனைப்பார்த்து மேற்சொன்ன குற்றஞ் செய்தவனைச் சுட்டிக்காட்டி இவனுடைய குற்றத்தை நீ பொறுத்துக் கொள்வதுதான். உடனே அவன் மேற் சொன்ன

குற்றத்தை நான் பொறுத்துக்கொண்டேன் என்று சொல்லுவான். உடனே இரண்டு பேரையும் ஸுவர்க்கம் புகுதும்படி அல்லா ஹுத் தஆலா தீர்ப்புச் செய்வான்.

இவ்விதமே அல்லாஹுத் தஆலா தன் அடியார்களுக்குள் ஒருவருக்கொருவர் செய்துகொண்ட குற்றங்களுக்கும் கொடுக்க வேண்டிய கடன்களுக்கும் வேறு எவ்வகைப்பட்ட உத்திரவாதங் களுக்கும் விசாரித்துத் தீர்ப்புச் செய்வான்.

இந்த வழக்குகள் அடங்கலும் தீர்ந்த பின் அல்லாஹுத் தஆலாவின் புறத்திலிருந்து "வரிசை பெற்றவர்கள் எங்கே?" என்று ஒரு சத்தம் பிறக்கும். அப்போது ஒரு கூட்டத்தார் வெளிப்படுவார்கள். அல்லாஹுத் தஆலா அவர்களை நீங்கள் என்னுடைய கிருபைக்கொண்டு யாதொரு கேள்வி கணக்கில்லா மல் ஸுவர்க்கம் புகுதுங்கள் என்று உத்திரவு செய்வான். உடனே அவர்கள் ஸுவர்க்கத்தை நாடி விரைந்து போவார்கள். அவர்களை மலக்குகள் சந்தித்து நீங்கள் யார், முந்திச் ஸுவர்க்கத் திற்கு வெகு விரைவாய்ப் போகிறீர்களே? என்று கேட்டார்கள். அதற்கு அவர்கள் நாங்கள் வரிசை பெற்றவர்கள் என்று சொல் வார்கள். இதைக்கேட்ட மலக்குகள் அவர்களைப் பார்த்து நீங்கள் பெற்ற வரிசை என்ன வரிசை என்று கேட்பார்கள். இக்கேள் விக்கு அந்தக் கூட்டத்தார், மனிதர்கள் எங்களுக்கு அநியாயஞ் செய்தால் பொறுத்துக்கொள்ளுவோம், குற்றஞ் செய்தால் மன்னிப்போம் என்று சொல்லுவார்கள். இதைக்கேட்ட மலக்கு கள் இது நீங்கள் செய்த அமலுக்குத் தக்க கூலிதான், நீங்கள் ஸுவர்க்கத்தில் போங்கள் என்று சொல்லி அனுப்பு வார்கள். அதன் பிறகு ஸபுறை யுடையவர்கள் எங்கே? என்று சத்தம் பிறக்கும். உடனே ஒரு கூட்டத்தார் வெளிப்படுவார்கள். அவர்களுக்கும் ஸுவர்க்கம் புகுதும்படி உத்திரவு பிறக்கும். அவர்களையும் மலக்குகள் சந்தித்துக்கொண்டு நீங்கள் யார் விரைந்து பொகிறீர்களே என்று கேட்பார்கள். நாங்கள் ஸபுறு டையவர்கள் என்று அவர்கள் பதில் சொல்லுவார்கள். அப்போது மலக்குகள் உங்கள் ஸபுறு என்ன என்று கேட்பார்கள். அக்கேள் விக்கு நாங்கள் அல்லாஹுத் தஆலாவின் ஏவலை செய்வதிலும் விலக் கலை விடுவதிலும் நேரிடும் வருத்தத்தைப் பொறுத்தோம். இது தான் எங்கள் ஸபுறு என்று சொல்லுவார்கள். அதன் பிறகு அல் லாஹுத் தஆலாவுக்கு உவப்பு வைத்தவர்கள் எங்கே என்று

ஒரு சத்தம் பிறக்கும். உடனே ஒரு கூட்டத்தார் வெளிப்படு வார்கள். அவர்களுக்கும் ஸுவர்க்கம் புகுதும்படி உத்திரவு பிறக்கும். அவர்கள் அப்படியே போகும்போது மலக்குகள் சந்தித்து முன்போலக் கேட்பார்கள். அதற்கு அவர்கள் நாங்கள் அல்லாஹுத் தஆலாவுக்கு உவப்பு வைத்தவர்கள் என்று சொல்லுவார்கள். அந்த உவப்பு என்னவென்று மலக்குகள் கேட்பார்கள். அக்கேள்விக்கு நாங்கள் அல்லாவுக்காக ஒருவரை யொருவர் உவந்து பழகிக்கொள்வோம். அப்படியே திரவியம் முதலியவற்றைச் செலவிடுவோம், என்று பதில் சொல்லுவார்கள். அதன் பிறகு இரவெல்லாம் விழித்திருந்து வணங்கினவர்கள் எங்கே என்று ஒரு சத்தம் பிறக்கும். உடனே ஒரு கூட்டத்தார் வெளிப்படுவார்கள். அவர்களுக்கும் ஸுவர்க்கம் புகுதும்படி உத்திரவு பிறக்கும். அவர்கள் போகும்போது மலக்குகள் சந்தித்து முன்போலக் கேட்பார்கள். அக்கேள்விக்கு அந்தக் கூட்டத்தார் நாங்கள் வணங்கினவர்கள், அந்த வணக்கம் மனிதர்கள் படுத் துறங்கும் போதெல்லாம் விழித்திருந்து வணங்கினேமே அதுவாம் என்று சொல்லுவார்கள். அப்போது மலக்குகள் அவர்களைச் ஸுவர்க்கத்திற்குப் போங்கள் என்று சொல்லுவார்கள். அதன் பிறகு பீஸபீல் காரர் எங்கே என்று ஒரு சத்தம் பிறக்கும். உடனே ஒரு கூட்டத்தார் வெளிப்படுவார்கள். அவர்களுக்கும் ஸுவர்க்கம் புகுதும்படி உத்திரவு பிறக்கும். அவர்களையும் மலக் குகள் சந்தித்துக் கேட்பார்கள். அதற்கு அவர்கள் நாங்கள் அல்லாஹுத் தஆலாவின் பாதையில் வெட்டினவர்கள் என்று பதில் சொல்லுவார்கள். இதை மலக்குகள் கேட்டு, அது என்ன வெட்டு என்று கேட்பார்கள். அது காபிர்களை வெட்டினதாம் என்று பதில்சொல்ல மலக்குகள் ஆனால் ஸுவர்க்கத்துக்குப் போங்கள் என்று சொல்லுவார்கள். அதன் பிறகு பலாயை அநுப வித்தவர்கள் எங்கே என்று ஒரு சத்தம் பிறக்கும். அந்தக் கூட் டத்தார் வெளிப்பட்டபின் அவர்களையும் ஸுவர்க்கம் புகுதும்படி உத்திரவாகும். மலக்குகள் அவர்களையும் சந்தித்து வழமைபோ லக் கேட்பார்கள். அதற்கு அவர்கள் நாங்கள் பலாயை அநுப வித்தவர்கள் என்று சொல்லுவார்கள். அது என்ன பலாய் என்று மலக்குகள் கேட்பார்கள். அக்கேள்விக்கு அந்தக் கூட்டத் தார் நாங்கள் மனிதர்கள் ஸுவதியாயிருக்கையில் பலாயினு டைய வேதனையைச் சகித்துக்கொண்டிருந்தோம் என்று சொல்லு வார்கள். இதைக்கேட்ட மலக்குகள் இது உங்களுக்குத் தக்க

கூலிதான் ஸுவர்க்கத்திற்குப் போங்கள் என்று சொல்லு வார்கள்.

இவ்விதம் ஹலரத்து அபூபக்கர் றலியல்லாஹு அன்ஹு முதலான நாற்பத்தொன்பது லக்ஷம்பேர்கள் யாதொரு கேள்வி கணக்கு இல்லாமல் நபி நாயகமவர்கள் ஷபாஅத்தைக் கொண்டு கூட்டங் கூட்டமாக ஸுவர்க்கம் புகுதுவார்கள்.

கிஸாஸு முடிந்தது.

---

## 6-ம் பஸல்.

## ஹிஸாபு.

ஹிஸாபு என்பது கணக்கு விசாரணை. அது கல்குகள் செய்த நன்மை தீமைகளைப் பற்றிய விசாரணையாம். மலக்குகளும் நபி மார்களும் முன் சொன்னபடி கேள்வி கணக்கின்றி ஸுவர்க்கம் புகுத உத்திரவு பெற்றவர்களும் தவிர மற்ற மனிதர்கள் ஜின்கள் எல்லாவற்றையும் அவரவர் செய்த நன்மை தீமைகளைப் பட் டோலைப்படி பரிசோதனை செய்வதற்கும் அவற்றைப்பற்றிக் கேள்விகணக்குக் கேட்பதற்கும் வேண்டி இன்னான்மகன் இன் னானே! என்று அல்லாஹுத் தஆலாவின் கட்டளைப்படி ஒவ் வொரு ஆளாகப் பெயர் குறித்து மலக்குகள் கூப்பிடுவார்கள். கூப்பிடும்போது ஒவ்வொருவரும் இருதயங்கலங்கி உறுப்புகள் விலவிலத்து அறிவு தடுமாறி அஞ்சி நிற்பார்கள். அப்போது முன்னமே நியமிக்கப்பட்டிருக்கும் இரண்டு மலக்குகளும் ஒவ் வொரு ஆளாகப்பிடித்துக்கொண்டுபோய் அல்லாஹுத் தஆலாவின் சமுகத்தில் விடுவார்கள். அப்படியே எல்லாரும் அவன் சமுகத் தில் சேர்ந்த பின்பு அல்லாஹுத் தஆலா எல்லாரையும் பார்த்து வணங்கப்படப் பாத்திரமான ஆண்டவன் என்னைத்தவிர வேறில்லை. அதிகக் கிருபை செய்கிறவனும் நியாயமாகத் தீர்ப்புச் செய்கிற வனும், வெகு விரைவில் விசாரித்து முடிக்கிறவனும் என்னைப் போல எவனும் இல்லை. என் அடியார்களே! நீங்கள் அஞ்சிச்சஞ் சலப் படாதீர்கள், உங்களுடைய நன்மையும் தீமையுமான சகல கருமங்களும் இப்போது பரிசோதிக்கப்படும். அதுகளைப் பற்றி நீங்கள் கேள்வி கேட்கப்பட்டு, விசாரணையும் செய்யப்படு வீர்கள். ஆகையால் அவைகளுக்குத் தக்க மறுமொழிகளையும் ஆதாரங்களையும் சரி பண்ணிக் கொள்ளுங்களென்று பொதுவில்

தெரிவிப்பான். அதன் பின் எல்லாரையும் விசாரிப்பதற்காக ஒவ்வொருவரையும் அவரவர் காலின் பெருவிரல் நுனியைத்தரையில் ஊன்றி நிற்கும்படி அணிவகுத்துவிடுங்கள் என்று மலக்குகளுக்கு உத்திரவுசெய்வான். அப்படியே ஒவ்வொருவரும் காலின் பெருவிரலை ஊன்றி நிற்கும்படி எல்லாரையும் அணிவகுப்பார்கள்.

எல்லாரும் இப்படி அணி அணியாய் நின்று தீர்ந்த பிற்பாடு அவனவனுடைய கழுத்தில் மாட்டப்பட்டிருக்கும் பட்டோலைக் கட்டுகள் எல்லாம் கழுத்திலிருந்து ஆகாயத்தில் பறந்துபோம். பறந்த பின் இன்னான் மகன் இன்னானே! உன் பட்டோலையை வலது கையில் வாங்கிக்கொள் என்றும், இன்னான் மகன் இன்னானே! உன் பட்டோலையை இடது கையில் வாங்கிக்கொள் என்றும், நன்மை தீமைக்குத் தக்கபடி கட்டளை பிறக்கும். அப்படியே எல்லாரும் வலது கையிலும், இடது கையிலுமாகப் பட்டோலைகளை வாங்கிக்கொள்வார்கள். வலது கையில், பெறுகிறவர்கள் நல்ல ஸாலிஹ்களும், இடது கையில் பெறுகிறவர்கள் கெட்ட பாவிகளுமாயிருப்பார்கள். வலது கையில் பட்டோலை பெறுகிறவர்களில் முந்தினவர் ஹலரத்து உமறு புனுகத்தாபு றலியல்லாஹு அன்ஹு அவர்கள் இடது கையில் பட்டோலை பெறுகிறவர்களில் முந்தினவன் அஸுவதிபுனு அப்துல் அஸது.

இவ்விதம் பட்டோலை பெற்றபின் "உன் பட்டோலையை நீ படித்துப்பார். இன்றையதினம் உன்னைக் கேள்விக் கேட்டுக் கொள்ள நீயே போதுமானவன்" என்று கட்டளை பிறக்கும். உடனே ஒவ்வொருவரும் தம் தம் பட்டோலையைப் படிப்பார்கள். வலது கையில் வாங்கினவர்களின் பட்டோலை வெண்மையாய் முன் புறத்தில் நன்மையாயும் பின் புறத்தில் தீமையும் எழுதப்பட்டிருக்கும். அவர்கள் முந்தி அதன் பின் புறத்தை வாசிப்பார்கள். அப்போது அவர்கள் முகம் மஞ்சலாய் நிறம்மாறிப் பயப்படுவார்கள். அப்படி பயத்தோடு அந்தப் பின் பக்கம் படித்து முடியும் போது அதன் கடைசியில் "இவையெல்லாம் நீ செய்த பாவங்கள்; அவற்றை நான் மன்னித்துவிட்டேன்" என்று எழுதியிருக்கும். இந்த வரியைப் படித்தவுடன் முன் உண்டான பயம நீங்கி அதிக சந்தோஷப்படுவார்கள். முன் பாகத்தைப் புரட்டிப்படிப்பார்கள். அதைபடிக்கப்படிக்கச் சந்தோஷம் உண்டாய்க்கொண்டே யிருக்கும். படித்துமுடியவே அதன் கடைசியில் "இவை யெல்லாம் நீ செய்த நன்மைகள் அவற்றை நான் அதிகப்படுத்தி விட்டேன்"

என்று எழுதியிருக்கும். இடதுகையில் பெற்ற ஒவ்வொரு பட்டோலையும் கறுப்பாயிருக்கும் அதன் முழுமையும் தீமையாகவே எழுதப்பட்டிருப்பதால் அந்தப்பட்டோலையை வாங்கிவாசிக்கும் ஒவ்வொருவருக்கும் வாசிக்கும்போது முகம்கருத்துக் கண்கள் நீலநிறமாய் அதிக அச்சத்தில் மூழ்குவார்கள். அப்படி மூழ்கி அதை முழுதும்படித்து முடிந்தபின் அதன் கடைசியில் இவையெல்லாம் நீசெய்த பாவங்கள். அவற்றை உன்மீது அதிகப்படுத்தி விட்டேன் என்று எழுதியிருக்கும். அதைவாசித்தவுடன் மிகவும் அஞ்சி மயங்குவார்கள்.

வலதுகையில் பட்டோலை பெற்றவர்களில் முந்தினவரை தனது பட்டோலையை வாசித்து முடிந்தவுடன் அவரை அறுபது முழம் உயரமாக்கி, அவருடைய முகத்தைப் பூரணச் சந்திரன்போலப் பிரகாசிக்கச்செய்து, பட்டாடை புனைவித்து பொன்னுலும், வெள்ளியினுலும், முத்தினுலும், கடகங்கள் பூட்டிசிரசில் முத்துகளை மூத்தின கிரீடம் ஒன்று அணியச்செய்து அனுப்பப்படுவார்கள். அவர் தன்னையொத்த மனிதர்களிடம் போய் உங்களுக்கு நன்மாராயம் உண்டாவதாக. உங்களில் ஒவ்வொருவரும எனக்குக் கிடைத்ததுபோலவே கிடைக்கப் பெறுவீர்கள் என்று சொல்லுவார். அதனுல் அவர்கள் சந்தோஷப்படுவார்கள். வலதுகையில் பட்டோலைபெற்ற ஒவ்வொருவரும் இவ்விதமே ஆவார்கள்.

இடதுகையில் பட்டோலை பெற்றவர்களில் முந்தினவன் தனது பட்டோலையை வாசித்து முடிந்தவுடன் அறுபது முழம் உயரமாக்கப்பட்டு முகத்தைக் கருப்பாகிக் கீல்சட்டை போடுவித்து அக்கினிக் கிரீடமொன்று தலையிற் கவிழ்த்து அனுப்பப்படுவான். அவன் தன்னை யொத்தவர்களிடம் வரும்போது, அவர்கள் இவனைக்கண்டு இவனை இங்கே வரவிடாதீர்கள் என்று அலறுவார்கள். அவர்களைப் பார்த்து நீங்கள் என்னையா வெருட்டுகிறீர்கள்? அல்லாஹுத் தஆலா உங்களை வெருட்டுவான். நீங்களும் நான் பெற்றதையே பெறுவீர்கள் என்று சொல்லுவான். இடதுகையில் பட்டோலை பெறற ஒவ்வொருவனும் இவ்விதமே ஆவான்.

அல்லாமலும் பட்டோலை பெற்றவர்களில் சிலருடைய பட்டோலை முழுவதும் அங்கீகரிக்கப்படாமல் தள்ளப்படும். சிலருடைய பட்டோலையில் சிலவிஷயங்கள் அங்கீகரிக்கப்பட்டுச் சில விஷயங்கள் தள்ளப்படும். சிலருடைய பட்டோலை முழுவதும் அங்கீகரிக்கப்படும். சிலருடைய பட்டோலையில் உள்ள பாவங்கள்

மன்னிக்கப்படும். சிலருடைய பட்டோலையில் உள்ள நன்மைகள் அதிகமாக்கப்படும். சிலருடைய பட்டோலையில் உள்ள பாவங்கள் அதிகப்படும். சிலருடைய பட்டோலையில் உள்ள நன்மைகள் தள்ளும்படி செய்யப்படும்.

அன்றியும் தம் தம் வழக்காளிகளுக்கு நன்மையைக் கொடுத்தவர்களும் தீமையைப் பெற்றுக்கொண்ட ஒவ்வொருவருக்கும் அவரவர் பட்டோலையைப் படித்துப் பார்த்து தாம் செய்த நன்மை எழுதப்படாமல் இருப்பதைக்கண்டு ஆண்டவனே, ! நான் செய்த நன்மைகள் இதில் ஏன் எழுதப்படவில்லை என்று கேட்பார்கள், உன்னுடைய நன்மைகள் நீ கொடுக்க வேண்டிய வழக்காளிகளுக்குக் கொடுக்கப் பட்டன என்று பதில் பிறக்கும். தாம் செய்யாத தீமை எழுதப்பட்டிருப்பதைக் கண்டு, ஆண்டவனே! நான் செய்யாத தீமைகள் இதில் ஏன் எழுதப்பட்டிருக்கின்றன என்று கேட்பார்கள். அதற்கு நீ கொடுக்கவேண்டிய வழக்காளிகளுக்கு தீமைகள் அந்தக் கடனுக்கு பதிலாக உன்மீது சுமத்தப்பட்டன என்று பதில் பிறக்கும்.

இன்னும் இவ்விதமாகவே பட்டோலையைக் கொண்டு பரிசோதனை செய்யும்போது சோதிக்கப்படும் அனைவரும் மூன்று வகை ஆவார்கள். முதலாவது :—தாம்செய்த குற்றங்களுக்காக மன்னிப்பு கேட்கிறவர்கள். இரண்டாவது :—தாம் செய்த குற்றங்களுக்காக யாதொன்றுஞ் சொல்லாமல் வாய்மூடி நிற்கிறவர்கள். மூன்றாவது :—தாம் செய்த குற்றங்களுக்காக அவற்றைத்தட்டித் தப்பிக்கொள்ளத் தர்க்கஞ் செய்கிறவர்களாம். அப்படித்தர்க்கஞ் செய்கிறவர்கள் யாரெனில் :—மார்க்கத்திற்கும் மாற்றமான கெட்ட அபிப்பிராயமுள்ள பித்அத்துக்காரர்களும், காபிர்களுமே.

அல்லாஹுத் தஆலா ஒருவன் உண்டென்று நம்பாமல் இணை வைத்தும், மார்க்க வரம்பைக் கடந்தும், பொருள்களை நன்மையான விஷயங்களில் செலவிடாமல் தடுத்தும் அக்கிரமமாய் முரண்டு பண்ணின காபிர்கள் அனைவற்றையும் மஹா பெரிய வேதனையுள்ள நரகத்தில் தள்ளும்படி மலக்குகளுக்கு உத்திரவானபோது, அந்தக் காபிர்கள் ஆண்டவனே! என் பட்டோலை சரிவர எழுதப்படவில்லை, நாங்கள் சொல்லாத சொற்களையும் செய்யாத செயல்களையும், எண்ணாத எண்ணங்களையும் அந்த மலக்குகள் எழுதிவிட்டார்கள். என்று பட்டோலை எழுதின மலக்குகளை குறித்துச் சாட்டிச் சொல்லுவார்கள். ஆண்டவனே! நாங்கள்

இவர்கள் சொல்லாததையும், செய்யாததையும், எண்ணுததையும் எழுதவேயில்லை. சொன்னவைகளையும் செய்தவைகளையும் எண்ணினவைகளுமே எழுதினேம். இவர்கள் உண்மையை ஒப்புக் கொள்ளாத வழிக்கேடர்கள் என்று சொல்லுவார்கள். அப்போது அல்லாஹுத் தஆலா நீங்கள் இப்போது இங்கே வீண்வழக் கடிக் காதீர்கள். முந்தியே உங்களுக்கு நான் நபிமார்களைக்கொண்டு இவ் விஷயத்தைப் பரிஷ்காரமாகத் தெரிவித்துப் பயமுறுத்தாட்டித் தீர்மானஞ் செய்திருக்கிறேன். நான் செய்த தீர்ப்பை மாற்று கிறவனல்ல, என் அடியார்களுக்கு அநியாயஞ் செய்கிறவனுமல்ல என்று காபிர்களுக்குச் சொல்லுவான்.

பிறகு, அல்லாஹுத் தஆலா கேள்வி கணக்குகேட்க ஆரம் பிப்பான். அப்போது அறுஷுடைய ஒளி வெளியாய் மஹ்ஷரு மைதான முழுதும் வெளிச்சமாகும். உடனே அல்லாஹுத் தஆலா தன் அடியார்களைக் கேள்விகேட்கப் போகிருன் என்று ஒவ்வொருவரும் அறிந்து கொள்ளுவார்கள். இன்னும் ஒவ்வொரு வரும் நம்மைத்தான் கூப்பிட்டுக்கொண்டு போவார்கள் என்று எண்ணுவார்கள்.

பிற்பாடு அல்லாஹுத் தஆலா முந்தி இஸ்றாபீல் அலைஹிஸ் ஸலாமவர்களைக் கூப்பிட்டு நான் உம்மிடந் தந்த றிஸாலத்தை என்ன செய்தீர் என்று கேட்பான். அதற்கு அவர்கள் ஆண்ட வனே, அதை நான் ஜிபுராயீல் வசம் ஒப்புவித்தேன் என்று சொல்லுவார்கள். உடனே ஜிபுறயீல் அலைஹிஸ்ஸலாமவர்களைக் கேட்கப்படும். அதற்கு அவர்கள் நான் அந்த றிஸாலத்தை றஸூல்மாரிடம் ஒப்படைத்தேன் என்று சொல்வார்கள்.

அதன் பிறகு அல்லாஹுத் தஆலா எல்லா நபிமாரையும் தன் சமுகத்தில் கொண்டு வரும்படி மலக்குகளுக்குக் கட்டளை பண்ணுவான். மலக்குகள் அவர்கள் அனைவரையும் அழைத்துக் கொண்டு போய் நிறுத்துவார்கள். அல்லாஹுத் தஆலா நபிமார் களைப்பார்த்து, நான் உங்களிடம் சேர்பித்த றிஸாலத்தை நீங்கள் மனிதர்கள் வசம் சேர்ப்பித்தீர்களா? அதற்கு மனிதர்கள் என்ன சொன்னர்கள் என்று கேட்பான். அப்போது நபிமார்கள், ஆண்டவனே! இப்போதிருக்கும் அமளியினல் அந்தச் சங்கதி ஞாபகப்படவில்லையே என்று அஞ்சிப்பயந்து சொல்லுவார்கள்,

அல்லாஹுத் தஆலா அதைக்கேட்டு நூஹு அலைஹிஸ் ஸலாமவர்களைக் கூப்பிட்டு, நூஹே நீர் என் றிஸாலத்தை உம்முடைய கூட்டத்தாரிடம் சேர்த்தீரா? என்று கேட்பான். இக் கேள்விக்கு அவர்கள் ஆம் என்று பதில் சொல்லுவார்கள், உடனே அந்தக் கூட்டத்தாரைப் பார்த்து. நூஹு உங்களிடம் என் றிஸாலத்தைச் சேர்த்தாரா? என்று கேட்பான். இப்படி கேட்டபோது அந்தக் கூட்டத்தார், ஆண்டவனே! அச்சமூட்டும்படியான ஒரு றஸூலும் எங்களிடம் வரவில்லை என்பார்கள். அல்லாஹுத் தஆலா நூஹு அலைஹிஸ்ஸலாமவர்களைப் பார்த்து, நூஹே! என் றிஸாலத்தை உம்முடைய கூட்டத்தாரிடம் சேர்த்து விட்டதாக நீர் சொல்லுகிறீர். இவர்கள் இல்லை என்றூர்களே என்று கேட்பான். அப்போது நூஹு அலைஹிஸ்ஸலாமவர்கள் ஆண்டவனே, நான் உண்மையாகவே அவர்களிடம் போய் றிஸாலத்தைச் சேர்த்துவிட்டேன், அதற்கு சாக்ஷியுண்டு என்று சொல்லுவார்கள். அல்லாஹுத் தஆலா சாக்ஷி யார் என்று கேட்பான். நூஹு அலைஹிஸ்ஸலாமவர்கள், சாக்ஷிக்காரர் முஹம்மது நபியும், அவர்கள் உம்மத்தும் என்று சொல்லுவார்கள். அல்லாஹுத் தஆலா நபி நாயகமவர்களின் உம்மத்தைப் பார்த்துச் சாக்ஷி கேட்பான். அவர்கள் நூஹு அலைஹிஸ்ஸலாமவர்கள் தங்கள் கூட்டத்தாரிடம் றிஸாலத்தைக் சேர்த்ததாக சாக்ஷி சொல்லுவார்கள், அப்போது நூஹு அலைஹிஸ்ஸலாமவர்களுடைய கூட்டத்தார் நபி நாயகமவர்களின் உம்மத்தைப்பார்த்து நீங்கள் எங்களைக் கண்டவர்கள் அல்லவே, அப்படியிருக்க நீங்கள் எங்கள் பேரில் எவ்விதம் சாக்ஷி சொல்லுகிறீர்கள் என்று கேட்பார்கள். அதற்கு நபி நாயகமவர்களின் உம்மத்து அல்லாஹுத் தஆலாவின் சமுகத்தை நோக்கி, ஆண்டவனே! எங்களுக்கு நீ ஒரு றஸூலையும், வேதத்தையும், அனுப்பியிருக்கிறூயே, அதுகளைக்கொண்டு நாங்கள் இவர்கள்பேரில் சாக்ஷி சொல்லுகிறோம். இவர்கள் மறுதலிக்கிறூர்கள் என்று சொல்லுவார்கள். அப்போது அல்லாஹுத் தஆலா இவர்களைப் பார்த்து, நீங்கள் உண்மை சொன்னீர்கள் என்று சொல்லி ஒப்புக்கொள்ளுவான். இவ்விதமாகவே இந்த நபிமார்களின் விசாரணை நடக்கும்.

இந்த விசாரணையில், அல்லாஹுத் தஆலா ஈஸா அலைஹிஸ் ஸலாமவர்களை விசாரிக்கும்போது அவர்களைப் பார்த்து, ஈஸாவே! நீர் உம்மையும், உமது தாய் மறியமையும் ஆண்டவன்

என்று வணங்கும்படி உமது கூட்டத்தாரிடம் சொன்னது உண்டா? என்று கேட்பான். இந்தப்பயங்கரமான கேள்வியை ஈஸா அலைஹிஸ்ஸலாமவர்கள் கேட்டு சில வருஷம் வரையும் பதில் சொல்ல நாவெழாமல் மறந்து நின்று பின்பு ஆண்டவனே! எனக்குப் பாத்தியம் அல்லாததை நான் அவர்களுக்குச் சொல்லவில்லை, அதை நீ அறிவாய். எனக்கும், உங்களுக்கும் ஆண்டவனாகிய அல்லாவை வணங்குங்கள் என்று உன் கட்டளைப்பிரகாரமே சொன்னேன் என்று நடுநடுங்கிச் சொல்லுவார்கள்.

இவ்விதமாகவே அந்தந்த நபிமாரையும் விசாரித்துக்கொண்டு, அந்தந்த நபிமார்களை ஒப்புக்கொள்ளாமல் மாறுசெய்த அந்தந்தக் கூட்டத்தார் எல்லாரையும் குற்றவாளிகள் என்று தீர்மானித்து, அவர்களைப் பார்த்து உங்கள் மீது குற்றம் சுமத்தப்பட்டது. காபிர் வேதனைப் படுவார்கள் என்னுஞ் சொல் உங்களுக்குப் பலித்தது என்று சொல்லிவிட்டு அவர்கள் எல்லாரையும் ஒரே கூட்டமாக நரகத்திற்குக் கொண்டுபோகும்படி அல்லாஹுத் தஆலா உத்திரவுசெய்வான். அவர்களுக்குச் சம்பவித்த துற்கதியைப்பார்த்து நிற்கும் மற்றவர்கள், தங்கள் கதி எவ்விதமாகுமோ என்று கலக்கம்பிடித்து ஸ்மரணையற்று நிற்பார்கள்.

அதன்பின், அல்லாஹுத் தஆலா நபி நாயகமவர்களைக் கூப்பிட்டு, கேள்விகணக்குக் கேட்பதற்காக உம்முடைய உம்மத்தைக் கொண்டுவாரும் என்று கட்டளையிடுவான். அப்போது நபி நாயகமவர்கள் பல பல விதமாக அல்லாஹுத் தஆலாவைப் புகழ்ந்து ஆண்டவனே! என்னுடைய உம்மத்தை நீ பங்கப்படப் பண்ணாதே என்று இரந்து கேட்டுக் கொள்வார்கள். முந்தி நபி நாயகமவர்களுடைய உம்மத்து விசாரிக்கப்படுவார்கள். அதன்பின் மற்ற நபிமார்களுடைய உம்மத்துகள் விசாரிக்கப்படுவார்கள்.

முந்தி விசாரிக்கப்பட்டு நரகத்திற்கு அனுப்பப்பட்டவர்கள், அந்தந்த நபிமாருக்கு மாறுசெய்து வழிப்படாத கூட்டத்தார். இங்கே உம்மத்துகள் என்றது வழிப்பட்ட கூட்டத்தார்.

இனி விசாரணையில் இலகு விசாரணை, தீர்க்க விசாரணை, கடின விசாரணை என்று மூன்றுவகைப்படும். விசாரிக்கப்படுகிறவர்களும் அப்படியே மூன்றுவகைப்படுவார்கள். அவர்களில் இலகு விசாரணைக்காரர் ஸாலிஹ்கள், தீர்க்க விசாரணைக்காரர் பாவிகள், கடின விசாரணைக்காரர் முனாபிகுகள். இலகு விசாரணைக்காரர்

களுக்குத் தண்டனையில்லை. தீர்க்க விசாரணைக்காரர் களுக்குத் தண்டனையுமுண்டு, மன்னிப்புமுண்டு. கடின விசாரணைக்காரர் களுக்குத் தண்டனையே யன்றி மன்னிப்பு இல்லை. இன்னும், அந்தரங்கத்தில் விசாரிக்கப்படுகிறவர்களும் உண்டு, அவர்கள் ஸாலிஹ்கள்தாம். அவர்கள் மீது குற்றங் கண்டால் மன்னிப்பாம்.

இன்னும் அல்லாஹுத் தஆலா ஒவ்வொருவரையும், அவரவர்களுக்குக் கொடுத்த நிஃமத்துகளைப் பற்றியும், அவரவர்செய்த அமல்களைப்பற்றியும் கேள்வி கேட்பான். அப்போது அவர்கள் தாம்செய்த குற்றங்களை ஒப்புக்கொள்ளாமல் மறுதலித்தாலும், ஆக்ஷேபித்தாலும் அதற்காக அவரவருடைய அவயவங்களையே சாக்ஷிசொல்வித்து விசாரிப்பான்.

ஒவ்வொருவரும் விசாரிக்கப்படும்போது அவரவர்களுக்கு வலதுபுறமும், இடதுபுறமும், முன்புறமும் நரகம் காண்பிக்கப்படும். நரகத்தை பார்த்தவர்களாய் கையில் பட்டோலை பிடித்தவர்களாய் நிற்பார்கள்.

அல்லாஹுத் தஆலா ஒவ்வொருவராக விசாரிக்கும் போது, தனித்தனியாக "உனக்கு நான் சரீர சுகத்தைக்கொடுத்து, ஆயுசை நீளவைத்தேனே, அந்த ஆயுசை எந்த கருமத்தில் நீ போக்கினாய், உனக்குப் பாலியத்தைத்தந்தேனே அதை எதைக்கொண்டு பழுதுபடுத்தினாய். திரவியத்தை தந்தேனே, அந்தத் திரவியத்தை நீ எவ்விதந்தேடி, எந்த விஷயத்தில் எவ்விதம் செலவு பண்ணினாய். சரீரபலத்தைத் தந்தேனே, அதை எப்படி அநுபவித்தாய். இல்லைமைக் கொடுத்தேனே, அதைக்கொண்டு என்ன அமல் செய்தாய்" என்று அவனுக்குக்கொடுத்த நிஃமத்துகளடங்கலையும் பற்றிக் கேட்டு அதிகமாகவும், கொஞ்சமாகவும், பயிரங்கமாகவும், அந்தரங்கமாகவும் வெளியுறுப்புகளாகவும், உள்ளுறுப்புகளாகவும் செய்த அமல் களடங்கலையும் கேட்பான். இன்னும், அல்லாஹுத் தஆலா ஒவ்வொருவனையும் அவனுடைய ஒவ்வொரு மூச்சை விடும்போது என்ன செய்தாய், மூச்சை வாங்கும்போது என்ன செய்தாய் என்று இரண்டிரண்டு கேள்வி கேட்பான். இன்னும் ஒருவன் செய்த ஒவ்வொரு கருமத்தையும் குறித்து, அதை நீ என்ன செய்தாய், எப்படிச் செய்தாய், யாருக்காகச் செய்தாய், என்றும் மூன்று கேள்வி கேட்பான். இவ்விதம் அவனவனுடைய பட்டோலையில் குறித்திருக்கும் ஒவ்வொரு அமலையும் பற்றிக்கேள்வி கேட்கப்படும்.

இன்னும், ஒரு சிறு குடித்தனத் தலைவன்முதல், அரசன் வரையிலுமுள்ள தலைவர் அனைவரையும் அவருடைய குடிகளைப் பற்றிய சகல உத்திரவாதங்களையும் குறித்துக் கேட்பான். அவ்விதம் கேட்கப்படுகிறவர்களில் தம் குடிகளை நியாயமாக நடத்தினவர்கள் நற்கதியையும், அநியாயமாக நடத்தினவர்கள் துற்கதியையும் அடைவார்கள்.

பிறகு அதிகாரிகள் அவர்கள் செய்த அதிகாரங்களைப்பற்றிக் கேட்கப்படுவார்கள். அப்போது அவர்கள் செய்த அதிகாரம் நியாயமானதா யிருந்தால் நற்பேறும், அநியாயமான தாயிருந்தால் நஷ்டமும் பெறுவார்கள். அதன் பிறகு நியாயாதிபதிகளாகிய ஹாக்கிம்களும், சாலிஹ்களும், அவர்கள் செய்த ஹுக்கும்களைப்பற்றிக் கேட்கப்படுவார்கள். பிறகு தர்மகர்த்தாக்கள் அவர்கள் செய்த தர்மகாரியங்களைப்பற்றிக் கேட்கப்படுவார்கள். அதன் பிறகு ஒவ்வொரு புருஷரும் தம் தம் பெண்ஜாதிமார்களை நடத்தின ஒழுங்கைப்பற்றிக் கேட்கப்படுவார்கள். பின்பு மேய்ப்பர்கள் தங்கள் கால் நடை பிராணிகளை வைத்து மேய்த்ததைப்பற்றிக் கேட்கப்படுவார்கள். முஸ்லிமானவர்களின் பொது விஷயங்களை நடத்த அதிகாரம் பெற்றவர்களும், அவர்கள் நடத்தின விஷயங்களைப்பற்றிக் கேட்கப்படுவார்கள். அப்படிக் கேட்கப்படும், அனைவரும் குற்றவாளிகளும், குற்றவாளிகள் அல்லாதவர்களும் ஆவார்கள்.

அல்லாஹுத் தஆலா தன் அடியார்களில் சிலரை ஒவ்வொருவராகத் தன் சமூகத்தில் அழைத்து, அவர்களுக்கும், மற்றவர்களுக்கும் இடையில் தெரியாமல் திரை போட்டு விசாரிக்கும் விதமும், செய்தகுற்றமும், மற்றவர்கள் அறியாமல் மறைத்துக் கொண்டு அவர்கள் கையிலிருக்கும் பட்டோலையைப் படிக்கும்படி ஏவுவான். உடனே அவர்கள் நன்மையைப் படிக்கும்போது முகம் வெளுத்தவர்களாயும், தீமையைப் படிக்கும்போது முகங் கறுத்தவர்களாயும், படிப்பார்கள். அப்போது அவர்களைப் பார்த்து இன்னகாலத்தில் இன்னபாவத்தை நீ செய்ததுண்டோ, அதை நீ அறிவாயா? என்று ஒவ்வொருவரையும் கேட்பான். இக் கேள்விக்கு அவர்கள் அதை நாங்கள் அறிவோம் என்று ஒப்புக் கொள்ளுவார்கள். இவ்விதம் அவர்கள் செய்த எல்லாப்பாவங்களையும் பற்றிக்கேட்க அவைகளை அவர்கள் ஒப்புக்கொண்டபின் அவர்களைப்பார்த்து நீங்கள் செய்த இந்த பாவங்களை துன்யாவி

லேயே பிறரறியாமல் நான் மறைத்து வைத்திருந்தேன், இப்போது அந்தப்பாவங்களை மன்னித்துக்கொண்டேன் என்று சொல்லி விட்டு பட்டோலையில் எழுதப்பட்டிருக்கும் பாவங்களைப் பார்த்து, நீங்கள் நன்மையாகுங்கள் என்று ஏவுவான். அப்படியே அவர்களின் பாவங்களெல்லாம் நன்மையாய்விடும். அப்போது அவர்களெல்லாரும் அல்லாஹுத் தஆலாவுக்கு ஸுஜூது செய்வார்கள். மலக்குகளுக்கும் நபிமார்களுக்கும் கூடத்தெரியாமல் மறைத்து வைத்து விசாரித்த இந்த விசாரணையின் முடிவில் அவர்கள் செய்த அந்த ஸுஜூதை மாத்திரம் எல்லாரும் பார்ப்பார்கள். பார்த்து இந்த அடியார்கள் அல்லாஹுத் தஆலாவுக்கு ஒருபோதும் மாறு செய்யாதவர்கள், அவர்களுக்கு இப்போது மங்களம் கிடைத்தது, என்று ஒருவரோடொருவர் பேசிக்கொள்வார்கள். பிறகு அல்லாஹுத் தஆலா மேற்சொன்ன அடியார்களைப்பார்த்து உங்களுக்குப்பயமில்லை, நீங்கள் துக்கப்படமாட்டீர்கள் என்று சொல்லி, இவர்கள் நரகத்தை விட்டு விலக்கப்பட்டு, ஸுவர்க்கத்தில் தரிபட்டவர்கள் என்று எழுதின நன்மைக்கடிதத்தை அவர்கள் வலது கையிற் கொடுத்து, ரத்தினகிரீட முதலான ஆபரணங்களும், பட்டாடைகளும், அணியச் செய்து அனுப்புவான். அவர்கள் வரும்போது மனிதர்கள் பார்த்து இவர்கள் யார்? நபிமார்களா? என்று ஆச்சரியப்பட்டு வழி விலகி நிற்பார்கள். இவர்கள் தாம் ஸாலிஹான இலகு விசாரணைக்காரர்கள்.

இன்னுஞ் சிலரை ஒருவரொருவராகத் தன் சமுகத்தில் அழைத்து, கையில் பட்டோலைபிடித்து நிற்கவைத்து நீ தீங்கான அநேக கருமங்களை நான் அறியச்செய்தாய். அதைப்பற்றி எனக்காக நீ அப்போது வெட்கப்படவில்லை, நீ செய்த அந்தக்கருமங்களை நான் பார்த்திருந்ததைப் பிரமாதமாக நினையாமல், மனிதர்கள் பார்த்திருப்பதை பிரமாதமாக நினைத்து, அவர்களுக்கு மறைத்து நடத்தினாய். அவர்களைப்பார்க்கிலும் நான் எளிதானவனா? உனக்கு நான் அநேக நிஃமத்துகளைக் கொடுக்கவில்லையா? இனியொருக்கால் நீ என்னிடம் வரமாட்டாயா? என்றும, உன்னையும, உன் செய்கையையும், நான் பார்த்துக்கொண்டிருக்கவில்லையென்றும் நினைத்திருந்தாயோ, இவ்விதம என் விஷயத்தில் மருண்டுபோக உன்னை என்ன பண்ணிற்று. ஆகாத கருமங்களை உன இரண்டு கண்களால் நீ பார்த்துக் கொண்டிருக்கும்போது, அதை நான் பார்த்திருக்க வில்லையா, அவ்விதக் கருமங்களில் கேட்

க்கூடாத கேள்விகளை உன் காதுகளாற்கேட்கும்போது அதையும், இவ்விதமே நீ உன்னுடைய ஒவ்வொரு உறுப்பினாலும் செய்த ஒவ்வொரு ஆகாத கருமத்தையும் நீ செய்யுந்தோறும் அதையும் நான் அறிந்திருக்கவில்லையா? ஏ ஆதமுடைய மகனே, உன்னிடம் வந்த றசூல்மார்களுக்கு நீ என்ன சொன்னாய், அப்போது என்ன கருமங்களைச்செய்தாய் என்று கேட்டு முடித்து பிறகு பட்டோலையைப் படிக்கச்சொல்லி, அதிலுள்ள ஒவ்வொரு கருமத்தைப்பற்றியுங் கேட்பான், அவ்விதங்கேட்டுக் கடைசியில் ஏ அடியானே, நீ இப்போது உன் பட்டோலையில் படித்ததெல்லாம் நீ செய்தவைதானே, என்று கேட்பான். இப்படிக் கேட்கும்போது கேட்கப்படும் ஒவ்வொருவரும், ஆம் நான் செய்தவைதாம் என்று ஒப்புக்கொள்வார்கள். இவ்விதம் விசாரித்து முடித்து, அல்லாஹுத் தஆலா தான் நாடினால், அடியானே துன்யாவில் நீ செய்த அந்தக் கருமங்களை மறைத்துவைத்தாய் நான் இப்போது அவற்றை மன்னிக்க வில்லை என்றும், மலக்குகளே இந்த அடியானைப் பிடித்துக் கொள்ளுங்கள், கொண்டுபோய், நரகத்தில் தள்ளுங்கள், என்றும் தீர்ப்புச் செய்வான். இவர்கள் தான் பாவிகளாகிய தீர்க்க விசாரணைக்காரர்கள்.

இன்னுஞ் சிலரை ஒவ்வொருவனாகத் தன் சமுகத்தில் பிடித்துக் கொண்டு வரச்செய்து, அவனைப்பார்த்து, உன்னைத்தலைவனாக்கி பெண்டுபிள்ளைகளைக்கொடுத்து மாடு, ஆடு, ஒட்டகம், குதிரை முதலானவைகளை வசப்படச்செய்து, நீ அதிகாரஞ் செலுத்தும்படி உன்னை உயர்த்தவில்லையா? என்று அல்லாஹுத் தஆலா கேட்பான். இக்கேள்விகளை ஒவ்வொரு அடியானும் ஆம் என்று ஒப்புக்கொள்வான். பின்னும் அவனைப் பார்த்து நீ என்னை வந்து சந்திப்பாயென்று எண்ணியிருந்தாயா? என்று கேட்பான். இக்கேள்விக்கு இல்லையென்று மறுமொழி சொல்லுவான், அப்போது அல்லாஹுத் தஆலா அவனைப்பார்த்து துன்யாவில் என்னை நீ மறந்திருந்ததுபோல், இப்போது உன்னை நான் மறந்துவிடுவேன் என்று சொல்லிவிட்டு, தான் கொடுத்த நிஃமத்துகளையும், அவன் செய்தபாவங்களையும், ஒவ்வொன்றாகக் கணக்கிட்டுச் சொல்லி, பின் ஏ கெட்டவனே! நீ எனக்கு மாறுசெய்த குற்றவாளியாய் விட்டாய் என்று சொல்லுவான். அல்லாஹுத் தஆலா இப்படிச் சொல்லவே அந்த ஒவ்வொரு அடியானும், அல்லாஹுத் தஆலாவைப்பார்த்து, ஆண்டவனே!

நீ அநியாயஞ் செய்யாதவனல்லவா. அப்படியிருக்க இப்போது என்னில் நின்று ஒரு சாக்ஷியைக்கொண்டு என் குற்றம் ருஜூப் படாதிருக்க எப்படி என்னைக் குற்றவாளியென்று தீர்க்கக்கூடும் என்று கேட்பான். அதற்கு அல்லாஹுத் தஆலா அவனைப் பார்த்து உன்னை நீயே கேட்கக்கூடியவனுயிருக்கிறுய், அல்லாமலும் உன் நன்மை, தீமைகளை எழுதின கிருமன் காத்திபீன் என்னும் மலக்குகளும் சாக்ஷியல்லவா? யென்று சொல்லுவான். அதற்கு அவன் ஆண்டவனே! மேற்படி மலக்குகள் என் மீது பொய்யையெழுதி, அதற்குத்தக்கபடி சாக்ஷியும் சொன்னுர்கள், என்று சொல்வான். உடனே அவன் வாய் முத்திரையிடப் படும். அதன்பின் அவனுடைய கைகால் முதலான உறுப்புகள் ஒவ்வொன்றையும் பேசும்படி அல்லாஹுத் தஆலா கட்டளை பண்ணுவான். அந்த உறுப்புகள் ஒவ்வொன்றும், அவன் செய்த பாவங்களைப்பற்றிச் சாக்ஷி சொல்லும். அதன் பிறகு அல்லாஹுத் தஆலா அவன் வாயில் இட்டமுத்திரையை நீக்கி மறுபடியும் அவனைப் பேசச்செய்வான். உடனே அந்த ஒவ்வொருவனும் தன் உறுப்புகளைப்பார்த்து உங்களை நம்பித்தானே இத்தனை தூரம் நான் ஆக்ஷேபனை பண்ணினேன். அப்படியிருக்க எனக்குமாருக நீங்கள் சாக்ஷி சொல்லலாமா? என்று சொல்லுவான். அப்போது அந்த உறுப்புகள் அவனைப்பார்த்து எல்லா வஸ்துகளையும் பேசுவித்த அல்லாஹுத் தஆலா எங்களையும் பேசுவித்தான். நாங்கள் பேசினேம் என்று சொல்லும். பிறகு ஏழுவித சாக்ஷிகளைக்கொண்டு அவன்செய்த குற்றங்களை ருஜூப்படுத்தப்படும். அந்த சாக்ஷிகளான :—ஒன்ருவதும், இரண்டாவதும், கிருமன் காத்திபீன் என்னும் இரண்டு மலக்குகள், மூன்ருவது அவனுடைய உறுப்புகள், நான்காவது பட்டோலை, ஐந்தாவது குற்றஞ்செய்ததானம், ஆருவது குற்றஞ்செய்த காலம், ஏழாவது அல்லாஹுத் தஆலா ஆக இந்த ஏழு சாக்ஷிகளைக்கொண்டு ஒவ்வொரு குற்றவாளியையும், குற்ற தீர்ப்புச்செய்து நரகத்திற்குக் கொண்டு போகும்படி கட்டளை பிறக்கும். அதன் பிற்பாடு இவர்கள் அல்லாஹுத் தஆலா பேரில் பொய் சொன்னவர்கள். அல்லாஹுத் தஆலாவின் முனிவு அநியாயக்காரர் மீது பலித்தது என்று பயங்கரமான சத்தமுண்டாகும். இவர்கள் தாம் காபிர்களும், முனபிக்குகளுமாகிய கடின விசாரணைக்காரர்கள்.

பிற்பாடு ஹிஸாபு என்கிறகணக்கு ஆரம்பமாம். அல்லாஹுத் தஆலா ஒவ்வொருவனையும் தன் சமுகத்தில் அழைத்து அவனவன் செய்த நன்மை தீமைகளைப் பற்றிக்கணக்குக்கேட்பான். முந்தித்தொழுகையைப் பற்றிக் கேட்கப்படும். தொழுகை ஒப்புக்கொள்ளப்பட்டால் தான் மற்ற நன்மைகள் கணக்கிட்டுப் பார்க்கப்படும். தொழுகை ஒப்புக்கொள்ளப்படா விட்டால் மற்ற நன்மைகள் வியர்த்தமாகத் தள்ளப்படும். தொழுகை கணக்கிடப்படும்பொழுது கொஞ்சம் குறைந்தால், அவன் செய்த சுன்னத்தான தொழுகையில் எடுத்துச் சேர்த்துக்கொள்ளப்படும். இவ்விதமே பறுலான நன்மைகளில் குறைவுபட்டதற்கு ஸுன்னத்தான நன்மைகளில் எடுத்து நிரப்பப்படும்.

இன்னும் ஒவ்வொருவனுக்கும், மும்மூன்று பதிவுப் புஸ்தகங்கள் கொண்டுவரப்படும். முதல் புஸ்தகத்தில் நன்மைகளும், இரண்டாம் புஸ்தகத்தில் தீமைகளும், மூன்றும் புஸ்தகத்தில் அவனுக்குள்ள நிஃமத்துகளும் பதிவு செய்யப்பட்டிருக்கும். அல்லாஹுத் தஆலா மூன்றும், புஸ்தகத்தில் உள்ள நிஃமத்துகளில் ஒரு சிறு நிஃமத்தைப்பார்த்து, நீ அவனுடைய நன்மைகளைச் சரி பண்ணிக்கொள் என்று ஏவுவான். உடனே அது தான் கணக்கிற்காக அவன் செய்த நன்மைகளை சரிப்பார்க்கும். பார்க்கும்போது அந்த நன்மைகள் தனக்குச் சரிக்கட்டாதிருந்தால் அந்த நிஃமத்து அல்லாஹுத் தஆலா இடம் இவன் செய்த நன்மைகள் எனக்குப் போதுமாயிருக்கவில்லை. பின் அவனிடம் பாவந்தான் இருக்கின்றது, வேறு நன்மையில்லை என்று முறையிடும். அப்போது அல்லாஹுத் தஆலா நாடினல், நன்மையை அதிகமாக்கி பாவத்தை நீக்குவான். அதனல் நன்மைகள் அதிகமாய் மேற்சொன்ன நிஃமத்துக்குச் சரிக்கட்டும்.

பீஸபீல்காரர் விசாரிக்கப்படும்போது, அவர்களில் சிலரை, நீங்கள் என்ன நன்மை செய்தீர்கள் என்று அல்லாஹுத் தஆலா கேட்க, அதற்கு அவர்கள் நாங்கள் உன்னுடைய பாதையில் காபிறுகளை வெட்டினேம் என்பார்கள், அல்லாஹுத் தஆலா அவர்களைப் பார்த்து உங்களைப் பாரக்கிரமஸாலிகள் என்று உலகம் மதிக்கட்டும் என்பதாக நீங்கள் வெட்டினீர்கள், அப்படியே பேரும் பெற்றீர்கள். இப்போது நீங்கள் சொல்வது பொய் என்று சொல்வான். மலக்குகளும், அப்படியே சொல்லு

வார்கள். பின்பு அவர்களை நரகத்திற்குக் கொண்டுபோகக் கட்டளை பிறக்கும்.

அடிமைப்பட்டவர்கள் விசாரிக்கப்படும்போது அவர்களில் சிலரை என்னுடைய இபாதத்தை விட்டு உங்களை என்ன விலக்கிற்று, என்று அல்லாஹுத் தஆலா கேட்க, அதற்கு அவர்கள் நீ எங்கள் இரணத்தைக் குறைத்து எஜமான்களுக்கு ஆளாக்கினாய், அதனால் நாங்கள் அந்த எஜமான்களுடைய ஊழியத்தில் பராக்காயிருந்தோம் என்று சொல்லுவார்கள். அல்லாஹுத் தஆலா நபி யூஸுபு அலைஹிஸ்ஸலாமவர்களைக்காட்டி நான் உங்களைச் செய்வது போல இவரையும் செய்தேன் உங்களைப்போல இவர் என் இபாதத்தில் பராக்கற்றிருக்க வில்லையே என்று சொல்லி விட்டு அவர்களை நரகத்திற்குக்கொண்டு போகக் கட்டளை பண்ணுவான். நோயாளிகள் விசாரிக்கப்படும்போது அவர்களில் சிலரை அல்லாஹுத் தஆலா பார்த்து என்னுடைய இபாதத்தை விட்டு உங்களை என்ன விலக்கிற்று என்று கேட்க, அதற்கு அவர்கள் நீ எங்களுக்கு நோயை உண்டாக்கினாய் அதனால் நாங்கள் இபாதத்துச் செய்ய இசையவில்லை என்று சொல்லுவார்கள். அல்லாஹுத் தஆலா நபி ஐயூபு அலைஹிஸ்ஸலாமவர்களைக் காட்டி நான் உங்களுக்கு உண்டாக்கின நோயைப் பார்க்கிலும் அதிக முசீபத்தான பலாயாகிய நோயை இவருக்கு உண்டாக்கினேன். அப்போது இவர் உங்களைப்போல இருக்கவில்லையே என்று சொல்லிவிட்டு அவர்களை நரகத்திற்கு கொண்டு போகக் கட்டளை பண்ணுவான்.

பிறகு இராஜாக்கள் விசாரிக்கப்படுவார்கள். அப்போது அவர்களில் சிலரை அல்லாஹுத் தஆலா பார்த்து என்னுடைய இபாதத்தை விட்டு உங்களை என்ன விலக்கிற்று? என்று கேட்க, அதற்கு அவர்கள் நீ கொடுதத இராஜாங்கத் தொல்லை எங்களை ஒழித்திருக்கவிடவில்லை. அதனால் உன் இபாதத்துக்கு நேரமற்றிருந்தோம், என்று சொல்லுவார்கள். உடனே அல்லாஹுத் தஆலா நபி ஸுலைமான் அஹிஸ்ஸலாமவர்களைக் காட்டி உங்களுக்கு கொடுத்த ராஜரீகத்தைப்பார்க்கிலும் அதிகப் பெரிதாக இவருக்குக் கொடுத்தேன். அப்போது இவர் என் இபாதத்தை விடவில்லையே என்று சொல்லி விட்டு அவர்களை நரகத்திற்குக் கொண்டு போகக்கட்டளை பண்ணுவான். பணத்தொல்லையால் இபாதத்துச் செய்யாதவர்களும், இப்படியே விசாரிக்கப்பட்டுத் தீர்ப்புப்பெறுவார்கள்.

இந்த விசாரணையில் செய்திருந்த நன்மைகளை ஏற்றுக் கொள்ளுவது முண்டு. மேற்சொன்னபடி தள்ளும்படி செய்வது முண்டு. இவ்வித விசாரணை முடிந்த பின்பு நன்மை தீமைகளை நிறுத்துப் பார்க்கும்படி அல்லாஹுத் தஆலாவின் கட்டளை பிறக்கும்.

ஹிஸாபு முடிந்தது.

---

## 7-ம் பஸல்.

## மீஸான்.

மீஸான் என்பது தராஸு. அதில்தான் நன்மை தீமைகள் நிறுக்கப்படும். அந்தத் தராஸு இரண்டு ஸ்தம்பங்களையும், இரண்டு தட்டுகளையும், ஒரு முனை முள்ளையுமுடைய தாயிருக்கும். இரண்டு ஸ்தம்பங்களுக்கும் இடைவெளி மக்ரிபு மஷ்ரிகுகளின் இடைவெளியாம். தட்டொன்றில் ஏழு பூமிகளையும் ஏழுவானங்களையும் தூக்கி வைக்கலாம். ஒரு தட்டு ஒளியினலும் மற்றொரு தட்டு இருளினலும் உண்டாயிருக்கும். ஒளியிலான தட்டில் நன்மையும் இருளான தட்டில் தீமையும் நிறுத்தப்படும். நன்மை தட்டுச் ஸுவர்க்கத்திற்கு முன்னும் தீமை தட்டு நரகத்திற்கு முன்னுமாகத் தொங்கும். அந்த ஒரே தராஸில் தான் எல்லாருடைய நன்மை தீமைகளும் நிறுக்கப்படும். அதை ஜிபுறயீல் அலைஹிஸ்ஸலாமவர்கள் ஸ்தம்பக்கால்களுடன் பிடித்துத் தூக்கிக் கொண்டு அருஸுக்கு எதிர் முகமாய் முனைமுள்ளைப் பார்த்த வண்ணமாய் நிற்பார்கள். நன்மை தீமைகள் நிறுக்கப்படும்போது நிறைகணக்குப் பார்த்துச்சொல்ல மீக்காயீல் அலைஹிஸ்ஸலாமவர்கள் நியமிக்கப்பட்டிருப்பார்கள். நிற்கும்போது நன்மைதட்டு கணக்குமானல் அது கீழே தாழ்ந்து முன் சொல்லப்பட்டிருக்கிற "இல்லீன்" என்னும் தானத்தில் உயரும். தீமைதட்டு லேசானல் அது மேலே உயர்ந்து "ஸிஜ்ஜீன்" என்னும் தானத்தில் தாழும். இனி, காபிருடைய நிறையில் நன்மை தட்டில் ஒன்றும் இல்லாமையால் தீமைதட்டு தாழ்ந்தேபோம்.

அவரவருடைய நன்மை, தீமைகளடங்கிய பட்டோலைகளை தாரஸில் வைத்து நிறுக்கப்படும். அப்படி நிறுக்கப்படும பட்டோலைக்காரர்கள் மூன்று வகைபடுவார்கள். முதலாவது தீமையே யில்லாத பட்டோலையை யுடையவர்கள்: இரண்டாவது நன்மையே

இல்லாத பட்டோலையை யுடையவர்கள்: இவ்விருவகையில் தீமை யில்லாதவர்களை சுவர்க்கம் போகவும், நன்மை யில்லாதவர்களை நரகத்திற்குப் போகவும் அப்போதே கட்டளைபிறக்கும், மூன்ரு வது நன்மையுந் தீமையுமுள்ள பட்டோலையை நிறுத்துப்பார்த்து, அவரவர்களின் நன்மை அதிகமென்றும் தெரிவிக்கப்படும்.

அவரவர்களின் நன்மை, தீமைகளை நிறுக்கும்படி அல்லாஹுத் தஆலாவின் கட்டளை பிறந்தபோது உடனே அவரவர் பட்டோலை கள் தாளுக உயரப் பறந்து தராசின் தட்டிற்போய் விடும். பட் டோலை பறந்தபோது ஒவ்வொருவரும் தம் பட்டோலை தராசின் வலது தட்டிற் விழுகிறதா இடது தட்டில் விழுகிறதா என்று தரா சின் முனை முள்ளு வலது புறத்தில் முனைக்கிறதா இடது புறத்தில் முனைக்கிறதா என்றும் மனக் கலக்கத்துடன் பார்த்து நிற்பார்கள், அந்த வேளையில் அவர்களுக்கு உண்டாயிருக்கும் அச்சம் இவ்வள வென்று சொல்லமுடியாது. நன்மையை ஒரு தட்டிலும், தீமையை ஒரு தட்டிலுமாக வைத்து நிறுப்பார்கள். ஒவ்வொருவரையும் அவரவர் நன்மை தீமைகளை நிறுத்தும்போது தராசில் இரண்டு ஸ்தலம்பக்கால்களுக்கும் நடுவிற்கொண்டுபோய் நிருத்தி, ஒருமலக் கின் வசம் காட்டுவார்கள். நிறுக்கும்போது யாருடைய நன்மைத் தட்டு கனத்ததோ, அவனுடைய பெயரைச்சொல்லி இன்னான் சீதேவியாகிவிட்டான், அவன் இனி யொருக்காலும் மூதேவியாக மாட்டான் என்றும், யாருடைய தீமை, தட்டுக்கனத்ததோ, அவ னுடைய பெயரைச்சொல்லி இன்னான் மூதேவியாகிவிட்டான், அவன் இனி யொருக்காலும் சீதேவியாகமாட்டான்; என்றும் ஜிபுறயீல் அலைஹிஸ்ஸலா மவர்கள் சத்தமிட்டுச் சொல்லிக் கொண்டிருப்பார்கள். அப்போதே நன்மை தட்டுக்கனத்தவர்கள் சுவர்க்கத்திற்குக் கொண்டு போவதற்காக றஹ்மத்துடைய மலக்குகள் வசமும், தீமை தட்டுகனத்தவர்கள் நரகத்திற்குக் கொண்டுபோவதற்காக ஜபானியார்கள் வசமும் ஒப்பிக்கப்படுவார் கள்.

சிலரில் ஒவ்வொருவருக்குத் தொண்ணூற்றென்பது பட் டோலைக் கட்டுகளைகொணர்ந்து, அவர்களுக்கு விரித்துக் காட்டு வார்கள். ஒவ்வொரு கட்டும் பார்வை யெட்டுந்தூர நீளமுள்ளதாயி ருக்கும். அந்த கட்டுகள் முழுவதும் தீமை யெழுதப்பட்டதாயி ருக்கும். பிறகு ஒரு துண்டுகடிதம் கொண்டு வருவார்கள். அதில் ஷஹாதத்துக் கலிமா மாத்திரம் எழுதப்பட்டிருக்கும். மேற்

சொன்ன தீமைகளெழுதிய தொண்ணூற்றொன்பது பட்டோலைக் கட்டுகளை ஒரு தட்டிலும், இந்தத் துண்டு கடிதத்தை ஒரு தட்டிலு மாகவைத்து நிறுப்பார்கள். நிறுத்தபோது மேற்படித்துண்டுக் கடிதத்தட்டுக் கணக்கும் இன்னும் முஃமீனுனவர்களில் சிலரு டைய நன்மை தட்டும் லேசாவதுமுண்டு.

அப்படி லேசானவுடன் நபி முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்கள் ஒரு இறையத்தனை கடிதத்துண்டை அந்தத் தட்டில் எறிவார்கள். அப்போது அந்தத் தட்டுக் கனத் துப்போம். கனத்தவுடன் அந்த ஒவ்வொரு வரும் தமக்கு உதவி செய்த நபி முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்களை இன்னாரென்று அறியாமல் நீங்கள் யார் உங்கள் முகலக்ஷணமும், குணலக்ஷணமும் எவ்வளவு மகிமையுள்ளது உங்கள் பாதங்களுக்கு என் பிதாமாதாக்கள் குறுபானு யிருப்பார்கள் என்று சொல்வார் கள். அப்போது நபி முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹி வஸல்ல மவர்கள் அவ்வொவ்வருவரையும் பார்த்து, நான் உன்னுடைய நபி முஹம்மது. இப்போது நான் உன்னுடைய தட்டில் எறிந்தது நீ என்பேரில் ஓதின ஸலவாத்து. அதை இந்தத் தருணத்தில் உனக்குப் பிரதி செய்துவிட்டேன் என்று சொல்லுவார்கள்.

இன்னும் தொழுகை, நோன்பு, ஸக்காத்து, ஹஜ்ஜு பீஸபீல் செய்தது முதலானதுகளையும், நிறுத்துப் பார்த்து அதற்குத் தக்க கூலியை அவரவர்களுக்குத் தெரிவிப்பார்கள்.

இனி நன்மை தீமைகள் நிறுக்கப்படும்போது சிலருக்கு இரண் டும் சமமாயிருக்கும் அப்போது அவர்கள் தம் தம் நன்மை தட்டுக் கனப்பதற்காக ஓரேயொரு நன்மை யில்லாமல் தயங்கு வார்கள். அல்லாஹுத் தஆலா அந்த ஒவ்வொருவரையும் பார்த்து ஜனங்களிடத்திறப்பாய ஒரு நன்மையைக் கேட்டு வாங்கு, அதைக் கொண்டு நான் உன்னைச் சுவர்க்கம் புகுத்து கிறேனென்று சொல் லுவான். உடனே அவர்கள் ஒவ்வொருவரிடத்திலும் போய்க் கேட்பார்கள். அப்போது எல்லோரும் ஒரு சிறு நன்மையானு லும் அது எங்களுக்கு வேண்டியது. ஆகையால தாமாட்டோ மென்று சொல்லி விடுவார்கள். பின்பு ஒருவன் கேட்பவர்களைப் பார்த்து என் பட்டோலையில் நான் செய்ததாக ஓரே நன்மை யுண்டு. அதைக்கொண்டு நான் என்ன பெறப்போகிறேன். ஆகை யால் அதை உனக்கு ஹதியாவாகக் கொடுத்து விட்டேன், எடுத் துக்கொள்ளென்று சொல்லிக் கொடுத்து விடுவான், உடனே

அதைப் பெற்றுக்கொண்டு திரும்பினபோது அல்லாஹுத் தஆலா அதைப்பற்றி விசாரித்துக்கொண்டு, ஹதியாக் கொடுத்தவனை யழைத்து என்னுடைய கொடை உன்னுடைய கொடையைப் பார்க்கிலும் மகாபெரியது. நீயும் உன்னிடம் ஒரு நன்மை ஹதியா வாங்கினவனும் சுவர்க்கம் புகுதுங்களென்று கட்டளைப் பண்ணு வான்.

நன்மை தீமை இரண்டும் சரிநிறையாயுள்ளவர்களைச் சுவர்க் கத்திற்கு அனுப்பாமலும், நரகத்திற்கு அனுப்பாமலும், அஃறாபு யென்னும் தானத்தில் நிறுத்திவைக்கும்படி கட்டளை பிறக் கும். அஃறாபென்பது சுவர்க்கத்திற்கும் நரகத்திற்கும் மத்தி யிலுள்ள ஒரு மதில் சுவர். அதில் இருப்பவர்களுக்கு சுவர்க்கமும் தெரியும், நரகமும் தெரியும். அதிலிருப்பவர்களைச் சுவர்க்கம் புகு தப் பிந்திக் கட்டளை பிறக்கும். அவர்கள் சுவர்க்கம் புகுதமுன் நஹறுல் ஹயாத்தென்னும் ஜீவநதியில் முழுக்காட்டிப் பின் ஸுவர்க்கம் புகுதுவார்கள். அவர்கள் அஃறாபுகாரர்கள் என் பதற்கு அடையாளமாக ஒவ்வொருவர் கழுத்துகளிலும், வெண் ணிற மச்சம் ஒன்று உண்டாயிருக்கும். அவர்கள் சுவர்க்க வாசிகளில் எளியோரென்று சொல்லப்படுவார்கள்.

மீஸான் முடிந்தது.

---

8-ம் பஸல்.

## தஜல்லி.

தஜல்லி என்பது தோற்றம். அது அல்லாஹுத் தஆலா தன் அடியார்களுக்குத் தோற்றமாகுதல்,

நன்மை தீமைகள் நிறுத்துத் தீர்ந்த பிற்பாடு அல்லாஹுத் தஆலா நபி ஆதம் அலைஹிஸ்ஸலாமவர்களை அழைத்து ஆதமே! நரகத்திற்கு அனுப்பவேண்டியவர்களை அனுப்புமென்று கட்டளை பண்ணுவான். அப்போது அவர்கள், ஆண்டவனே! எவ்வளவு பேரை நரகத்திற்கு அனுப்ப வேண்டுமென்று கேட்பார்கள். அதற்கு ஆயிரத்திற்குத் தொளாயிரத்துத் தொண்ணூற்றொன்பது பேர் விழுக்காடு அனுப்புமென்று அல்லாஹுத் தஆலா உத்திரவு செய்தபின் குற்றவாளிகளெல்லாரும், குற்றமற்றவர்களுடன் சேர்ந்திராமல் பிரிந்துபோங்களென்று ஒரு சப்தம் பிறக்கும். இந்தச் சப்தம் பிறந்த பின் நபி ஆதம் அலைஹிஸ்ஸலாமவர்

களுக்கு நீர்போய் குற்றவாளிகளெல்லோரையும் பிரித்துப் போடுமென்று கட்டளைப் பிறக்கும். அப்படியே அவர்கள் போய் ஒவ்வொரு குற்றவாளிகளையும் பிரித்து நரகத்திற்கு அனுப்புவார்கள். நரகத்திற்கு அனுப்பப்படுபவர்கள் ஏழு கூட்டமாவார்கள். முதலாவது கூட்டம் அல்லாஹுத் தஆலாவை அறிந்திருந்தும், மனமுரண்டான பிடிவாதத்தினால் ஈமான் கொள்ளாத காபிர்கள், இரண்டாவது கூட்டம் மூடத்தனத்தினால் ஈமான் கொள்ளாத காபிர்கள் இந்த இரண்டு கூட்டத்தாரையும் குருவிகள் தானியத்தைக் கொத்தி யெடுத்துக் கொள்வதுபோல நரகம் தானாகக் கொத்தி யெடுத்துக்கொள்ளும். மூன்றாவது கூட்டம் அல்லாஹுத் தஆலாவுக்கு இணைவைத்த காபிர்கள். அவர்கள் தங்கள் வணங்கின வஸ்துவைப பின்பற்றச் செய்து நரகத்தில் தள்ளப்படுவார்கள் நாலாவது கூட்டம் றஸூல்மார்களை ஒப்புக்கொள்ளாதவர்களும், அல்லாஹுத் தஆலாவின் வலித்துகளை அறியாதவர்களுமான காபிர்கள் ஐந்தாவது கூட்டம் யஹூதிகள் ஆறாவது கூட்டம் நஸாராக்கள். இந்த இரண்டு கூட்டத்தாரும் கடுந்தாகமுள்ளவர்களாய் வருவார்கள். அப்போது அவர்களை உங்களுக்கு என்னவேண்டும் என்று கேட்கப்படும. அதற்கு அவாகள் நாங்கள் தண்ணீர்த் தாகங்கொண்டிருக்கிறோம். அதைத் தீர்க்க வேண்டுமென்று சொல்லுவார்கள. உடனே அவர்கட்கு அதோ பாருங்களென்று நரகத்தைக் காட்டவே அவர்கட்கு நரகம் கானலானது தண்ணீராய்த் தோற்றுவது போலத் தோற்றும. உடனே அதன மீது வேட்கையாய விரைந்து போவார்கள். ஏழாவது கூட்டம முனாபிக்குகள். இவர்கள் மூஃமினானவர்களுடன் கலந்து நிற்பாாகள. நின்றும இதன கீழ்ச சொல்லுகிற சோதனையைக் கண்டு பிரிந்து நரகத்திற்கு அனுப்பப்படுவார்கள.

மேற்சொன்ன ஏழுவகைக் கூட்டத்தாரையும் நரகத்திற்கு அனுப்பப்படும போதே ஒவ்வொரு கூட்டத்தாரும் நீங்கள் துன்யாவில் வணங்கின வஸ்துகளைத் தொடர்ந்து கொள்ளுங்கள் என்று ஓர் பெரிய சப்தமாக எல்லார் காதிலும கேட்க சப்தம உண்டாகும.

இந்தச் சப்தம் பிறந்தவுடன் துன்யாவில் சிலுவையை வணங்கினவர்களுக்குச சிலுவையும, உருவத்தை வணங்கினவர்களுக்கு உருவமும, விக்கிரகத்தை வணங்கினவர்களுக்கு விக்கிரகமும, சூரியனை வணங்கினவர்களுக்குச் சூரியனும, சந்திரனை வணங்கின

வர்களுக்குச் சந்திரனும், நக்ஷத்திரத்தை வணங்கினவர்களுக்கு நக்ஷத்திரமும், நெருப்பை வணங்கினவர்களுக்கு நெருப்புமாய் அவரவர் வணங்கினது அவரவர் முன் உருவெடுத்து வந்து நிற்பதுமன்றி, ஹலறத்து நபி ஈஸா அலைஹிஸ்ஸலாமவர்களைத் தேவனென்றும், தேவகுமாரனென்றும் வணங்கின கிறிஸ்தவர்களான நஸாறுக்களுக்கு முன்னால் ஈஸா அலைஹிஸ்ஸலாமவர்களுடைய உருவத்தில் ஒரு ஷைத்தான் வந்து நிற்பான். உடனே அவர்களெல்லாரும் தாம் தாம் வணங்கின வஸ்துக்களையும், நஸாறுக்கள் மேற்படி ஷைத்தான்களையும், பின் பற்றிக்கொண்டு நரகத்திற்போய் விழுவார்கள்.

இவ்விதம் காபிர்களனைவரும் நரகம் போய்ச் சேர்ந்த பின் மூஃமீன்களும், அவர்களுடன் கலந்து நிற்கும் முனாபிகுகளும் மீந்திருப்பார்கள். அப்போது அல்லாஹுத் தஆலா அவர்களைப் பார்த்து நீங்களும் நீங்கள் வணங்கின வஸ்துவை தொடர்ந்து கொள்ளுங்கள் என்று ஏவுவான். அதற்கு நாங்கள் அல்லாஹுத் தஆலாவைத் தவிர வேறொன்றையும் வணங்கவில்லை என்று சொல்லுவார்கள். அப்போது அல்லாஹுத் தஆலா நீங்கள் உங்கள் ஆண்டவனாகிய அல்லாவை அறிவீர்களா? என்று அவர்களைக் கேட்பான். இக்கேள்விக்கு அவர்கள் ஆம் அறிவோம் என்று பதில் சொல்லுவார்கள். உடனே அல்லாஹுத தஆலா தன்னை அவர்கள் தரிசிக்கும்படி தஜல்லியாவான். ஆனவுடன மூஃமீன்களனைவரும் அல்லாஹுத தஆலாவை அறிந்து கொண்டு ஸுஜூதில் விழுவார்கள். முனாபிகுகளோ ஸுஜூதில் விழாமல் மல்லாந்து விழுவார்கள். அப்போது மேற்படி முனாபிகுகளும், வேறாகப் பிரித்து மேற்சொன்ன காபிர்களுடன் நரகத்தில தள்ளப்படுவார்கள்.

தஜல்லி முடிந்தது.

---

9-ம் பஸல்.

## ஸிறாத்து.

ஸிறாத்து என்பது பாலம். மௌகிபுக்கும், ஸுவர்க்கத்திற்கும் இடையில நரகத்தின் மீது போடப்பட்டிருக்கும். அது வாளைப்பார்க்கிலும் அதிகக் கூர்மையுள்ளதாய், மயிரைப்பார்க்கிலும் அதிக மெல்லியமுள்ளதாய் ஐம்பதினாயிர வருஷப் பிரயா

ணத் தூரமுடையதா யிருக்கும். ஐம்பதினாயிர வருஷப்பிரயாணத் தூரத்தில் முப்பதினாயிர வருஷப் பிரயாணத்தூரம் செங்குத்தான ஏற்றமும், பதினாயிர வருஷப் பிரயாணத்தூரம் செங்குத்தான இறக்கமும், பதினாயிர வருஷப் பிரயாணத் தூரம் சமமுமாயிருக்கும். சறுக்குதலும், வழுக்குதலுமே அதன் குணம். அதில் எங்கே பார்த்தாலும் நீண்டதும், வளைந்ததும் கவர்களுள்ளதுமான பலவித முள்ளுகள் முளைத்து அடர்ந்திருக்கும். அந்தப்பாலம் முழுதும் இருளமயமாகவே யிருக்கும்.

இன்னும் அந்தப் பாலம் ஓரே ஸிராத்தா யிருந்தும், ஏழு *ஐஸறுகளும், அநேக †அகபாக்களுமுள்ளதாயு மிருக்கும். ஸிருத்து என்னும் பெரும் பாலம் நரகத்தின் மீது போடப்பட்டிருப்பதால் ஹஷருடைய மைதானத்திலிருந்து அந்த ஸிருத்துக்குப் போவதற்காகப் பூமிக்கும், ஸிருத்திற்கும் இடையில் மேற்சொன்ன ஐஸறுகள் போடப்பட்டிருக்கும். அந்த ஐஸறுகளும் நரகத்தின் மீது இருப்பதால் அவற்றின் கீழுள்ள நரகத்து மலைகள் அநேகம் அந்த ஐஸறுகளுக்கு மேலே வளர்ந்து உயர்ந்திருக்கும். இந்த ஐஸறுகளாகிய சிறு பாலங்களையும், அகபாக்களாகிய மலைமேற் பாதைகளையும் கடந்து தான் மேற்படி ஸிருத்திற்குப் போக வேண்டும். ஆகவே இவையெல்லாம் ஒன்றாய்ச் சேர்ந்து தான் ஸிருத்து என்று சொல்லப்படும். அந்தப் பாலத்து நான்கு புறமும் நரகத்து நெருப்புக்கு கொழுந்து விட்டுத் தாவிச் சூழ்ந்து கொண்டிருக்கும்.

இந்த ஸிருத்தில் நடக்கிற ஒவ்வொருவரையும், மேற்சொன்ன ஐஸறுகளாகிய சிறு பாலங்கள் ஏழிலும் முற்பாலத்தில் ஈமானைப்பற்றியும், இரண்டாம் பாலத்தில் தொழுகையைப் பற்றியும், மூன்றாம் பாலத்தில் ஸக்காத்தைப்பற்றியும், நான்காம் பாலத்தில் நோன்பைப்பற்றியும், ஐந்தாம் பாலத்தில் ஹஜ்ஜு உம்றாவைப்பற்றியும், ஆறாம் பாலத்தில் ஒழு முழுக்குகளைப் பற்றியும், செய்வதையும் பந்துக்களுடன் உறவாடுவதையும் ஒருவருக்கொருவர் செய்த அநியாயங்களைப் பற்றியும், மலக்குகள் விசாரிப்பார்கள். விசாரிக்கும் போது அவரவர் தக்க ஜவாபு சொல்லாமல் குற்றங்கண்டு பிடிக்கப்பட்டால் அங்கங்கே தடுக்கப்பட்டுப் போவார்கள்.

---

* ஐஸறு-சிறு பாலம்.

† அகபா-மலைமேற் பாதை.

இந்த பாலத்தில் ஏறிக்கடப்பதற்காக முந்தினவர் முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்களுடைய உம்மத்துகள் அழைக்கப்படுவார்கள். உடனே நபி நாயகமவர்கள் தங்கள் உம்மத்தை முந்தியழைத்து கொண்டு போய்ப் பாலத்தில் விடுவார்கள். பிறகு நபி ஈஸா அலைஹிஸ்ஸலா மவர்களுடைய உம்மத்தும், பிறகு நபி மூஸா அலைஹிஸ்ஸலா மவர்களுடைய உம்மத்தும், பின்பு மற்ற நபிமார்களுடைய உம்மத்துகளும், கடைசியில் நபி நூஹு அலைஹிஸ்ஸலா மவர்களுடைய உம்மத்துமாக வந்து சேர்ந்து முறைப்படி பாலத்தில் ஏறி நடப்பார்கள். ஒவ்வொரு உம்மத்தையும் பாலத்தைக் கடந்த அந்தந்த நபியே அழைத்து வருவார்கள். அப்போது பாலத்து முன் தலைப்பில் ஜிபுறயீல் அலைஹிஸ்ஸலா மவர்களும், நடுவில் மீக்காயீல் அலைஹிஸ்ஸலா மவர்களும் நிற்பார்கள். பாலத்து வாசலில் மாலிக்கு அலைஹிஸ்ஸலாமவர்கள் இருப்பார்கள். பின்பு எல்லாரையும் பாலம் ஏறிக் கடக்கும்படி கட்டளை பிறக்கும். உடனே எல்லாரும் பாலம் கடக்க ஆரம்பிப்பார்கள்.

பாலத்து வாசலிலிருக்கும் மாலிக்கு அலைஹிஸ்ஸலா மவர்கள் நபி நாயகமவர்களைப் பார்த்து முஹம்மதே! தங்களுடைய உம்மத்தில் அல்லாஹுத் தஆலாவுடைய உத்திரவு யார் யாருக்குண்டோ அவர்கள் இந்த பாலத்தைக் கடப்பார்கள். மற்றவர்கள் கால் சருகி நரகத்தில் விழுவார்களாகையால் உம்மத்தில் பாவச்சுமையில்லாத எல்லாரையும் பாலத்தை கடக்கச் சொல்லுங்கள். பாவசுமை சுமந்தவர்களை இப்படியே நரகத்தில் இறங்கிவிடச் சொல்லுங்களென்று சொல்லுவார்கள். அப்போது நபி நாயகமவர்கள் மாலிக்கு அலைஹிஸ்ஸலா மவர்களைப் பார்த்து மாலிக்கே! உம்முடைய முகத்தை என் உம்மத்துப் பார்த்தால் அவர்கள் மனங்கலங்கி கால்கள் நடுங்கும். ஆகையால் அல்லாவினுடைய உமது முகத்தைத் திரும்பிக்கொள்ளும என்று சொல்லுவார்கள். உடனே மாலிக்கு அலைஹிஸ்ஸலாமவர்கள் முஹம்மதே! தாங்கள் இல்லாவிட்டால் தங்கள் உம்மத்து முன்னமே நரகம் போய்ச் சேர்ந்திருப்பார்கள் என்று சொல்லிவிட்டு முகத்தை திருப்பிக் கொள்வார்கள்.

பாலத்தில் ஏறி நடக்க ஆரம்பிக்கும்போது நபி முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்களுடைய உம்மத்து பத்து கூட்டமாகப் பிரிவார்கள். எல்லாக் கூட்டத்திற்கு முன் நபி நாயக

மவர்கள் நின்றுகொண்டு தங்கள் உம்மத்தைத் திரும்பிப் பார்த்து என்னுடைய உம்மத்தே! என்னை நீங்கள் தொடர்ந்து கொண்டு என் பின்னாலே வாருங்கள் என்று சொல்லிவிட்டு முந்தி நடப்பார்கள். அவர்களைத் தொடர்ந்துகொண்டு உம்மத்து நடப்பார்கள். நபி நாயகமவர்களுடைய உம்மத்து அனைவரும் பாலத்தின் மீது ஏறிவிட்டால் ஜிபுறயீல் அலைஹிஸ்ஸலாமவர்கள் அவர்கள் எல்லாருக்கும் பின்னால் ஆண்டவனே, இவர்களை ஸலாமத் தாக்கிவை என்று சொல்லிக்கொண்டு போவார்கள். இது ஆரம்பமானவுடன், ஏ மஹஷறில் கூடின கூட்டங்களே! என்னுடைய ஹபீபு முஹம்மதுடைய மகள் பாத்திமதுஸ் ஸஹறா பாலங்கடக்கப் போகிறபடியால் நீங்கள் எல்லாரும் உங்கள் பார்வைகளைத் தாழ்த்தித் தலைகுனிந்து கொள்ளுங்கள் என்று அறுஷுக்குள்ளிருந்து ஒரு சப்தம் பிறக்கும். அன்றியும் காவல் என்கிற அமானையும், இருவை என்கிற உம்மத்தையும், பாலத்தில் வலது புறத்திலும், இடது புறத்திலும் அல்லாஹுத் தஆலா அனுப்பி நிறுத்துவான். பிறகு பாத்திமா றலியல்லாஹு அன்ஹா அவர்கள் எழுபதினாயிரம் ஹூறுல் லீன்களுடன் முன்சொன்ன பத்து கூட்டத்தாரிடத்தில் முதற் கூட்டத்தார் பின் தொடர மேற்படி ஜஸறுகளிலும் அகபாக்களிலும் யாதொருதடையும் இல்லாமல் மின்வெட்டினார் போல வெகுவிரைவாய்ப் பாலத்தைக் கடந்திடுவார்கள். அந்த முதல் கூட்டத்தில் தான் ஸாலிஹான பெண்கள் இருப்பார்கள். இரண்டாங் கூட்டத்தார் காற்றின் வேகமாய்ப் பாலத்தைக் கடப்பார்கள். மூன்றாவது கூட்டத்தார் தேசிக்குதிரையின் வேகமாய் கடப்பார்கள். நான்காம் கூட்டத்தார் ஒட்டகையின் ஓட்டத்தின் வேகமாய் கடப்பார்கள். ஐந்தாம் கூட்டத்தார் விரைந்தோடிக் கடப்பார்கள். ஆறாங்கூட்டத்தார் சாதாரண நடையாய் நடந்து போவார்கள். ஏழாங் கூட்டத்தார் மெள்ள மெள்ள நடப்பதும், அப்படி நடக்கவும் ஏலாமல் இடைக்கிடை நிற்பதும், உட்காருவதும், அதுவும் ஆற்றாமல் இளைத்துத் தோய்ந்து போவதுமாய்ப் போவார்கள். எட்டாங் கூட்டத்தார் சிலர் நாற்கால் பாச்சலாயும், சிலர் நெஞ்சால் தாழ்வதாயும், சிலர் பாலத்துக் கொளுக்கு முட்களால் கொளுவப்படுவதுமாய் சிலர் ஒருநாட் பிரயாணத்தூரமும், இருநாட் பிரயாணத்தூரமும் சிலர் ஒருமாசப் பிரயாணத்தூரமும், சிலர் இருமாசப் பிரயாணத்தூரமும், சிலர் ஒருவருஷப் பிரயாணத் தூரமும் சிலர் இருவருஷப் பிரயாண தூரமுமாய் உயர்ந்த பக்ஷம் இருபத்தைந்து வருஷப் பிர

யாணந்தூரம் வரையும் நடப்பார்கள். அவர்கள் இவ்விதம் போகும்போது "யாமுஹம்மது" "யாமுஹம்மது" என்று அலறுவார்கள். அப்போது மலக்குகள், ஆண்டவனே! இவர்களை ஸலாமத்தாக்கு, ஸலாமத்தாக்கு என்று சொல்வார்கள். ஒன் பதாம் கூட்டத்தாரும் பத்தாம் கூட்டத்தாரும் பாலத்தின் மூன் றின ஜஹறிலுள்ள முதல்ராம் அகபாவாகிய * மிறுஸாது என்கிற தானத்திலேயே தடைபட்டுப் போவார்கள்.

தங்கள் உம்மத்துப் பாலத்தில் நடக்கும்போது அவர்களில் யாரை அங்குள்ள கொளுக்கு முட்கள் கொளுவி இழுக்கக்கண்டார் களோ உடனே நபிநாயகமவர்கள் வந்து விலக்கி எடுத்து விடுவார் கள்.

பிறகு முன் மிறுஸாதில் தடைப்பட்ட ஒன்பதாவது, பத்தா வதாகிய இரண்டு கூட்டத்தாரையும்பற்றி இவர்கள் காரியம் எப் படியென்று அல்லாஹுதஆலாவிடம் மாலிக்கு அலைஹிஸ்ஸ லாமவர்கள் கேட்பார்கள். அதற்கு அல்லாஹுதஆலா என் ஹபீபு முஹம்மதும் அவரைத் தொடர்ந்துபோகிற ஸாலிஹான வர்களும், ஸுவர்க்கம் புகுதும்வரையும், அவர்களை கியாமத்து ஓடையில் மறைத்துவையும் என்று கட்டளை பண்ணுவான். அவ் விதமே அந்த ஓடையில் ஒளித்து வைக்கப்பட்டிருப்பார்கள்.

பிறகு நபி நாயகமவர்கள் பாலத்தைப்பார்த்து தங்கள் உம் மத்தில் பாலங்கடந்தவர்கள் போக மீந்தவர்களில் ஒருவனையும் காணாமல் அவர்களிருந்தால் இனிஸுவர்கத்தில் காணலாமென்று நினைத்து பாலத்தைக் கடந்திடுவார்கள். அதன் பிற்பாடு முன் சொன்னபடி நபி ஈஸா அலைஹிஸ்ஸலாமவர்களும், அவர்கள் உம் மத்தும் முதலான எல்லா நபிமார்களும், தங்கள் தங்கள் உம்மத் தத்துடன் ஒருவர் பின் ஒருவராக முறையே பாலத்தை கடப் பார்கள்.

ஸிறுத்து முடிந்தது.

---

10-ம் பஸல்.

ஹெளலு.

ஹெளலு என்பது தண்ணீர்த்தடாகம். அதுமேற் சொன்ன பாலத்தற்கு அப்புறமுள்ள அகன்ற மைதானில் இருக்கும். அதை

* மிறுஸாது-வழிபார்த்திருக்குந்தானம்.

அல்லாஹுத் தஆலா நபி முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்களுக்குச் சொந்தமாகக் கொடுத்திருக்கிறான். அதன் பிரமாணம் ஒரு மாதத்தூரச் சதுரவளவுள்ளது. அதிலுள்ள நீர், பாலைப்பார்க்கிலும் வெண்மையாய், கஸ்தூரியைப் பார்க்கிலும் மணமாய் தேனைப்பார்க்கிலும் மதுரமாயிருக்கும். அதில் ஒரு மிடறு குடித்தால் ஊழியூழி காலம் தாகம் எடாது. அந்தத் தண்ணீர் ஸுவர்க்கத்திலுள்ள கௌதர் யென்னும் ஆற்றின் இரண்டு கால் வழியாய் அந்தத் தடாகத்திற்பாயும். அதன் நான்கு கரைகளிலும் தண்ணீர் பாத்திரங்கள், வானத்து நக்ஷத்திரங்களிலும் அதிகமாக வைக்கப்பட்டிருக்கும். அதன் நான்கு அணைகளிலும் யார்களாகிய அபூபக்கர் றலியல்லாஹு அன்ஹு, உமறு றலியல்லாஹு அன்ஹு, அலிறலியல்லாஹு அன்ஹு, உதுமான் றலியல்லாஹு அன்ஹு, ஆகிய நால்வர்களும் அதிகாரிகளாய் நிற்பார்கள். நபி நாயகமவர்கள் கையில் அஸா பிடித்தவர்களாய் அங்கு நிற்பார்கள். நின்றுகொண்டு தங்கள் உம்மத்திலுள்ளவர்களைப் பார்த்து, அழைத்து அந்தத் தடாகத்தில் தண்ணீர் குடிக்கும்படி ஏவுவார்கள். பாலங்கடந்த எல்லாரும் அங்குபோய்க் களைப்பாறிமேற்படி தடாகத்திற் போய்த்தண்ணீர் குடிப்பார்கள். இந்தத் தடாகத்தைப் போல மற்ற நபிமார்களுக்கும் தடாகம் உண்டு. அந்தந்த நபிமாருடைய உம்மத்து அவரவர் தடாகத்திற் போய்த் தண்ணீர் குடிப்பார்கள். ஆனால் நபி ஸாலிஹு அலைஹிஸ்ஸலாமவர்களுக்கு மாத்திரம் தடாகமிராது. அவர்களுக்குத் தடாகத்திற்கு பதிலாக அவர்களின் ஒட்டகத்து படியே சுரந்திருக்கும். தங்கள் தங்கள் உம்மத்துகளுக்கு நபிமார் தண்ணீர் புகட்டும்போது என் உம்மத்து அதிகம் என் உம்மத்து அதிகம் என்று பெருமை பேசுவார்கள். அவர்களில் நபி நாயகமவர்களே பெருமையிற் சிறந்தவர்களாய் அதிகமான உம்மத்து ஜனங்களுக்குத் தண்ணீர் புகட்டுகிறவர்களாயிருப்பார்கள்.

இன்னும் அந்த மைதானில் பலவித விருக்ஷங்களுண்டாயிருக்கும். ஒவ்வொரு விருக்ஷத்தின் கீழும் அருவிகள் ஒலித்தோடும். மேற்சொன்ன பாலத்தைக் கடந்த எல்லாரும் மேற்படி தடாகங்களில் தண்ணீர் பருகிக் களைதீர்ந்து அந்த அருவிகளிற் குளிப்பார்கள். குளித்தவுடன் அவர்களுக்குள்ள சகல அசுத்தங்களும் நீங்கிப் பரிசுத்தமாய் நபி ஆதம் அலைஹிஸ்ஸலாமவர்களுடைய அறுபது முழ உயரம், ஏழு முழம் பருப்பமும், நபி ஈஸா அலை

ஹிஸ்ஸலாமவர்களுடைய முப்பத்து மூன்று வயதும், நபி யூசுபு அலைஹிஸ்ஸலாமவர்களுடைய யவ்வன சுரூபமு முள்ளவர்களா வார்கள். எல்லாரும் இவ்விதமாகி முகங்கள் பூரணச் சந்திரன் போல இலங்கவும், சரீரங்கள் கஸ்தூரி வாடைகமழவும் கரையேறு வார்கள்.

ஹௌலு முடிந்தது.

---

## 11-ம் பஸல்.

## ஜன்னத்து.

ஜன்னத் என்பது ஸுவர்க்கம். அது ஏழு வானங்களுக்கும் மேலே ஒளியினாற் படைக்கப்பட்டிருக்கும் பொன்னுலகம். அதற்கு உயர்பதமாகிய நூறு தறஜாக்களுண்டு, ஒவ்வொரு தற ஜாவுக்கு இடையில் ஐந்நூறு வருஷப் பிரமாணத்தூரம் இருக் கும். அதன் அகலம் ஏழுவானங்கள், ஏழு பூமிகளுக்குள்ள அள வானது நீளம் அல்லாஹுத் தஆலாவே அறியக்கூடியது. அந்தச் ஸுவர்க்கத்திற்கு வெள்ளியினாலும், பொன்னாலும், மாகதத்தினா லும், சன்னமுத்தினாலும், ஆணி முத்தினாலும், மாணிக்கத்தினா லும், ஒளியினாலுமாக முறையே ஏழுமதில்களுண்டு. இந்த ஏழு மதில்களையுமுடைய ஸுவர்க்கத்திற்கு எட்டு வாசல்களுண்டு, ஒவ் வொரு வாசலும், ஒவ்வொரு ஸுவர்க்கமாம். இவை தாம் எட் டுச் ஸுவர்க்கம் என்று சொல்லப்படும். அவற்றுள் முதலாவது, தாருல் ஜலால், இரண்டாவது, தாருஸ்ஸலாம், மூன்றாவது, ஜன் னத்துல் மஃவா, நாலாவது ஜன்னத்துல் குல்து, ஐந்தாவது ஜன் னத்துல் நயீம, ஆறாவது ஜன்னத்துல் பிறுதௌஸ், ஏழாவது ஜன் னத்துல் அதன், எட்டாவது தாருல்கறாராம். இவை முறையே முழு மாணிக்கம், மரகதம், பவளம, வெள்ளி, செமபொன், ஆணி முத்து, பஸும் பொன் இவைகளால் படைக்கப் பட்டவையாம்.

ஸுவர்க்கத்துத்தரை பொன்மயமான கர்ப்பூரப் பாரம், மணல் குங்குமங் கலந்த கஸ்தூரியாம், தரையிற் கிடக்கும் பருக் கைக்கற்கள் முத்தும், மாணிக்கமுமாம். அங்கங்கே கஸ்தூரி மணல் மேடுகள் உண்டாயிருக்கும், கட்டிடக்கற்கள் பொன், வெள்ளிகளால் உண்டாய், கஸ்தூரிச் சாந்து பூசிக்கட்டப்பட் டிருக்கும். ஸுவர்க்கத்தினுடைய அலங்காரத்தை அல்லாஹுத் தஆலாவே அறிவானன்றி வேறொருவரும் அறிய மாட்டார்கள்,

முழுவதையும் வருணித்துச் சொல்லவும் ஏலாது ஆனாலும் நாம் தெரிந்துள்ளமட்டும் கொஞ்சம் சொல்லுகிறோம்.

சுவர்க்கத்து மாடமாளிகைகள் அனைத்தும் ஒன்றின் மேல் ஒன்றான அநேக அடுக்குகளை யுடையதாய், மாணிக்கத்தினாலும், மரகதத்தினாலும், ஆணிமுத்தினாலும் கட்டப் பட்டதா யிருக்கும். மாணிக்கக் கம்பத்து நுனியிற் கட்டப்பட்ட சிறப்பான பலவிதக் கட்டு மாளிகைகளும் உண்டு. அந்த மாளிகைகள் வெளிப்புறம் உட்புறத்திலும், உட்புறம வெளிப்புறத்திலும் தோற்றித்துலங்கும். அநேக மெத்தை வீடுகள் தரையிற் கட்டப் பட்டிராமல் ஆகாயத்திலே இலங்கிக்கொண்டிருக்கும், ஒரே முத்தினால் அமைக்கப்பட்டதாய் உள்ளே எழுபது மாணிக்க வீடுகளுள்ளதாய், ஒவ்வொரு வீட்டிலும் பலவகை ரத்தினங்களான எழுபது அறைகளுள்ளதாய், ஒவ்வொரு அறையிலும் எழுபது சப்பிரமஞ்சங்கள் போடப்பட்டதாய், ஒவ்வொரு மஞ்சத்திலும் பலவருணப் பட்டாடைகளால் எழுபது விரிப்புகள் விரிக்கப்பட்டதாய், ஒவ்வொரு விரிப்பிலும் ஒவ்வொரு ரம்பையும், ஆணடிமை எழுபதுபேர்கள், பெண்ணடிமை எழுபதுபேர்களு முள்ளதாய், அந்த எழுபது தாம்பாளங்களும், தாம்பாளத்திற்கு எழுபதுவித உணவுகளையும் உள்ளதாய், அங்கே அரண்மனைகள் இருக்கும. ஒரே மாணிக்கத்தினால் எழுபதினாயிரம் அறைகளும் உளளதாகச் செய்யப்பட்ட எழுபது அடுக்கு மெத்தையுள்ள அந்த அரண்மனைகளும் பத்திபத்தியாயிருக்கும். நாலாயிரம் வாசல்களும் வாசலொன்றில இருபத்தைந்து ரம்பைகளும் உள்ளதான அநேக வீடுகளும் இருக்கும். இந்தக் கட்டிடங்கள் ஒவ்வொன்றும் ஒவ்வொரு சுவர்க்கவாசிக்கு உடையதாயிருக்கும. அது ஒவ்வொன்றும அத்தனைபெரிதாயிருந்தாலும், அதை ஆண்டநுபவிக்கும் திறள் ஒவ்வொருவருக்கும் உண்டாயிருக்கும். இவ்விதமான எண்ணிறந்த கட்டிடங்கள் வரிசை வரிசையா யிருப்பதல்லாமல, கூடாரங்கள் அநேகம் நிறை நிறையாகப் போடப்பட்டிருக்கும். அந்தக் கூடாரங்களில் ஒவ்வொரு கூடாரமும் இருபதுகாத சதுரவளவுள்ள ஒரே ஆணி முத்தினால் அமைககப்பட்டதாயிருக்கும். ஒவ்வொரு கூடாரமும் வேறு வேறு விதமானதாகயிருக்கும. மேற்சொன்ன மாடமாளிகை அரண்மனைகளிலும, கூடாரங்களிலும், முத்தினாலும், மாணிக்கத்தினாலும, சிததிர வேலைசெய்த பொற்கட்டில்களிலும், நாற்காலிகளிலும், சாயமான பீடங்களும் கணக்

இன்றிப் போடப்பட்டிருக்கும். உட்புறம் இஸ்தப்றக்குப் பட்டினு லும், வெளிபுறமும் ஒளிவினுலுமான விரிப்புகள், அவைகளில் ஒவ்வொன்றிலும் விரிக்கப்பட்டிருக் கும். பொன், வெள்ளி, நவ ரத்தினங்கள் ஆகியவைகளால் பலவிதச் சாமான் தட்டுமுட்டுகள் நக்ஷத்திரங்களைப்போல் அங்கங்கே வைக்கப்பட்டிருக்கும்.

அங்கு அநேக நதிகளுண்டு அவற்றுள்:—நஹற் றஹ்மத்து என்று ஒரு நதியுண்டு. அந்த நதியின்மணல் கஸ்தூரியும், அத னுடன் கலந்துகிடக்கும் பருக்கைகற்கள் முத்துமாயிருக்கும். அதன் நீர் பனிநீரிலும் வெண்மையும், தேனிலும் இன்பமும் உள்ளது. அது எட்டு ஸுவர்க்கங்களிலும் பிரவாகித்து ஓடும். இது அல்லாமல் கௌதர் என்னும் விசேஷ நதி யொன்று உண்டு. அதன் ஆழம் எழுபதிணுயிரங்காத அளவுள்ளது இருகரைகளும் முத்திணுலும், மரகதத்திணுலும், மாணிக்கத்திணுலும் உண்டா யிருக்கும். இருமருங்கும் முத்துக் கூடாரங்கள் போடப்பட்டிருக் கும். அங்குள்ள விருக்ஷங்கள் ஆணி முத்திணுலும், மாணிக்கத்திணு லும் வளர்ந்திருக்கும். அந்நதியில் பிரவாகிக்கும் தண்ணீர் பாலி லும் வெண்மையும் தேனிலும் இன்பமுமாயிருக்கும். அது நபி முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்களுக்குச் சொந்த மாம். இன்னும் அங்கு நஹருல் காபூர் என்கிற கற்பூர நதியும் உண்டு. இன்னும் மேன்மாடங்களி லிருப்பவர்களுக்கு உபயோ கப்படும்படியான ஆகாச நதிகளும் அநேகம் ஓடிக்கொண்டிருக் கும். அந்நதியை "நஹறு தஸ்னீம்" என்று சொல்லுவார்கள். எல்லா பாதைகளிலும், எல்லாத் தரிப்பிடங்களிலும் ஓடிக் கொண்டிருக்கிற "ஸல்ஸபீல்" என்னும் நதியும் அங்கு உண்டு. இந்தத் தண்ணீர் நதிகள் அல்லாமல் பாலினுலும், தேனினுலும், கள்ளினுலும் தனித்தனியாக அநேக நதிகளும் உண்டு. இன்னும் தண்ணீர் கடலும், தேன் கடலும், பாற்கடலும் உண்டு. இந்தக் கடல்களிலிருந்து நதிகள் பிரிந்து எங்கும் பிரவாகித்து ஓடும். எல்லா நதிகளும் கஸ்தூரி மணலையும் கஸ்தூரி மணத்தையும் உடையதாயிருக்கும், எல்லா நதிகளும் ஸுவர்க்கத்தில் அங்கங் குள்ள மலைகளில் உற்பத்தி யாகின்றன. மேற்சொன்ன தண்ணீர், பால், தேன் கள்ளு இவைகளால் ஆகிய நான்கு நதிகளும், "ஹௌலு" என்னும் தடாகத்திற்போய்விழும். இன்னும், "றம் யான்" என்று ஒரு நதியுண்டு. அதன் கரையில் பவளத்தினுல் ஒரு பட்டணமிருக்கும், அந்த பட்டணத்திற்கு வெள்ளியினுலும்,

பொன்னினாலும் ஆயிரம் வாசல்கள் உண்டு. அங்கு பலவித நீரூற்றுகளும், அருவிகளும் உண்டு. ஸுவர்க்கத்தில் ஓடுகிற நதிகளைப்போல, தரையின கீழ்ப்பள்ளமாயிராமல் தரையின்மேல் உயர்ந்த புதுமையான தாயிருக்கும்.

அங்கு அநேகவகையான விருக்ஷங்கள் உண்டு. அந்த விருக்ஷங்களெல்லாம் உலகத்திலுள்ள விருக்ஷங்களை போலல்லாமல் தலைகீழாயிருக்கும். எல்லாவிருக்ஷங்களும் அடிகள், கிளைகள், கொம்புகள், துளிர்கள், இலைகள் எல்லாம் பொன்னினாலும், வெள்ளியினாலும் உண்டாயிருக்கும். அந்த விருக்ஷங்களில் இலைகள் காயாமலும், உதிராமலும் கனிகள் ஓயாமலும் ஒழியாமலு மிருக்கும். ஸுவர்க்கத்திலிருப்பவர்கள் யார் யார் எந்தெந்த விருக்ஷங்களில் எந்தெந்தக் கனிகளிருக்க வேண்டுமென்று நாடினார்களோ அந்தந்த விருக்ஷங்களில் அந்தந்தக் கனிகளிருக்கும். ஒரு விருக்ஷத்திலுள்ள ஒருகாயை அல்லது கனியைப்பறித்தால், அதுமறுபடியும் உண்டாகும். ஒவ்வொரு விருக்ஷத்திலும் அடியில ஜீன் வைத்த சிறகுள்ள குதிரைகளும, நுனியில பட்டாடைகளும் உண்டாய்க்கொண்டிருக்கும். விருக்ஷங்களின் இலைகள் காற்றடிப்பட்டு ஒன்றோடொன்று உராய்வதால் பலவிதக் கீதநாதங்களான ஓசை பிறக்கும். இந்த விருக்ஷங்களல்லாமல் ஸஜரத்துகுல்து, ஸிதுறத்துல் முந்தஹா, ஸஜறத்துத்தூபா என்கிற மூன்று நாமங்களுள்ள பிரதான ஒரு மரமுண்டு, அதன் அடி ஆணிமுத்து, நடு மாணிக்கம், கிளைகள் மரகதம், இலைகள் ஸுந்துஸுப்பட்டு அதன் கிளைகள் அறுஸின் கால் வரையுந் தாவியிருக்கும். அந்த ஒரே மரம் எட்டுச் ஸுவர்க்கங்களுக்கும் மேலே குடை போற் கவிந்து மூடிக்கொண்டிருக்கும். அதன் நிழல் எங்கும் விழும். அது ஸிதுறத்துல் முந்தஹா என்பதால் இலந்தை மரமாம், கனிகள் ஒவ்வொன்றும் யானைக்காது போலவும், அதிகப் பிரகாசமாயிலங்கும். ஒவ்வொரு கனியிலும் எழுபத்திரண்டு ருசிவகையிருக்கும். மரம் ஜாதியில் இலந்தையாயிருந்தாலும், துன்யாவிலுள்ள எல்லாவகைப் பழங்களும் அதில் பழுக்கும். அந்த மரத்து வேரிலிருந்து தான் ஸுவர்க்கத்து நதிகளெல்லாம் ஊறிப் பிரவாகிக்கும். அந்த மரம் முதலான எல்லா மரத்துக்கனிகளும் வித்தில்லாததாய், பாலைப்பார்க்கிலும் வெண்மையாய், தேனைபபார்க்கிலும் மதுரமாயிருக்கும். எல்லா மரத்து எல்லா கிளைகளிலும் அநேக விதமான பக்ஷி ஜாதிகளிருந்து கீதநாதஞ் செய்துகொண்

டிருக்கும். இன்னும் பல பலவிதமான எல்லாப் புஷ்பச் செடிகளும் முளைந்திருக்கும். வாசனைப் பூண்டுகளும் அநேகம் பலவிதமாயுண்டாயிருக்கும். அவைகளில் மருதோன்றி தான் மிகச் சிறந்த தாயிருக்கும். எங்கே பார்த்தாலும் மேற்சொன்ன மர வகைகளாலும், செடி கொடி வகைகளாலும் பூங்காவனமாகவேயிருக்கும்.

அங்கு ரம்பைகளாகிய ஹூறுல் ஈன்கள் திரள்திரளாயிருப்பார்கள். பாதம் முதல் முழங்கால் வரையும் குங்குமத்தினாலும் அதிலிருந்து மார்புவரையும் கஸ்தூரியினாலும், அதிலிருந்து கழுத்து வரையும் அம்பரினாலும், அதிலிருந்து உச்சிவரையும் கர்பூரத்தினாலும் படைக்கப்பட்டிருப்பார்கள். அவர்கள் மேனி நிறம் முத்தின் வெண்மையும், மரகதத்தின் பசுமையும், மாணிக்கத்தின் சிகப்பும், புஷ்பராகத்தின் மஞ்சளுங்கலந்த தாயிருக்கும். கூந்தல் மிகவும் கருத்த பட்டினால் சூரியப் பிரபையுள்ள தாயிருக்கும். கண்கள் அறத்தீர்ந்த வெண்மையும், அறத்தீர்ந்த கருமையுமாயிருக்கும். அதனால்தான் அவர்களுக்கு ஹூறுல் ஈன் என்று பெயர் உண்டாயிற்று. அவர்கள் மேனி நிறம் ரததினமாயிருப்பதால் உடலிலுள்ள எலும்புக் குள்ளிருக்கும் மூளை முதல் உருவித் தெரியும், அவர்களின் வாயுமிழ் நீர் ஒரு துளி இந்தக் கடலில் விழுந்தால் கடல் நீர் அமிர்தமாய்விடும். ஒவ்வொருவர் மார்பிலும், அவரவர் கணவர் பெயர் எழுதப்பட்டிருக்கும், அவர்கள் துன்யாவின் பெண்களைப்போலப் பல பலவிதமா யிருப்பார்கள். ஒவ்வொருவரும் எழுபது விதப்பட்டாடைகள் உடுத்தி நவரத்தின மிழைத்த தங்கவளையல் முதலான எல்லா ஆபரணங்களும் அணிந்திருப்பார்கள். இன்னும் ஸுவர்க்க வாஸிகளுக்குக் குற்றேவல் செய்வதற்காக ஆணி முத்தைப்போன்ற சிறு பிள்ளைகளும் அங்கிருப்பார்கள்.

அங்குள்ள உடைகள் ஸுந்துஸு இஸ்தப்றக்கு, என்னும் பட்டுகளில் நவரத்தினங்களும் அழுத்திப் பல பலவிதமான தாயிருக்கும். இந்த உடைகளை ஒவ்வொரு வருக்கும் ஒவ்வொரு முத்து மண்டபத்துள் முளைந்திருக்கும். ஒவ்வொரு மரம் நாள் ஒன்றிற்கு எழுபது விதமாகக் கொடுத்துக் கொண்டிருக்கும், ஆபரணங்கள், பொன், வெள்ளி, நவரத்தினங்கள் இவைகளால் செய்யபபட்டிருக்கும், எவ்வித நகையும் குறைவின்றி உண்டாயிருக்கும், அவைகளில் பிரகாசம் சூரியனை மழுங்கச் செய்வதாயிருக்

கும், அவைகளின் சோதி எழுவான், படுவான் எங்கும் ஜொலிக்கும்.

அங்குள்ள உணவு எவரும் எப்போது கண்டு கேட்டு அனுபவித்திராததாய், நாடிய நாடிய வகையாய், கஸ்தூரி வாசமுள்ளதாய், உண்ண உண்ணத் தெவிட்டாததாய், புதுமையானதாயிருக்கும். பானவர்க்கங்களும் அதுபோலவே தண்ணீர் பால் தேன்கள் இவைகளால் உண்டாயிருக்கும்.

அங்கு குதிரை முதலான வேண்டிய வேண்டிய வாகனங்களும், மாடு, ஆடு, மான், மரை, முயல் முதலான வேண்டிய வேண்டிய புல்வாய் மிருகங்களும் உண்டாயிருக்கும்.

துன்யாவிலுள்ள எல்லாவித ராக தாளங்களும் அவற்றிற்கு மேலான ராக தாளங்களும், அநேக விதமாய் அங்கிருக்கும். அங்குள்ள மரங்களில் அநேகம் ராக தாளங்களுக்கென்றே அமைக்கப்பட்டு கிளைகளில் அநேகமான துவாரங்களுள்ளதாயிருக்கும். அந்தத் துவாரங்களிற் காற்றோட்டத்தினால் கீதநாதங்கள் உண்டாய்க் கொண்டிருக்கும். இவ்விதச் சங்கீதங்கள் அல்லாமல் பறவைகள் சங்கீதம்பாடும். ஹூறுல் ஈன்கள் பாடுவார்கள், மலக்குகள் பாடுவார்கள், அந்தச் சங்கீதங்கள், அனைத்தும் தஸ்பீஹு முதலானவைகளும், குர்ஆன் ஆயத்துகளும் ஸபூர்வேத வாக்கியங்களுமாயிருக்கும், நபி தாவூது அலைஹிஸ்ஸலாமவர்களும் அங்கே சங்கீதகாரருள் ஒருவராயிருப்பார்கள்.

இன்னும் சொல்லுதற்கரிதான அலங்காரமும் சிறப்பும் மேன்மையுள்ள ஸுவர்க்கத்திலிருந்து அனுபவிக்கும் ஸுவர்க்கவாளிகள் எல்லாரும் முன் சொன்னபடி நபி ஆதம் அலைஹிஸ்ஸலாமவர்களுடைய அறுபது முழ உயரமும் ஏழுமுழம் பருப்பமும் நபி ஈஸா அலைஹிஸ்ஸலாமவர்களுடைய முப்பத்துமூன்று வயதும், நபி யூசுபு அலைஹிஸ்ஸலாமவர்களுடைய யவ்வன சொரூபமும் உள்ளவர்களாய் சிரசு, கண்கள், புருவங்கள் தவிர மற்றவிடங்களில் ரோகம் முளைக்காத பாலியர்களாய், நபி மூஸா அலைஹிஸ்ஸலாமவர்களுக்கு மாத்திரம் தாடியும் முளைத்திருக்கும், எல்லாரும் ஒரே மாதிரியானவர்களாயிருப்பார்கள், அவர்கள் எல்லாரும் அங்கு பேசும் பாஷை அறபுபாஷையேயாம, எல்லார் கண்களிலும் சுறுமாயிடப்பட்டிருக்கும். அவர்களுக்கு நரை, திரை, மூப்பு, மலம், சிறுநீர், நித்திரை மயக்கம், மறதி, வெறுப்பு,

அலுப்பு, அச்சம், கவலை பொறாமை, நோய் ஆகியவைகளும் இவைபோன்ற வேறு எவ்விதமான தீங்கும் கொஞ்சமும் இராது. இன்னும் ஒவ்வொரு வருக்கும் துன்யாவிலுள்ளவர்களின் நூறு பேர்களுடைய பலன் உண்டாயிருக்கும். ஒவ்வொரு ஆண்பிள்ளைக்கும் மானிடப்பெண்களில் எழுபது பேரும், ஹூருல்ஈன்களில் முப்பதுபேரும், மனைவியாக்கிக் கொடுக்கப்படுவார்கள். இதற்கு அதிகமான பெண்களும் கொடுக்கப்படுவார்கள். அன்றாடகம் புதிது புதிதாகப் பெண்கள் கொடுக்கப்படுவதும் உண்டு. ஒவ்வொருவரும் துன்யாவில் விவாகஞ் செய்திருந்த மனைவியை அவரவருக்கே கொடுக்கப்படும். துன்யாவில் ஒருவனுக்கு அதிகமாக இரண்டு மூன்று நான்கு ஆகிய புருஷர்களுக்கு வாழ்க்கைப்பட்ட ஒருத்தி, தான் வாழ்க்கைப்பட்டவர்களில் எவன் மீது பிரியப் பட்டாளோ அவனுடன் சேர்க்கப்படுவாளென்றும், அவர்களில் எவன் ஸாலிஹானவனோ அவனுடம் சேர்க்கப்படுவாளென்றும் கடைசியாய் அவனுக்கு வாழ்க்கைப்பட்டவளே அவனுடன் சேர்க்கப்படுவாளென்றும் சொல்லப்படுகின்றது. ஆண் பெண்களில் ஒருவராவது மனைவி, கணவன் இல்லாமல் இருக்கமாட்டார்கள். இன்னும் அவர்களுக்கு இந்திரியம் இராது, புணர்ச்சி மனப்பிரியப்படி எல்லாம் உண்டாயிருக்கும், புணர்ச்சி நடுவில் இந்திரியத்திற்கு பதிலாய் ஒருவித நறுமண முள்ளகாற்று வெளிப்படும். ஒருவன் ஒரே நேரததில் எல்லாப் பெண்களுடம் புணரத் திராணியுள்ளவனாயிருப்பான். பெணகளும், எததனை தரம் புணர்ந்தாலும் குமரித் தன்மையோடிருப்பார்கள், பிள்ளை வேண்டுமானாலும், உடனே பிறந்து, வளர்ந்து பாலியமாய் விடும்.

அங்குச்சூரியன், சந்திரன், நக்ஷத்திரங்கள் இல்லை. ஆகையால், இரவுமில்லை, பகலுமில்லை. ஆனால் அறுஷிலிருந்து ஒருவித ஒளி பிரகாசித்துக் கொண்டிருக்கும், அதனல் துன்யாவில் சூரியோதயத்திற்கு முன் உண்டாயிருக்கும் காலை வெளிச்சம் போலவே என்றும் ஒரு தன்மையாயிருக்தம். ஆனாலும, நாழிகைக்குறிப்பும், நாட்குறிப்பும், வாரக்குறிப்பும, மாதக்குறிப்பும், வருஷக்குறிப்பும் உண்டு. அவைகள் இராக்குறிப்பு, பகல்குறிப்பால் வைத்துக்கொள்வார்கள். மாடமாளிகைகளின் வாசப்பாடங்களும், ஜன்னற் கதவுகளும், பட்டுத்திரைகளும, தானாகத்திறந்திருக்கும் போதுப் பகலென்றும், தானாக மூடிக்கொள்ளும போது இராவென்றும் வைத்துக்கொண்டு, மேற்சொன்ன குறிப்புகளை நிதானித்துக்

கொள்வார்கள். சிதோஷ்ணமும் ஒன்றுக்கொன்று ஏறத்தாழ இல்லாமல் சமமாகவேயிருக்கும்.

இன்னும் ஸுவர்க்கவாஸிகள் பசி, தாகம் இவைகளில்லாதவர்களா யிருந்தும், வேண்டியமட்டும் பல உணவுகளையும் உண்டு, பானங்களையும் பருகுவார்கள், எவ்வளவு உண்டு எம்மட்டும் குடித்தாலும் அவர்களுக்குக் கொஞ்சமும் தெவிட்டாது, அவர்கள் உண்ணும் உணவுகளும், பருகும் பானங்களும், ஒருவிதமான கஸ்தூரி வாசமுள்ள வியர்வையாகவும் மாறி ஜீரணித்துப்போம். இன்னும் அவர்கள் எந்த மரத்துக் கனியை எவ்விதமாகத்தின்ன நாடுவார்களோ அது அப்படியே வலிய வந்துவிடும். ஒரு மரத்தின் கனியை ஒருவர் தின்று விட்டால் அது உடனே மறுபடியும் உண்டாய்விடும். எந்தப்பட்சியை எந்த பாகத்தில் தின்ன நாடினார்களோ அது அப்படியே தானாக உண்டாய் வந்துவிடும், அது தின்று முடிந்தால் மறுபடியும் உயிர்பெற்று தன்னிடம் போய்விடும். சோற்றுவகை முதலான எந்தப் பதார்த்தங்களும் அவரவர் பிரியப்படி விருட்சங்களிலிருந்து உண்டாகும். அவர்கள் இவைகளைத் தங்கள் தங்கள் பிரியப்படி உண்டு, தின்று, குடித்துக் கொண்டிருப்பது மன்றி நாள் ஒன்றிற்கு ஐந்து வேளையாகிய ஸுபுஹு, ளுஹறு, அஸறு, மஃறிபு, இஷா யிவைகளில் அல்லாஹு தஆலாவின் ஏவலின்படி மலக்குகள் ஒடுக்குக் கொணர்ந்து கொடுப்பார்கள். ஒவ்வொருவருக்கும் வேளையொன்றுக்கு எழுபது ஒடுக்குகள் வரும். ஒவ்வொரு ஒடுக்கிலும் எழுபது தாலங்களும், தாலங்கள் ஒன்றுக்கு நூறு தட்டுகளிலும் பரப்பி யிருக்கும். பதார்த்தவகையும், ருசிவகையும் ஒரு தட்டிலுள்ளது மற்றொரு தட்டில் இராது.

ஒவ்வொருவருக்கும் கிடைக்கும் ஸுவர்க்கத்து வாழ்க்கைக்கு அளவில்லை. குறைந்த அளவு துன்யாவைப் பார்க்கிலும் பத்து பங்கு அதிகமாயிருக்கும் கூடிய அளவை அல்லாஹு தஆலாவே அறிவான். அத்தனை பெரிய வாழ்க்கையை ஒவ்வொருவரும் ஆண்டு, அதிலுள்ள சகல ஸுகானுபவங்களையும் அனுபவிப்பார்கள், ஒவ்வொரு ஸுவர்க்கவாஸியையும் மலக்குகள் கண்டுபேச வேண்டுமானால் அந்தச் ஸுவர்க்கவாஸியின் அனுமதி பெற வேண்டும். இவ்வித அதிகாரத்தை அல்லாஹுத் தஆலா அவர்களுக்குக் கொடுப்பான்.

இன்னும் ஸுவர்க்கவாளிகள் ஒவ்வொருவரும் தம்முடன் ஸுவர்க்கம் புகுந்துள்ள பிதா, மாதாக்களையும், பந்துக்களையும் இஷ்டர்களையும் விரும்பிய போதெல்லாம் சந்தித்துக்கொண்டும் சம்பாஷித்துக் கொண்டும் இருப்பார்கள் ஒருவர் ஒருயிடத்திற்குபோக நாடினால் தாம் யிருக்கும் ஆசனத்துடன் பறந்து போகவும், அல்லது எந்த வாகனத்தில் ஏறி என்ன விதமாக போகவுங்கூடும். இது வல்லாமல் ஸுவர்க்கத்தில் வெள்ளிக் கிழமை தோறும் ஒரு சந்தைக்கூடும், உயர்ந்த பதவியுடையோர் முதல் தாழ்ந்த பதவியுடையோர் வரையுமுள்ள எல்லாரும் அந்தச் சந்தையில் வந்து கூடுவார்கள். அப்போது ஒருவரை யொருவர் துன்யாவின் விஷயங்களைப் பற்றியும், ஸுவர்க்கத்தின் விஷயங்களைப் பற்றியும், வினவிச் சம்பாஷிப்பார்கள், அந்தச் சந்தையின் அலங்காரத்தையும், அழகையும் சிறப்பையும், வருணிக்க எவராலும் ஏலாது. அங்கு எல்லாவிதச்சாமான் கடைகளும் உண்டு. அங்குபோன ஒவ்வொருவரையும் மலக்குகள் பார்த்து, நீங்கள் துன்யாவில் சந்தைகளுக்குப்போய் கிரயங்கொடுத்தல்லவா வேண்டிய சாமானை வாங்குவீர்கள். இங்கு அப்படியல்ல உங்களுக்கு வேண்டிய சாமான்களை அல்லாஹுதஆலா கிரயமில்லாமல் பெற்றுக்கொள்ள வைத்திருக்கின்றான் என்று சொல்லுவார்கள். யார்யார்கள் எந்தச் சாமான்களை விருப்பமுற்றுப் பார்த்தார்களோ அந்தச் சாமானை உடனே மலக்குகள் எடுத்துக் கொண்டு அவர்கள் வீடுவரையும் கொணர்ந்து கொடுப்பார்கள். இன்னும் அந்தச் சந்தைக்கடைகளில் உருவங்களும் சிறகுகளும் உள்ள கடைகளும் உண்டு. யார்யார் எந்த உருவம் வேண்டுமென்று நாடினார்களோ அந்த உருவம் இவர்களுக்கு உண்டாய் விடும். உருவம் என்றால் மானிடவுருவமே அன்றி வேறலல அப்படியே சிறகுகளும் உண்டாய் விடும். அந்தச சந்தையில் ஹூறுல்ஈன்கள் திரண்டிருந்து சங்கீதம் பாடுவார்கள். அங்குபோகும் ஒவ்வொருவரும் அந்தக் கீதகாதங்களைக் கேட்டு ஆனந்தமடைந்தும காணபாரைக்கண்டும்; சம்பாஷிப்பாருடன் சம்பாஷித்தும, விருமபிய சாமான்களைப் பெற்றுகடுகாண்டு மனைகளுக்குத திரும்பி வருவார்கள். அவர்கள் அங்கிருந்து திரும்பும்போது துன்யாவின் கடைவீதிகளில் காற்றடித்தால் அங்குள்ள புழுதிகள் வந்து மேனியிற் படிவது போல அந்தச் சந்தையிலுங் காற்றடிதது அங்குள்ள அழகைவாரி மேனிகளிற் போடும. அந்த அழகுடன் வந்து மனையிற் சேர்வார்கள்.

முன்சொன்ன தடாகத்தில் குளித்து ஸுவர்க்கம் புகுதப் பக்குவர்களாய் கரையேறி யிருக்கும் உம்மத்துடன் நபி முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்கள் மேற்படி ஸுவர்க்கத்தில் புகுதுவதற்காக அதன் தலைவாசலில் வருவார்கள். அந்த வாசலில் பாரிய விருக்ஷத்தில் பிராயம் அடையாமல் இறந்த சிறு பிள்ளைகள் அனைத்தும் இருக்கும். ஒவ்வொரு பிள்ளைகளும் கைகளில் ஸுவர்க்கத்துக் குடிப்புகளும், பட்டாடைகளும் வைத்துக்கொண்டு பாலங்கடந்து வருகிற தம் தம் பிதா மாதாக்களுக்குக் கொடுப்பதற்காக வழிபார்த்திருக்கும், எல்லாரும் அங்கு முடுகினவுடன், அந்தப் பிள்ளைகள் தம் தம பிதா, மாதாக்களுக்குக் கொடுத்து ஸுவர்க்கத்திற்கு அழைக்கும். பிதா, மாதாக்களை வரக்காணாத பிள்ளை, எங்கள் பிதா மாதாக்களை நாங்கள் காணாத வரையும எங்களுக்குச் ஸுவர்க்கம் ஹறாம் என்று சொலலி அழும், அந்த அழுகுரலை நபிநாயகமவர்கள் கேட்டு மலக்குகளையும் பார்த்து இந்தப் பிள்ளைகள் அழுவதேன்? என்று கேட்பார்கள். அதற்கு மலக்குகள் இவர்கள் தங்கள் பிதா, மாதாக்களை வரக் காணாமையால் அழுகிறார்கள் என்று சொல்லுவார்கள். அப்போது நபிநாயகமவாகள் இன்ஷா அல்லா நாளைக்கு வருவார்கள் என்று சொல்லிவிட்டு தாங்கள் முன்னும் தங்கள் உம்மத்து பின்னுமாக ஸுவாக்கம் புகுதுவார்கள். அதன்பின் மற்ற நபிமார்களும் புகுதுவார்கள்.

எல்லாரும் ஸுவர்க்கம் புகுதும்போது அங்குள்ள மலக்குகள் எதிர்கொண்டு வந்து உங்களுக்கு ஈடேற்றம் உண்டாவதாக நீங்கள் ஜெயம் பெற்றீர்கள். உள்ளே நுழையுங்கள் சதாகாலமும் இங்குத் தரிபட்டுச் சுகித்திருங்கள் என்று சொல்லுவார்கள். இதைக் கேட்ட எல்லாரும சந்தோஷமாய்ச் ஸுவர்க்கத்திற்குள் புகுந்து விடுவார்கள். அப்போது அங்குள்ள சிறுவர்கள் எதிர்கொண்டு வந்து நன்மாராயங்கூறி உபசரித்து ஒவ்வொருவரையும் அழைத்துப் போய், அங்குள்ள சகல அலங்காரங்களையும் ஒன்றொன்றாகக் காட்டுவார்கள். பின் ஒவ்வொருவருக்கும் நியமிக்கப்பட்டிருக்கும் ஹூறுலீன்களிடம் அந்தச் சிறுவர்கள் போய் இன்னார் வந்துவிட்டார் என்று தெரிவிக்கும். உடனே அந்தப் பிள்ளைகள் அதிக ஆவலாய்த் தலைவாசலில் ஓடிவந்து பார்த்துச் சந்தோஷப் படுவார்கள். பின் ஸுவர்க்கம் புகுந்த ஒவ்வொருவரும் அவரவர் மாளிகையிற் புகுந்து அங்கிருக்கும் ஹூறுல்ஈன்களையும், அங்

குத் தயாராயிருக்கும் சாமான்களையும், அலங்காரங்களையும் கண் குளிரக் கண்டு புகழ் அடங்கலும் அல்லாவுக்குடையதா யிருக்கும். அவன் வழி காட்டாவிட்டால் நாங்கள் இங்கு வரமாட்டோமே என்று சொல்லிப் புகழ்வார்கள். பின் நபிநாயகமவர்களும், அவர்கள் உம்மத்துகளும், அவரவருக்குரிய தானத்தில் தரிபடுவார்கள். ஸுவர்க்கவாஸிகள், எல்லாரும் நூற்றிருபது வகுப்புகளா யிருப்பார்கள். அந்த வகுப்பில் எண்பது வகுப்புகள் நபி முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவாகளின் உம்மத்தும், மற்ற நாற்பது வகுப்பு மற்ற நபிமார்களின் உம்மத்து மாயிருப்பார்கள்.

ஜன்னத்து முடிந்தது.

---

## 12-ம் பஸல்.

## ஜஹன்னம்.

ஜஹன்னம் என்பது நரகம். அது அக்கினியுலகம். அதன் தரை நபத்தினுலும், மதில் கந்தகத்தினுலும், மேல் கூரை செம்பினுலும், வாசலகள் இரும்பினுலும், உண்டாக்கப்பட்டிருக்கும். மதில் ஸுவரின் கனம் நாற்பது வருஷப் பிரயாணத்தூர முள்ளது. நரகம் முழுவதையும் கொடிய இருள் சூழ்ந்து கவிழ்ந்து மூடிக் கொண்டிருக்கும், அதன் ஆழம் ஒரு பாரைக்கல்லை மேலிருந்து போட்டால் எழுபது வருஷம வரையும் அந்தக்கல் தரையில் விழுந்து தரிபடாமல் போய்க்கொண்டே யிருக்கும். அத்தனை ஆழம் அந்த நரகம் ஒன்றின் மேல் ஒன்றுக எழு தட்டுகளையுடையது. அநத எழு தட்டுகளைத்தான் எழு நரகம் என்பார்கள். அவைகளில் முதல் தட்டுக்குப்பெயர் ஜஹன்னம், இரண்டாம் தட்டுக்குப் பெயர் லலா, மூன்றுந் தட்டுகுப் பெயர் ஸகர், நாலாந் தட்டுக்குப் பெயர் ஹுத்தமா, ஐந்தாம தட்டுக்குப் பெயர் ஜஹீம், ஆரும் தட்டுக்குப்பெயா ஸயீறு, எழாந்தட்டுக்குபபெயர் ஹாவியா, பொதுவாக எழுதட்டுக்கும் ஜஹனனம என்றே பெயர் சொல்லப் படும். அந்த எழு தட்டுகளும சிறிதாகிய முதல் தட்டில் எழு வானங்களையும், எழு பூமிகளையும் தூககி வைத்தால் அகனற சமுத்திரத்து நடுவில ஒரு மோதிரம வைததாப்போலிருக்கும். அந்தத் தட்டிலிருந்து ஒவவொரு தடடும் ஒனறுக்கொன்று பெரிதாயிருக்கும். தட்டொன்றிற்கு ஒவ்வொருவாசல் இருக்கும், ஒரு வாசலிலிருந்து மற்றொரு வாசலுக்குப் போகுந்தூரம ஐந்நூறு வருஷப் பிரயாணத்தூர முள்ளது. முதல் தட்டிலிருந்து ஒவ்வொரு தட்டி

னும் எழுபது பங்கு வேதனை அதிகமாயிருக்கும். ஒவ்வொரு தட்டிலும் எழுபதினாயிரம் அக்கினிமலைகளுண்டு. ஒவ்வொரு மலையிலும் அநேகம் பிளப்புகளிருக்கும், ஒவ்வொரு பிளப்பிலும் எழுபதினாயிரம் அக்கினிக் கால்வாய்கள் இருக்கும், ஒவ்வொரு கால்வாயிலும் எழுபதினாயிரம் ஓடைகள் பிரிந்தோடும், ஒவ்வொரு ஓடைக்கரையிலும் எழுபதினாயிரம் அக்கினி மாளிகைகளிருக்கும், ஒவ்வொரு மாளிகையிலும் எழுபதினாயிரம் அறைகளிருக்கும், ஒவ்வொரு அறையிலும் ஒட்டகப் பிரமாண முள்ள எழுபதினாயிரம் பாம்புகளும், கோவேறு கழுதை பிரமாண முள்ள எழுபதினாயிரம் தேள்களும் இருக்கும். அந்தத் தேள்கள் ஒவ்வொன்றிற்கு எழுபதினாயிரம் கொடுக்குகளிருக்கும். ஒவ்வொரு கொடுக்கிலும் எழுபதினாயிரம் கணுகளிருக்கும், ஒவ்வொரு கணுவிலும் எழுபதினாயிரம் விஷமுட்களிருக்கும், ஒரு முள்பட்டால் எழுபதினாயிரவித வேதனையுண்டாகும். இன்னும் அந்த நரகம் முன் சொன்னது போலக் கால்களும், கண்களும், காதுகளும், நாக்கும், தலையுமுள்ளது, அதற்குக் கடல்கரைபோல அகன்றமைதான முண்டு, அங்கே கணக்கற்ற துஷ்ட விலங்குஜாதிகளும், பலவகை விஷஜந்துக்களும் உலாவித்திரியும், நரகத்து நடுவில ரத்தத்தினாலும், ஊனத்தினாலும், சீழினாலும் அநேகம் ஓடைகள் கொதித்து ஒலித்தோடும்.

இன்னும் நரகவாளிகளை வேதனை செய்யக்கணக்கற்ற மலக்குகள் அங்கிருப்பார்கள். அவர்களுக்குத்தான் ஜபானியா என்று பெயர். அவர்கள் கைகளால் வேலை செய்வதுபோலக் கால்களாலும் செய்வார்கள். அவர்களில் ஒவ்வொருவரும் நரகவாளிகளில் கைகளால் இருபதினாயிரம் பேர்களையும் கால்களால் இருபதினாயிரம் பேர்களையும் பிடித்துச் சுழற்றி யெறியும் திராணியுள்ளவர்கள், அவர்களின் கண்கள் மின்னலைப்போலவும், பற்கள் காளைமாட்டுக் கொம்பைப் போலவும், உதடுகள் கால்வரையும் தொங்கியும், அக்கினிச் ஜுவாலித்து எறியும் வாயையும், ஒன்றுக்கொன்று ஒருவருஷ பிரயாணத்தூரமுள்ள புஜங்களையும் உடையவர்கள், அவர்கள் நெஞ்சில் அணுவளவு ஈனம், இரக்கம் இராது. அவர்கள் தொகையை அல்லாஹுத்தஆலா தான் அறிவான். அவர்கள் எல்லாருக்கும் பதினெட்டுத் தலைவர்களுண்டு. அந்தத் தலைவர்களுக்கும், மற்ற ஜபானியாக்களுக்கும் அதிபதி மாலிக்கு அலைஹிஸ்ஸலாம்.

ஜபானியாக்கள் ஒவ்வொருவர் கையிலும் இரண்டு கவருள்ள ஒவ்வொரு இரும்புத் தடியிருக்கும். அதனால் அடியுண்டவன் எழுபதினாயிரம் வருஷப் பிரயாணத்தூரம் தரையிற் பதிந்து போவான். இன்னும ஜபானியாக்களில் அத்யாயீல் என்று ஒரு வருண்டு. அவர் ஐந்நூறு வருஷம் பிரயாணத்தூர உயரமுள்ளவர் அவருக்கு எழாயிரம் தலைகளிருக்கும், தலையொன்றிற்த எழாயிரம் முகம், முகமொன்றிற்கு எழாயிரம் வாய்களும், வாயொன்றிற்கு எழாயிரம் பற்களுமிருக்கும், ஒவ்வொரு பற்களும் ஒவ்வொரு மலை போலிருக்கும், அது ஒன்றோடொன்று அடிப்பட்டு எழும் சத்தம் எழுவான், படுவான்வரையும் கேட்கும். இன்னும் அவருக்கு எழாயிரம் கைகளிருக்கும். கையொன்றிற்கு எழாயிரம் விரல்களிருக்கும், விரலொன்றிற்கும் எண்பது வருஷபிரயாணத்தூர நீளமுள்ள எழாயிரம் பாம்புகளிருக்கும். அவர் வலதுகையில் அக்கினித் தடியொன்று பிடித்திருப்பார். அதன் தலைபயிலும் எழாயிரம் பாம்புகளிருக்கும். எழுவானத்திலு முள்ளவர்களு , எழு பூமியிலு முள்ளவர்களும் கூடிநகர்த்தினாலும் அந்தத்தடி அசையாது. அவர் வசம் பத்துலட்சம ஓநாய்களும், ஒவ்வொரு ஓநாய்களுக்கு, பத்துலட்சம் நாய்களும், நாய்வொன்றிற்குப் பத்துலட்சம் சிங்கங்களு மிருக்கும்.

நரகத்தில் அங்கங்கே யாரும் அறியக்கூடாத பருப்பமும், நீளமுள்ள பாம்புகளும், தேள்களும் திரளாய் மலிந்திருக்கும். அங்குள்ள தலைகள், சங்கிலிகள், தடிகள் இன்னு முள்ள இவை போன்ற கருவிகளெல்லாம் நெருப்பினாலுண்டாய் எவனெவன் எதைக்கொண்டு வேதனைபபடுகிறானோ அவனவனுடைய பெயரை அதில் எழுதியிருக்கும். நரகத்தில் எறிக்கப்படும். நெருப்புக்கு மனிதர்களையும், கந்தகக்கற்களையும் விரகாகப்போட்டு எறிப்பார்கள்.

நரகவாளி ஒவ்வொருவனும் மக்காவுக்கும், மதீனாவுக்கும் இடையிலுள்ள தூரவளமான இடம் உட்காந்திருக்கப் போதாத அளவாய் பெருத்துபபோவான், தேகமபருத்து வாயிலுள்ள பற்கள் மலைபோலாய தொண்டைத் துவாரம சிறிதாயிருக்கும், நரகவாளிகள் யெல்லாம் கீற்புடவையால் உடையுடுத்தி யிருப்பார்கள். அவர்களுக்கு உணவு லதீத என்றும மரமுதலானவைகளும் குடிப்பு அறக்காச்சின வெனீருமாம. அவர்கள் பசிபொறுக்காமல் அந்த முன்மரம் முதலானவைகளில் போய் விழுந்து கடிப்

பார்கள். அதில் எம்மட்டுக்கடித்தார்களோ அவர்கள் சதையில் அம்மட்டை அந்த மரங்கள் கடிசது பிடுங்கிக்கொள்ளும். தாகம் பொருக்காமல் அந்த ஊனீரைக் குடிக்கப்பார்த்தால் முகத்துச் சதைகள் இற்றிற்றுக் கழன்று அதில்விழு. ஜபானியார்கள் ஒருவனை ஒருதரம் ஒருஅடி அடித்தால் அவன் உடல் நொறுங் குண்டு தவிடு பொடியாய்ப்போய் பின் உண்டாகிவிடும், ஒருவனை ஒருமிருகமாவது விஷஜெந்துவாவது கடித்தால் அதன்விஷம் உடலெங்கும் பரவி ஆயிரம் வருஷம் வரைக்கும் கொதித்துக் கொதிக்கும், சதைகள் இற்றிற்றுவிழும், விழுந்தாலும் அப்போ துக் கப்போது மறுபடியும் உண்டாகிவிடும்.

நரகவேதனை இருவகை. ஒன்று சூடு ஒன்று குளிர். சூட்டிற் கிடக்கிறவன் குளிரிற்கிடக்க நாடுவான். குளிரிற் கிடக்கிறவன் சூட்டிற்கிடக்க நாடுவான். நரகவாளி ஒவ்வொருவனும் அக்கினிப் பெட்டிக்குள் ஆயிரம் வருஷமும், அக்கினிக் கிணற்றுக்குள் ஆயி ரம் வருஷமும், அறக்காய்ந்த ஊனீரில் ஆயிரம் வருஷமும், பந்தம் எரிவதுபோல எரியப் பட்டு ஆயிரம் வருஷமாக வேதனைப் படு வான். அப்போது ஒவ்வொருவனும் கண்ணீர்விட்டு ஆயிரவரு ஷமும், அது அற்று இரத்தம் விட்டு ஆயிர வருஷமும், அது அற்று சீர்விட்டு ஆயிரம் வருஷமும் சத்தமிட்டழுது, மாலிக்கு அலைஹிஸ்ஸலாமவர்களை கூப்பிட்டு அலறுவான். அப்படி ஆயிரம் வருஷம் அலறினால் அவர்கள் ஒருதரம் திரும்பிப்பார்த்து, வழி கெட்டவனே உன் ஸ்திதி என்ன என்பார்கள். அப்போது அவன் தான் படும் வேதனையைச்சொல்லி தன்னை ரக்ஷிக்கவேண்டுமென் றும், இனி ஒருதரம் இங்கு வரும்படி இடம் வைத்துக்கொள்ள மாட்டேனென்றும், அல்லது என்னை மௌத்தாக்கி விடவேண்டு மென்றும அவர்களிடம முறையிடுவான். அதற்கு அவர்கள் நீ கேட்பது ஒருக்காலும் பலிக்காது, உனக்கு இங்கிருந்து மீளவகை யில்லை. இப்படியே தருபட்டிருப்பாய் என்று அநேக ஆயிர வருஷங்களுக்குப் பிறகு பதில் சொல்லி விட்டுத் திரும்பி விடு வார்கள்.

நரக லட்சணத்தையும், அங்கு நடக்கும் வேதனை வகையை யும் ஒன்றொன்றாகச் சொல்லவேண்டுமானால் எத்தனைக்கோடி புத்தகமானாலும் எழுதி முடியாது, புத்திமான்களுக்கு ஒன்று போதுமென்று இம்மட்டில் நிறுத்தி இனி நடப்பதைச் சொல்லு கிறோம்.

இவ்வித அகாதமான கொடிய நரகத்தில் நபி ஆதம் அலைஹிஸ்ஸலாமவர்கள் காலந்தொட்டு ஸூறா தும் வரையுமுள்ள காபிர்கள் எல்லாரும் போய்ச் சேர்ந்து விடுவார்கள். மூஃமினனவர்கள் அடங்கலும் ஸுவர்க்கத்தில் போய்ச் சேர்ந்து விடுவார்கள். அதன் பிறகு முன் மிறுஸாதில் தடைப்பட்டு இடையில் ஒளித்து வைக்கப்பட்டிருக்கும் இரண்டு கூட்டத்தாரையும் நரகத்திற்கு அனுப்பும்படி அல்லாஹுத் தஆலா ஜபானியாக்களுக்கு கட்டளை பண்ணுவான். உடனே ஜபானியாக்களில் அநேகர் அந்தக் கூட்டத்தாரிடம் வந்து அவர்களைப் பார்த்து நீங்கள் யாருடைய உம்மத்து என்று கேட்பார்கள். அப்போது அந்த ஜபானியாக்களுடைய பயங்கரமான தோற்றத்தை அவர்கள் கண்டு பயந்து நபி நாயகமவர்களுடைய பெயரைச் சொல்லி அவர்களுடைய உம்மத்துகள் என்று சொல்லி மறந்துபோய் நாங்கள் குறுஆனைச் சுமந்தவர்கள் என்று சொல்லுவார்கள். இதைக்கேட்டு ஜபானியாக்கள் அவர்களைப் பார்த்து அப்படியானால் நீங்கள் உங்கள் நபியுடன் ஏன் பாலத்தைக் கடக்கவில்லை என்னு கேட்பார்கள். இக்கேள்விக்கு அவர்கள் நாங்கள் குறுஆனைச் சுமந்திருந்தும் அது சொல்வதுபோல நடக்காமலும், முற்றிலும் மாறாகவே நடந்தோம், ஹறாமையெல்லாம் ஹலாலென்றே எடுத்துக் கொண்டோம். ஹலாலையெல்லாம ஹறாமாக விட்டு விட்டோம். எங்கள் கடமைகளைச் சரிவர இறுக்கவிலலை அதனால் தான் எங்களுக்குப் பாலங் கடக்கச் சக்தியில்லை என்று பதில் சொல்லுவார்கள், அப்படியானல் வாருஙகள் என்று ஜபானியாக்கள் அவர்களை இழுத்துக்கொண்டு நரகத்திற்குப் போவார்கள்.

அவர்களில் ஒவ்வொருவரையும் கடுங்கோபமும், பெருந்தேகமுள்ள ஜபானியாக்களில் ஆயிரம் ஆயிரம் பேர்கள் காவலாய்ப் பற்றிப்பிடித்து இழுத்துக்கொண்டு போவார்கள். அவர்கள் போகும்பாதை மேடாகவும், பள்ளமாகவும், அக்கினிக் காங்கையும், புகையும், இருளும், முட்களும் அடர்ந்ததாகவு மிருக்கும். அதில் நடக்கும் அவாகள் அதைககண்டு எங்களுக்கு என்ன லபித்தது, இதெனன வெருட்சி, இது எங்கே போகும் பாதை என்று சொலலி பரிதபிப்பார்கள். அப்போது அவர்களை இழுத்துக் கொண்டு போகும் ஜபானியாக்கள் ஏ எளியர்களே! இந்தப் பாதை நரகத்திறகுப் போகிற பாதையாயிருக்கும் என்று சொல்லுவார்கள். இதைக் கேட்டவுடனே அந்தக் கூட்டத்தார்கள்

கால்கள் தளர்ந்து, விலவிலத்துத் தரையில், உட்கார்ந்து விடுவார்கள். உடனே ஜபானியாக்கள், அவர்களை நடந்து வரும்படி பற்றிப் பிடித்து இழுப்பார்கள், இழுக்கும்போது அவர்கள் எங்களுக்கு நேரிட்ட கைசேதம் எவ்வளவு பெரிது, கொஞ்சமும் சகயில்லையே அதிகக் கஷ்டமும், வருத்தமுமாயிருக்கின்றதே என்று அலறுவார்கள். அப்போது அல்லாஹுத் தஆலா இடத்திலிருந்து ஜபானியாக்களே என் ஹபீபு முஹம்மதுடைய பாவியான அந்த உம்மத்தை நீங்கள் மெல்லமெல்ல நடத்திக்கொண்டு போங்கள், அவர்கள் உட்காரவிரும்பினால் உட்காரட்டும், நடக்க விரும்பினால் நடக்கட்டும், அவர்களுக்கு ஏற்றபடி பையப்போய்ச் சேரட்டும் என்று ஒரு உத்தரவு பிறக்கும். அப்படியே அவர்களை நடத்திக் கொண்டுபோவார்கள். அப்படி நடந்து நரகத்தின் வாசலில் வந்து சேர்ந்தவுடன் நரகத்தைப் பார்ப்பார்கள். அந்த நரகத்து நடுவில் ஒரு அக்கினி மேடையில் மாலிக்கு அலைஹிஸ்ஸலாமவர்கள் உட்கார்ந்திருப்பார்கள். வாசலில் வந்திருக்கும் கூட்டத்தாரை மாலிக்கு அலைஹிஸ்ஸலாமவர்கள் பார்த்து ஏ! பாவிகளே நீங்கள் யாருடைய உம்மத்து என்று கேட்பார்கள். இக்கேள்விக்கு அவர்கள் நாங்கள் குறுஆனைச் சுமந்தவர்கள் என்று சொல்லுவார்கள். அப்போது மாலிக்கு அலைஹிஸ்ஸலாமவர்கள் அவர்களைப் பார்த்து உங்களுக்கு என்னகேடு, அல்லாஹுத் தஆலா மாறு செய்ய வேண்டாம் என்று அந்த குறுஆனில் சொல்லவில்லையா? என்று கேட்பார்கள். அதற்கு அவர்கள் ஆம் அப்படிச் சொன்னதுண்டு, எங்களுக்குத் தோஷித்தனம் மேலிட்டது, ஆதனால் நாங்கள் தோஷிகளானோம் என்று சொல்லுவார்கள். பிறகு மாலிக்கு அலைஹிஸ்ஸலாமவர்கள் அவர்களைப் பார்த்து நீங்கள் தோஷிகளானால் உங்கள் கால், கைகளில் விலங்கில்லாமலும், முகங்கள் கறுக்காமலும், நல்ல லக்ஷணத்துடன் இருக்கிறீர்களே அதென்ன என்று கேட்பார்கள். இக்கேள்விக்கு அவர்கள் நாங்கள் நபி முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்களுடைய உம்மத்தில் பாவிகள், அதனால் தான் எங்களுக்குத் தாங்கள் சொன்ன அந்த லக்ஷணங்களில்லை என்று சொல்லுவார்கள். அப்போது அல்லாஹுத் தஆலா இடத்திலிருந்து மாலிக்கு அலைஹிஸ்ஸலாமவர்களுக்கு ஒரு கட்டளை பத்திரம் வரும். அதில் "பிஸ்மில்லாஹிர்றஹ்மா நிர்றஹீம்" மஹா மகிமையுள்ளவனும், அடியாரை அடக்கி யாள் பவனுமாகிய அல்லாஹுத் தஆலா இடத்திலிருந்து நரகத்திற்கு அதிகாரியாகிய மாலிக்குக்கு அனுப்பப்பட்ட கட்டளை

யானது முஹம்மது நபியுடைய உம்மத்தில் பாவிகளான ஒரு கூட்டத்தார் உம்மிடத்தில் வந்திருக்கிறார்கள். அவர்கள் சில போதாவது தொழுதவர்களாகையால் அவர்களை முகங்களை நெருப்பினாற் கருக்கவேண்டாம். தொழுவதற்காகப் பள்ளிவாசலுக்கு நடந்தவர்களாகையால் கால்களுக்கு விலங்கிடவேண்டாம், என்னிடம் கையேந்தி துஆ செய்தவர்களாகையால் கைகளுக்கு விலங்கிடவேண்டாம், நோன்பு பிடித்தவர்களாகையால் நரகத்துக் கள்ளிச் சோற்றையும் அறக்காய்ந்த ஊன நீரையும் கொடுக்கவேண்டாம், அவர்கள் தாமாகக் கால்களால் நடந்து நரகத்திற்குள் நுழையப்படும், குப்புறக் கிடத்தி இழுக்கவேண்டாம் என்று எழுதியிருக்கும். இந்தப் பத்திரத்தை மாலிக்கு அலைஹிஸ்ஸலாமவர்கள் பார்த்துக்கொண்டு ஏ! தோஷிகளே நீங்கள் நரகத்திற்குள் நுழையுங்கள் என்று சொல்லுவார்கள். அப்போது அவர்கள் மாலிக்கு அலைஹிஸ்ஸலாமவர்களைப் பார்த்து நாங்கள் செய்த குற்றங்களைப் பற்றிச் சற்றுநேரம் இங்கிருந்து அழவேண்டும். அதற்கு இடங்கொடுங்கள் என்று கேட்பார்கள். அதற்கு மாலிக்கு அலைஹிஸ்ஸலாமவர்கள் அப்படி உங்களுக்கு இடங்கொடுக்க எனக்கு அதிகாரமில்லை என்று சொல்லி விடுவார்கள். உடனே அறுஸிக்குள் இருந்து மாலிக்கே அவர்களை விட்டு விடும் அழுகிறபடி அழட்டும் என்று ஒரு சத்தம் பிறக்கும். அப்போது மாலிக்கு அலைஹிஸ்ஸலாமவர்கள் அவர்களைப் பார்த்து நீங்கள் அழுதாலும் பலனில்லை அழுங்கள் என்று சொல்லுவார்கள். பிறகு அவர்கள் எல்லாரும் நரகத்து வாசலிலும், உட்கார்ந்துக்கொண்டு, ஆணும், பெண்ணும், வாலிபரும், வயோதிபருவமாய்க் கூட்டங் கூட்டமாகச் சேர்ந்திருந்து பலவித ஒப்பாரி சொல்லிப் புலம்பி அழுவார்கள். அப்படியிருக்கையில் அல்லாஹுத் தஆலா இடத்திலிருந்து மாலிக்கே நீர் அந்தப் பாவிகளைக் கண்டிக்கவேண்டாம், நரகத்து ஏழுதட்டுகளில் மேற்றட்டு வாசலில் புகுத்தும் என்று கட்டளை பிறக்கும். உடனே மாலிக்கு அலைஹிஸ்ஸலாமவர்கள் அப்பாவிகள் எல்லாரையும் மேற்சொன்ன நரகத்து வாசலில் நுழையும்படி ஏவுவார்கள், ஏவினவுடன் ஜபானியாக்கள் அவர்களை இழுத்து நரகத்தில் விடுவார்கள், அப்போது அங்கு நடக்கும் பயங்கரமானதும், தாங்கக் கூடாததுமான அமளிகளை அவர்கள் கண்டு கூக்குரலிட்டு அழுது வெருள்வார்கள். உடனே நரகத்து அக்கினி நாக்கொன்று புறப்பட்டு எல்லாரையும் வளைத்துச் சுழற்றி உள்ளே யிழுத்துப் போட்டுக் கொள்ளும்.

நரகத்தில் அவர்களில் சிலருக்குப் பரண்டைக் காலளவும், சிலருக்கு முதந்தாளளவும், சிலருக்கு இடுப்பளவும், சிலருக்கு மார்பளவுமாக அக்கினிபற்றி எறியும். இன்னும் சிலருக்கு இருநயத்திலும், முகத்திலும் பற்றி யெறியும்படி அக்கினி தாவும். அப்போது அல்லாஹுத் தஆலா இடமிருந்து மாலிக்கே அவர்களுடைய இருநயத்திலும், முகத்திலும் அக்கினியைத் தீண்ட வொட்டாமல் தணியும். என்னை வணங்கின அவர்களை என்னை வணங்காதவர்களுக்கு ஒப்பாக்க வேண்டாம் என்று மாலிக்கு அலைஹிஸ்ஸலாமவர்களுக்கு கட்டளை வரும், அப்படியே அவர்கள் நடத்துவார்கள். இவ்விதமாக அந்தப் பாவிகள் அல்லாஹுத் தஆலா நாடின காலம் வரையும் அவரவர்கள் தரப்படி அங்குக்கிடந்து வேதனைப் படுவார்கள்.

இவர்களுக்குமுன் நரகம்புகுந்த காபிர்கள் எல்லாரையும் முகங்கள் கறுத்து, கண்கள் நீலநிறமாய், வாய்கள் முத்திரிக்கப்பட்டு ஒவ்வொருவன் வாயிலும் அக்கினிச் சங்கிலியைவிட்டுப் பின்துவாரத்தி லிழுத்து இடதுகையைக் கழுத்திலும், வலது கையை மார்பிலுமாகத் திணித்து முதுகுப்புறம் இழுத்துச் சேர்த்து வளைத்துக் கட்டி, கைகால்களின் தலை பூட்டி, ஒவ்வொரு ஷைத்தானையும் கூடப் பிணைத்துக் குப்புறப்போட்டுப் பலவாறாக வேதனை செய்வார்கள். அவர்களுக்கு இருப்பிடமற்ற ஆறு தட்டுகளுமாம், அவர்கள் படும் வேதனைவகையை எவராலும் சொல்லி முடிக்கக் கூடாது அவ்வளவாய் வேதனைப்படுவார்கள்.

அல்லாஹுத் தஆலா நரகத்து அடித்தட்டில் கிடக்கிற காபிர்களையும், மேல் தட்டிலிருக்கிற மூக்மினான பாவிகளையும் ஒருவரையொருவர் பார்த்துக் கொள்ளும்படி அங்கங்குள்ள ஜன்னல்களைத் திறந்து போடுமென்று மாலிக்கு அலைஹிஸ்ஸலா மவர்களுக்குக் கட்டளை பண்ணுவான். அப்படியே திறந்து வைப்பார்கள். அதனால் காபிர்கள், மூஃமினான பாவிகளைப் பார்த்து நீங்கள் துன்யாவில் அல்லாஹுத் தஆலா ஒருவனென்று அவனையே வணங்கிக்கொண்டு நாங்களே ஸுவர்க்கத்திற்கு உரியவர்களென்றும் அல்லாவுக்கு இணைவைத்தவர்கள் நரகத்திற்கு உரியவர்களென்றும் சொன்னீர்களே, இப்போது அல்லா ஒருவனையே வணங்கின நீங்களும், அவனுக்கு இணைவைத்து வணங்கின நாங்களும் சமமாகத் தானே யிருக்கிறோம். நீங்கள் கொண்டிருந்த ஈமானும், உங்களுடைய இஸ்லாமும், உங்களுக்குப் பலன் தரவில்லையே என்று

சொல்லுவார்கள். அப்போது மூகமீனான பாவிகள் அவர்களைப் பார்த்து எங்களுடைய பாவம் மிகைத்து விட்டது. அதனால் நாங்கள் இப்படியானோம். அல்லாஹுத் தஆலா ஏவின பிரகாரம் நடந்திருந்தால் எங்களுக்கு இந்தக்கதி நேரிட்டாது, ஆனால் நாங்கள் அவனுக்கு ஈமான் கொண்டவர் களாகையால் இனி எங்களை ரக்ஷிப்பான் என்று நம்பி யிருக்கிறோம் என்று சொல்லுவார்கள். காபிர்கள் இவ்விதம் கேட்டுப் பரிகாசம் செய்வதைப் பற்றி அந்த மூஃமீனான பாபிகள் சஞ்சலப்பட்டு சத்தமிட்டு அலறுவார்கள்.

அப்போது அல்லாஹுத் தஆலா என்னுடைய ஹபீபு முஹம்மதுடைய உம்மத்தில் நரகத்தில் வேதனை படுகிறவர்களின் காரியம் எப்படியென்று மாலிக்கைக் கேட்பான். இக்கேள்விக்கு அவர்கள் ஆண்டவனே! அவர்களுடைய சரீரத்திலுள்ள தோல்களெல்லாம் வெந்துவிரிந்து சதைகளெல்லாம் தீய்ந்து கருகி நரம்புகளெல்லாம் அற்றற்று, உயிர் மாத்திரம் மீந்திருக்கின்றது என்று சொல்லுவார்கள். அல்லாஹுத் தஆலா மாலிக்கே அவர்களுக்குச் செய்யும் வேதனையை இலகு படுத்திவிட்டு, காபிர்களின் வேதனையைப் புதிது புதிதாக அதிகப்படுத்தும் என்று கட்டளை பண்ணுவான். உடனே மாலிக்கு அலைஹிஸ்ஸலா மவர்கள் அமனியான பெருஞ்சத்தமாகச் சப்தமிட்டு நரகத்தைக் கூப்பிடுவார்கள், அப்போது நரகம் கீழது மேலதாகக் குழம்பிப் புரண்டு கொதித்துப்பாய்ந்து வரும். ஜபானியாக்களும், கொடிய பாம்புமுதலான விஷஜெந்துக்களும், புலி முதலான துஷ்டமிருகங்களும், முன்னிலும் பல மடங்கு அதிக மும்முரமாய்க் காபிர்கள் மீதுவிழுந்து அதாபுசெய்ய எத்தனிக்கும். அதை மூஃமீனான பாவிகள் கண்டு அதிகத் திகில் பிடித்து வெருண்டு மாலிக்கு அலைஹிஸ்ஸலா மவர்களைப் பார்த்து தாங்கள் இன்னும் எங்களை வேதனை செய்ய நாடுகிறீர்களோ? எங்கள் மீது இரக்கம் வைக்கக் கூடாதா என்று கேட்பார்கள். அதற்கு அவர்கள் கிருபை செய்கிற அல்லாஹுத் தஆலா உங்கள் பேரில் கோபமா யிருக்கையில் நான் எப்படி இரங்குவேன் என்று சொல்வார், அப்போது அந்தப் பாவிகளடங்கலும், (யா அர்ஹமர்ருஹிமீன்) என்று அல்லாஹுத் தஆலாவைக் கூப்பிட்டுச் சப்த மிடுவார்கள். அப்போது மாலிக்கு அலைஹிஸ்ஸலா மவர்கள் அவர்களைப் பார்த்து ஷஹாதத்துக் கலிமாவைச் சொல்லுங்கள் என்று சொல்லுவார்கள். உடனே எல்லாரும்

பெருஞ் சப்தமாக அந்தக் கலிமாவைச் சொல்லிக்கொண்டு (யா முஹம்மது வா அஹ்மது) என்று சப்தமிடுவார்கள்.

இந்தச் சப்தம் அதிகமானவுடன் அல்லாஹுத் தஆலா ஜிபுறயீல் அலைஹிஸ்ஸலாமவர்களை அழைத்து என் ஹபீபு முஹம் மதுடைய உம்மத்துகள் நரகத்திலிருந்து தௌஹீது கலிமாவைக் கொண்டு சப்தமிட்டு என்னைக் கூப்பிடுகிறார்கள். ஆகையால் நீர் மாலிக்கு இடம்போய் அவர்கள் அதாபை இலகுவாக்கச் சொல் லும் என்று கட்டளை செய்வான். உடனே ஜிபுரீல் அலைஹிஸ் ஸலாமவர்கள் மாலிக்கு அலைஹிஸ்ஸலாமவர்களிடம் வந்து, மாலிக்கே, நபி முஹம்மது முஸ்தபா ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்களுடைய உம்மத்தில் பாவியானவர்களைப் போட் டிருக்கும் நரகத்து வாசலைத் திறக்கும்படியாகவும், வேதனையை இலகுப் படுத்தும்படியாகவும், அல்லாஹுத் தஆலா கட்டளை பண்ணி யிருக்கிறான் என்று சொல்லுவார்கள். உடனே மாலிக்கு அலைஹிஸ்ஸலாமவர்கள் நரகத்து வாசலைத் திறப்பார்கள். ஜிபு ரீல் அலைஹிஸ்ஸலாமவர்கள் அங்கிருக்கும் மூஃமீனான பாவி களைப்பார்த்து அவர்கள் கருகினக்கொள்ளிக் கட்டைகளைப்போல் இருக்கக்கண்டு அனுதாபப்பட்டு அழுவார்கள். ஜிபுரீல் அலை ஹிஸ்ஸலாமவர்களைக் கண்டவுடன் அங்குள்ள நெருப்புத் தணிந்து போம். அப்போது மூஃமீனான பாவிகள் ஒருவரை யொருவர் பார்த்து நம்மை இப்போது நெருப்பு என் சுடவில்லை யென்று பேசிக்கொண்டு அண்ணார்ந்து பார்ப்பார்கள். பார்க்கையில் ஜிபு ரீல் அலைஹிஸ்ஸலார்வர்கள் நிற்கக்கண்டு அவர்களைப் பார்த்து நீங் கள் யார், உங்கள் பொருட்டால் தான் அல்லாஹுத் தஆலா எங் கள் வேதனையை நிருத்தி கிருபை செய்திருக்கிறான் என்று சொல்லுவார்கள். அப்போது ஜிபுரீல் அலைஹிஸ்ஸலாமவர்கள் அவர்களுக்கு ஸலாம் சொல்லி நான் ஜிபுரீல், உங்களுடைய நபி முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்களுக்கு ஒஹி கொண்டு போகிறவன் என்று சொல்லுவார்கள். உடனே அவர் களெல்லாரும் ஒருமித்து எங்களுக்கு உவப்பான ஜிபுரீலே! எங் களை இந்த நரகம் படுத்தும் பாட்டைத் தாங்கள் பார்த்தீர்களா என்று சொல்லுவார்கள். அதற்கு ஜிபுரீல் அலைஹிஸ்ஸலாமவர் கள் ஆம் பார்த்தேன் என்று சொல்லுவார்கள். பிறகு அவர்க ளெல்லாரும் எங்கள் நபி எங்கே என்று கேட்பார்கள். கேட்ட வுடன் உங்கள் நபி ஸுவர்க்கத்திலிருக்கிறார்கள். நீங்கள் இங்

இருந்து வேதனை படுவது அவர்களுக்குத் தெரியாது, தெரிந்தால் அவர்கள் அங்குத் தரித்திருக்க மாட்டார்கள். நான் அவ்விடம் போவேன் உங்கள் நபிக்கு நீங்கள் சொல்லவேண்டிய சமாச்சாரம் ஏதாவதிருந்தால் சொல்லுங்கள் நான் போய்ச் சொல்லுகிறேன் என்று ஜிபுரீல் அலைஹிஸ்ஸலாமவர்கள் சொல்லுவார்கள். அவர்களைப் பார்த்து தாங்கள் எங்கள் நபியிடம் போனால் எங்களுடைய ஸலாமை அவர்களுக்குச் சொல்லி, நாங்கள் நரகத்திலிருந்து தாங்கக்கூடாத அதாபை அனுபவிக்கிறோம் என்றும், எங்களுடன் நரகத்திலிருக்கும் காபிர்கள் எங்களைப் பார்த்து உங்களுடைய ஈமான் உங்களுக்குப் பலன் கொடுக்கவில்லையே யென்று பழிக்கிறார்கள் என்றும், அதனால் எங்களுக்கு வியாகூலம் அதிகமாயிருக்கிறது என்றும் சொல்லுவார்கள்.

இதைக்கேட்ட ஜிபுரீல் அலைஹிஸ்ஸலாமவர்கள் அங்கிருந்து அழுதுகொண்டு அல்லாஹுத் தஆலா சமுகத்திற்கு வருவார்கள். அல்லாஹுத் தஆலா அவர்களைப் பார்த்து ஜிபுரீலே! என் ஹபீபு முஹம்மதுடைய உம்மத்தின் பாவிகள் உம்மிடம் என்ன சொன்னார்கள் என்று கேட்பான். ஜிபுரீல் அலைஹிஸ்ஸலாமவர்கள் அவர்கள் தங்கள் நபிக்குச் சொல்லும்படியாக ஒரு செய்தி சொன்னார்கள் என்று சொல்லுவார்கள். அதைப் போய்ச் சொல்லிவிட்டீரா? என்று அல்லாஹுத் தஆலா கேட்பான். இன்னும் சொல்லவில்லை என்று சொல்லுவார்கள். அப்படியானால் போய்ச் சொல்லிவிடும் என்று அல்லாஹுத் தஆலா கட்டளை பண்ணுவான்.

பிறகு ஜிபுரீல் அலைஹிஸ்ஸலாமவர்கள் ஸுவர்க்கத்திற்கு வந்து (தூபா) என்னும் மரத்தடியில் ஆணி முத்தாலிட்ட ஒரு கூடாரத்திலிருக்கும் நபி முஹம்மது முஸ்தபா ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்களுடைய சமுகத்திற்போய் அழுதுகொண்டு நிற்பார்கள். அப்போது நபி நாயகமவர்கள் அவர்களைப் பார்த்து ஜிபுரீலே உம்மை அழச்செய்தது என்ன என்று கேட்பார்கள். அப்போது ஜிபுரீல் அலைஹிஸ்ஸலாமவர்கள் முஹம்மதே! நான் பார்த்ததைத் தாங்கள் பார்ப்பீர்களானால் என்னைப் பார்க்கிலும் அதிகமாக அழுவீர்கள். தங்கள் உம்மத்திலுள்ள ஒரு கூட்டத்தார் நரகத்திலிருந்து வேதனைப் படுகிறார்கள்.

அவர்கள் தங்களுக்கு ஸலாம் சொல்லி எங்களுக்கு நேரிட்ட தீங்கு எவ்வளவு வலுப்பமான தீங்கு என்றும், "முஹம்மதே

முஹம்மதே முஹம்மதே" என்னும் இதே சப்தம் போடுகிறார் களே பாருங்கள் என்று சொல்லுவார்கள். உடனே நபி நாயக மவர்கள் காது தாழ்த்திக் கேட்பார்கள், அவர்கள் சொன்னபடியே கேட்கும். தங்கள் உம்மத்திலுள்ள பாவிகள் நரகத்திலிருந்து கொண்டு முஹம்மதே முஹம்மதே என்று அழுது கூப்பிடும் சப்தத்தை நபி நாயகமவர்கள் கேட்டவுடனே திடுக்கிட்டு, (யாஉம் மத்தீ) என்று அலறிக்கொண்டு விரைவாக யெழுந்து அங்கிருந்து கண்ணீர் தாரை தாரையாயோட அழுதவர்களாய் அறுஷுக்கு வருவார்கள். அவர்கள் வரும்போது மற்ற நபிமார்களும், ஸாலி ஹானவர்களும் முன் மரத்திலிருந் தழுதுக்கொண்டு பிதா, மாதாக் களை தேடின பிள்ளைகளும் கூடவே புறப்பட்டு வருவார்கள். நபி நாயகமவர்கள் அப்போது வருங்காட்சி தங்கள் உம்மத்து மீதிருக் கும் அன்பை நன்றாய் வெளியாக்கும்.

ஜஹன்னம் முடிந்தது.

---

## 13-ம் பஸல்.

## ஷபாஅத்து.

ஷபாஅத்து என்பது மன்றாட்டம். அது குபுறா என்றும், ஸுஹுறா என்றும் இருவகைப்படும். ஷபாஅத்துல் குபுறா வானது மஹ்ஷரில் தடைப்பட்டு வருந்தும் கல்குகளடங்களையும் சீக்கிரம் விசாரித்துத் தீர்க்கும்படியும் வேறு நன்மை யென்பது அணுவளவும் ஈமான் மாத்திர முள்ளவர்களாய் நரகம் புகுந்த மூஃ மீனானவர்களை மீட்டிச் ஸுவர்க்கம் புகுத்தவும், அல்லாஹுத் தஆலாவிடம் மன்றாடுவது. இந்த அதிகார பதவிதான் மகாமன் மஹ்மூது என்று சொல்லப்படும். ஷபாஅத்துஸ் ஸுஹுறா வானது தங்கள் உம்மத்திலுள்ள மூஃமீனான சிலரைக் கேள்வி கணக்கில்லாமல் ஸுவர்க்கம் புகுத மன்றாடுவதும், அஹுறு காபுக்களை மன்றாடுவதும், சிலருக்குச் ஸுவர்க்கபதவியை அதி கப்படுத்த மன்றாடுவதுமாம். இது ஷபாஅத்துல் குபுறாவில் சீக் கிரம் விசாரித்துத் தீர்க்கும்படி மன்றாடுவதை (ஷபாஅத்துல்) *ஊலா என்றும், அணுவளவும் ஈமான் மாத்திர முள்ளவர்களைச் ஸுவர்க்கம் புகுத்த மன்றாடுவதை (ஷபாஅத்துல்) ‡உகுறா என் றும் சொல்லுவார்கள். மேற்சொன்ன ஷபாஅத்துகள் அடங்கலும்

---

* ஊலா-முடிந்தது.

‡ உகுறா-பிந்தினது.

நபி முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்களுக்கு உடையதேயன்றி மற்ற யாவருக்கும் உடையதல்ல. இன்னும் நரகம் புகுதக் கட்டளைப் பெற்றவர்களைப் புகுத வொட்டாமல் மன்றாடுவதும், வேறு சில நன்மைகளுமுள்ள பாவிகளை மன்றாடுவதுமாகிய இந்த மூன்று மன்றாட்டங்களும் நபி நாயகமவர்களுக்கும் மற்ற நபிமார்களுக்கும் பொதுவா யுடையன.

நபி நாயகமவர்களும், மற்ற நபிமார்களும் மன்றாடுவதல்லாமல், மலக்குகள், அஸ்ஹாபுகள், ஷுஹதாக்கள், ஔலியாக்கள், ஸாலிஹானவர்கள், மாலிக்கு முன் மௌத்தான சிறு பிள்ளைகள் ஆகிய இவர்களும் மன்றாடுவார்கள். இவர்கள் மன்றாடுவதெல்லாமல் கடைசியில் சொன்ன மூன்றுவித மன்றாட்டங்களேயாம். குர்ஆன் மன்றாடுவதும், நோன்பு மன்றாடுவதும் உண்டு. இவர்களில் கூட்டத்தாரை, குடும்பத்தாரை, இஷ்டத்தாரை, மன்றாடுகிறவர்களும், ஒருவரை, மூவரை மன்றாடுகிறவர்களும், இருப்பார்கள் இந்த மன்றாட்டம் அவரவர் அமலுக்குத் தக்கபடியேயாம்.

நபி முஹம்மது முஸ்தபா ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்கள் முன் சொன்னபடி நரகத்திற் கிடக்கும் தங்கள் உம்மத்திலுள்ளவர்களை மன்றாடுவதற்காகச் ஸுவர்க்கத்திலிருந்து அழுதுகொண்டு புறப்பட்டு அறுஸுக்கு அருகில் வந்து, மற்ற நபிமார்களும் பின் தொடர்ந்து நிற்க அல்லாஹுத் தஆலாவுக்கு ஸுஜூது செய்து, தாங்கள் திருவாய் மலர்ந்து தாங்களும், தாங்கள் அல்லாத மற்ற எவர்களும், எந்தக்காலத்திலும், ஒரு போதும் புகழ்ந்திராத புகழாக அல்லாஹுத் தஆலாவைப் புகழ்வார்கள். உடனே அல்லாஹுத் தஆலா முஹம்மதே தலையை யுயர்த்தும். நீர் விரும்பினதைக் கேளும் தருகிறேன். உமக்கு நான் ஷபாஅத்தைத் கொடுத்தேன், ஷபாஅத்துச் செய்யும் என்று சொல்லுவான். அப்போது நபிநாயக மவர்கள் எழுந்து நின்று ஆண்டவனே என் உம்மத்திலுள்ள ஒரு கூட்டத்தார் மீது உன் கட்டளையும், தீர்ப்பும் நிறைவேற்றி விட்டான். அதன்படி அவர்கள் வேதனையை அனுபவித்து விட்டார்கள். ஆகையால் நரகத்திலிருந்து மீட்ட எனக்கு நீ ஷபாஅத்தைத்தர வேண்டும் என்று கேட்பார்கள். கேட்டபோது அல்லாஹுத் தஆலா உமக்கு நான் ஷபாஅத்தைத் தந்துவிட்டேன் என்று சொல்லிவிட்டுப் பின்னுஞ் சொல்லுவான், ஜிபுரீல் அலைஹிஸ்ஸலா மவர்களை அழைத்து மாலிக்கு இடம்போய் நரகத்திற் கிடக்கிறவர்களுள் யாருடைய

இருதயத்தில் அணுப்பிரமான ஈமான் இருக்கிறதோ அவர்களை யெல்லாம் நரகத்தை விட்டு வெளிப்படும்படிச் சொல்லும் என்று கட்டளைப் பண்ணுவான்.

பிறகு ஜிபுரீல் அலைஹிஸ்ஸலாமவர்களும், நபி நாயகமவர்களும் அங்கிருந்து நரகத்திற்கு வருவார்கள். அப்போது நரகத்து அதிபதியாகிய மாலிக்கு அலைஹிஸ்ஸலாமவர்கள் நபி நாயகமவர்களைக்கண்டு எழுந்து நிற்பார்கள். உடனே நபி நாயகம் அவர்களைப் பார்த்து மாலிக்கே என்னுடைய உம்மத்தின் ஹால் என்ன என்று கேட்பார்கள். கேட்கவே மாலிக்கு றலியல்லாஹு அவர்கள் பட்ட அவஸ்தையை நான் என்ன சொல்லுவேன் என்று சொல்லுவார்கள். உடனே நபி நாயகமவர்கள் மாலிக்கு அலைஹிஸ்ஸலாமவர்களைப் பார்த்து நரகத்து வாசலைத்திறந்து அவர்களிருக்குந் தட்டின் மேல்மூடியை எடுத்துவிடும் என்று கட்டளைப் பண்ணுவார்கள். உடனே மாலிக்கு அலைஹிஸ்ஸலாமவர்கள் நபி நாயகமவர்களின் சொல்லுக்குக் கீழ்ப்படிந்து அல்லாஹுத் தஆலாவின் உத்திரவுப்படி நரகத்துவாசலைத் திறப்பார்கள், திறந்தவுடன் அங்கிருப்பவர்கள் நபி நாயகமவர்களைப் பார்த்து, முஹம்மதே எங்களை நரகத்து நெருப்புப் பற்றி எங்கள் தோல்கள், சதைகள், எலும்புகள் எல்லாவற்றையும் கருக்கிவிட்டதே. தாங்கள் எங்களை நரகத்தில் கிடக்கும்படியாய் விட்டுவிட்டு மறந்திருந்தீர்களே என்று எல்லாரும் ஒருமிக்கச் சப்தமிட்டு அழுவார்கள். அப்போது நபி நாயகமவர்கள் அவர்களைப் பார்த்து நீங்கள் இப்படி நரகத்திற் கிடந்து வேதனைப்பட்டது எனக்குத் தெரியாது என்று அநுதாபத்துடன் சொல்லுவார்கள்.

பிறகு நபி நாயகமவர்களுடைய மன்றாட்டத்தை கொண்டும், அல்லாஹுத் தஆலாவின் உத்திரவைக் கொண்டும் மேற்சொன்னபடி ஈமானுள்ள எல்லாரும் நரகத்தைவிட்டு வெளிப் படுவார்கள். அவர்கள் ஒவ்வொருவரும் நரகத்தில் எரிந்த கட்டையைப்போல் இருப்பார்கள்.

எல்லாரும் வெளிப்பட்டவுடன் பிள்ளைகளுள்ள தகப்பன்மாரும், தாய்மாரும், தம்தம்பிள்ளைகள் கைகளில் குடிப்பு முதலானவற்றை வைத்துக்கொண்டு நிற்பதைச் கண்டு எங்களுக்குத் தண்ணீர் கொடுங்கள் என்று கேட்பார்கள். அப்போது அந்தப் பிள்ளைகள் தம்மிடம் கேட்பவர்கள் தம்தம் தகப்பன் தாய்களாயிருந்தும், அவர்களிருக்கும் விகார பத்ருதினுல் அறியாமல், நீங்கள் யார்?

எங்கள் பிதா மாதாக்கள் அல்ல, விலகிப்போங்கள் என்று சொல்லும். அப்போது அவர்கள் அந்தப் பிள்ளைகளைப் பார்த்து நாங்கள் உங்கள் பிதா, மாதாக்கள்தான். நரகத்து நெருப்பினல் இப்படி விகாரப்பட்டிருக்கிறேம் என்று சொல்லுவார்கள்.

பிறகு அவர்களெல்லாரையும் நஹ்ருல் ஹயாத்து என்னும் ஜீவநதியில் கொண்டுபோய் முழுக்காட்டும்படி ஜிபுரீல் அலைஹிஸ்ஸலாமவர்களுக்கு அல்லாஹுத் தஆலாவின் கட்டளைப்பிறக்கும். அப்படியே ஜிபுரீல் அலைஹிஸ்ஸலாமவர்களும், நபிநாயகமவர்களும் அவர்களை அழைத்துக்கொண்டு மேற்படி நதியிற் கொணர்ந்து முழுகாட்டுவார்கள். அவர்கள் அந்த நதியில் முழுகினவுடனே அவர்கள் உள்ளுறுப்பு புறவுறுப்புகளெல்லாம் பரிசுத்தமாய் முகங்கள் பூரணச்சந்திரனைப் போலப் பிரகாசிக்கும். இவ்விதம் அவர்கள் பரிசுத்தப்பட்டாலும் ஒவ்வொருவருடைய நெற்றியிலும், நரகத்திலிருந்து மீட்சிபெற்றவர் என்று எழுதியிருக்கும்.

அவர்கள் அந்த நதியிற் குளித்து கரையேறினவுடன் பிள்ளைகளெல்லாம் தம்தம் பிதா மாதாக்களைத் தெளிவாய் யறிந்துக்கொண்டு வந்து கட்டி யணைத்துக் கொள்ளும். உடனே ஸுவர்க்கத்து மலக்குகள் பட்டாடைகள் கொண்டு வந்து அவர்களுக்கு உடுக்கக் கொடுப்பார்கள்.

அவர்களெல்லாரும் குளித்துக் கரையேறி உடைகள் உடுத்தித் தீர்ந்தபின், நபிநாயகமவர்கள் அவர்களை அங்கிருந்து அழைத்துக் கொண்டுபோய் அல்லாஹுத் தஆலாவின் சமுகத்தில் விடுவார்கள். எல்லாரும் அல்லாஹுத் தஆலாவுக்கு ஸுஜூது செய்வார்கள். அல்லாஹுத் தஆலா அவர்களைப் பார்த்து நீங்கள் நரகத்தை எப்படி கண்டீர்கள் என்று கேட்பான். இக்கேள்விக்கு அவர்கள் ஆண்டவனே அது மஹாகொடிய இருப்பிடம் என்று சொல்லுவார்கள். பிறகு என்னுடைய கட்டளையை மீறினவர்களுக்கு நான் கொடுக்கும் கூலி அதுதான். கலிமாவைக் கொண்டு உங்களை நான் ரட்சித்தேன். அது இல்லாவிட்டால் நீங்கள் அங்கேதான் இருப்பீர்கள். இப்போது நீங்கள் ஸுவர்க்கத்திற்குப் போங்கள் என்று உத்திரவுகொடுப்பான்.

இதுகளை நரகத்திற் கிடந்து வேதனைப்படும் காபிர்கள் பார்த்து, ஆ ஆ விதியே! நாங்களும் இவர்களைப்போல இஸ்லாமாயிருக்கக்கூடாதா! அப்படியிருந்தால் ரட்சிக்கப்படுவோமே என்று சொல்லி கைசேதமாய்ப் பரிதாபித்து வருந்துவார்கள்.

நபி நாயகமவர்கள் மேற்சொன்ன தங்கள் உம்மத்திலுள்ளவர்களை அல்லாஹுத் தஆலாவின் சமுகத்திலிருந்து அழைத்துக் கொண்டு போய்ச் ஸுவர்க்கத்தில் சேர்ப்பார்கள். அவர்களுக்கு முன்னமே ஸுவர்க்கம் புகுந்திருக்கும் மற்றவர்கள் சந்தித்து அவர்களின் நெற்றில் எழுதப்பட்டிருப்பதைப் பார்த்து நீங்கள் என்ன பாவம் செய்தவர்கள் என்று கேட்பார்கள். அதற்கு அவர்கள் தாங்கள் துன்யாவில் செய்த பாவங்களைச் சொல்லிக் காட்டுவார்கள். பார்ப்பவர்கள் எல்லாரும் அடிக்கடி இதைப்பற்றிக் கேட்பதால் அவர்கள் வெட்கப்பட்டு, அல்லாஹுத் தஆலா இடம் ஆண்டவனே எங்கள் நெற்றியில் எழுதப்பட்ட எழுத்தினுல் நரகம் புகுந்தவர்கள் என்று எங்களை யெல்லாரும் அறிகிறுர்கள். அதனுல் எங்களுக்கு வெட்க முண்டாகின்றது. அந்த எழுத்தை அழிந்து போகச் செய்தருள்யென்று வேண்டுவார்கள். உடனே ஒரு மழையைப்பெய்வித்து அல்லாஹுத் தஆலா அந்த எழுத்தை அழித்து விடுவான்.

இவ்விதமாய்ச் ஸுவர்க்கவாசியான மூஃமீனுனவர்கள் எல்லாரும், நரகத்திலும் தரிபாடான பிறகு மாணம் என்னும் மௌத்தை ஒரு செம்மறியாட்டின் உருவத்தில் கொணர்ந்து ஸுவர்க்கத்திற்கும், நரகத்திற்கும் மத்தியில் நிறுத்தும்படி கட்டளைப்பிறக்கும். மலக்குகள் சிலர் அதைக் கொணர்ந்து அப்படி நிறுத்திக்கொண்டு ஸுவர்க்கவாசிகளைக் கூப்பிட்டு ஜனங்களே! இதை நீங்கள் அறிவீர்களா? என்று கேட்பார்கள். அதற்கு அவர்கள் எல்லாரும் ஆம் அறிவோம். இது மௌத்து. இதை நீங்கள் அறுத்து விடுங்கள். இது இனி எங்களுக்கு வராமலிருக்கட்டும் என்று சொல்லுவார்கள். பிறகு நரகவாசிகளைக் கூப்பிட்டு ஜனங்களே! இதை நீங்கள் அறிவீர்களா? என்று கேட்பார்கள். அதற்கு அவர்கள் எல்லாரும் ஆம் அறிவோம். இது மௌத்து. இதை நீங்கள் அறுத்துவிடாதீர்கள். இது இனி எங்களுக்கு வரட்டும். அது வந்து நாங்கள் மௌத்தானுல் இந்த வேதனையை விட்டு ஒழிவோமல்லா என்று சொல்லுவார்கள்.

பிறகு அல்லாஹுத் தஆலாவின் கட்டளைப்படி அந்தச் செம்மறியாட்டுருவத்தில் வந்திருக்கும் மௌத்தை அங்கேவைத்து, நபியஹ்யா அலைஹிஸ்ஸலாமவர்கள் தங்கள் கையால் ஸுவர்க்கவாசிகளும் நரகவாசிகளும் பார்த்திருக்க அறுத்துவிடுவார்கள். அன்றுேடே மௌத்து என்பது இல்லாமற்போம். இனி

ஒருவருக்கும் மௌத்து வராது. அப்போதே ஸுவர்க்கவாளி களைக் கூப்பிட்டு உங்களுக்கும் இனி மௌத்தில்லை, சதாகாலமும் அழிவில்லாமல் ஸுவர்க்கத்தில் நீங்கள் வாழ்ந்திருப்பீர்கள் யென் றும், நரகவாளிகளைக் கூப்பிட்டு உங்களுக்கு இனி மௌத்தில்லை. சதாகாலமும் அழிவில்லாமல் நரகத்தில் நீங்கள் வேதனைப்பட்டுக் கொண்டிருப்பீர்கள் என்று அறிவித்து விடுவார்கள். அப்போது நரகத்து ஏழுவாசல்களும், யாதொரு இல்லியிடுக்கு இல்லாமல் அடைப்பட்டுபோம். நரகவாளிகள் அந்த நரகத்திலும், ஸுவர்க்க வாளிகள் சுவர்க்கத்திலுமாகத் தரிபடுவார்கள்.

ஷபாஅத்து முடிந்தது.

---

## 14-ம் பஸல்.

## உறூஸ்.

உறூஸ் என்பது திருக்கலியாணம். அது நமது நபிநாயகம் முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்களுக்கு ஸுவர்க் கத்தில் நடக்கும் விவாஹ மஹோற்சவமாம். அது:—

முஸ்லிமானவர்கள் எல்லாரும் ஸுவர்க்கத்தில் குடிபுகுந்த பிற்பாடு, அவரவர்களுடைய தானங்களிருந்து சுகித்துக் கொண் டிருக்கும்போது அல்லாஹுத் தஆலாவின் அறுஷிலிருந்து ஸுவர்க்கவாளிகளே! மறியம், ஆயிஷா என்னும் இரண்டு பெண் களையும், முஹம்மது நபிக்கு விவாஹம் செய்விப்பதற்காக நீங்கள் எல்லாரும் முஹம்மது நபியுடைய மாளிகைக்குள் வாருங்கள் என்று ஒரு சப்தம் பிறக்கும். உடனே ஸுவர்க்க வாளிகளெல் லாரும் நபி முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்களு டைய மாளிகைவாசலில் வருவார்கள். அந்த மாளிகையானது ஸுவர்க்கத்திலுள்ள எல்லா மாளிகைகளுக்கும் மேலானதும், அதிக அலங்காரமும், சிறப்பும் உள்ளதுமாய் ஹௌலுல் கௌதர் என் னும் ஆற்றங்கரையிலிருக்கும். அந்த மாளிகையிலுள்ள ஒரு சித்திர கூடத்திற்கு முன் அலங்காரமான பவளத்தினுல் கடைந்து, நவரத் தினங்களும் அழுத்திய ஒரு மண்டபம் இருக்கும். அந்த மண்ட பத்திற்குள் மஹ்மீது என்னும் பெயரையுடைய ஒருயானை நிற் கும். அந்த யானையை அதிக அலங்காரமாகச் ஸுவர்க்கத்து அதிபதியாகிய றிலுவான் என்னும் மலக்கு அலங்கரித்து வைத்துக்

கொண்டிருப்பார்கள். அந்த யானையினுடைய இரண்டு கொம்பு களின் மேலே நவரத்தினங்களினால் சித்திரவேலை செய்த ஒரு பலகை போடப்பட்டிருக்கும். அந்த பலகையின்மேல் அநேக விதமான விரிப்புகளும், திண்டுகளும் உள்ள ஆசனங்கள் கணக்கில் லாமல் போடப்பட்டிருக்கும். இன்னும் அந்த யானையின் முதுகின் மேல் வலம், இடம் நடுவு ஆக மூன்று அவுதாக்கள் வைக்கப்பட் டிருக்கும். அவைகளருகில் லிவாவுல் ஹம்து முதலான மூன்று கொடிகள் பறக்கும். ஜிபுரீல் அலைஹிஸ்ஸலா மவர்கள் முதலான அநேக மலக்குகளும், ஹூறுல்லீன்களும், ஸுவர்க்கத்து வேலைக்காரர் முதலானவர்களும் இருப்பார்கள். இன்னும் அவ்விடத் தில் பலவித ரத்தினங்களினாலும், ஒளிவினாலும் உண்டாக்கப்பட்ட மரவைகளும், ஒவ்வொரு மரமைகளில் அநேக விதமான தின்பதார்த் தங்கள் வைக்கப்பட்ட பாத்திரங்களும் பரத்தப்பட்டிருக்கும்.

மேற்சொன்ன ஸுவர்க்கவாஸிக ளெல்லாரும், மேற்படி மாளிகைவாசலில் வந்தவுடன், அவர்களை உள்ளே வரும்படி அல் லாஹுத் தஆலாவினுடைய உத்திரவு பிறக்கும் உடனே எல் லாரும் உள்ளே புகுதுவார்கள். பிறகு அங்கே தயார் செய்யப் பட்டிருக்கும் பதார்த்தங்களைக் கொண்டு பசியாரும்படி உத்திரவு பிறக்கும். அப்படியே எல்லாரும் பந்திபந்தியா யிருந்து பசி யாறுவார்கள். பசியாறித்தீர்ந்தபின் எல்லாருக்கும் ஆடையா பரணங்கள் அணிவிக்கப்படும். எல்லாரும் ஆடை ஆபரணங்கள் அணிந்து பரிமளங்கள் பூசிச் சந்தோஷமடைவார்கள்.

அதன் பிறகு ஜிபுரீல் அலைஹிஸ்ஸலாமவர்களுக்கு ஜிபுரீலே முஹம்மது நபியை மஹ்மூது என்னும் யானைமேலிருக்கும் நடு அவுதாவிலும், மறியமை வலது புறத்து அவுதாவிலும், ஆயி ஷாவை இடது புறத்து அவுதாவிலும் ஏறி உட்காரும்படி சொல் லும் என்று கட்டளை பிறக்கும். அப்படியே ஜிபுரீல் அலைஹிஸ்ஸலா மவர்கள் உத்திரவு செய்வார்கள். உடனே நபி நாயகமவர்களும், மறியம் அலைஹிஸ்ஸலாமவர்களும், ஆயிஷா நாயகியாரவர்களும் ஏறி உட்காருவார்கள். ஜிபுரீல் அலைஹிஸ்ஸலாமவர்கள் யானைப் பாகராக மஸ்தகத்தில் ஏறி உட்கார்ந்து கொள்ளுவார்கள். மீக்கா யீல் அலைஹிஸ்ஸலாமவர்கள் அவுதாக்களுக்குப் பின் பக்கத்தில் ஏறி உட்கார்ந்து கொள்ளுவார்கள். அதன் பிறகு அல்லாஹுத் தஆலாவின் உத்திரவு பிரகாரம் அநேக நபிமார்களும், நபி நாயகம வர்களின் உம்மத்து முதலான எல்லா நபிமார்களுடைய உம்மத்து

களும் மேற்படி யானை கொம்பின்மேல் போடப்பட்டிருக்கும் பல கைமீதுள்ள ஆசனங்களுள் ஏறி உட்கார்ந்து கொள்வார்கள். இன்னும் எண்பத்தோராயிரம் நபிமார்கள் ராஜவடிவாக அநேக ஜோடிகளுள்ள ஒளிவினாலான குதிரைகள் மீது ஏறி மேற்படி யானையைச் சூழ்ந்து நிற்பார்கள்.

இவ்விதம் ஊர்கோலம் தயாரானபின், மேற்படி ஊர் கோலத்தை நடத்திக்கொண்டு ஸுவர்க்கமுழுவதையும் சுற்றுவார்கள். அப்படி எல்லாச் ஸுவர்க்கங்களும் சுற்றித் தீர்ந்தபின், ஹௌலுல் கௌதர் என்னும் ஆற்றங்கரைக்கு வருவார்கள். அந்த ஆற்றின் அருகில் பூமியிலும் அறுபதினுபிரமடங்கு பெரிதான ஒரு குளம் உண்டாயிருக்கும். அந்தக் குளக்கரையில் நபி முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்கள் முதலான எல்லாரும் இறங்குவார்கள். அங்கு ஒரு விருந்து கொடுக்கப்படும். எல்லாரும் விருந்துண்டு சந்தோஷமானவுடன், மேற்படிக் குளத்தில் அநேக மாணிக்கக் கப்பல்கள் ஓடிவரும். எல்லாரும் அந்தக் கப்பல்களில் ஏறிக்கொள்வார்கள். ஏறினவுடன் அறுஸுக்குக் கீழ் ஒரு மேகம் வந்து கவிழ்ந்து நின்று கஸ்தூரி, கர்ப்பூரம், அம்பர், ஆடையாபரணங்கள், ஹுறுலீன்கள் முதலான எல்லாவற்றையும் மழையாக வருஷித்துக் கொண்டிருக்கும்படியாக மேற்படிக் கப்பல்களை ஓட்டிக்கொண்டு மேற்படிக் குளத்தில் அதிக ஆனந்தமாகச் சுற்றி விளையாடுவார்கள். அதில் ஒரு பாரிய மீன் உண்டாயிருக்கும். அந்த மீனுக்கு ஜாஹிறு என்று பெயர். அந்த மீன் வயிற்றில் கர்ப்பூரத்தினுல் ஒரு பட்டணம் உண்டாயிருக்கும். அந்தப் பட்டணத்தில் துன்யாவின் விஸ்தீரணமுள்ள ஒரு மாளிகையிருக்கும். அல்லாஹுத் தஆலா அந்த மீனுக்குத் தலையை உயர்த்தும்படி உத்திரவு செய்வான். அப்படியே அது தன் தலையை உயர்த்தி வாயைப் பிளக்கும். கப்பல்களிலிருக்கிற நபி நாயகமவர்கள் முதலான எல்லாரும் இந்த மீன் வாய்க்குள் நுழைந்து மேற்படி பட்டணத்தில்போய் முன் சொன்ன மாளிகையில் சேர்வார்கள். சேர்ந்த பின் அல்லாஹுத் தஆலா நாடின காலம்வரையிலும் அந்த மாளிகையிலேயே சுகித்துக் கொண்டிருந்து பிறகு அங்கிருந்து புறப்பட்டுச் ஸுவர்க்கத்திலுள்ள அவரவர் தானங்களில் போய்ச் சேர்வார்கள்.

உறுஸ் முடிந்தது.

## 15-ம் பஸல்.

## வியாபத்து.

வியாபத்து என்பது விருந்து. அது அல்லாஹுத் தஆலா ஸுவர்க்கத்திள்ள தன் அடியார்களுக்குக் கொடுப்பது, அல்லாஹுத் தஆலா இந்த விருந்து செய்ய நாடினபோது ஜிபுரீல் அலைஹிஸ்ஸலாமவர்களை அழைத்து, என்னுடைய ஹபீபு முஹம்மதுக்கும், அவர் உம்மத்துக்கும், மற்ற நபிமார்களுக்கும், அவரவர் உம்மத்துகளுக்கும் நான் ஒரு விருந்து கொடுக்கவேண்டும். அதற்காக நீர் (ஹலீலத்துல் குதுஸி) யைத் தயார் செய்யும். அங்கேதான் அந்த விருந்தை நடத்தவேண்டும் என்று கட்டளை பண்ணுவான். ஜிபுரீல் அலைஹிஸ்ஸலாமவர்கள், உடனே அந்தத் தானத்தை அலங்காரமாகத் தயார் செய்வார்கள். அந்த (ஹலீலத்துல் குதுஸி) என்பது அதன் என்னும் ஸுவர்க்கத்திலுள்ள ஒரு தானம். அது செம்முத்தினால் படைக்கப்பட்டு எல்லாச் ஸுவர்க்கங்களிலும் உயர்ந்ததும், மேன்மையானதும், அலங்காரமானதுமயிருக்கும். இன்னும் அது அறுஸுக்கு நேர் கீழாயிருக்கும். அது தயாரானவுடன் நபி நாயகம் முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் முதலான எல்லா நபிமார்களையும், அவரவர் உம்மத்துகளையும் விருந்து உண்ண அழைத்து வரும்படி ஜிபுரீல் அலைஹிஸ்ஸலாமவர்களுக்கு அல்லாஹுத் தஆலா உத்திரவு செய்வான். உடனே அவர்கள் வந்து மேற்சொன்ன எல்லாரையும், அழைப்பார்கள். அப்போது நபி நாயகமவர்கள் முதலான எல்லாரும் புறப்பட்டு வாகனங்களில் ஏறிக்கொண்டு விருந்துக்குப் போவார்கள்.

அவர்கள் போகும் வழியில் வெள்ளியினாலும், பொன்னினாலும், ரத்தினங்களினாலும் ஒவ்வொன்றாகப்பட்டு, ஓராயிரம் வருஷப் பிரயாணத்தூரப் பிராண முதல் பதினாயிரம் வருஷப் பிரயாணத்தூரப் பிரமாணம் வரையுமுள்ளதான அதிக அலங்ககரமுள்ள பத்துமாளிகைகள் ஒன்றின்பின் ஒன்றாய் எதிர் வரும். அவர்கள் எல்லாரும் அந்த மாளிகை ஒவ்வொன்றையும், ஒவ்வொரு நிமிஷத்திற் கடந்து போவார்கள். அப்படிப் போகும் போது, பதினாயிரம் வருஷப் பிரயாணத் தூரத்திற்கு இப்புறத்திலேயே மேற்சொன்ன ஹலீலத்துல் குதுஸியின் உன்னதமான மேன்மாடிகளும், விருக்ஷங்களும், ஓரே ஒளிவாய்த்தோன்றும்,

எல்லாரும் அவைகளைக் கண்டுகளிப்புற்று அதிக ஆனந்தத்துடன் அங்கே போய்ச் சேர்வார்கள்.

எல்லாரும் அந்த ஹலீலத்துல் குதுஸியிற் போய்ச் சேர்ந்து வாகனங்களை விட்டிறங்கி அவர்களுக்கென்று நியமித்து வைக்கப் பட்டிருக்கும் வஸ்துக்களை ஒவ்வொருவரும் பார்ப்பார்கள். அவ ரவர் வஸ்துக்களில் அவரவர் பெயர் எழுதப்பட்டிருக்கும். அவ ரவர்கள் தானங்களில் போய் உட்காருவார்கள். அங்கிருக்கும் ஹூறுல்லீன்கள், பூஞ்செடிகள் மற்றவைகள் எல்லாம் மற்றச் ஸுவர்க்கங்களி லுள்ளவற்றைப் பார்க்கிலும் அதிக மேன்மை யானதும், அதிசய முள்ளதுமாயிருக்கும்.

எல்லாம் அவரவர் ஆசனங்களில் உட்கார்ந்து தீர்ந்த பின் ஒவ்வொரு ஓடுக்குக் கொணர்ந்து மலக்குகள் வைப்பார்கள். அந்த ஓடுக்கானது வெள்ளித்தட்டு பத்தும் பொன் தட்டு பத்தும், முத்துத்தட்டு பத்தும் அகீக்குத் தட்டு பத்தும், மாணிக்கத்தட்டு பத்தும் மரகதத்தட்டு பத்தும் பவளத் தட்டு பத்துமாக எழுபது தட்டுகள் பரப்பின் ஒரு தங்கத்தால் அதை மெல்லிய பசும் பட்டினால் பொதித்து கட்டப்பட்டதா யிருக்கும். அந்த எழுபது தட்டுகளிலும், ஒரு தட்டிற்கு அறு பது வித ருசியுள்ள பதார்த்தங்களாக ஆகாரங்கள் வைக்கபட்டு இருக்கும். அதுகளை அவரவர் விரும்பியபடி வேண்டிய மட்டும் புசிப்பார்கள். ஒவ்வொருபிடியும் ஒன்றுக்கொன்று அதிக ருசி கரமாயிருப்பதும் அல்லாமல், ஒரு பிடியிலே துன்யாவிலிருந்த சகல ருசிகரமும் உண்டாயிருக்ம். அதுகளை புசித்த பின் பொன்னினாலும், ரத்தினங்களினாலு முள்ள கெண்டிகளில் தண் ணீர், பால் தேன், கள் இவைகளை நிரப்பிக்கொணர்ந்து எல்லாருக் கும் கொடுப்பார்கள் அதுகளையும் வேண்டியமட்டும் வாங்கிக் குடிப் பார்கள். அதன்பின் நவரத்தினங்களிழைத்த தங்கத்தாளங்களில் பழவர்க்கங்களைப் பரப்பி பசும்பட்டினால் மூடிக்கொணர்ந்து ஒவ் வொருவருக்கும் கொடுப்பார்கள். அதுகளையும் வேண்டிய மட் டும் எல்லாரும் தின்பார்கள்.

பிறகு ஒவ்வொறுவறுக்கும், பலவிதப்பட்டுகளும், ரத்தினா பரணங்களும் கொணர்ந்து கொடுக்கப்படும். அதுகளை வாங்கி உடுத்தியும், அணிந்தும் எல்லாரும் அலங்கரித்துக்கொள்வார்கள். அதன்பின் பரிமளம் பூசிச் கொள்ளும்படி கொணர்ந்து கொடுக் கப்படும். அதுகளையும் பூசிக் கொள்வார்கள். இவையெல்லாம்

தீர்ந்த பின் பலவிதமான சங்கீதங்கள் பாடும்படி ஹூறுலீன்களுக்குக் கட்டளை பிறக்கும். அப்படியே சங்கீத ரம்பைகள் சங்கீதம்பாடுவார்கள். எல்லாரும் அந்தச் சங்கீதங்களைக் கேட்டு ஆனந்த பரவசத்தில் முழுகுவார்கள்.

இவ்வித மேலான விருந்து ஸுபுஹு, ளுஹுறு, அஸறு, மக்ரிபு, இஷா ஆகிய ஐந்து வேளை கொடுக்கப்படும். எல்லாரும் இப்படி விருந்துண்டு களிகூர்ந்து சங்கீதத்தில் முழுகி ஆண்பிள்ளைகள் ஒரு வகுப்பும், பெண்பிள்ளைகள் ஒரு வகுப்புமாக சொல்லரிய சந்தோஷ முடையவர்களாய் அங்கிருப்பார்கள்.

லியாபத்து முடிந்தது.

---

## 16-ம் பஸல்.

## லிகா.

லிகா என்பது தரிசனை. அது சுவர்க்கவாசிகள் அல்லாஹுத் தஆலாவைச் சுவர்க்கத்தில் தரிசிப்பது. அந்தத் தரிசனை சுவர்க்கத்திலுள்ள எல்லா இன்பானந்தங்களிலும், அதிக இன்பானந்த மாயிருக்கும். அந்த இன்பானந்தத்தைப்போல எப்போதும் எங்கும் இராது.

முன் சொன்னபடி எல்லாரும் விருந்துண்டு கீதங்கேட்டு ஆனந்த பரவசமுற்றிருக்கும் போது, அல்லாஹுத் தஆலா அவர்களைப்பார்த்து, என் அடியார்களே! உங்களுக்கு இனிமேல் வேண்டியது என்ன? உங்கள் விருப்பத்தில் வேறு ஏதாவதுண்டா? என்று கேட்பான். அதற்கு எல்லாரும் ஒருமித்து, ஆம் உண்டு ஆண்டவனே! அது நாங்கள் உன்னைத் தரிசிக்க வேண்டியது ஒன்று மாத்திரந்தான். எங்களுக்கு நீ அதைத் தந்தருள்வாயாக என்று சொல்லுவார்கள்.

எல்லாரும் இவ்விதம் சொன்னவுடன் ஹக்கு என்பதற்கும், கல்கு என்பதற்கும் இடையில் இருக்கும் திரையை நீக்கப்படும். உடனே ஒரு ஒப்பற்ற ஒளி பளீரென்று வீசிப்பிரகாசிக்கும். அப்போது எல்லாரும் அல்லாஹுத் தஆலாவைப் பிரத்தியட்சமாய்த் தரிசிப்பார்கள். உடனே அல்லாஹுத் தஆலா அவர்களைப் பார்த்து, நான் யார் என்று கேட்பான். அதற்கு எல்லாரும் ஒரே மொழியாக நீதான் அல்லா என்று மறுமொழி சொல்லுவார்கள்,

பின்பு எல்லாரும் அல்லாஹு தஆலாவை தரிசித்தபடியே மூன்று வருஷம் வரையும், அந்த ஆனந்தத்தில் இருப்பார்கள். பிறகு முன் நீக்கப்பட்ட திரையை மறுபடியும் விடப்படும். அதன் பிறகு அவர்கள் எல்லோரையும் அந்த ஹலீலக்குல் குதுவிஸி யிருந்து ஸுவர்க்கத்திற்குப் போகும்படி உத்தரவாகும். அப்படி அவர்கள் அங்கிருந்து மீண்டு முன்போலச் ஸுவர்க்கத்திற்கு வந்து அவரவர் தானத்தில் தரிபட்டு சதாகாலமும் சுகித்திருப்பார்கள். அன்றியும் மேற்படி தரிசனை ஒவ்வொரு வெள்ளிக்கிழமையிலும், அவர்களுக்குக் கிடைத்துக் கொண்டிருக்கும். இவ்வித இன்பச் சுகமான பரமாநந்தத்தில் எல்லாருமுமுழுகி காலாகாலமும் வாழ்ந்திருப்பார்கள்.

ஈமான் கொண்ட முஸ்லிமான சகோதரர்களே :—

நாம் இந்தக் கிதாபில் பாபுத் துன்யா பாபுல் ஆகிறு என்னும் இரண்டு பாகங்களிலுள்ள முப்பத்திரண்டு பஸல்களிலும் சொன்னவை யெல்லாம் லாபம், நஷ்டம் என்னும் இரண்டு விஷயங்களைப்பற்றிய அறிக்கையும், எச்சரிக்கையுமேயாம். அந்த லாபமானது ஸுவர்க்க வாழ்வும், நஷ்டமானதும் நரக வேதனையுமே. நாம் ஒவ்வொருவரும், நஷ்டத்தை யடையாமல் லாபத்தை யடையவேண்டியதே பிரதானமான காரியம். லாபமாகிய ஸுவர்க்கத்தைப்பற்றி அல்லாஹுத் தஆலா குறு ஆனில் ஸுவர்க்கத்தை நாம் கொடுப்போம், சிலருக்கு அவர்கள் துன்யாவில், மேன்மையையும், கெடுதலையும், விரும்பமாட்டார்களே, அவர்கள் என்றும், உங்கள் ஆண்டவனுடைய மன்னிப்புக்கும், ஸுவர்க்கத்திற்கும், ஒருவருக்கொருவர் விரைந்து வாருங்கள் என்றும், ஸுவர்க்கத்திற்கு ஆசைப்படுங்கள் என்றும் திருவுளமாய் நஷ்டமாகிய நரகத்தைப்பற்றி நரகத்திற்கு வராமலிருப்பவர் உங்களில் ஒருவருமில்லை, அவர்களில் பக்திமான்களை மாத்திரம் அதைவிட்டு ஈடேற்றுவோம் என்றும் மனிதர்களையும், கற்களையும் போட்டு எரிக்கும் நரகத்தைப்பற்றி நீங்கள் பயபக்தியாயிருங்கள். அது காபிர்களுக்குத் தயார் செய்யப்பட்டது என்றும் இதற்காகப் பாடுபடுகிறவர்கள், பாடுபடுங்கள் என்றும் திருவுளமாயிருக்கிறான். ஆகையால் மேற்படி லாபத்தைப் பெறவும் நஷ்டத்தை நீக்கவும் வேண்டி நம்முடைய உயிரையும், உடலையும், வேறு எதையும் அழித்துக்கொண்டாலும் கொள்ளவேண்டியதே அப்படிப் பாடுபட்டுத் தக்க நற்கருமங்களைச் செய்தால் மேற்படி

லாபத்தை அடைந்து மேற்சொன்ன லிகா என்னும் தரிசனையும் பெறலாம். எவன் தன் ஆண்டவனைத் தரிசிக்க ஆசைப்படு கிருனே அவன் ஸாலிஹான அமல்களைச் செய்யவேண்டும். இன்னும் தன் ஆண்டவனை வணங்கும் வணக்கத்தில் எவ்வித இணையும் வைக்காதிருக்கவேண்டும என்று அல்லாஹுத் தஆலா குர்ஆனில் திருவுளமாயிருக்கிருன். இதைப் புத்திமான்கள் கவனித்துக்கொள்வீர்களாக. அல்லாஹுத் தஆலா எல்லாருக்கும் நமக்கும் மேற்படி நஷ்டத்தை நீக்கி லாபத்தைத் தந்து லிகா என்னும் தரிசனையையும் கொடுத்து பரமானந்தமான பேரின்ப சுகாநுபவத்தில் தரிபடுத்துவானுக ஆமீன்.

லிகாவும், பாபுல் ஆகிருவும் முடிந்தது.

---

தரீக்குல் ஜன்னு முற்றிற்று.

---

நாகூர்

வா. குலாம் காதிரு நாவலர் சொன்ன

ஆசிரிய விருத்தம்.

அருண்மேவு கலைகள்பதி னன்குமுற்ற
அறிமுஹியித் தீன்பகீ ராலிமென்னுந்
தெருண்மேவு செய்யுதப்துல் வஹ்ஹாபாலிம்
சிந்தைமகிழ் கொளஎமக்குச் செய்துதந்த
பொருண்மேவு தரீக்குல்ஜன் னுவாமிர்தப்
புகழ்பெற்ற கிரந்தத்தைப் புந்திகொண்டோர்
இருண்மேவு நரகவழி விலகிவாழு
மிருஞ்ஸுவர்க்க வழிபிடித்தங் கேகுவாரே.

முற்றிற்று.

## அகவல் பதிகம்.

பூவுமணமும் பொருந்தாதாகி
யாவுந்தன்னா லாக்கிய வல்லவன்
தன்னையறியுந் தகுதிபூண்ட
பன்னரு மஅரிபத்துல்லாவும்
வானம் பூமி மலைகடன் மன்னுயிர்
ஆனவெல்லா மமைந்த ஆலமும்
சேர்த்தகுவல்லோன் றிறத்தொடுவாங்கியும்
வார்த்தைப்பாடாய் வருமீதாக்கும்
படைத்திடுவல்லவன் பாதெனத்தந்த
அடைக்கலப்பொரு ளாமமானத்தும்
மதியொடு சிறப்பு மன்னவுணர்த்தும்
விதவிலக்கமைந்து விளங்குந்தீனும்
மாசறுகொள்கை மற்றதென்னும்
ஆசறுகொள்கை யாமகீதாவும்
பழைமையானதிற் பகைபடப்புதிய
வளமையாகிய வகும்பிதுஅத்தும்
இகழ்நிலையாக வின்பொடு நின்ற
புகழ்நிலைமாறிப் போம்றித்ததும்
கற்றவமின்றி நரகம்புகுத்துங்
குற்றமனைத்தையுங் கொடுக்குங்குபுறும்
பெருமையின் யாரும் பேணிச்செய்யும்
அருமையினன்மை யாய்ஹசனாத்தும்
புனிதமனைத்தையும் போக்கத்தக்க
அரீதத்திமை யாய்ஸைஆத்தும்
தீனெனவந்ததைத் தெரிந்துணராமல்
காணெனவேவற்றினு ணடக்கும் கு[illegible]றும்
உய்யேன் பாவத் தொருக்காலுமினிச்
செய்யேனென்று செய்தௌபாவும்
காணபூதமெலாங் கடுதிஞெடுஞ்சி

மரணவேதனை வளர்ஸக்கருத்தும்
நோவென்பவெல்லா நுழைந்தொன்றுனது
சாவென்பதுவெனத் தக்கதாமௌத்தும்
எந்தத்தலத்திலு மெந்தவிதத்திலும்
இநதச்சடம்போ யிருந்திடும்கபுறும்
பன்னியவிந்த பலல்பதினாறும்
துன்னியாபாபுத் துன்யாமுந்தியும்
உடையோன்விரும்பிய தொடுங்காளின்
அடையாளமலா மத்துல்கியாமாவும்
அழுந்திமண்ணி லமைந்தவையெல்லாம்
எழுந்துநிற்கு மேவுமுல்கியாமாவும்
பாவநன்மைகளைப் பரிசோதிக்கச்
ஜீவராசிகளைச் சேர்ந்திடும்ஹஷறும்
எடுத்திதுநன்மை யிருதீமையென
நடுத்தீர்தலமென நாடிய மௌஹிபும்
எத்திறவானு மெவர்க்குங்கொடுக்கும்
உத்திரவாதகமன் றேதும்கிசாசும்
ஆள்வினைத்தன்னி லமைதனந்தனவாகிய
கேள்விகணக்கெனக் கேட்கும்ஹிஸாபும்
ஒருத்துச்செய்ததை யுண்மையாவைத்து
நிறுத்திப்பார்க்க நிறுத்துமீஸானும்
பழுதறுவல்லவன் பரந்த மெய்யடியார்
தொழுதுறவவர்க்குத் தோற்றுந்தஜல்லியும்
நலிவறவுயர்ந்த நல்லவாருறைந்து
பொலிவொடுநடக்கப் போடுமசிறாத்து
இளைவுறநடந்த வெல்லாரும்போய்க்
களைபறக்குடிக்குங் கடிநீர் ஹௌளும்
ஆண்டவலலவ னருளினைநாளும்
பூண்டவர்வாழப் புக்குஜன்னத்தும்
பட்டவர்தீமையிற் படிந்தவர்பவத்தில்
கெட்டவரிருக்கக் கிடைக்கும் ஜஹன்னமும்
சகத்தொடுசன்னபி நன்மைச்ஸலவர்க்கம்
புகுத்தவிரைமுன் புருஷபாஅத்தும்
மருக்கலியான மாநபிநாதர்

## அகவல் பதிகம்.

திருக்கலியாணஞ் செய்திடுமுரசம்
மருப்பொதிசுவையின் வல்லவனதிக
விருப்பொடுகொடுக்கும் விருந்தாம் லியாபத்ரும்
அறநிலைநின்றோ ரனைவருங்காண
இறையவன்வெளியா மின்பலிகாவும்
படலமாயிர்ந்த பலல்பதினறும்
அடங்கியபாபுல் ஆகிருபிர்தியும்
மேன்மையினெவர்க்கும் விளங்கும்படிக்குத்
தான்கொளுந் தரீக்குல் ஜன்றுவிதுவே.

அகவல் பதிகம்.

Q7:332
N46

முற்றிற்று

TAMIL NADU ARCHIVES LIBRARY
No. 111452
MADRAS

Printed at S. H. Press, Madras, P. I. C. No. MS 178. D. 9-7-1947.

# பஸல் அட்டவணை.

## முதற்பாகம்

## பாபுத் துன்யா.


| பஸல். | விஷயம். | பக்கம். |
|---|---|---|
| 1 | மஃரிபத்துல்லா .... .... | 7 |
| 2 | ஆலம் .... .... | 10 |
| 3 | மீதாக்கு .... .... | 14 |
| 4 | அமானத்து .... .... | 16 |
| 5 | தீன் .... .... | 17 |
| 6 | அகீதா .... .... | 20 |
| 7 | பிதுஅத்து .... .... | 30 |
| 8 | றித்தத்து .... .... | 45 |
| 9 | குபுறு .... .... | 59 |
| 10 | ஹஸனாத்து .... .... | 67 |
| 11 | ஸையிஆத்து .... .... | 76 |
| 12 | குபூறு .... .... | 91 |
| 13 | தௌபா .... .... | 111 |
| 14 | ஸக்கறாத்து .... .... | 114 |
| 15 | மௌத்து .... .... | 120 |
| 16 | கபுறு .... .... | 124 |

# பஸல் அட்டவணை.

## இரண்டாம்பாகம்

## பாபுல் ஆகிறு.


| பஸல், | விஷயம். | | | பக்கம். |
|---|---|---|---|---|
| 1 | அலாமத்துல் கியாமா | .... | .... | 130 |
| 2 | கியாமா | .... | .... | 136 |
| 3 | ஹஷறு | .... | .... | 143 |
| 4 | மௌகிபு | .... | .... | 151 |
| 5 | ஸிலாலு | .... | .... | 164 |
| 6 | ஹிஸாபு | .... | .... | 169 |
| 7 | மீஸான் | .... | .... | 183 |
| 8 | தஜல்லி | .... | .... | 186 |
| 9 | ஸிறாத்து | .... | ... | 188 |
| 10 | ஹௌது | .... | .... | 192 |
| 11 | ஜன்னத்து | .... | .... | 194 |
| 12 | ஜஹன்னம் | .... | .... | 204 |
| 13 | ஷபாஅத்து | .... | .... | 215 |
| 14 | உறல் | .... | .... | 220 |
| 15 | ஸியாபத்து | .... | .... | 223 |
| 16 | ஸிகா | .... | .... | 225 |


பஸல் அட்டவணை முற்றிற்று.


பெற்றுக்கொள்ளுமிடம் :—

ஹாஜி எம். எ. ஷாஹுல் ஹமீது அண்டு ஸன்ஸ்,

ஹமீதிய்யா பில்டிங்க்ஸ், நெ 20, ஹைரோட்,

திருவல்லிக்கேணி, மதறாஸ்.